# வளர்பிறை கனவுகள்



காஞ்சனா ஜெயதிலகர்

அருணோதயம் 50

பொன்விழா

# வளர்பிறை கனவுகள்

1

மேடையின் விளக்குகள் விழி திறந்தன. பரவிய ஒளியின் பாய்ச்சலில் மருண்ட இருள் மாயமானது.

பகல் போன்ற வெளிச்சம்.

வியர்வை ஊறச்செய்யும் உக்கிரம். மிக மெல்ல டிரம்களின் அதிர்வு ஆரம்பானது. மின் கிடாரின் நரம்புகள் வருடப்பட, சிலிப்பான இசை மிதந்தது.

இசைக்கேற்ப அடங்கிப் பொங்கியது வெளிச்சம்...

ஒலி மிருதுவாக, ஒளியும் மங்கலானது.

வண்ண விளக்குகள் சுழன்றன.

ஒலி அதிகமாக விளக்கின் விழிகள் விம்மின. இசை இதயம் வரை சென்றது.

ஒளி வட்டம்! மேடையை தேடலுடன் சுற்ற... அதனுள் சிக்கினாள் பாவை.

மேடையில் பார்த்து பாராட்டப்பட வேண்டிய தோற்றம் தான்.

ஒயிலாக முன்னேறினாள். முன்னும் பின்னுமாய் அசைந்து உடையழகைக் காட்டினாள்.

உடலும் சளைத்ததாயில்லை.

சில நிமிடங்களில் வண்ணத்துப்பூச்சிகளின் படையெடுப்பு போல மேடை நிறைந்தது. மோகன சிரிப்புகளும், மெல்லிய உடல் அசைவுகளும், நடையின் நாகரீகக் குலுக்கலுமாய் ஒரு மாயா லோகம் அங்கு உருவாகியது.

ஆனால் மாயா சுழண்டு வந்து நடுவில் நின்ற நேரம் அரங்கு சற்று ஸ்தம்பித்து பின் ஆரவாரித்தது.

பெங்களூர் கலையரங்கத்தில் நடைபெற்ற உடை அலங்கார அணிவகுப்பு அது. அனைவராலும் மாயாவின் அழகு வித்தியாசமானது.

போலித்தனமற்ற பொலிவு...

வனதேவதையின் வனப்பு...

கையில்லாத சிவப்பு கவுனில் அவள் ஒரு சிறுமியின் குதூகலத்துடன் மேடையைச் சுற்றி வந்தாள்.

கவர்ச்சியை விட உல்லாசமான துள்ளல்.

முகமெங்கும் ஜொலிப்பான மோகன முறுவல்.

முதல் சுற்று முடிந்தது.

ஆனால் ரசிகர்கள் மீண்டும் இவளையே எதிர்பார்த்தனர். வலப்புற ஓரமாய் அமர்ந்திருந்த பத்திரிகையாளர்களிடம் கேள்விகள் கிளம்பின-

"யாரது?"

"யாரைச் சொல்றீங்க" என்று மறுகேள்வி எழவில்லை!

"அது மாயா."

"தொழில் முறை மாடலா? மும்பையா?"



"இல்லை. அமெச்சூர்தான். கல்லூரியில் படிக்கிற தமிழ்ப் பெண். இத்தனை அழகை வைச்சிகிட்டு, பெங்களூர்ல வெறுமனே படிச்சிட முடியுமா? மேடை ஏறிடுச்சு.."

"மாறுபட்ட அழகு."

"அதுதான் இத்தனை வரவேற்பு."

"நினைச்சேன் - தமிழ் பொண்ணுன்னு."

"அந்த கண்ணு சொல்லுதே."

"மற்றதுங்க பஞ்சத்தில அடிபட்டாற் போல வெளிறி கிடக்குதுங்க."

"இது ஊட்டி ரோஜா."

"அடுத்த வார அட்டை படத்துக்கு கேட்கணும்."

"நானுந்தான் - எடிட்டர் சந்தோஷப்படுவாரு."

"தலைமுடி என்ன கருப்பு.. அடர்த்தி?"

"மற்றதுங்களுக்கு செம்பட்டையாச் சிலுப்பி விட்ட எலிவால்."

பரிமாறப்பட்ட உருளை வறுவலை மென்று 'கோக்' உறிஞ்சியபடி பேசி சிரித்தனர்.

"எந்த கல்லூரி?"

"அங்க போய் எப்படி இவளைத் தேடுவே?"

"இலைகளுக்கு நடுவே ரோஜா தெரியாது?"

"ரோஜா வீடு விக்டோரியா சாலையிலே இருக்குது."

"ஓ... பணக்கார குடும்பமா?"

"குடும்பத்தைப் பத்தி ஏதும் தெரியலை - இது ஒண்டியா மெஹரோட இருக்குது."

"அனு மெஹர்? மாடலிங்கிலே பெங்களூர் குட்டை யெல்லாம் கலக்கிட்டு மும்பாய் வரை பறக்கிற பெண்ணாச்சே?"

"ம்ம். ரெண்டு பேரும் ஒரே ஃப்ளாட்டைத் தான் வாடகைக்கு எடுத்திருக்காங்க - விலாசம்..."

"தெரியும் - பாத்துக்கறேன்."

இடைவேளை நேரத்திலும் கூட சளைக்காமல், கொறிக்காமல் ஏதோ வேலையாய் குனிந்திருந்த அரவிந்தனை, பலர் கண்டு கொள்ளாமல் நகர, வெகு கண்ணியமாய் தெரிந்த சிலர் அவனருகே நின்று விசாரித்தனர்.

அரவிந்தன் இளம் ஓவியன்.

அவனது ஓவிய கண்காட்சிகள் நகரில் அவ்வப்போது நடக்கும் - மக்கள் அலையென திரண்டு வர மாட்டார்கள்!

கலையின் நுணுக்கள் புரிந்த சிலர்தான் வருவார்கள் -

ஆனால் பல ஓவியங்கள் விற்றுப் போகும் - பல ஆயிரங்களுக்கு.

பெரும் வர்த்தக அலுவலகங்கள், மேம்பட்ட உணவகங்கள், உயர்ரசனை இல்லங்களில் அவன் படைப்புகளுக்கு இடமுண்டு. பல வெளிநாடுகளுக்கும் பறந்து போயிருக்கின்றன.

அவன் தூரிகை உள்ளதை உள்ளபடி காட்டுவதில்லை.

அதே சமயம் பிக்காஸோவின் புதிர்பாணியும் கிடையாது - இரண்டுக்கும் நடுவான புதுப்பாணி. கண்களை ஈர்க்கும், கருத்திற்கும் புரியும்!

நகரின் புது 'பொட்டீக்' ஒன்றிற்கு நாகரீகப் பெண்களின் ஓவியங்கள் சில தேவைப்பட்டது. அந்த வேலையில் மும்முரமாயிருந்தான்.

அரவிந்தன் முப்பதைத் தாண்டியும் பிரம்மச்சாரிதான் - இல்லற நாட்டமில்லை - சமீபமாய் அனுவைச் சந்திக்கும் வரை. மாலை மாற்றின பிறகு தேனிலவை அனுபவிக்க அவகாசம் வேண்டாமா? அதற்கென்றே திருமணத்தை இருவரும் தள்ளிப் போட்டனர். அனு முதல் தர மாடல்.



அவளையே புதுக்கோணங்களில் புகைப்படம் எடுத்து ஓவியங்களை தயாரித்து விடலாம். ஆனால் அனு சிக்கவில்லை.

'பொட்டீக்' திறப்பு விழாவிற்கு இன்னும் ஒரு சில வாரங்களே - அதனால் வேறு வழியின்றி இந்நிகழ்ச்சிக்கு வந்திருந்தான்.

வந்தது வீணில்லை.

இந்த மாயாவின் அழகு வெகு நூதனம். தூரிகையில் அக்கவர்ச்சியை சிறை பிடிக்கக் கூடுமா? சந்தேகம் தான். ஆனால் அந்த சவால் அவனுக்குப் பிடித்திருந்தது.

ஆக இவள்தானா மாயா? அனு அடிக்கடி பேசும் அவளது அறைத்தோழி?

அறிமுகம் எளிது.

ஒருக்களித்து திறந்திருந்தது ஒப்பனை அறையின் கதவு - ஆனாலும் நாகரீகம் கருதி தட்டினான்.

"வரலாம்."

தயக்கமாய் நுழைந்தான். அரவிந்தன். உள்ளே அனைவரும் பெண்கள். பகட்டான ஆடையிலிருந்து ஜீன்ஸ், டி-ஷர்ட்டிற்கு மாறியிருந்தார்கள். கூந்தலை அள்ளி அகல 'பேன்ட்'களில் இறுக்கிவிட்டு, 'ஸீயூ', 'பைபை' என்ற நுனி விரல் அசைவுகளுடன் அசைந்து கிளம்பினார்கள்.

யாரும் அவனைப் பொருட்படுத்தவில்லை. கூச்சத்துடன் வெளியேறி விடலாம் என்றவன் திரும்பிய போதுதான் அவள் 'பளிச்' சென பார்வையில் சிக்கினாள். இளம் சுருள் கேசம் முதுகு பூராவும் விரிந்து கிடக்க, மெல்லிய வெள்ளை சேலையில் கலைமகள் போல -

சேலையில் சிறு ரோஜா மொட்டுக்கள் நெய்யப்பட்டிருந்தன. பொருத்தமாய் ரோஜா நிறப் பட்டில் குட்டைக் கை சோளி. உள்ளங்கழுத்திலே பொடி முத்துச் சூடி - உதட்டில் ரோஜா நிறம்.

"ம்ம். ரெண்டு பேரும் ஒரே ஃபிளாட்டைத் தான் வாடகைக்கு எடுத்திருக்காங்க - விலாசம்..."

"தெரியும் - பாத்துக்கறேன்."

இடைவேளை நேரத்திலும் கூட சளைக்காமல், கொறிக்காமல் ஏதோ வேலையாய் குனிந்திருந்த அரவிந்தனை, பலர் கண்டு கொள்ளாமல் நகர, வெகு கண்ணியமாய் தெரிந்த சிலர் அவனருகே நின்று விசாரித்தனர்.

அரவிந்தன் இளம் ஓவியன்.

அவனது ஓவிய கண்காட்சிகள் நகரில் அவ்வப்போது நடக்கும் - மக்கள் அலையென திரண்டு வர மாட்டார்கள்!

கலையின் நுணுக்கள் புரிந்த சிலர்தான் வருவார்கள் -

ஆனால் பல ஓவியங்கள் விற்றுப் போகும் - பல ஆயிரங்களுக்கு.

பெரும் வர்த்தக அலுவலகங்கள், மேம்பட்ட உணவகங்கள், உயர்ரசனை இல்லங்களில் அவன் படைப்புகளுக்கு இடமுண்டு. பல வெளிநாடுகளுக்கும் பறந்து போயிருக்கின்றன.

அவன் தூரிகை உள்ளதை உள்ளபடி காட்டுவதில்லை.

அதே சமயம் பிக்காஸோவின் புதிர்பாணியும் கிடையாது - இரண்டுக்கும் நடுவான புதுப்பாணி. கண்களை ஈர்க்கும், கருத்திற்கும் புரியும்!

நகரின் புது 'பொட்டிக்' ஒன்றிற்கு நாகரீகப் பெண்களின் ஓவியங்கள் சில தேவைப்பட்டது. அந்த வேலையில் மும்முரமாயிருந்தான்.

அரவிந்தன் முப்பதைத் தாண்டியும் பிரம்மச்சாரிதான் - இல்லற நாட்டமில்லை - சமீபமாய் அனுவைச் சந்திக்கும் வரை. மாலை மாற்றின பிறகு தேனிலவை அனுபவிக்க அவகாசம் வேண்டாமா? அதற்கென்றே திருமணத்தை இருவரும் தள்ளிப் போட்டனர். அனு முதல் தர மாடல்.



அவளையே புதுக்கோணங்களில் புகைப்படம் எடுத்து ஓவியங்களை தயாரித்து விடலாம். ஆனால் அனு சிக்கவில்லை.

'பொட்டிக்' திறப்பு விழாவிற்கு இன்னும் ஒரு சில வாரங்களே - அதனால் வேறு வழியின்றி இந்நிகழ்ச்சிக்கு வந்திருந்தான்.

வந்தது வீணில்லை.

இந்த மாயாவின் அழகு வெகு நூதனம். தூரிகையில் அக்கவர்ச்சியை சிறை பிடிக்கக் கூடுமா? சந்தேகம் தான். ஆனால் அந்த சவால் அவனுக்குப் பிடித்திருந்தது.

ஆக இவள்தானா மாயா? அனு அடிக்கடி பேசும் அவளது அறைத்தோழி?

அறிமுகம் எளிது.

ஒருக்களித்து திறந்திருந்தது ஒப்பனை அறையின் கதவு - ஆனாலும் நாகரீகம் கருதி தட்டினான்.

"வரலாம்."

தயக்கமாய் நுழைந்தான். அரவிந்தன். உள்ளே அனைவரும் பெண்கள். பகட்டான ஆடையிலிருந்து ஜீன்ஸ், டி-ஷர்ட்டிற்கு மாறியிருந்தார்கள். கூந்தலை அள்ளி அகல 'பேன்ட்'களில் இறுக்கிவிட்டு, 'ஸீயூ', 'பைபை' என்ற நுனி விரல் அசைவுகளுடன் அசைந்து கிளம்பினார்கள்.

யாரும் அவனைப் பொருட்படுத்தவில்லை. கூச்சத்துடன் வெளியேறி விடலாம் என்றவன் திரும்பிய போதுதான் அவள் 'பளிச்' சென பார்வையில் சிக்கினாள். இளம் சுருள் கேசம் முதுகு பூராவும் விரிந்து கிடக்க, மெல்லிய வெள்ளை சேலையில் கலைமகள் போல -

சேலையில் சிறு ரோஜா மொட்டுக்கள் நெய்யப்பட்டிருந்தன. பொருத்தமாய் ரோஜா நிறப் பட்டில் குட்டைக் கை சோளி. உள்ளங்கழுத்திலே பொடி முத்துச் சூடி - உதட்டில் ரோஜா நிறம்.

அலங்கார மேசையிலிருந்த அகலப் பல் சீப்பை எடுத்து 'வரட்வரட்' என சீவி பின்னலிட்டுக் கொண்டிருந்தாள் மாயா.

சில நொடிகளில் முகத் தோற்றம் குடும்பப் பாங்கிற்காய் மாறிவிட்டது. கைப்பையை எடுத்துக் கொண்டு கையாட்டியபடி கிளம்பியவளின் முன்பு போய் நின்றான்.

"நான்... நான் உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்."

"என்ன... சொல்லுங்க?"

சிறு புன்னகையுடன் தலையசைத்தாள்.

"மாயா... உங்க நிகழ்ச்சி ரொம்ப பிரமாதம்.."

"நன்றி - இந்தப் பாராட்டு எல்லாருக்குந்தானே?"

"ஆமா.. இல்லை.."

அவன் தடுமாற்றத்தை நமட்டு புன்னகையுடன் ரசித்தாள்.

"நன்றி. எனக்கு நேரமாச்சு!"

"விக்டோரியா சாலைதானே? நான் கூட்டிட்டு போறேன்."

அவள் முகம் மாறியது.

"தேவையில்லை" - சிடுசிடுத்தாள்.

"தப்பா நினைக்காதீங்க - நான் அனுவோட நண்பன் அரவிந்த்."

மறுகணம் அவள் முகம் தளர்ந்தது. "ஓவியர் அரவிந்தா?"

"ம்ம்."

இன்னும் முழுக்க நம்பாதது போல அவனை தலைசாய்த்து ஆராய்ந்தாள்.

தன் தோல் பையை திறந்து தான் வரைந்தவற்றை எடுத்து. அவளிடம் நீட்டினான்.

"ஹா அற்புதம் - இது நானா?" வியந்து விரிந்தன அவள் விழிகள்.



"மாயா!"

"நீங்கள் வரையும் கோடுகள் நளினமாய் இருக்கும்" என்றாள் அனு.. "அனு நிஜம்தான்."

"பார்ப்பதைத்தான் என் பென்சில் கோடாய் இழுக்கிறது."

"நன்றி."

சிரிக்கையில் அவள் விழிகளும் கறுப்பு வைரங்களாய் மின்னின. தான் 'பொட்டீக்' ஒன்றுக்காய் வரைந்து தர வேண்டிய ஓவியங்களுக்காய் இவ்வரை படங்களை பயன்படுத்திக் கொள்ளலாமா என்று அனுமதி கேட்டவன், "அனு மும்பையிலிருந்து வர ஒரு வார மாதம்... அதுதான்" என்று இழுத்தான்.

"உங்களுக்கு இவை போதும்னு தோணினால் சரி."

"சிறப்பாய் வரும்ங்கிற நம்பிக்கையிலேதான் இந்த ஓவியங்களை வரைஞ்சேன். சில புகைப்படங்களும் எடுத்திருக்கேன். உங்க அனுமதிதான்..."

"சம்மதம் - ஒரு நிபந்தனை."

"சொல்லுங்க."

அவனுக்கு வரும் வரும்படியில் கால்பங்காவது கேட்பாள் என்று நினைத்திருந்தவனுக்கு அவளது பதில் ஆச்சரியந்தான்.

"இந்த ஸ்கெட்ச்சஸ் ஓவியம் வரைஞ்ச பிறகு உங்களுக்குத் தேவைப்படாதே?"

"இல்லை..."

"சில கோடுகளிலேயே என் சாயலை அற்புதமாய் கொண்டு வந்திருக்கீங்க - இந்த ஓவியங்கள் தான் என் சன்மானம்!"

"சந்தோஷமாய் தர்றேன். கோடுகள்ல உங்க அழகைக் கொண்டு வர முடியுமான்னு சந்தேகமாய் வரைஞ்சேன் - உங்க அழகு அற்புதம்."

ரவிக்கையின் ரோஜா நிறத்திற்குப் போயின அவள் கன்னங்கள்.

"இந்நகரில் வெட்கப்படும் அழகிகளே கிடையாது - போகலாமா?"

அவன் ஆச்சரியத்தை ரசித்தபடி அவனைத் தொடர்ந்தாள்.

மாருதியில் தன்னருகே இருந்த அவளை மேலும் உன்னிப்பாய் பார்த்தான் அந்த ஓவியன்.

பொலிவான சருமம் - மென்மையான அடர்த்தியில் புருவங்கள், உறுதியான தாடை, அதை மென்மைப்படுத்தும் கொழுவிய கன்னக் கதுப்புகள். சின்ன கூர் நாசி - மிருதுவான சிவந்த உதடுகள் - அத்தனைக்கும் சிகரமாய் கோடி கருப்பு மின்னல்களாய் விழிகள்.

"இயற்கையான அழகே இப்போது காண முடியறதில்லை..."

"புரியலியே?"

"ம்ம்... ஆரோக்கியமாய் தெரியறீங்க - வளைச்சா ஒடிஞ்சுடற கம்பு போல இல்லாம..."

"தப்பு - அது கம்பு இல்லை. கொடி! நான் கொடியில்லை... கொஞ்சம் தடி!" - கண்சிமிட்டினாள்.

வாய்விட்டு சிரித்தான்.

"நான் நகரத்திலே வளர்ந்த பெண்ணில்லை. இங்கே விவரம் தெரிஞ்ச நாளிலேருந்து டயட்தானே? நான் பிறந்து வளர்ந்தது எஸ்டேட்டிலே - திண்டுக்கல் பக்கம். நிறைய பால், தயிர், பழம்னு வளர்ந்தேன். சதா மரம் ஏறி, மூச்சிறைக்க ஓடி ஆடிய உடம்பு."

"அதான் உங்க அழகின் ரகசியமா?"

"சுத்தமான காற்று, கண்ணை நிறைக்கும் பசுமை - வேண்டிய தனிமை - இதை எல்லாமும் சேர்த்துக்கோங்க..."

"எனக்குப் பொறாமையா இருக்குதே. இது மாதிரி இடந்தான் தேடிட்டு இருக்கேன்..."



"எதுக்கு?"

"நிம்மதியாய் வரைய. மாயா..., நீங்க தப்பா எடுத்துக்கலைன்னா அடுத்த முறை நீங்க உங்க எஸ்டேட்டுக்குப் போகும் போது நானும் வரலாமா? உங்களைத் தொந்தரவே செய்ய மாட்டேன் - ஒரு ஓரமாய் கிடந்து வண்ணங்களைக் குழப்பி பூசிட்டிருப்பேன் - "

காரோட்டியபடி இடது கையால் அபிநயித்தான்.

"வரலாமே..." புன்னகைத்தாள்.

"நன்றி... எப்போ போவீங்க?"

"அ... வந்து..." - தடுமாறினாள்-

"தெரியலை... போகும் போது சொல்றேன்."

அதற்குப் பிறகு அரவிந்தன் பேசியதெல்லாம் அவளுக்குக் கேட்கவேயில்லை. மூன்று ஆண்டுகளாய் போகாத தன் ஊருக்கு, வீட்டிற்கு இனி எப்போது போகப் போகிறாள்?

போனாலும்... போய் அவனை நேரே நின்று பார்க்கும் நெஞ்சுரம் தனக்கு உண்டா?

கிளறப்பட்ட நினைவுகள் அன்றிரவு அவளை உறங்க விடவில்லை. 'ரஞ்சனியகம்' கனவில் வந்தது.

அதுதான் அவள் பிறந்து வளர்ந்த வீடு - கூடவே மணிமாறனும் தோன்றி அவளை அலைக்கழித்தான்!

2

பெங்களூரின் எம். ஜி. சாலையில் நடப்பது மாயாவிற்கு எப்போதுமே பிடிக்கும். கலவையான கலாசாரங்களை அங்கு பார்க்கலாம் - ரகம் ரகமான மனிதர்கள்.

மாலை நேரம் மைசூர் கைவினைப் பொருள் அங்காடியான 'காவேரி'யினுள் நுழைந்து விட்டால் போதும். தேக்கும் தந்தமும் கலந்து உருவான பிரம்மாண்ட யானை சிற்பத்திலிருந்து, மூக்கின் வெள்ளி நத்து வரை ரசனையும் நேர்த்தியான பொருட்களைப் பார்க்கலாம்.

ரோட்டோரம் விற்பனையாகும் மசாலா தடவிய அன்னாசி பழத்துண்டங்களை சுவைத்தபடி தெருவோர புத்தகக் கடையில் தமிழ் பத்திரிகைகளை அள்ளிக் கொள்வாள். அது போக தரையில் பரப்பியிருக்கும் ஆங்கில இதழ்களையும் நோட்டமிடுவாள். அவை பெரும்பாலும் 'டெபோனெர்' போன்ற கவர்ச்சி இதழ்கள் - விழி பிதுங்க ஆண்கள் நோட்டமிட்டுக் கொண்டிருப்பார்கள், குனிந்து!

காய்ந்த மலர் கொத்துக்களுக்கு வெள்ளி, தங்க முலாம் பூசப்பட்டு விற்பனைக்கு பரத்தியிருப்பார்கள் - அது போக எக்கச்சக்க துணிக் கடைகள் - விலையும் எக்கச்சக்கம்தான்.

மாயாவிற்கு ஊரிலிருந்து கணிசமான தொகை மாதாமாதம் வந்து விடும். இப்போது மாடல் ஆக புகழ் பெற்றபிறகு நேர்த்தியான ஒரு சிறு வீட்டினை அனுவோடு பங்கு போட முடிந்திருக்கிறது.

உணவில் அவள் எப்போதுமே எளிமைதான்.

உடைகளை கூட சென்னை, மதுரை போக நேரும் போது வாங்கி விடுவாள். ஆக வீட்டு வாடகைதான் பிரதான செலவு.

கல்லூரிப் பரீட்சைகள் முடிந்து விட்டன - இனி முழுதாய் மூன்று மாதங்கள் விடுமுறை. கிடைக்கும் அத்தனை அலங்கார அணிவகுப்பு வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம் - ஆனால் அது உசிதமில்லை. தோழி அனு ஊரில் இல்லாத நாட்களில் வீடு வெறுமையாய் தோன்றுகிறது. இனி படிப்பு இல்லை -ஆக மேடைக்கான ஒத்திகை நேரங்கள் போக இப்படி காலார நடந்து விட்டு வீடு திரும்புவாள்.

ஆண் நண்பர்கள், புத்தம்புது 'பியர்' பரிமாறும் 'பப்' பழக்கங்கள் எல்லாம் தன்னை அண்டவிட்டதில்லை அவள்.



"எந்த ஊர் பொண்ணு, மாயா?"

"மதுரை பக்கமாம்."

"மதுரை?"

"கண்ணகி கதை தெரியுமில்ல - அவள் எரிச்ச ஊருப்பா.."

"ஓஹோ மதுரை மாயாவும் நெருங்க விடாத பத்தினிப் பொண்ணு தான் போல...!" தோள் உயர்த்தி கை விரிப்பார்கள்.

மாயா எதையும் கண்டு கொள்வதில்லை. அலட்டாமல் அவள் போக்கில் போவாள்.

நாளை அனு ஊர் திரும்பி விடுவாள் - நல்ல சிநேகிதி.

சமீப பழக்கமென்றாலும் இயல்பாக நெருங்கிக் கொண்டார்கள். 'பிஷப் காட்டன்' பள்ளியில் படித்த அனு, தன் பெற்றோர் வடக்கே போன பிறகும் கூட பெங்களூரை விட மனமில்லாது இங்கேயே தங்கி விட்டாள். உயர்மட்ட கல்வி, பணம், அபார அழகு எல்லாம் இருந்தும் பெருமை கிடையாது. - அபூர்வமல்லவா அது?

வியந்த மாயா நட்பு கொண்டாள். இவள் அனுவிற்காக காத்திருந்தது போலவே தான் அரவிந்தனும் - பழகிய இச்சில நாட்களிலேயே புரிந்து போனது - அவன் அனுவிற்கு ஏற்ற துணை என்பது.

ஆனால் 'நீ எப்போது ஊருக்குப் போவாய் மாயா? என்னையும் கூட்டிச் செல்' என்று அவன் நிலையாய் நிற்பதுதான் ரசிக்கவில்லை.

நாளை 'ரங்க மந்திரா'வில் அவனது ஓவியக் கண்காட்சி. அதிகாலை விமானநிலையம் போய் அனுவை அழைத்து வரலாம் - பின் இருவருமாய் சேர்ந்து கண்காட்சிக்குப் போகலாம்.

வாங்கி வந்த பத்திரிகைகளைப் புரட்டி விட்டு, தயிர்சாதத்தில் நிறைய வெள்ளரி துண்டுகளைத் தூவி சாப்பிட்டாள். எஞ்சிய வெள்ளரியை சாறாக்கி முகத்திலும் கழுத்திலுமாய் ஊறவிட்டாள்.

'குளுகுளு'வென்றிருந்தது.

கூடவே செண்பகா அத்தையின் நினைவு வந்தது. அத்தையின் கைவிரல்களில் இதே குளுமை இருக்கும். வெயிலில் ஆடி விட்டு வீட்டிற்கு வந்து அத்தையின் கைகளை எடுத்து கன்னம், நெற்றி எனப் பதித்துக் கொண்டால் சுகமான ஜிலுஜிலுப்பு.

இப்போது அத்தை இல்லை. சிறுவயதிலேயே தாயை இழந்த மாயாவிற்கு தாய்மையின் நிழல் தந்து வளர்த்து விட்டவள் செண்பகா அத்தைதான். அவளும் இறந்த பிறகு இந்த நேசக் குளுமையைத் தருவாரில்லை.

அம்மா இறந்தபோது மாயாவிற்கு 10 வயதுக்குள்தான். அம்மாவின் முகம் கூட வெகு கூர்மையாய் நினைவில் இல்லை. ஆனால் அன்னையும் தந்தையும் இன்பமாய் நடத்திய இல்லறம் நினைவிலிருந்தது.

அவர்களுடையது காதல் கல்யாணம்.

அப்பா தன் அண்ணன் மகளைப் பள்ளிக்கு தினம் கொண்டு விடப் போக நேர்ந்த அறிமுகம் - அதுவும் விநோதமான முறையில்!

அப்பாவின் காதல் பேச்சு இன்னும் காதில் கேட்கிறது.... "அன்னைக்கு நான் 'பளீர்' நீலத்தில் சட்டை போட்டிருந்தேன் - அதை அரச நீலம்பாங்க. அஞ்சு குட்டியை வகுப்பிலே விட்டுட்டு திரும்பினா அதே நீலத்தில் ஒரு சேலை என் கண்ணிலே பட்டது. யாருடா இதுன்னு முகத்தைப் பார்த்தேன் - குழந்தைத்தனமான அந்த அழகு முகம் எம்மனதிலே பதிஞ்சிருச்சு!"

"அதுதான் அம்மாவாப்பா?"

"கேளு - அந்த பிஞ்சு முகத்தை பெரிய மனுஷியாக் காட்ட நீண்ட சடையை பிச்சோடாவாய் இறுக முடிந்திருப்பா - ஆனால் பிரமாதமாய் வருவாள்... உங்கம்மா."

இவள் பெருமையுடன் தாயைப் பார்ப்பாள்.

அம்மாவிற்கு மலர் செண்டு போன்ற முகம். 'பளீர்'ரிடும் குங்குமப் பொட்டு. எடுப்பான நாசியில் ஒற்றைக் கல் வைரம். நல்ல திரண்ட கல் என்பதால் பிரமாத ஜொலிப்பு. அம்மா



சிரிக்கும் போது பால் பற்களுடன் அவ்வைரம் உக்கிரமாய் போட்டியிடும்.

"என்ன பிரமாதம்? இருக்கற நாலே சேலையைத் துவைச்சு தலையணையின் கீழே மடிச்சு அழுந்த விட்டு சுற்றிட்டு வருவேன்."

"பிரமாத சேலையிலே வருவேன்னா சொன்னேன் - முகத்தில தெரியற உன் அக அழகு பிரமாதம்னேன். சின்ன சின்னதாய் எட்டுகளை வச்சு ஒரு சிங்கார நடை; நிமிர்ந்த மோவாய்; தெளிவான பார்வை - 'டீச்சர் டீச்சர்'னு குளவிக் குஞ்சுகளாய் சதா மொய்க்கற குட்டிகளுக்கு கனிவான புன்னகை... சந்தேகமே வராத அளவுக்குக் கற்றுத் தர்ர திறமை."

"போதுந்த்தான். 'உன் திறமையை வீணடிக்காதேன்னு'தான் இங்கேயே சின்னப் பள்ளிக்கூடம் ஒன்னு ஆரம்பிச்சாச்சே - அதுக்கு மேல எதுக்கு வீண் புகழ்ச்சி?"

'உம் மகளுக்கு உன்னைப் பத்தி தெரிய வேண்டாமா - அதுக்குத்தான்.' இப்படி மகளை மடியில் அமர்த்தி ஆட்டியபடியே பல பேச்சுக்கள்-

'கதையைக் கேளு - மறுநா நான் வெள்ளையிலே பச்சைக் கோடு போட்ட சட்டை. பார்த்தா இந்த அம்மணியும் வெள்ளையிலே பச்சைக் கரை சுங்குடிச் சேலை! எனக்கு ஆச்சரியமாப் போச்சு - இதென்னடா... தெய்வ சங்கல்பமான்னு கூட தோணுச்சு.'

அந்த வயதில் முழுதாய் அர்த்தமாகவில்லை. ஆனால் தன்னைப் பெற்றவர்களின் நேரம் புரிந்து பெருமை பொங்கும்.

"அவகிட்ட இருக்கற நாலு சேலை எது எதுன்னு புரிஞ்ச பிறகு நானும் அதை ஒத்த மாதிரி உடுத்திட்டுப் போவேன். முழிச்சுப் பார்ப்பா - வாய்க்குள்ளே சின்ன சிரிப்பு உருளும் - ஆனால் அதை மீறி பேச பயம் இந்த காலம் மாதிரி அப்போ. பார்த்த நிமிடமே,

"வர்ரீயா காஃபி சாப்பிடலாம்', 'ஐஸ்க்ரீம் பிடிக்குமா'ன்னெல்லாம் கேக்க முடியாது!' 'ஐய... போதும் அத்தான். நீங்களே நம்ப பொண்ணுக்கு எல்லாம் சொல்லிக் கொடுத்திடாதீங்க..."

'பார்வையில், ஓரிரு வார்த்தைகளில் மனசைப் புரிஞ்சு கிட்டோம். முதல்ல விசயத்தை அண்ணன்கிட்டதான் சொன்னேன். ஆனால் அது தப்பாப் போச்சு. ரஞ்சுவை வந்து பார்த்த அண்ணன் பிரமிச்சுட்டாரு. எங்க அண்ணி அழகிலே சேர்த்தியில்லே. உறவுன்னு தேடி வந்த மருமகள்-நமக்கு அப்படி பொடியனுக்கு இப்படி ஒரு அழகியான்ர எண்ணத்தில் அத்தனையையும் போட்டுக் கமுத்திட்டாரு..'

'ச்சோ... பெரியப்பா பத்தி குழந்தைக்கு இப்படியா சொல்றது?'

"தெரியட்டும். எல்லாரும் இருந்தும் நாம தனியாத்தானே இருக்கோம்? ஏன்னு குழந்தை புரிஞ்சிக்கட்டும். அண்ணா ஏகமாய் குதிச்சதுல எங்க அப்பா. அம்மா மனசிலே வெறுப்பு. சந்தேக மெல்லாம் வந்திடுச்சு. ரஞ்சு, பணத்துக்காக வந்த வில்லியாய் பட்டுட்டா. ஆனால் நான் நிலையா நின்னேன் - கட்டினா ரஞ்சனி தான்னு - ஆக ஓரமாய் கிடந்த இந்த எஸ்டேட்டை மட்டும் எம்பேருக்கு எழுதி. ஒதுக்கி விட்டுட்டாங்க. வெறுங் காடாக் கிடந்த இடம்."

"இப்ப. இங்கே விளையாத பழமில்லையே அத்தான்?" அம்மா சிடுசித்தாய் நினைப்பேயில்லை.

என்ன வேலையாய் இருந்தாலும் இவளைக் கண்ட மாத்திரத்தில் அள்ளி முத்தமிடுவாள்.... இனிய ஏக்கத்துடன் தூங்கிப் போனாள் மாயா.

மறுநாள் அதிகாலை உற்சாகமாவே எழுந்தாள். அனுவை 10 நாட்களுக்குப் பிறகு பார்க்கப் போகும் குதூகலம். அனுவைப் பார்த்ததும் உற்சாகம் மேலும் உச்சமேறியது. பத்து நாட்களுக்கான அரட்டை,

'உன் ஆளைப் பாத்துட்டேனே அனு!' என்ற சீண்டல், அர்த்தமற்ற சிரிப்பு, சாப்பாடு என்று நாள் போனது.

மாலை அரவிந்தனது ஓவிய கண்காட்சியில் காதலர்கள் இருவரும் இரும்பும் காந்தமுமாய் ஒட்டிக் கொள்ள, மாயா தனியே ஒரு சுற்று வந்தாள்.



மையமாய் வைக்கப்பட்டிருந்த சில படங்களில் புகைப் பெண் போல வெவ்வேறு உடைகளில், பாவனைகளில் ஜாலத் தோற்றம் தந்து நின்றது அவளேதான்!

அருகே போய் பார்த்தாள்.

மெல்ல தேக்குச் சட்டங்களுக்குள் அன்று அவளை அரவிந்தன் வரைந்து போன படங்கள் உயிர் பெற்றிருந்தன.

வனமோகினியின் உயிர்ப்பும் உல்லாசமுமாய்... இது தான்தானா? சந்தோஷமாய் வியந்தாள். ஓவியத்தின் கீழே 'விற்பனை ஆகி விட்டது' என்ற வாசகம்.

'பொட்டிக்'கிற்காக வரைந்த ஓவியங்களை இங்கு பார்வைக்கு வைத்திருக்கிறார். பலர் படத்தை கண்டதோடு இவளையும் ரசனையுடன் பார்த்து நகர்ந்தனர் -

பெருமையும், சிறிது வெட்கமுமாய் உணர்ந்தாள்.

"என்ன திருப்திதானா?"

"அழகாய் வந்திருக்குது அரவிந்தன். உங்க கற்பனைத் திறனையும் நிறைய சேர்த்திருக்கீங்க. நான் இத்தனை விநோத அழகில்லை - புயலும் புகையும் போல... தீயும் பனியும் இணைந்தாற்போல கலவையான ஓவியம் இது..."

"ஆ... அதைக் கொண்டு வந்துட்டேன்னா உன் மாயத் தோற்றத்தை சிறை பிடிச்சுட்டேன்னு அர்த்தம் - எனக்கு வெற்றிதான்!"

"ஓ... நன்றி."

"எத்தனை பேர் இதை விலைக்குக் கேட்டுட்டாங்க தெரியுமா? சமாதானம் சொல்லி மாளலை.. அப்புறம் இதோ, உனக்காக நான் கொண்டு வந்த சன்மானம்."

இருகைகளாலும் பவ்யமாய் நீட்டினான். கரும்பச்சை டிஷ்யூ காகிதத்தில் பொதிந்து மஞ்சள் ரோஜாவுடன் ஒரு பரிசுப் பொருள்.

"என்ன இது... ரோஜாவெல்லாம் குத்தி - தடபுடலாய்?"

"இந்த மஞ்சள் பூவுக்காக அரை மணி நேரம் அலைஞ்சிருக்கேன்."

"என்ன விசயம்" குழம்பினாள் அனு.

"ரோஜாவில் இத்தனை விசயமிருப்பது எனக்கு இன்னிக்குத்தான் தெரியும்."

"என்ன அனு - என்னவர் எப்போது இப்படி புதிராய்த்தான் பேசுவாரா?"

"எங்கிட்ட இல்லை. எனக்கு புத்தி கொஞ்சம் மட்டுங்கிறது அவருக்குத் தெரியும் - புதிர் போட்டால் நொந்து போறது அவர்தான்." சிரித்தனர்.

"சிவப்பு ரோஜாதான் சிட்டி முழுக்க கிடைக்குது - மஞ்சளுக்காக அலைஞ்சேன்."

"ஓஹோ... புரியுது." தலையாட்டினாள் மாயா.

"என்ன - எனக்கும் சொல்லு."

"இது காதல் பரிசு இல்லைங்கறார் அனு. சிவப்பு ரோஜா காதலின் அடையாளம். இது வெறும் பிரியம்தான் - நன்றி கலந்த பரிசு... ம்ம்?"

"யப்பா - கடைசியில் அழகும் புத்தியும் கலந்த ஒரு பெண்ணை பாத்துட்டேம்ப்பா" - விழிகளை வானத்திற்கு உயர்த்தினான் அரவிந்தன். பரிசைப் பிரித்தான்.

வெள்ளிச் சட்டங்களுக்குள் அவளது ஓவியம் சிறிய அளவில் - சுவரை அலங்கரித்த அதே படங்கள் இங்கே கைக்கு அடக்கமாய்...

"ஓ நன்றி. வெறுமே கோட்டு ஓவியங்கள் போதும்னேன் - இத்தனை சிரத்தையாய் வர்ணமிட்டு... சட்டமும் போட்டு..."

"ரோஜா குத்தி பரிசாய் தந்து..!" மூச்சு வாங்க முழங்கினான். "ரொம்ப நன்றி - பிடிச்சிருக்குது."

"அப்ப இதுக்கு பதில் பரிசை எதிர்பார்க்கலாமா?"



"அதுக்குத்தான் அனுவை தயார் செய்திருக்கேனே."

"என்ன எப்படி?"

"அரவிந்தன் பாவம், பார்க்க ரொம்ப சுமார்தான் - மற்றதிலும் பிரமாதமானவர் இல்லேன்னாலும் உன்மேல் உயிராய் இருக்கிறார். போகட்டும் அவருக்கே கழுத்தை நீட்டிடு அனுன்னு - இவளை ஒருவழியாகப் சம்மதிக்க வைச்சிருக்கேனே..!"

"புத்தியிருந்தால் கூடவே நீளமான வாலும் இருக்கும் போலவே?"

துக்கமாய் மோவாய் தடவினான் அவன். மேலும் சில நண்பர்கள் வர பேச்சு அறுந்தது.

சிவப்பு ரோஜா காதலின் அடையாளம் என்பதை அவளுக்குச் சொல்லித் தந்ததே மாறன்தான்...

ரோஜா முட்களாய் உள்ளே ரண நினைவுகள் குத்தின. மலர்ந்து மணம் வீசும் இரத்த நிற ரோஜாவை அவள் உள்ளங்கையை விரித்து அதில் வைத்து மிருதுவாய் மூடுவான். சில சமயம் அவளது இரட்டை சடையில் பக்கத்துக்கு ஒன்றாய் தானே செருகி வைப்பான்.

"ஒன்னு போதும் அத்தான் ரெட்டை ரோஜான்னால் கொம்பு போல இருக்கும்.'

'ஆஹா..! இந்த மாயா காளையை அடக்கறேன் பார்' என்று சடைகளைப் பிடித்து ஜல்லிக்கட்டு தினுசில் மல்லுக்கு நிற்பான். அவன் பிடியோ, பேச்சோ என்றைக்கும் வலித்ததில்லை. ஆனால் அதற்கெல்லாம் சேர்த்து வைத்து கடைசியில் வாழ்வைப் பறித்து விட்டானே... கதற கதற கழுத்தறுத்து விட்டானே!

கண்கள் கலங்கின - பால் விழிகள் ரோஜாவாய் நிறம் மாறின.

அன்றிரவு அத்தனை வேலையும் முடிந்து மூவரும் சாப்பிட ஒரு 'சைனீஸ்' உணவகத்தில் நுழைந்த போது நள்ளிரவு தாண்டி விட்டது.

உணவு தேவையைக் குறிப்பிட்டு விட்டு ஆயாசமாய் அமர்ந்தனர்.

"ஆ... இப்ப கேட்டுடறேன்..."

"என்ன?"

"என்னை சீக்கிரமாய் எஸ்டேட் கூட்டிட்டு போ, மாயா."

இவள் முகம் இருண்டது.

இருவரும் அதைக் கவனிக்க, அனு பேச்சை மாற்றினாள். ஆனால் மாயா முகத்தின் ஒளி முழுசுமாய் மீளவில்லை.

## 3

வீட்டிற்கு திரும்பிய இரு பெண்களும் 'க்ளென்ஸிங் மில்க்' பூசி, துடைத்து, உடம்புக்குக் குளித்து, பல்துலக்கினர். இரவு உடைக்குள் மாறிய பின் கூந்தலைப் பிரித்து 'ப்ரஷ்' கொண்டு சீராய் சீவி விட ஆரம்பித்தனர். நூறு முறை 'விறு விறு'வென சீவி விட கேசம் மின்னும்... பட்டாய் பறக்கும்.

இது நித்திய நியமம்.

எத்தனை அசதியாய் இருந்தாலும் விட முடியாத வேலை. பூசிய க்ரீம், பவுடர், சாயங்களுடன் படுத்து விட்டால் மறுநாள் காலை முக சோபை குன்றிவிடும்.

தினம் நள்ளிரவு தாண்டி வீடு, சகட்டுமேனிக்கு விருந்து, பீர் என்று ஆடும் சில குட்டிகள் புகழ் வந்த ஜோரிலேயே வீழ்ந்து விடுவதன் காரணம் இதுதான்.

பெருந்தீனியும், ஆட்டமும் சேர்ந்து அசத்தும் - ஆக அப்படியே படுக்கையில் விழுந்து விட்டால் மறுநாள் காலை முகம் வாடித் தெரியும் - சிலருக்கு முற்றி மிரட்டும்.

அன்று காமிரா முன் நிற்க நேர்ந்தால், காமிரா பின்னே நிற்பவன் முறுமுறுப்பான்-



'பெண்நாய், ஒரேயடியாய் சுற்றித் திரிந்திருக்கிறது' என்று. தரக்குறைவான முணுமுணுப்புக்களை கேட்க நேரிடும். கோபம் வரும் - பிறகு காமிராவிற்காகக்கூட உல்லாசமாய் சிரிக்க முடியாது - கண்களில் ஜீவன் இராது.

'ஷி இஸ் நோ குட்' என்ற பேச்சு பரவும். திடீரென ஒரு நாள் எந்த வேலையும் இல்லாமல் வீட்டிலேயே கிடந்து... பிறகு அது தொடர்கதையாகும். அவசர, ஆர்ப்பாட்ட வியாபார உலகம் அவளை மறந்தே விடும்.

அனு ஜாக்கிரதையான பெண்.

மாயா தொழில் பக்தியால் ஜாக்கிரதையாய் இல்லை. அவள் வளர்ந்த விதம் அப்படி. தாயில்லாமல் போனாலும் பாசமான தந்தை. எல்லாவற்றையும் விட செண்பகா அத்தையின் அரவணைப்பு!

அத்தைக்குக் காரண பெயர் போலும்.! இளமஞ்சள் நிறம் - ஒடுங்கிய பூந்தேகம். அபூர்வ சாந்தம் காட்டும் கண்கள். பிரியமான, மிருதுவான வார்த்தைகள். செண்பக மரம் அருகிருப்பதை அதன் மணம் சொல்லுமே... அதே போல அத்தை வீட்டிலிருப்பதை அதன் சுத்தமும் அழகும் தெரிவிக்கும்.

அப்பா எதிரே நின்று அத்தை பேசியதை பார்த்ததில்லை. தன் மகனிடம் - "மாறா, மாமாவுக்கு வென்னீர் விளாவி வையப்பா - இந்த துண்டு வேட்டியை அங்கே வை."

'சாப்பிடும் போது பக்கத்தில் நின்னு மாமாவுக்கு பரிமாறப்பா' என்று காற்றாய் குரல் தருவதோடு சரி.

அப்பாவும் அத்தையுடன் சரிசமமாய் நிற்க மாட்டார். அத்தனையும் மணிமாறன்... அதாவது அத்தையின் மகன் மூலமாகத்தான்.

"இதுல ஆயிரம் ரூபா இருக்குதுப்பா மாறா. செலவுக்குப் போதுமான்னு கேட்டுச் சொல்லு."

"எல்லோருக்கும் மாசச் சம்பளம் இருவது ரூவாய் கூட்டலாமான்னு அம்மா கேட்டாங்க மாமா."

"அவள் நோக்கம் போல செய்யச் சொல்லுப்பா. மொத்தத் தேவை எவ்வளவுங்கறதை மட்டும் எங்கிட்ட சொல்லுங்க-போதும்.."

"சரிங்க மாமா."

அன்று அப்பாவிடம் பணம் பெற்ற மாறன் தான் இன்று இவளுக்கு பணம் அனுப்புகிறான். தேவைக்கு மேலே இருமடங்கு பணம். அப்பா மறைவிற்குப் பின்பு எஸ்டேட்டின் பொறுப்புகள் சுணங்காமல், துவளாமல் நிர்வகிப்பவன். சரோஜாவின் கடிதங்களும் அடிக்கடி வரும்.

இவளும் எழுதினாள் -

"அன்புள்ள சின்னத்தை, உங்கள் கடிதம் கிடைத்தது. அதை வாசிக்கும் எனக்கு சந்தோஷத்தை விட சங்கடம்தான். அப்பா, செண்பகா அத்தை இருவரும் இறந்த குறை தெரியாமல் நீங்கள் என்னிடம் பாசம் காட்டினீர்கள் - உண்மை. ஆனாலும் நான் 'ரஞ்சனியகத்தை' மறக்கவே விரும்புகிறேன். அந்த வீட்டில் நான் அனுபவித்த அத்தனை மகிழ்வும் இன்று ஏனோ முட்களாய் நெருக்குகின்றன. உங்கள் கடிதங்கள் நான் மறக்க விரும்புவற்றை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துகின்றன - ஆக தயவு செய்து சற்று காலம் நீங்கள் எழுத வேண்டாம் - புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்."

என்ற வேண்டுதலுக்கு மதிப்பளித்து சரோஜாவும் எழுதுவதில்லை. அவ்வப்போது தின்பண்டங்களும் பிறந்த நாளிற்குப் புது சேலையும் வரும்.

அனுவிற்கும் இவளுக்கும் தனித்தனி படுக்கை அறைகள் உண்டு என்றாலும் அடிக்கடி ஒரே அறையில் படுத்து, கதை அளந்தபடி உறங்கிப் போவார்கள்.

இன்றும் அனு பேச்சை ஆரம்பித்தாள். "நாம இங்க குடியேறி ஒரு வருஷமாகப் போதுதில்லை?"

'ம்ம்...'



"வீட்டுக்குப் போறதேயில்லை நீ? படிப்பு காரணம்னா கடிதமாவது எழுதலாம்ல்?"

அனு சென்னை, பெங்களூரில் வளர்ந்தவள் என்பதால் தமிழ் சரளம். உச்சரிப்புதான் சற்று கொச்சை.

"தோணறதில்லை அனு."

"மாசா மாசம் சுளையாய் பணம் வந்து. நல்ல நாளில் பரிசும் பலகாரமும் அனுப்பற உறவுக்காரங்க..."

"ம்ப்ச்... அவங்க நிர்வகிக்கறது என் சொத்து."

"நீ தடுத்திட்டதால இப்ப அவங்களும் எழுதறதில்லைன்னு சொன்னே."

"ஆமா - சொன்னேன்."

"தயவு செய்து இறுக்கிக்காதே மாயா - மனசு திறந்து பேசு. நம் எல்லாருக்கும் குடும்பம், அதன் அனுசரனை வேணும். எத்தனைதான் சொந்தக் காலிலே நின்னாலும், சாஞ்சுக்கறதுக்கு பாசச் சுவர் அவசியம்."

"சரோஜாவை நான் சின்னத்தைன்னு கூப்பிட்டாலும் அவங்க எனக்கு ரத்த பந்தமான உறவில்லை. என்னை விட 10 வயசுதான் மூத்தவங்க. அவங்க அப்பா எங்க எஸ்டேட்டிலே மேற்பார்வை யாளராய் இருந்தவர். தன் மகளை எங்கப்பா படிக்க வைத்த நன்றிக்காய்,

"இவ இங்கயே ஏதேனும் உதவி ஒத்தாசையாய் இருக்கட்டும்ய்யா. தையல், வேலை, டைப்பிங் தெரியும்னு, கொண்டு வந்து விட்டுட்டார் ரொம்ப பாசமான, அமைதியானவங்க..."

உள்ளே நினைவுகள் அலையடித்தன.

அப்பா தலையசைத்தும் செண்பகா அத்தை வந்து சரோஜாவை உள்ளுக்குள் அழைத்துக் கொண்டாள்.

ஒரு பெண் துணை கிடைத்த அத்தை மேலும் தெளிந்து தெரிந்தாள். மெல்லிய குரலில்தான் என்றாலும் அதிகம் பேசினாள்.

இருவருமாய் சன்னல், கதவு திரைகளை முக்காலி போட்டு ஏறி நின்று மும்முரமாய் அளந்தார்கள்.

எல்லோருக்கும் நினைவு தெரிந்ததிலிருந்து அந்த கனமான அரக்கு நிற திரைச் சீலைகள்தான். இப்போது வெளிறி, அங்குமங்கும் சாயம் கலைந்திருந்தாலும் துணி கிழிசல் இல்லாத அவற்றை மாற்ற யாருக்கும் தோணியதில்லை.

ஆனால் இரண்டு பெண்கள் சேர்ந்து விட்டால் அவர்களுக்குத் தோன்றாமல் இருக்குமா?

வீட்டிற்குத் தேவையான தலையணை உறைகள், துண்டுகள் தைத்த பிறகு, புதுத் திரைக்கு தேவைப்படும் துணியை நிர்ணயித்தார்கள். மாயாதான் அப்பாவிடம் தூது போனாள்.

"அப்பா, வீட்டுக்கு வெள்ளையடிச்சு மூணு வருஷமாச்சாம்."

"ம்ம் - அடிச்சுரலாம்."

"அப்படியே, தொங்கற சாக்குத் துணையையும் மாத்தணுமாம்."

"ஆ... என்னது?"

"திரைச்சீலைப்பா."

"அட வாலு! அது பாட்டுக்கு வருஷக் கணக்காய் தொங்குது வருஷத்துக்கு ஒரு தரம் வண்ணானுக்கு போட்டு வாங்கறோம்."

"கொடுத்த காசுக்கு அது உழைச்சிடுச்சுப்பா - வெட்டி பள்ளிக்கூட டஸ்டர் ஆக்கிடலாமாம். கண்ணுக்கும் அலுத்திருச்சு.."

"சரோஜா பொண்ணு தையல் மெஷினிலே உக்காந்ததும் செண்பகாவிற்கு இந்த யோசனை வந்திருக்கும் - உங்க இஷ்டம் போல செய்துக்கோங்க..."

மூன்று பெண்களும் காரில் மதுரைக்குக் கிளம்பினார்கள். அப்பா தாராளமாய் தந்திருந்த பணத்தில் ஆசைப்பட்டவற்றைத் திருப்தியாய் வாங்கிக் கொண்டார்கள்.

வீடு திரும்பிய மாயா முகத்தில் ஏக மலர்ச்சி.



அப்போதே அப்பா - கங்காதரன் நிச்சயித்து விட்டார் - பெண் தாயில்லாத குறையின்றி வளர இரண்டு பெண்கள் இங்கிருப்பது நல்லது என்று.

வீட்டிற்கு "ஸ்னோஸம்" அடிக்க ஏற்பாடு செய்தார். சில மராமத்து வேலைகள் நடந்து, புது சீலைகளைப் போர்த்து கொண்ட வீடு புது சோபை பெற்றது. கருநீலத்தில் வெளிர் மஞ்சளும் ஆரஞ்சும் தூவிய திரைத்துணி.

பல பத்திரிகைகளைப் புரட்டி, வீடெங்கும் அலங்கார ஜாடிகள், செடிகள், விளக்குகள் என்று வைக்க - கண்ணை நிறைத்தது வீடு.

துணையாய் கிடைத்த இரு பெண்களும் அழகுணர்ச்சி நிரம்பியவர்கள், குணவதிகள் என்பதில் மாயா அதிர்ஷ்டக்காரிதான்.

ஆனால் அவள் மனதிற்கு மிக நெருங்கியவன் மாறன்தான். செண்பகா அத்தையின் மகன். மாயாவைவிட் ஏழு வயது பெரியவன். எஸ்டேட் வந்து சேரும் போதே பள்ளிப் படிப்பை முடித்திருந்தான். ஆனால் முகத்தில் பால் மணம் - தாயைப் போலவே வெடவெடத்த உடம்பு... அமைதியான கண்கள். ஆனால் உதடுகள் மலர்வதற்கு முன்பே சிரிப்பு வந்து விழிகளைத் தொட்டுவிடும். அவளுக்கு அது மிகப் பிடிக்கும்.

செண்பகா அத்தையின் கடிதம் எழுதி வரவழைத்தது அப்பாதான். அம்மா இறந்த பிறகு அப்பா அசந்து தெரிந்தார் - ஆனால் அஸ்வினி சித்தி வந்த பிறகு அரண்டே போனார் - முகத்தில் துணி அருள் இல்லை.

'பச்சக் குழந்தை தாயில்லாம நிக்குதே' என்று புலம்பிய அம்மாவைப் பெற்ற பாட்டி, தாத்தா தங்களது இளைய மகளை எஸ்டேட்டிலேயே விட்டுச் சென்றனர்.

'மாயா குழந்தை மனசு தேறுற வரைக்கும் இளையவள் அஸ்வினி இங்கேயே இருக்கட்டும் மாப்பிள்ளை. பிறந்ததே ஒன்னு - அதுவும் பொண்ணு. ஆம்பிள்ளை நீங்க ஒண்டியா நின்னு இவளை வளர்த்துட முடியுமா? இன்னும் ரெண்டு வருஷத்தில மேலாக்கு

போட்டுட்டான்னா குழந்தை உங்க முன்னே நின்னு பேச சங்கோஜப்படுமே - அதுக்கு வீட்டில ஒரு பொம்பளை வேணாமா?' என்று அப்பாவை புலம்பலாலே மிரட்டியிருந்தார்கள்.

அன்று வரை வயிற்று வலியில் துடித்து இறந்த, மனைவியின் பிரிவில் துவண்டிருந்த மனுஷனை - மகளின் அன்பும் அண்மையும் தான் இனி தன் பிடிமானம் என்று தேறிவந்த நேரத்தில் பேசி அடித்தார்கள்.

'ஆக பெண் இல்லாமல் மகள் மாயாவை வளர்த்து ஆளாக்க முடியாது போலியே...' என்று அவரும் மலைத்தார்.

"அஸ்வினி அங்க என்ன பண்ணுறா? சினிமாப்பட புஸ்தவம் அத்தனையும் வாங்கிப் போட்டு படிப்பா - அதை இங்கியே செய்யட்டுமே - ஏண்டி, மாயாக்குட்டிய இங்கிருந்து கண்ணாய் பாத்துக்க மாட்ட?"

பெற்றோர் கேட்க சித்தி முகத்தை நிமிர்த்தவேயில்லை. "அத்தானைப் பாரு... உங்கக்கா போன ஒரே வாரத்தில - அதுவும் வீடு முழுக்க உறவு சனங்க இருக்கையிலேயே இப்படி வாடிட்டாரு. இவரத் தனியே விட மனசில்லையே - கூட இருந்து பக்குவமாப் பாத்துக்குவேயில்லை?"

இதற்கு மட்டும் 'சட்'டென நாகமாய் தலை நிமிர்த்தி சம்மதமாய் தலையாட்டினாள் அஸ்வினி.

ஆக அன்று ஆரம்பித்தது கங்காதரனுக்குத் தலைவலி. அந்த தலைவலிக்கான தைலமாய் வரவழைக்கப்பட்டவள் தான் செண்பகம். கணவனை இழந்து வட இந்தியாவில் இருந்த அத்தையை கங்காதரன் தேடிப் பிடித்து அழைத்து விட்டார்.

ஒடிசலாய் அத்தையும் அவளை விட ஒரு பிடி உயரமாய் மணிமாறனும் வந்து நின்ற அந்தக் காலை இன்றும் பசுமையாய் நினைவில் உண்டு.

அன்று அப்பாவிற்குப் பிடுங்கல்கள் அதிகம். "ஐயா சாப்பாட்டு அரிசி தீரப்போவுது - உளுந்து சுத்தமா இல்லை." சமையல்காரர்



சொல்ல, இன்னொருவன் "பத்து பல்பு ஃப்யூஸ்ங்கய்யா. கேஸ் சிலிண்டர் இந்த வாரம் வரலின்னனா ஸ்டவுல சமைக்கணும்னு சமையக்காரரு அலுத்துக்கறாரு - இந்தப் பட்டியல்ல உள்ள அத்தனை சாமானும் வேணும்.."

"தோட்டக்காரன் நாலு நாளு லீவு கேக்கான். அவஞ் சம்சாரத்துக்கு பேறுகால சமயமாம். வேற ஆளு வந்திரணும் - தோட்டத்துல செத்தை சேர்ந்தா பாம்பு நடமாட்டம் ஏற்பட்டிரும்."

"வண்ணான் உருப்படிக்கு எட்டணா கூட்டிக் கேக்காய்யா நாலணாக்கு மசிய மாட்டேங்குதான் - அவனை விட்டா நமக்கு இந்த காட்டுல வேறக் கதியில்லைங்கறத் திமிரு."

எஸ்டேட் பிரச்சினைகளோடு, வீட்டு வேலைகளும் அவரைக் கொத்திப் பிடுங்கிய நேரம்தான் தேவதையாய் அத்தை வந்து இறங்கினாள்.

அப்பா முகத்தில் எத்தனை நிம்மதி!

அஸ்வினி அங்கிருந்தும் அவளால் துளி உதவி கிடையாது. நேரத்திற்கு ஒரு சிங்காரத்தோடு கூடத்து ஊஞ்சலில் அமர்ந்து சினிமாப் பத்திரிகையை வயித்து படிப்பது மட்டும்தான் அவள் செய்வது!

அப்பாவைப் பார்க்க, கீழ்நாட்டு வியாபாரிகள், எஸ்டேட் ஊழியர்கள் யார் வந்தாலும் அங்கிருந்து அசைய மாட்டாள். குளித்த தலைமுடியை கோதி உலர்த்தியபடி கையில் விரித்த புத்தகத்துடன், ஒரு காலை மடக்கி, மறுகாலால் லேசாய் ஊஞ்சலை உந்தி விட்டபடி சரஸ்வதி தேவி போல காட்சி அளிப்பாள்.

பலர் பேசி முடித்து கிளம்பி விடுவார்கள். ஆனால் சிலர் அவளைக் கண்டு சபலமாய் வழிவது, கோர்வையாய் பேச முடியாதபடி குளறுவது அப்பாவிற்கு பேரவஸ்தை.

'அஸ்வினி உள்ளே போ' என்று கொழுந்தியாளை அதட்டவும் துணிவற்று, வழிசல் பேர்வழிகளின் நாடகத்தையும் பொறுக்கக் கூடாமல் இறுதலைக் கொள்ளி எறும்பாய் தவிப்பார்.

ஆக அவர் செண்பகாவை உற்சாகமாய் வரவேற்றார் - "வாம்மா வா - எப்ப வர்ரேன்னு ஒரு கடிதாசி எழுதியிருக்கலாம்ல?" அத்தையிடமிருந்து பதில் இல்லை.

மரியாதையான ஒரு கரக்குவிப்பு - அவ்வளவுதான்.

"இந்த அண்ணா யாருப்பா?"

"மாயா - இவங்க செண்பகம் அத்தை - இவன் மணிமாறன் அண்ணன் இல்லை - உனக்கு அத்தான்."

"அம்மா உங்களை அப்படித்தானப்பா கூப்பிடுவாங்க?"

'ம்ம்...' அவர் யோசனையுடன் மாறனை ஏற இறங்கப் பார்த்தார் அன்றே அந்த விதை அவர் மனதில் விழுந்திருக்க வேண்டும்.

வளமான மண்ணில் புதைந்த அவ்விதை விரைவில் 'பளிச்'சென முளைத்து தலை நீட்டியது.

பருவ வயதில் அபாரமாய் கிளைவிட்டது - பாசப் பசுமையுடன்.

## 4

மறுநாள் காலை சூடான தேநீருடன் மாயாவை எழுப்பினாள் அனு.

"நன்றி - ஒரே நிமிஷம் - வாய் கொப்பளிச்சிட்டு வந்துடறேன்.?"

கழுவிய முகத்தை துடைத்தபடி வந்து அமர்ந்தாள். துளி அலங்கார பூச்சில்லாத இள முகம்.

"நேத்து ராத்திரி ஊருக்கு. வீட்டுக்குப் போயிட்டு வந்தாச்சா?"

"ம்ம்...? டீ நல்லாயிருக்குது."

"ஊருல எல்லாரும் எப்படியிருக்காங்க?"



"புரியலியே?"

"தூக்கத்திலே ஒரேயடியாய் பினாத்திட்ட. அஸ்வினி சித்தி, மாறன், அப்பா, அத்தைன்னு... அத்தான் அத்தான்னு காதல் உருகல் வேற..."

மாயாவின் முகம் சிவந்தது.

"ஸாரி - உன் தூக்கத்தைக் கெடுத்திட்டேன்."

"நான் தான் மன்னிப்பு கேட்கணும். சும்மா இருந்தவளை 'யாரு, என்னன்னு' பழசெல்லாம் கிளறிட்டேன்."

"ம்ப்ச் - பரவாயில்லை அனு. நீ கேட்டதும் நல்லதுக்குத்தான் எத்தனை நாள் தான் நிழலைப் பார்த்து பயந்து ஒளியறது?"

"அப்போ ஊருக்குப் போகப் போற?"

"ம்ம்... போகணும்." தேநீர் கோப்பையை உள்ளங்கைகளுக்குள் பொதிந்து உருட்ட, வெள்ளை சைனா கோப்பையின் தங்க பூக்கள் ஜாலமாய் மின்னின.

"நிறைய உறவுக்காரங்க இல்லியா உனக்கு?"

"இப்போ மிஞ்சினது மாறன் அத்தானும் - சின்னத்தையுந் தான்."

"அதிலே சின்னத்தை உனக்கு உறவில்லை."

"ஆனால் நிறைய பிரியமுண்டு."

"அப்போ நீ தவிர்க்க முயலுகிறது மாறனைத்தான் இல்லியா?"

மௌனமாய் கோப்பையைக் கழுவி கவிழ்த்தாள் மாயா. "இன்னைக்கு என்ன சமைக்க - ஓட்ஸ் போடறேன் - பிறகு டோஸ்ட், ஆம்லெட்.?"

"பேச்சை மாத்தாதே மாயா. நிழலைப் பாத்து பயந்து ஒளியத் தேவையில்லைன்னு இப்பத்தானே சொன்னே?"

"ம்ம் - மாறனை சந்திக்க எனக்குப் பிரியமில்லை அனு."

"அதாரு அஸ்வினி?"

"எங்க சித்தி."

"அம்மாவோட தங்கையா?"

"ஆமா. ஆனா ரெண்டு பேருக்கும் குணத்திலே ஏகப்பட்ட வித்தியாசம். எங்கம்மா மனசு, முகம் எல்லாம் குழந்தைதான் - வெகுளித்தனமான வெள்ளை அழகு. நிறைஞ்ச பொட்டும், வைர மூக்குத்தியும்தான் அவங்க அலங்காரம். சித்தி ஊர்கோலம் போற தேரு. முடியை முகத்துக்கு ரெண்டு புறமும் ஸ்பிரிங் மாதிரி சுருட்டி தொங்க விட்டிருப்பாங்க."

"தேரின் தொம்பை மாதிரி."

இருவரும் சிரித்தனர்.

"புருவம், கண்ணுக்கு எக்கச்சக்க மையி. நிச்சயம் மாசத்துக்கு ஒரு 'ஐடெக்ஸ்' டப்பா காலி ஆயிடும். நெத்தியிலே தினம் வெவ்வேறு வடிவம், நிறத்திலே பொட்டு. லிப்ஸ்டிக் போடறதில்லை. இப்ப போல அப்போ, அந்த ஊர்கள்ல உதட்டுச் சாயம் சகஜமில்லை. ஆனா சதா உதட்டைக் கடிச்சிட்டு, ஈரப்படுத்திட்டே இருப்பாங்க."

"ம்ம் - நிச்சயம் இந்த கேரக்டர் தொந்தரவு தந்திருக்கும். சினிமா மாயையில், கற்பனையில் மூழ்கிக் கிடக்கும் ஒரு பெண்."

"அப்பா டைரியை அவர் இறந்த பிறகு நான் வாசிக்க நேர்ந்தது - அதில் அவர் அவஸ்தையைக் கொட்டியிருந்தார்."

"பாவம் - வேற யார்க்கிட்டேயும் சொல்ல முடியாத நிலை."

"ம்ம்... வீட்டுப் பின்புறம் முழுக்க மல்லிகைப் புதர்தான். அப்பா, அம்மா அங்கே போகும்போது என்னைக் கூட்டிக்கிறதில்லை. 'ஐயோ கண்ணு, மல்லிகை வாசனைக்குப் பாம்பு நடமாடும் - நீ எதுக்கு?'ன்னு விட்டுட்டுப் போவாங்க."

"ஆஹா - எந்தக் காலத்திலும் காதல் உணர்வில் மட்டும் மாற்றமில்லை. தம்பதிகளுக்கான தனிமை நேரம் அது." மந்தஹாசமாய் புன்னகைத்தாள் அனு.

"பிறகுதான் எனக்கும் அது புரிஞ்சுது அனு. அந்த வேளை அங்கே போய் நின்னால், குத்துச் செடிகள் முழுக்க நட்சத்திரங்களாய் மல்லிகை. அவற்றின் கிளர்ந்து மயக்கும் வாசனை - எஸ்டேட் சில ஆயிரம் அடி உயரத்திலேங்கறதால இதமான குளிர் காற்று.. அமைதி... காதல் உணர்வுக்கு ஏற்ற இடம் அது..."



"புரியுது."

"அம்மா இறந்த பிறகும் கூட அப்பா எப்போவாவது அங்கே போய் நிற்பார் - திரும்பும் போல அவர் கண் கலங்கியிருக்கும்."

"பிரியமாய் வாழ்ந்த தம்பதிகள்..."

"அப்படி ஒரு நாள் அஸ்தமனத்துக்குப் பிறகு அவர் அங்கே போக, சித்தியும் பின்னேயேப் போயிருக்காங்க. அதுவும் அம்மாவின் புடவை, மூக்குத்தியோட...?

"அதெப்படி அவங்களுக்குக் கிடைச்சது?"

"பீரோ சாவியும், சாவிக் கொத்திலேதானே இருந்திருக்கும். அம்மா இருக்கும்போதே சித்தி பீரோவைக் குடைவாங்க. கடைகளோ, முக்கியமாய் சினிமாத் தியேட்டரோ இல்லாத எங்க எஸ்டேட்டிலே சித்தி தங்க சம்மதிச்சதுக்கு முக்கிய காரணம் இந்த செல்வ செழிப்புதான்."

"உனக்கு பத்து வயசான பிறகும் ஏனந்த சித்திக்குக் கல்யாணமாகலை?"

"அம்மாவை விட 8 வயசு இளையவங்க அஸ்வினி சித்தி. 'வர்ர வரனெல்லாம் தட்டி கழிக்கறாளே இவ'ன்னு பாட்டி புலம்புவாங்க."

"வரவனெல்லாம் அத்தானிலே பாதி கூட இல்லையேங்கறா இவ. குமாஸ்தாவாய் வேலை பாக்கறவன் கூட முப்பது பவுன் நகை, பைக், பணம்னு சீர் எதிர்பார்கிற போது அஸ்விக்கு புஸ்வாணம் போல கோபம் பொங்கிடறது. சீறுறா -"

"அத்தனை வக்கு எனக்கிருந்தா இந்தப் பயலை ஏறெடுத்தும் பார்ப்பேனா"ங்கறா.

"அவங்க சினிமா நடிகனைப் போல ஒரு நாயகனைக் கற்பனை பண்ணி வச்சிருப்பாங்க..."

"இருக்கும் - அப்பாவைக் கூட, 'சினிமா சிவக்குமார் போல எங்க அத்தான்... கண்ணியமான கவர்ச்சி' ம்பாங்க."

"அப்படீன்னா, உங்க அப்பாவையே மடக்கத் திட்டம்?"

"அதன் முதல் கட்டமாத்தான் அம்மாவோட புடவை, நகையோட, மல்லிகைத் தோட்டத்திலே நின்னிருக்காங்க.

அப்பா டைரியிலே - 'அஸ்வினி அழகில் அவ அக்காவை விட சிறிது மட்டம்னா குணத்தில் வெகு மட்டம். எங்கிட்ட முறை தவறி பேசி, நடக்க முற்பட்டான்னு குறிப்பிட்டிருந்தார். வைர மூக்குத்தி தன் முகம் முழுக்க ஒளி பாய்ச்சுவதாய் அவளுக்கு நினைப்பு - ஆனால் அந்த விழிகளின் பேராசைத் தணலுக்கு முன் வைரத்தின் ஜொலிப்பு தோற்றதுன்னு கூட கவிதைத்தனமாய் எழுதியிருந்தார். ஆனால் அம்மாவின் நகைகளை வாங்கிப் பூட்டி, சாவியையும் தனியே எடுத்திட்டாராம்... இதை சித்தி எதிர்பார்க்கலை..."

"மனைவியை இழந்து மனசும் உடம்பும் காய்ஞ்சு கிடக்கற மனுஷன். நொடியிலே கவிழ்த்திடலாம்ற மமதை..."

"அந்த கர்வத்திலே அடி விழத் தாங்க முடியலை. தன் அப்பா அம்மாவை வரவழைச்சாங்க. அவங்களும் வர, வீடு முழுக்க ஒரே கசமுசான்னு விவாதம்... அழுகை."

"கல்யாணத்திற்கான முயற்சி... உங்கப்பா தன்னிடம் தப்பாய் நடந்ததாய் கதை திரிச்சிருக்கலாம்."

"ஆனா அப்பா நிலையாய் நின்னுட்டார். முழுசாய் அம்மா வகை உறவுக்காரங்களை வெளியே தள்ளவும் முடியலை."

"மனைவி இறந்தால் அந்த ஆணுக்கும் எத்தனை சோதனை... சங்கடம்?" அப்போதான் செண்பகா அத்தையை மும்முரமாய் தேடி பிடிச்சாங்க அப்பா."



"பிறகு அஸ்வினி என்னானாங்க?"

"தற்கொலை பண்ணிக்குவேன்னு மிரட்டி தனக்குக் கல்யாண ஏற்பாடே நடக்க விடாம செய்துட்டாங்க. பிறகும் எஸ்டேட்டுக்கு வரப்போகத்தான் இருந்தாங்க."

"அடடே... இத்தனை நடந்த பிறகுமா?"

"ஆனா அவங்க வந்தால், எங்களுக்கு நரகந்தான். முடிஞ்சளவு குட்டையைக் குழப்பிடுவாங்க. அவங்க சாவு ரொம்பக் கொடூரமானது."

"எப்போ...?"

"ரெண்டு வருஷங்களுக்கு முன்னேதான்... தீயில கருகிட்டாங்க."

"அடடே...."

"ஏதோ ஆங்காரத்திலே தனக்கே தீ வச்சிட்டாங்க போல... ஆனா விபத்துன்னு சொல்லி கதையை முடிச்சாச்சு."

"தன் முடிவு நிமிஷமாய் வருங்கறது தெரிஞ்ச பிறகும் மனுஷன் எப்படியெல்லாம் ஆடறான். சரி... வேண்டாத ஆட்களெல்லாம் இல்லாம போன பிறகும் நீ இங்கே ஏன் ஒதுங்கி இருக்கணும்?"

"மாறனைத்தான் தவிர்க்க நினைக்கிறேன்னு நீ அப்பவே துப்பறியும் சாம்புவாய் கண்டு பிடிச்சிட்டியே?"

சிரித்து சூழ்நிலையை இலகுவாக்க முயன்றாள்.

"அம்மாவைப் போல பிள்ளைன்னா மாறன் நல்லவராய்த்தான் இருக்கணும்."

"நல்லவர்தான். எம்மேலே உயிராய் இருந்தவர் திடீருன்னு புதிராய் மாறிட்டார். பிரியம் இல்லாதது போல ஒதுங்கிட்டார். எதையும் தாங்கிடலாம் அனு... ஆனா அலட்சியத்தை...? ரொம்ப கஷ்டம்."

"புரியுது - அனு ஏன்னு அவரையே கேட்கறது."

"ஜடமாய் மாறிட்டவர் கிட்ட கேள்வி கேட்பதில் என்ன புண்ணியம்? ஆனாலும் கேட்டேன் - மழுப்பறார். நேரான பதில் வரலை - மாசாமாசம் பணம் மட்டும் வருது."

"ஏதோ காரணம் இருக்கணும்."

"இருக்கட்டும் - இதோ இப்படின்னு சொல்லட்டும் - முகம் திருப்பிகிட்டா... தாங்க முடியலியே."

"அப்ப நீ சின்னவ... 18 வயசுங்கறது முதிர்ச்சி இல்லாத பருவம். மதுரை கான்வென்டிலே அடங்கி வளர்ந்த பொண்ணு நீ - இப்போ நகர்ப்புற வாழ்க்கை - நீ ஆடலைன்னாலும், சகல ஆட்டத்தையும் பார்த்திருக்கே - படிப்போட, நாலு காசு சுயமாய் சம்பாதிக்கிற தைரியமும் சேர்ந்திருக்குது. இப்ப நீ வீட்டுக்குப் போ மாயா - எல்லாரையும் கவனி... பழகு... பிறகு முடிவெடு."

"எ... என்ன முடிவு?"

"உலகத்திலே மாறன் ஒரே ஆண்பிள்ளை இல்லைங்க தெளிவு வரும்!"

அப்படியொரு திண்ணக்கமான தெளிவு தனக்கு வருமா? இத்தனை நாட்கள் மாறன் நினைப்பிலும், அவன் உதாசீனத்திலுமாய் கசந்து, மருகிய மனது இனி மாறுமா?

வேறு ஒருத்தனுக்காய் இளகுமா?

தலை சுற்றியது.... குழப்பத்தில்!

"அறம் செய்ய விரும்பு."

"ஆறுவது சினம்."

சரோஜா சொல்லச் சொல்ல குழந்தைகள் இரைந்து அவள் சொன்னதை திரும்பச் சொன்னார்கள்.

ஆத்திச் சூடியைக் குழந்தைகளுக்குப் புரியும் வகையில் விளக்கிய சரோஜாவிற்கு மாயாவின் நினைப்பு வந்தது.

எத்தனை அற்புதமான பெண் அவள்... ஏன் அவள் சினம் ஆறவில்லை? முதலில் அவளது சினத்திற்கான காரணம் என்ன?



மணிமாறனுக்கு நிச்சயம் அதில் பங்குண்டு - ஆனால் கேட்டால் எந்த பாவனையும் இல்லாத ஒரு கருங்கல்லாக இறுகிக் கொள்வான்.

மூன்று வருடங்களாயிற்று மாயாவைப் பார்த்து - நிம்மதியே இல்லை... இத்தனை சொத்திற்கும் உரியவள் அவள். அவள் இங்கு சுற்றித் திரிந்தால் எஸ்டேட் புது சோபை பெற்று விடுமே.

சரி - வந்து துள்ளித் திரியாவிட்டாலும் - நான் இப்படி, இன்னின்னபடி இருக்கிறேன்; படிக்கிறேன் என்று வாரத்துக்கு ஒரு கடிதம்... அது கூட எழுதாதபடிக்கு இங்குள்ளவர்கள் செய்த பாவம் என்ன?

தொண்டையை அடைத்தது.

பெறாவிட்டாலும் கூட.... பித்தான தவிப்பு.

பிள்ளை மனம் கல்தான்.

அவளுக்கு மாதா மாதம் பணம் அனுப்பும் மாறன்தான் மாயா அங்கு அவளுக்கு மாதா மாதம் பணம் பெற்றுக் கொண்டதாய் தகவல் தருவான்.

'ஆக குழந்தை அங்கே சௌக்கியமாய் இருக்கிறாள்' என்ற ஒரு நிச்சயம் - நிம்மதி.

இன்று இதுதான் கடைசி வகுப்பு.

சரோஜா அச்சிறு ஆரம்பப் பள்ளியின் நிர்வாகி.

இப்பள்ளியை மாயாவின் தாய் ரஞ்சனி ஆர்வமாய் ஆரம்பித்த போது முதல் இரண்டு வகுப்புக்கள் மட்டும்தான் - பதினைந்து குழந்தைகள் வந்தால் அதிகம்.

இந்த எஸ்டேட் தொழிலாளிகளின் குழந்தைகள் படிக்க, தினம் இரண்டு மணி நேரம் பஸ்ஸில் பயணிக்க வேண்டும். அந்த போக்குவரத்தில் பிஞ்சுகள் வாடிப் போய் வரும். அசதி கண்ணைக் கிறக்குவதில் புஸ்தகத்தைத் திறந்து வைத்து படிப்பதெங்கே? சில நோஞ்சான் பிள்ளைகள் நோயில் படுத்தே விடும்.

பள்ளி ஆசிரியையாய் இருந்த ரஞ்சனி, இது குறித்து தன் கணவரிடம் பேச, ஆரம்பமானதுதான் 'கங்காதரன் பாலர் பள்ளி.'

காடாய் இருந்த சொத்தை ஓரளவு நிலைக்குக் கொண்டு வரவே ஆறேழு ஆண்டுகளாகி விட்டன.

பிறகு பணம் புரண்டு பள்ளியை விரிவுபடுத்தலாம் என்று நினைத்த போது ரஞ்சனியின் உடல்நிலை மோசமாயிற்று.

எந்த மாத்திரைக்கும் அடங்காத வயிற்று வலியில் துடிக்க ஆரம்பித்தாள் - அது புற்று என்று வைத்தியர்கள் கண்டு பிடித்த போது அவள் மரண வாயிலைத் தொட்டு விட்டாள்.

ரஞ்சனி இறந்த பிறகு செண்பகம் வீட்டை நிர்வகித்தது போலவே, ஏதோ தெரிந்த வரை பள்ளியையும் நிர்வாகம் செய்தாள் - வந்த ஓரிரு ஆசிரியைகளும்,

'இந்த ஊருல மனுஷன் இருப்பானா? கடை, தியேட்டர் எதுவுமில்லாம மூச்சடைக்குது' என்று ஓடிவிட சிரமந்தான்.... சரோஜா வந்து சேரும் வரை!

## 5

வெறும் தையற்காரியாக, ஒத்தாசைக்கு வந்து சேர்ந்த சரோஜா காலப்போக்கில் அங்கு எல்லாமுமாகி விட்டாள் - அப்படி நேர்ந்து போனது.

மாயாவிற்கு பாசமான சின்னத்தையாகவும், பள்ளி நிர்வாகத்தின் தலைமையாகவும் தேறினாள்.

பின்புறம் இருந்த மாட்டுக் கொட்டகையை ஆசிரியர் இல்லமாய் கட்டச் செய்தவள் அங்கு ஒரு பொது அறையை நிர்மாணித்து அதில் டி.வி. யை வைத்து விட இப்போது ஆசிரியர்கள் முனுமுனுப்பில்லை. 'டிஷ்' வழியே 'நட்சத்திரமும்', 'சூரியனும்', 'ராஜோடு'வர ஆனந்த ஜெயத்தோடு பார்த்து கிடந்தார்கள்!



அறையின் ஓரத்தில் கேரம், செஸ் என்னும் விளையாட்டுகள் ஆட வசதி. வெளியே ஷட்டில் கோர்ட்'டிற்கு வேண்டிய இடம் சீர் செய்யப்பட்டு, வலை சகிதம் தயாராக, ஆசிரியர்கள் எஸ்டேட் பள்ளியில் முதல் மாதச் சம்பளம் வாங்கிய கையோடு, பிடரியில் கால் பட ஓடிப் போகவில்லை!

சம்பளமும் கனிசமாய் தரப்படவே, பள்ளி ஐந்தாம் வகுப்பு வரை எழுந்தது. பத்து வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகள், பயணப்பட்டோ, அல்லது விடுதியில் தங்கியோ படிப்பைத் தொடர வேண்டியதுதான் என்று கங்காதரன் தீர்மானித்து விட்டார்.

பக்கத்து எஸ்டேட் உரிமையாளர் ஆன மேஜர் சந்திரனும் அவர் மனைவியும் பள்ளிக்கு பெரிய உதவி, பலம். அடிக்கடி வந்து அவர் குழந்தைகளுக்கு விளையாட்டு விதிகளை, வித்தைகளைக் கற்றுத் தர, அவர் மனைவி இசைப் பயிற்சி தருவார்கள்.

ஆங்கில, தமிழ் இசை இரண்டுமே திருமதி. சந்திரனுக்குப் பரிச்சயம். ஆக, போன ஆண்டு பல்வேறு பள்ளிகள் கலந்து கொண்ட போட்டியில் இவர்களது சின்னஞ்சிறு பள்ளிக்குத்தான் இசைக்கான முதல் பரிசு! விளையாட்டுப் போட்டிகளில் பல வெற்றிக் கோப்பைகள்!

இதையெல்லாம் முதலாளி கங்காதரன் பார்க்காமல் போனது சரோஜாவிற்கு வருத்தம். அவர் இடத்தில் மகள் மாயா இருந்து பார்த்து பூரித்திருந்தால் கூட போதும் - அதற்கான கொடுப்பினையும் இல்லாதக் கொடுமை.

இளம்பெண் இப்படி வீட்டுடன் அதிகத் தொடர்பற்று வேற்றூரில் இருந்தால் சரிதானா? நாளை அவளுக்குக் கல்யாணம் பேசி முடிப்பது எப்படி? இப்படி தாய் மனதுடன் கவலைப்பட்டாள் சரோஜா.

"யம்மா - தபால்."

பெரிய புன்னகையுடன் நின்றார் தபால்காரார்-

கை நீட்டினாள்-

"இன்னைக்கு மோரு, காபி தந்தாப் போதாதுங்கம்மா."

"என்ன வேணும்?"

"பாசந்தியோட பிரியாணி."

"என்ன எங்க பள்ளிக்கு தேசிய விருது ஏதேனும் கிடைச்சிருக்குறதாய் தகவல் வந்திருக்கா?"

சிரித்த சரோஜாவின் கன்னங்கள் அழகாய் குழிந்தன. முப்பதிற்கு ஓரிரு வருடங்கள் கூடிய வயசு அவளுக்கு. ஆனால் எளிய, சீரான வாழ்க்கை அவளைப் பத்து வயது குறைத்தே காட்டியது. மாநிற முகத்தில் மாறாத சிரிப்பு. மன வருத்தத்தை அவள் முகத்திற்குக் கொண்டு வருவதே இல்லை. தினம் பள்ளி சம்பந்தமாகவோ அல்லது மாறனுக்கோ தபால் வருவதுண்டு. இவர்களுக்காக இத்தனைத் தொலைவு நடந்து வந்த சலுகையில், ஏதாவதை கேட்டு வாங்கிப் பருகிவிட்டுத்தான் தபால்காரர் நகருவார். வேறு யாரும் இப்பகுதியில் கால் கடுக்க அலைய மறுத்ததால் மாற்றல் ஆகாது இருப்பவர்-

"மாயாம்மாட்டருந்து கடிதாசி."

"நிஜமாவா...?"

சரோ முகத்தில் அபாரச் சிரிப்பு!

"பின்னே... பாருங்க..."

"அடிக்கடி போன் பண்ணினாலும் தபால் போடறதில்லை அவள்..." பொய் சொல்லி சமாளித்தாள்.

"படிப்பு இந்த வருஷத்தோட முடியுமில்லிங்களா - அதுபத்தி விலாவாரியாய் எழுதியிருப்பாங்க..."

"பிரியாணி இல்லை - கோழிக் குழம்பு இருக்குது - சாப்பிட்டுட்டு போங்க." உபசரித்தவள் ப்யூனை அழைத்தாள் - "நம்ப தபால்காரருக்கு சாப்பாடு போடச் சொல்லுங்க...'

"கோழி குழம்பு ஊத்தி.."

"சரிதான் வாய்யா" - ப்யூன் கேலியான அலுப்புடன் முன்னே நடந்தார்.



இளம் காதலியின் தவிப்புடன், பரபரவென்ற கடிதத்தைப் பிரித்தான் சரோஜா.

'சுமோ' ஜீப்பிலிருந்து இறங்கினான் மாறன். வாகனமும் அதன் சக்கரங்களும் வெகுவாக புழுதி படிந்திருந்தன. அவனும் கூட அலுத்துக் களைத்திருந்தான். தலை கலைந்த, பிரயாண களைப்பு மட்டுமல்ல - கடந்த மூன்று ஆண்டுகளாகவே அவன் முகத்தில் அருள் இல்லை. 28 வயது ஆரோக்கியமான வாலிபனுக்கு இந்த அலைச்சலும் வேலையும் துச்சம். கண்களில் ஒளியும். கால்களில் வலுவுமாய் ஓடித் திரிய வேண்டிய பருவம். தனக்கென்று காதல் இணை ஒன்றும் தேர்ந்தெடுத்து காதலில் மகிழ வேண்டிய காலம் இது.

மாறன் சோர்வாய் படியேறினான். இரண்டு நாட்களாய் சவரம் காணாத முகம் இருளோடித் தெரிந்தது. அவன் உடைகளும் நவீனமாயோ, 'பளிச்'சென்றோ இல்லை.

சரோஜா இங்கு வந்த போது அவன் கல்லூரி மாணவன். அமரிக்கைதான் என்றாலும் அறிவான கண்கள், அருளான சிரிப்பு. மூன்று நாட்கள் விடுமுறை அமைந்து விட்டால் எஸ்டேட்டிற்கு ஓடி வந்து விடுவான். தாயிற்கும் பிறருக்கும் உதவுவான் என்றாலும் மாயாவிற்கு அவன் புரியும் சேவைகள் தனி. அவள் எள் என்று நினைக்கும் முன்பே எண்ணை வடிய நிற்கும் சேவகன்!

அவளது உடைகளுக்காக மதுரை வரை கூட ஓடுவான். "ஏம்ப்பா மாறா, நான்தான் தைக்கிறேனே - ஏன் இப்படி ஓடறே?" எனக் கேட்டால்,

"இல்ல சரோசித்தி, மாயா ரெடிமேட்டாய் வாங்கிடணும்னு பிரியப்பட்டா புதுசா சிங்கப்பூர் ஸ்கர்ட்ன்னு ஒன்னு வந்திருக்காமே... அதான்..." என்பான்.

"ஆம்...ம்மா கைக்குட்டை கூட மதுரையிலே தைச்சு வரட்டும் இந்த மாயா பொண்ணுக்கு..." என்று பிறர் போலியாய் அலுப்பதுண்டு. கங்காதரன் ஐயாவிற்கும் மாறன் பெரும் உதவி.

படிக்கும் காலத்திலேயே எஸ்டேட் நிர்வாகம், அங்கு விளையும் பழங்களை நல்ல லாபத்திற்கு விற்பது என்று வேலையும் பழகிக் கொண்டான். கடும் உழைப்பாளி. பழங்களைப் பறிக்கும் காலத்தில் கூடவே நிற்பான் - வெயிலானாலும் சரி - உக்கிரக் குளிரானாலும் சரி. லாரியில் ஏற்றி, சில சமயம் அவனும் அதே லாரியில் ஒண்டிக் கொண்டு கிளம்பி விடுவான்.

உழைப்போடு மனிதாபிமானமும் உண்டு மாறனிடம். தானே எளியவன் என்பதால், ஏழைகளின் கஷ்டம் புரிந்தவன்.

தொழிலாளர்கள் கல்யாணத்திற்குப் போகத் தவறுவதில்லை. 'இத்தனை வருஷமாய் நம்கிட்டே வேலை பார்த்தவன் மாமா - அவன் ஒரே தங்கைக்குக் கல்யாணம்' என்று எடுத்துச் சொல்லி பெரிதாகவே செய்ய வைப்பான்.

கல்யாணப் பரிசு தந்து, கை நனைத்து விட்டு வருபவன், தொழிலாளர் குடும்ப சுகவீனம் அல்லது சாவு என்றால் கூடவே நிற்பான்.

அறுவை சிகிச்சை நேரங்களில் இவனும் பிற உறவினர்களுடன் 'தியேட்டரு'க்கு வெளியே தவித்து நின்று, நோயாளி கண் விழித்து ஓரிரு வார்த்தை பேசக் கேட்ட பிறகுதான் கிளம்புவதாகக் கேள்விப்பட்டிருக்கிறாள்.

"அதுவரை தம்பி அந்த நாற்றமான ஜெனரல் வார்டு தரையிலதான் படுத்துக் கிடந்தாரும்மா - எப்பேர்ப்பட்ட மனசு..." என்று நெகிழ்ந்து போவார்கள் தொழிலாளர்கள்.

பெரியவர் மருமகனைப் பார்க்கும் பார்வையேத் தனி - பாசம் கனியும் பார்வை.

"சேலம் டீலர் மொத்தமாய் அன்னாசியை வாங்கிக்க றேன்னுட்டாங்க மாமா."

"நல்லதுப்பா. எங்க கிளம்பிட்டே, வந்ததும் வராததுமா?"

"மதுரைக்குத்தான்."

"அதாகுமே ரெண்டு மணி நேரம் - இப்ப என்ன ஜோலி?'



'கணக்கர் வைத்திய லிங்கம் மனைவிக்கு கர்ப்பப்பையிலே கட்டின்னு கண்டுபிடிச்சாச்சு - கான்ஸர் இல்லைன்னும் தெரிஞ்சிடுச்சு - ஆனாலும் கட்டியை அகற்றிடணும்ங்கறாங்க - இவரு பயப்படறார். நமக்குத் தெரிஞ்ச டாக்டரை வச்சு எடுத்துச் சொல்லி அவர் சம்மதம் வாங்கணும். வருமான வரி விஷயமாய் ஆடிட்டரைப் பார்க்கணும்னீங்களே...?"

"மறுவாரம் பார்த்துக்கலாம்."

'புது காருக்கு கடைசி இலவச பராமரிப்பு இந்த வாரம் மாமா - 'ஆயுள் காப்பு' பற்றியும் சில தகவல்கள் கேட்டிருந்தீங்க. விருந்தாளிங்க குளியல் அறைக்கு 'கீஸர்' போடணும்னும்.."

"சொன்னேனப்பா சொன்னேன்! சொன்ன எனக்கே மறந்து போன அத்தனையும் கம்ப்யூட்டர் கணக்கா புத்தியிலே பதிய **வச்சுடறியே?"** பெருமையுடன் ஆச்சரியப்படுவார் பெரியவர்.

"மெள்ள போப்பா - பார்த்து ஓட்டு. நாம பதனமா ஓட்டினாலும் எதுக்க வர்ரவன் பேயாய் வந்தா சமாளிக்க முடியாது. மலைப்பாதை வளைவிலே வேகமும் சேர்ந்தா ரொம்ப ஆபத்து..."

இப்படி மருமகனை எச்சரித்த பெரியவர் மரணம் ஒரு விபத்தில் தான் நேர்ந்தது. அவர் சொன்னது போல பேயாய் சீறி வந்த வாகனம் முட்டித் தள்ளியதில், அலுங்காமல் இறந்து போனார்.

நெற்றி ஓரக் கசிவைத் தவிர வேறு பெரிய காயமில்லை - அதிர்ச்சியில் மாரடைத்திருக்கலாம் - அபிப்ராயப்பட்டார் மருத்துவர்.

மாயாவைத் தேற்றுவது எளிதாயிருக்கவில்லை - அழுது புரண்டு விட்டாள் குழந்தை.

சாப்பிட மறுத்து சுருண்டு கிடந்தவளை மாறன்தான் தன் தோளில் குழந்தையாய் சாய்த்து பாலோ, பழரசமோ புகட்டினான்.

"சமர்த்தில்லையா? ஒரு வாய் சாப்பிட்டிரு - இப்படி நீ வாடிக் கிடந்தால் மாமா வருத்தப்படுவார்."

"அப்பாதான் போயாச்சே..." -வாய் கோண குழறுவாள்.

“எங்க போயிருக்கார்? உங்கம்மா கூட போய் சேர்ந்துட்டார் - அவ்வளவுதான். ரெண்டு பேருமா உன்னையே பார்ப்பாங்க - நீ சிரிச்சா சிரிப்பாங்க...”

“அத்தான்... எ.. எனக்கு அப்பாவப் பாக்கணுமே...” - உடலோடு அவள் குரலும் நடுங்கும்.

“ஹாஸ்டல்ல இருக்கறப்போ பார்க்கணும்னு தோணினா என்ன பண்ணுவே?”

“......”

“மனசால நினைச்சுக்குவே இல்லையா - அப்படி நினைச்சுக்கோ.”

“முடியலியே... நி...நினைச்சா... மனசெல்லாம் வலிக்குது...”

“கொஞ்சம் நாளாகும். அது வரை எங்களைப் பாரு... அதுவும் கஷ்டம்னா கண்ணை மூடி கடவுள் ஜெபம் பண்ணு...”

அவள் தலையைக் கோதியபடி இதமாய் பேசியவன் - அவள் தேற துணை நின்றவன் - இப்போது இவன் தேற வேண்டுமே!

என்ன ஏதென்று சொல்லாமலேயே இவர்கள் இருவரும் படும் வேதனை பார்க்க சகிக்கவில்லையே...

“என்ன சித்தி, பரிமாற இன்னைக்கு நீங்களே வந்துட்டீங்க - பள்ளியிலே பிரச்சினையே இல்லையா?” சிரித்தான் மாறன்.

வரிசையான அவன் பற்கள் மின்னின - ஆனால் கண்களில் மலர்ச்சியில்லை.

“இந்த எலுமிச்சம் பழரசத்தை முதல்ல குடி...”

“ம்ம்... அலைச்சலுக்கு இதமாயிருக்குது.

ஒவ்வொரு வாயாக அனுபவித்துப் பருகினான். அதற்குள் சூடான சாதம், குழம்பு, பொரியல், பச்சடியைப் பரிமாறினாள் சரோஜா.

“நீங்க சாப்பிட்டாச்சா?”



“இன்னுமில்லை.”

“அப்ப உக்காருங்க சித்தி.”

“இரு. பாயசத்தை கிண்ணத்திலே ஊத்தி எடுத்து வரேன் முதல்ல...”

“என்ன பாயசமெல்லாம் - புதுசாய் பாவமாய் பள்ளிக்கு ஒரு டீச்சர் சிக்கிட்டாங்களா என்ன...?”

சாதத்தைப் பிசைந்தபடி கேட்டான்.

அவன் இப்படி வேடிக்கையாய் பேசுவதும் கூட அபூர்வம்.

“இல்லை - பழைய பறவை கூடு தேடி வருது.”

கேள்வியுடன் நிமிர்ந்தான்.

“நம்ப மாயா இந்த வாரம் வராளாம்.”

“யார்... சொன்னா?”

“தோ - அவளே எழுதிட்டாளே...”

இடது கையாள் கடிதத்தை வாங்கிப் பிரித்தவன் அவசரமாய் விழி ஓட்டினான் - விரல்கள் நடுங்கின...

கிண்ணத்து பாயசத்தை வெறுப்புடன் வெறித்தவன் அதை ஒதுக்கி வைத்தான்...!

6

கங்காதரன் இறந்தபோது அவர் மனதில் குறையே இருந்திருக்க முடியாது.

மனைவியின் ஆசைக்காக ஆரம்பித்த பள்ளி, பல குழந்தைகளுக்கு உதவியது. மகள் மாயாவைக் கண்ணாய் பாதுகாக்க,

பராமரிக்க அன்பான இரு பெண்கள்; தன் சொத்துக்களைப் பொறுப்பாய் பராமரிக்க அறிவான மருமகன் - அவன் மீது உயிராய் பாசம் காட்டும் மகள்.

ஆக மணமுடித்து வைத்தால் அவர்கள் இருவரும் மனமொத்து மகிழ்வு காண்பார்கள் என்று நினைத்திருக்கக் கூடும். எந்த வேதனையோ, சம்சயமோ இல்லாது நிம்மதியாய் போய்விட்டார் மனிதர். அதுவும் நல்லதிற்குத்தான்.

இருந்திருந்தால் மாயாவின் ஆத்திரத்தில் அலட்சிய நடவடிக்கையில் நொந்திருப்பார்.

அப்பா இருந்திருந்தால் மாயாவும் இத்தனை ஆத்திரமாய் அத்தனை உறவுகளையும் கிழித்தெறிந்து விட்டு ஓடியிருக்க மாட்டாளோ?

அப்பா மறைவிற்குப் பிறகு மனம் தேறிய பெண்தானே? அவர் பேச்சு எழ, கண் கலங்கும். ஆனால் அதிலேயே துவண்டு கிடக்கவில்லையே. ‘அத்தான் அத்தான்’ என்று மாறனை அழைத்து அவனைச் சுற்றிக் கொடியாய் படர்ந்தவளுக்கு என்ன நேர்ந்தது... ஏனித்தனை மாற்றம் - பலதும் எண்ணி மறுகினாள் சரோஜா.

இன்னும் மாயா சாப்பிட்ட தட்டைப் பார்க்கும் அனு முகத்தில் ஆச்சரியமான சிறு சிரிப்பு படரும்.

“அந்த மிளகாய் வத்தல் மட்டும் என்ன பாவம் செய்தது - அதையும் மென்னுடு” - சீண்டுவாள்.

மாயாவும் விடமாட்டாள். “அது வெறும் சக்கைதான் அனு. வற்றலை தயிர் சாதத்திலே பிழிஞ்சு விட்டேனே? பார்க்கலை நீ?”

“கறிவேப்பிலையைக் கூட மாடு மாதிரி மெல்லுறியே?”

“நிறைய வைட்டமின்-பி அதிலிருக்குது. உன் தட்டிலே ஏனித்தனை சோறு மிச்சம்? வீணாக்காதே.”

“சரிங்க பாட்டி.”



இது அவளுக்கு மாறன் கற்பித்த பழக்கம். அவன் முதன் முதலில் இவர்கள் வீட்டிற்கு வந்த அன்று இரவு ஆயா இவளுக்கு உணவை ஊட்டிவிட மல்லுக்கு நின்றாள்.

“பருப்பு சாதம் வேணும்னே பிசைஞ்சேன் - பிறவு ரசம் ஊத்துன்னே சரி. இதோட மோரும் விட்டா, எப்படி பாப்பா? அழிம்பு பண்ணாத சாப்பிட்டிருவேன்.?”

“மாயா பத்து வயசைத் தாண்டின பொண்ணு - இனி அவளே சாப்பிட்டிருவா - விடுங்க ஆயா.”

மிக மெள்ள செண்பகா அத்தை சொல்ல,

“அதானே... இத்தனை சமர்த்தான மாயாவுக்குத் தானாய் சாப்பிடத்தானா தெரியாது?” - ஒத்து ஊதினான் மாறன்.

இவர்களது பேச்சுக்குக் கட்டுப்படுவதா... எகிறுவதா என்று தெரியாமல் மாயா மலைத்து நின்றாள்.

“இன்னைக்கு பௌர்ணமி மாயா - வெளியே உட்கார்ந்து சாப்பிடுவமா?”

“நிலா பார்த்துட்டேயா?”

“ம்ம்... நிலாவும் நம்மைப் பார்க்குமே.”

மேலும் கெஞ்சாமல் மாறன் தட்டோடு நடக்க, இவளும் ஆர்வமாய் தொடர்ந்தாள்.

வெகு ரம்யமான இரவு.

சந்திரிகையின் பால் ஒளி உலகைப் பரிவுடன் போர்த்தியிருந்தது. முழு நிலவின் அருகே சற்று மங்கித் தெரிந்தாளும் கூட, நட்சத்திரங்கள் உற்சாகமாய் கண்ணடித்துக் கொண்டிருந்தன!

சூழலுக்கு ஏற்றாற்போல மிருதுவாய் வீசியது தென்றல். மௌனமாய் சாப்பிட்ட மாறனைப் பார்த்து அதேபோல தானும் உணவை மென்றாள் இவள்.

சற்று நேரத்தில் அவன் தட்டும் முழு நிலா போல சுத்தமாகி விட்டது. "ஐய... உங்கத் தட்டைக் கழுவவே வேணாம் போலியே?" கேலி பேசினாள். "ஆனாலும் கழுவி கமுத்திடுவேன் - எனக்கு இன்னும் கால்வாசி சாதம் மிஞ்சியிருக்குதே - சாப்பிடு... காத்திருக்கேன்."

"ஊஹும்... எனக்குப் போதும்."

"அப்போ... பரிமாறுற போதே குறைச்சு போட்டுக்கணும்."

"நானா போட்டேன்... ஆயாதானே?"

அந்தப் பால் ஒளியில் இரண்டைச் சடை ஆட பேசிய சிறுமி அழகாய் தெரிந்தாள்.

"சரி நாளையிலேருந்து உனக்கு நீயே பரிமாறிக்கோ. இப்ப இத்தனை சாதத்தை வீணாக்கக் கூடாதே..."

"தினம் இதை விட மிஞ்சிடும்."

"தப்பு மாயா - எத்தனை பேர் இன்னை ராத்திரி பட்டினியாய் படுத்துக்கறாங்களோ...? நாம வீணாக்கற இந்த நாலு கவளம் வேற ஒருத்தனுக்கு அமிர்தமாய் பசி ஆற்றியிருக்கும்..."

"ஏதாவது கதை சொல்லுறீங்களா? கேட்டுட்டே சாப்பிடறேன்?" தலையாட்டி, கண்களை உருட்டி அவள் கேட்ட விதம் அவனை சிரிக்க செய்தது.

"கதை... ஏதும் நினைவுக்கு வரலியே..."

"அப்ப நாளைக்குக் கொஞ்சமாய் போட்டு... முழுசாய் சாப்பிட்டிருவேன்."

"இன்னைக்கு விளையாடினியா?"

"ம்ப்ச்-தனியா என்னத்தை விளையாட? டிவி. பார்த்தேன். அஸ்வினி சித்தியோட சினிமா பத்திரிகையிலே படம் பார்த்தேன்."

"ஓடி விளையாடணும் - நம்மால முடிஞ்ச நாலு வேலை செய்யணும் - அப்ப பசிக்கும்."



"பசித்துப் புசின்னுவாங்க அம்மா."

"அப்பதான் உணவின் அருமை புரியும் - நாவுக்கும் ருசிக்கும் - அடடே இன்னொரு கவளம் சாப்பிட்டுட்டியே!

அவன் பாராட்ட, இன்னும் மும்முரமாய் அடுத்த கவளத்தை உருட்டினாள்.

"நான் படிச்சது கிறிஸ்தவ பள்ளியிலே - அதில் ஜீஸஸ் நிறைய அற்புதங்களைப் பற்றி படிச்சிருக்கேன். ஒரு தடவை ஜீஸஸ் பேச்சைக் கேட்க பெருங் கூட்டம் கூடிட்டுச்சாம்."

"ஹை... கதை!"

"ம்ம்.. கேளு. ஐயாயிரத்துக்கு மேற்பட்ட கூட்டம். பல மணி நேரமாய் அத்தனை பேரும் பசியோட இருக்கறது யேசு ஸ்வாமிக்குப் பொறுக்கலை. ஆக அங்கிருந்த ஒரு சிறு பையன் தந்த ஐந்து அப்பம் ரெண்டு மீனை ஆசீர்வதிச்சு அத்தனை பேருக்குமாய் பகிர்ந்து கொடுத்தார்..."

"அதெப்படி போதும்?"

"அவர் கடவுளாச்சே - ஆக உணவு பெருகி அத்தனை பேருடைய பசியையும் தீர்த்தது - இதிலே முக்கியமான சமாச்சாரம் இனி தான் கேளு. அத்தனை பேரும் பசியாறின பிறகு அவர் தன் சீஷர்களிடம் என்ன சொன்னார் தெரியுமா?' பசியாறின பிறகு அவர் தன் சீஷர்களிடம் என்ன சொன்னார் தெரியுமா?"

"என்ன - எல்லாரும் நிம்மதியாப் படுத்துத் தூங்குங்கன்னா?"

சிரித்தான் -

"இல்லை - மிஞ்சின உணவை வீணாக்காம கூடையிலே அள்ளிடுங்கன்னார். பன்னிரண்டு கூடை நிரம்ப அள்ளினாங்க."

"அப்ப, கடவுளே கூட சாப்பாட்டை வீணாக்கலை... சிந்தலை."

சொன்ன மாயாவின் தட்டும் காலியாக இருந்தது. அதன் வெள்ளி பளபளப்பில் வட்ட நிலாவின் பிம்பம்.

"இப்ப நான் நல்ல பெண்ணா?"

"சமர்த்து - கீழே கொஞ்சம் சிந்தியிருக்கே.?"

'தோ...' - பிஞ்சு விரல்களால் தட்டைச் சுற்றி சிதறிக் கிடந்த பருக்கைகளைப் பொறுக்கி தட்டில் இட்டாள்.

அவள் தோளைப் பற்றி மாறன் வீட்டினுள்ளே அழைத்துச் செல்ல மிகப் பெருமையாய் உடன் நடந்தாள்.

ஆக இன்று வரை தொடருகிறது அப்பழக்கம்.

அப்பாவும் இதைப் பார்த்து பூரித்தார்-

"இதைத்தான் செண்பகம் நான் எதிர்பார்த்தேன் - வேலைக்காரங்க செல்லத்திலே, சேவையிலே இந்தப் பொண்ணு வளர்ந்தா சரிவராதாங்கற கவலை - நல்லபடி வழி காட்டறீங்க..."

"தினம் இந்தண்ணா கூடத்தான்ம்பா சாப்பிடுவேன்."

"மாறன் உனக்கு அத்தான் முறைம்மா..."

சிறுநெஞ்சில் அந்த உறவு அழுந்தப் பதிந்தது...

அவன் மீதி நேரப் பொறி சுடர் விட்டது. மாணிக்கக் குவியலாய் ஜொலித்த காதல் கங்குகள் மீது ஒரேயடியாய் நீரைக் கவிழ்த்து விட்டானே மாறன்-

இப்போது மிஞ்சியது வெறும் கரித் துண்டுகள் தான் - வெறுப்பு, வேதனை எனும் கரித் துண்டங்கள்.

குழந்தைப் பருவத்திலிருந்து குமரியாய் மாறுவது பலருக்கு அவஸ்தையான காலகட்டம்.

உடல், உள்ளம், உணர்வுகள் என அத்தனையிலும் நிகழும் மாற்றங்கள் பலரைக் குழப்பும். இனி தான் குழந்தையா குமரியா என்ற சந்தேக வெம்பல். சிரித்து ஆடினால் - 'ஆற வயசுக்கு ஏத்த பொறுப்பில்லையே' என்பது அமரிக்கையாய் வேலைகளை இழுத்துப் போட்டு செய்தால் - 'நூத்துக் கிழவிதாம் போ' என்ற



நையாண்டி. பெரியவர்களுக்கு தங்களது சிறுவயசு அவஸ்தை யெல்லாம் மறந்து விடும் போலும்.

ஆனால் மாயா அற்புதமான சந்தோஷத்துடன் மலர்ந்தாள். பெற்றோர் இல்லாத கவலை கூட அவளை அண்டாத முழு மகிழ்ச்சி. சொத்துக்கள் பற்றிய குழப்பங்களை அவளுக்குத் தராத மாறன் - 'அவளுக்கென்ன தெரியும் குழந்தை' - எனவில்லை.

"இப்போது இன்னின்னது பயிராகுது. மேலத் தோட்டத்தை குத்தகைக்கு விட்டிருந்தோமே - அதிலிருந்து ரெண்டு லட்சம் வந்தது. ஆனால் வாங்கியவன் ஆறு லட்சம் வரை பார்த்திருப்பான் போல. இந்த 'லீஸ்' மறுவருஷத்தோட முடியுது. இனி நாமே அந்த வேலையைப் பார்த்தால் லாபத்தையும் பார்க்கலாம் - நீயென்ன நினைக்கிறே மாயா?" என்று அவளைக் கலந்து ஆலோசித்தான்.

இவள் எல்லாவற்றிற்கும் -

"சரி அத்தான், அப்படியே செய்திடலாம்" என்கிற தஞ்சாவூர் தலை பொம்மை.

ஆனாலும் தனக்குத் தெரியாமல் அங்கு ஏதும் நடப்பதில்லை என்பதில் ஒரு திருப்தியான திமிர்!

எஸ்டேட்டை அப்பா இரு பாதிகளாய் பிரித்து இவளுக்கும், மாறனுக்குமாய் எழுதி வைத்திருந்தார்.

செண்பகம் அத்தை வந்த மூன்றாம் வருஷம் எழுதியிருந்த உயில். தனக்கு ஏதேனும் நேர்ந்தால் குழப்பம் நேர வேண்டாம் என்று விவரமாய் எழுதின உயில்.

செண்பகம் அத்தை உயில் வாசிக்கக் கேட்டு, கதவு மறைவில் நின்று முந்தானையால் முகம் மூடி பிழியப் பிழிய அழுதாளே தவிர, இனி தானும் ஒரு எஜமானி எனும் ஜபர்தஸ்து காட்டவேயில்லை.

மாயாவிடம் முன்பு காட்டிய துளி கண்டிப்பும் உருகி, பாசம் பெருகியது.

“அத்தானைப் பாருங்கத்தை” என்று மாயா சும்மாவேணும் சிணுங்கினால் போதும் - என்ன ஏதென்று விசாரியாமலேயே “மாறா - சும்மாயிரு.” என்று அதட்டல் வரும்!

மனிதப்பிறவி நிகழ்காலத்தை ரசிப்பதைவிட வருங்காலத்தை எண்ணி மிரளுவதிலேயே பாதி நாட்களை கழிக்கின்றது.

ஆனால் மாயாவிற்கு அந்தக் கவலையில்லை.

நாளை அவன் மாறனுக்குத்தானே மனைவி ஆகப் போகிறாள் - இப்போதே அவன் அவளைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்துத் தாங்குவதை அத்தனை பேரும் மோவாயில் விரல் வைத்து பிரமிக்கவில்லை? மாமியார் தொல்லையுமில்லை - தன் மகனை விட இவள் மீதுதானே அத்தை அதிக வாஞ்சை காட்டுகிறாள்? தாய் தகப்பன் அற்ற சின்னப் பெண், தனக்கு அடைக்கலம் தந்த பெரியவரின் மகள் என்ற விசுவாசமான அன்பு. பிறந்த வீடேதான் புகுந்த வீடும் - ஆக இட மாற்றமும் இல்லை.

வெளியே சொல்ல முடியவில்லை என்றாலும் கூட மனதுக்குள் இத்தனையும் யோசித்து பூரித்து போவாள் மாயா.

இதே மகிழம்பூ மரத் திண்ணையில் அவள் கடைசி வரை அமர்ந்து அத்தை கையால் தலை பின்னிக் கொள்ளலாம்.

ஆயிரங்கால் பின்னல், பூஞ்சடை என்று விதவிதமாய் அத்தை பின்ன,

“இறுக்காதீங்க அத்தை - வலிக்குதுல்ல...?” என்று சும்மாவேணும் ‘பிகு’காட்டலாம். பின்னி முடிந்ததும் திரும்பி -

“நல்லாயிருக்கா?” எனக் கேட்பது அடுத்த கட்டம். “அடடே என் ராசாத்தியப் போல ஈரேழு லோகத்தில் ஆரு?” கொஞ்சுவாள் அத்தை.

“இத்தனை அசிங்கமாய் வேற பெண் இல்லைங்கறியாத்தை?” உதடுகளை பிதுக்குவாள். “ச்சே... மாயாக்குட்டி அழகு வேற யாருக்குமில்லேன்னேன்”



கன்னங்களை வழித்து திருஷ்டி கழிப்பாள் அத்தை.

“ஏன் அத்தை நீங்க இல்லை?”

“உன் வயசுக்கு பேசுவடி பெண்ணே.”

“வயசு கூடக்கூட உங்க அழகும் கூடுது.”

“போடி குட்டி” எனும் அத்தையின் முகம் ‘குப்’பென சிவக்கும். சில சமயம் சரோஜாவையும் உட்கார வைத்து அத்தை பின்னிவிட, மாயாவிற்குள் பொறாமை தலை தூக்கும்.

செண்பகம் பாசத்தில் எல்லோருக்கும் தாய்தான் என்பதை தனக்கே நினைவு படுத்திக் கொள்வாள். அத்தைக்கு நாட்டுக் கை வைத்தியத்தில் அபார நம்பிக்கை - ஓரளவு திறமையும் கூட உண்டு. மதிய உணவில் தினம் கீரை உண்டு. பழரசங்களும் கஷாயங்களும் மாறி மாறி அனைவரையும் தேடி வரும்.

“ஐயோ வேணாமத்தை...” என்றால்,

“இருமினியே, சித்தரத்தை கஷாயம் - தொண்டைக்கு இதம்” என்று குடிக்கச் செய்த பிறகே நகருவாள்.

அப்படிப்பட்ட அத்தை இறந்ததைத் தாங்கவே முடியவில்லை. அந்த வீடே துக்கத்தில் நொறுங்கிப் போனது.

கணையத்தில் புற்று என்றார்கள் மருத்துவர்கள். இதுவரை வலியின்றி வளர்ந்த நோய் சுற்றிலும் கிளை கூட விட்டுவிட்ட நிலையில் எங்களால் உதவ முடியாது என்று கைவிரித்தனர். அத்தை எந்த ஆர்ப்பாட்டமும் இன்றி அமைதியாய் அடங்கிப் போனாள்... ஆனால் அவளுடன் வீட்டின் அமைதியும் போய்த் தொலைந்தது.

“இதோ அனு ரெடியாகுறா - அஞ்சே நிமிஷம் - டீ போடட்டுமா அரவிந்த்?”

தங்கள் ஃப்ளாட்டிற்கு வந்தவனை உபசரித்தாள் மாயா.

“தண்ணி போதும் - உக்காரேன்.”

"இதோ."

"உங்கையால தந்தால் தண்ணீர் கூட ஏது இப்படி ருசிக்குது?"

"ம்ம்.? எலுமிச்சம் பழத்தைப் பிழிஞ்சு, சீனியைக் கொட்டிக் கலந்தா இனிக்காம?"

"ஓ... ஜூஸா... தாமிரபரணி தண்ணின்னு நினைச்சேன்."

"ம்ம்... திருநெல்வேலி திமிரு!"

"எங்க பாட்டி காலத்திலே அங்கே போனது - சொந்த ஊர் பந்தம் அதோட சரி."

"நானும் எஸ்டேட்டுக்குப் போறதாய் முடிவு பண்ணிட்டேன் அரவிந்த்."

"குட் - எப்போ?"

"ஒரு வாரத்திலே."

"நானு?"

"வரலாம் - ஆனா ஒரு நிபந்தனை."

அவள் சொன்ன நிபந்தனையைக் கேட்டவன் வாய் பிளந்தான்!

## 7

அந்த நட்சத்திர ஹோட்டலின் 'காபி ஷாப்'பினுள் அமர்ந்திருந்தனர் அரவிந்தனும் அனுவும்-

அருகே 'பளீர்' நீல நீச்சல் குளம்-

உச்சி சூரியன் நீர் தளும்பலில் பட்டு நீல குளம் முழுக்க வெள்ளி மின்னல்கள். பெண்களும், ஆண்களும் வாளை மீன்களாய் துழாவித் துளைந்தனர்.



"போதும் - அங்கே என்ன... குளிக்கறவங்களை வெறிக்கறீங்க?"

"இல்லையே அனு... இந்த அறிவிப்பை வாசிட்டு இருக்கேன். நாளைக்கு இங்கே யார் 'காபரே'ன்னு பார்த்தேன்."

"ச்சே... உங்களோட வந்ததே தப்பு."

பரிதாபமாய் தன் காதலியின் கோப முகத்தைப் பார்த்தான், அரவிந்தன். இவளிடம் எப்படி மாயாவின் நிபந்தனையைச் சொல்வது? சொன்னால் தன்னை வாளை மீனைப் போல 'மொறு மொறு' வென வறுத்தெடுத்து மென்று விடுவாளே.

"என்ன... காபரேக்குப் போறதைப் பற்றி யோசனையா?"

பெங்களூரில் 'அம்மாதிரி' நடனங்கள் சகஜம். இருட்டு சந்திலும், அந்தஸ்தான ஹோட்டல் எங்கேயும் இந்த ஆட்டம் உண்டு. அதைப் பார்க்க இப்படியொரு அலைஞ்சான் கூட்டம்...

"மூஞ்சப் பாரு... திருட்டு நினைப்பு அப்படியே அதிலேத் தெரியுது..." அரவிந்தன் வெலவெலத்து விட்டான்.

இவளிடம் நிபந்தனைப் பற்றி மூச்சு விடவும் வேண்டாம். பசுமையும் தனிமையான எஸ்டேட்டிற்குப் போய் ஓவியம் வரைவது எல்லாம் கைக்கு மீறிய கனா என்று மறந்து விட வேண்டியது. சும்மாவே வெடிப்பவளிடம் இப்படி ஒரு விஷயத்தைச் சொன்னால் கொன்றேப் போடுவாள். ஆக தன் ரோட்டோர ஃப்ளாட்டிலேயேக் கிடந்து, காதைக் கிழிக்கும் ஹாரன் ஒலியிலும், தூசியிலுமாய் வரைய வேண்டியதுதான்.

இந்த யோசனைகளுடன் அவன் ஐஸ்க்ரீமை வெறுமே கரண்டியால் அளைய, அது உருகிப் பாலாய் மாறியிருந்தது.

"மில்க் ஷேக் வேணும்னா அப்படியே ஆர்டர் செய்திருக்க வேண்டியதுதானே? இப்படி ஐஸ்க்ரீமை வாங்கி அதுக்குள்ளே உஷ்ணமாய் மூச்சு விட்டு, கிளறி உருக்கணுமா?"

என்ன இவள் இன்று இப்படி அநியாயத்திற்கு மிரட்டுகிறாள்? ஆண் பணிகிறான் என்று தெரிந்தால் போதும் இந்தப் பெண்கள் அவன் வாலை மேலும் அதிகமாய் முறுக்கி விரட்டுவார்கள்.

அவளை முறைத்தான்.

"அட என்ன முறைப்பு இப்போ? மீசையே முளைக்காத வீரபாண்டிய கட்டபொம்மு போல...ம்?"

"இத பாரு தினம் சவரம் பண்றேன்... இல்லைன்னா..."

"வீரப்பன் போலிருப்பீங்களாக்கும்?' - தோளைக் குலுக்கினாள் அந்தக் குறும்புக்காரி.

"ரொம்ப வாய் உனக்கு."

"நீங்க செயல் வீரர் - ஊரு விட்டு ஊர் போகப் போறீங்க - இன்னொருத்தியின் காதலராய்...!"

கண்கள் உருட்டி படபடத்தாள்.

"என்ன... உனக்கு எப்படி தெரியும்? அதாவது நீ சம்மதிக்கலைன்னா நான் போகப் போறதில்லை அனு."

"என் சம்மதம் கேட்ட பிறகுதானே மாயா உங்ககிட்ட விஷயத்தையேச் சொன்னாள்."

"அ... அதாவது..."

"அதாவது மேல் அதிகாரிகளைக் கேட்காம விஷயம் உங்ககிட்ட வரலை. முறையாகத்தான் வந்திருக்குது..."

நிஜமாகவே முறைத்தான்.

"அதாவது நீ எனக்கு மேல் அதிகாரி - உங்க சம்மதம் அறிஞ்ச பிறகுதான் நாங்க போணும் வரணும்..."

ஐஸ்க்ரீம் கரண்டியை செங்கோல் போல அசைத்தாள் -

"அதே அதே..."

"நான் எஸ்டேட் போகலை."

"நல்லது."

"இல்லை... போறேன்."

"நான் அனுமதி தந்தாச்சு!"

இருவருக்கும் அடக்க முடியாத சிரிப்பு குபீரிட்டது.



"உன்னை இங்கே கூட்டிட்டி வர ஹாலில் காத்திருந்த வேளையில் மாயா இது பற்றி பேசினா... பத்து நாட்கள் நிம்மதியாய் வரையலாம் - ஆனால் அந்த நிபந்தனைதான் நெருடல்..."

"உங்ககிட்ட மாயா முழு விவரமும் சொன்னாளா?"

"தலையும் வாலும் இல்லாம சொன்னாளா... அரண்டுட்டேன்."

"ஹா! ரொம்பத்தான் அலட்டாதீங்க-" அவன் கன்னத்தைச் செல்லமாய் கிள்ளித் திருகியவள், விவரங்களைச் சொல்ல ஆரம்பித்தாள்.

கவனமாய் கேட்டான்-

"ஆக அதற்காகத்தான் நான் மாயாவின் காதலனாய் நடிக்கணுமா? நீயும் அதுக்கு ஒத்துக்கறே."

"எத்தனை தரம் கேட்பீங்க...?" - சலித்தாள்.

"இல்..ல்லை.. காதலனாய் காட்டிக்கணும்னா அடிக்கடி கட்டிப் பிடிக்கணும், அவ்வப்போது ஒரு முத்தம் பரிமாறி, கை கோர்த்தபடி வானத்தைப் பார்த்தபடி நடக்கணும் - அதுக்கெல்லாம் சேர்த்து மொத்தமாய் அனுமதி கொடுத்திட்டால் நல்லது.!"

"ஐயாவுக்குப் பாவம் அதிக ஆசை. ஆனா மாயாம்மா அதுக்கெல்லாம் இடம் தரமாட்டாங்க. கிடைச்சா கன்னத்தில் ஒரு அடி, முதுகிலே ஒரு இடி கிடைக்கலாம்."

"பெண் மனசு எப்ப வேணா எப்படி வேணா மாறலாம்!"

"அடி, இடிக்குப் பதில் உதை கிடைக்கும்கறீங்களா?"

இருவரும் நமுட்டுச் சிரிப்புக்குப் பின் சிந்தனை வயப்பட்டனர்.

"அழகான, நல்ல பெண் மாயா - அவளுக்கு இப்படி ஒரு பிரச்சனையா? பணத்துக்கும் பஞ்சமில்லை. இருந்தும் இத்தனைக் கவலை..."

"உங்களைப் பாக்கற யாரும் உங்களுக்கும் நிறையக் குடும்பக் கவலை உண்டுன்னா நம்புவாங்களா? சரி அம்மா இப்போ எப்படி இருக்காங்க? நாளைக்கு அவங்களைப் பார்க்க வர்றேன்..."

"சதா படுக்கையிலேதான் - பக்கவாதம் அவங்களுக்கு வந்ததும் வீடே ஸ்தம்பிச்சிடுச்சு. அனு..." பெருமூச்செறிந்தான்.

"அவங்களுக்கு ரத்த அழுத்தம் அதிகமாகி 'ஸ்ட்ரோக்' வந்ததுக்குக் காரணமே உங்க வீட்டு மாப்பிள்ளைதான்..."

"ம்ம்... தங்கச்சி புருஷன் இப்படி ஒரு பணம் பிடுங்கியாய் இருப்பான்னு நாங்க எதிர்பார்க்கலை."

"பெரும் வாரியான ஆண்கள் அப்படித்தான் - சுலபமாய் பணம் பண்ண பெண்டாட்டியை அடிச்சு பிறந்த வீட்டுக்குத் துரத்தறது. ஐயாமார் குடி, மஜான்னு இருக்க, பெண்கள் அவருக்குச் 'சீர்' செய்து கௌரவப்படுத்தணுமாம். இந்தியாவிலதான் இதுமாதிரி அபத்தமெல்லாம். பெண், ஆண் வீட்டுக்குப் போய் அவனுக்கும் அவன் குடும்பத்துக்கும் ஊழியம் செய்து கிடக்க, வண்டியிலே சீரும் கொண்டு போகணுங்கற அபத்தம்."

"ஒவ்வொரு நாட்டிலே வெவ்வேறு அபத்தம்..."

"ஆனா எல்லா இடத்திலேயும் அது பெண்ணுக்குப் பாதகமாய் இருக்கறது அபார ஒற்றுமை!"

"அது பெண்களாலதான்."

"எப்படி? எப்படி?" சண்டைக் கோழியாய் சிலுப்பி நின்றாள் அனு.

"என் தங்கையையே எடுத்துக்கோ - அவர் செய்றது எதுவும் முறையில்லேண்ணான்னு அழறாளேத் தவிர, புருஷனை உதறிட்டு தனியே வாழறேன்னு சொல்ல மாட்டேங்கறாளே..."

"ம்ம்? மேல்படிப்பு படிக்கச் சொன்னேனே? பல்கலைக் கழகத்துக்கு எழுதிப் போட்டாளா?"

"எங்கே? அவர் வந்து கூப்பிட்டதும் கிளம்பிருவேனே அண்ணா - அதுக்கிடையே படிப்பு எதுக்குங்கறா..."

"ஹூம்... பெண்களுக்கு பெண்மைதான் சத்ரு - அவங்க மென்மைதான் எதிரி."



"அவன் கேட்கற லட்ச ரூபாய் சீக்கிரம் சேர்ந்திடும். 'ஹாலிடே இன்' புதுசா இன்னுமொரு பகுதி கட்டறாங்க - அங்கே அலங்காரமாய் தொங்க விட ஏறக்குறைய இருபத்தைஞ்சு ஓவியங்களை நான் வரைஞ்சு தர்ரேன்."

"ம்ம்... லைப்ரரி லைப்ரரியாய் அலைஞ்சியே - அதுக்கான சரித்திர பின்னணி படங்கள், செய்திகளைத் தேடி..."

"கிடைச்ச தகவல்கள் மூலம் சில நூற்றாண்டுகளுக்கு முந்திய வாழ்க்கை முறையை என் மனசிலே பதிய வச்சிட்டேன். அக்கால உடை, சேவகர்கள், அரண்மனை அமைப்பு, பல்லக்கு, போர், விளையாட்டுகள்னு பல விவரங்கள். ராஜகுமாரியை மாயா ஜாடையிலே உருவாக்கப் போறேன்..."

"அப்போ நான்?"

"சேடிப் பொண்ணுங்க..."

"என்னது?!"

"பொறும்மா. தாதிப் பொண்ணுங்களோட ஆயாக் கிழவி அச்சு உன் சாயல்ல.!"

தன் நகங்களால் அவன் காது மடலைக் கிள்ளி அலற வைத்தாள்!

மதுரை விமான நிலையத்தில் தன் கலையாத ஒப்பனையை மேலும் சீராக்கினாள் மாயா. பலர் அவளை 'யாரிந்த சினிமா நட்சத்திரம்' என்ற புதிர் பார்வையால் அளந்தார்கள். அழகோடு அத்தனை அலங்காரமான தோற்றம்.

'ஸாஃப்ட் ஜீன்ஸ்' அவளது வடிவான நீண்ட கால்களைக் கவ்வியிருந்தது. ரத்த சிவப்பில் வெளிநாட்டு சின்ன சட்டை. அதே சிவப்பில் உதட்டில் 'பள பளா' சாயம். கண்களுக்கு தங்க விளிம்பிட்ட கருப்பு கண்ணாடி. நீண்ட பின்னலைச் சுருட்டி பெரிய சிவப்பு 'க்ளிப்' கொண்டு கவ்வி நிறுத்தியிருந்தாள்.

அவள் 'பயண ஏஜெண்ட்' அவளுக்காக ஒரு குளிர்பதனப்பட்ட டாக்ஸியையும் ஏற்பாடு செய்திருந்ததால் அவள் பயணம் அலுங்காமல் தொடர்ந்தது. ஆனால் சிறுமலையை நெருங்க நெருங்க மனது அலுங்கியது... அஞ்சியது.

இப்படி பணத்தை வீசியடித்து விமானமும், ஏ.ஸி. காருமாய் பயணம் செய்வது கூட அவனுக்காகத்தான்.

மாறன் தன்னை முதன் முதலில் மூன்று வருடங்கழித்து பார்க்கும் போது பிரமிக்க வேண்டும். இந்தப் பேரழகையா ஒதுக்கினோம். நிராகரித்தோம் என்று நொந்தழிய வேண்டும்.

எண்ணாமல் செலவு செய்ய என்னிடம் பணம் உண்டு. அத்தனையும் நானே சம்பாதித்தது என்றும் காட்ட வேண்டும். 'நீ இல்லாமல் நான் ஒன்றும் ஏங்கித் தேயவில்லை. இப்போது பெங்களூர் தக்காளி போலில்லை நான்?' என்று தன் பகட்டால் பழிவாங்க வேண்டும்.

மாறனின் முகமாற்றத்தை, அவன் விழிகளின் செய்தியை உன்னிப்பாக கவனிக்க வேண்டும். அதற்காகவே அவள் அரவிந்தனைத் தன்னுடன் அழைத்து வரவில்லை.

"நான் முதல்ல போறேன் அரவிந்த் - மூணாம் நாள் நீங்க வந்த சேருங்க."

"புரியுது" - என்று விட்டான் அவனும்.

எஸ்டேட்டின் வெளி 'கேட்'டைத் திறந்து வைத்திருந்தார்கள். கார் மண் பாதையில் குலுங்கி அசைந்தது. ஏ.ஸி. கார் என்பதால் கிளம்பிய புழுதி அவளைத் தொட முடியவில்லை. ஆனால் அவள் துள்ளித் திரிந்த அம்மண் அவளை ஆவலாம் எழும்பி மிதந்து பார்ப்பதாய் தோன்றியது.

மாறன் ஒருவேளை வீட்டிலேயே இருக்க மாட்டானோ? அப்படியிருந்தால் அவளுக்கு அது பெரிய ஏமாற்றம்தான்.

இப்போதே நெஞ்சு ஏனிப்படி கல்லுகுண்டாய் கனக்கிறது? இப்படி நூறு பதட்டம் பயத்துடன் இங்கு வரவேண்டிய அவசிய



மென்ன? உதட்டைக் கடித்தவள் வெளியே அணிவகுப்பு போல நின்ற ஆரஞ்சு மரங்களை வெறித்தாள். பின் தோட்டம் முழுக்க அன்னாசி - வால்பேரி மரங்களும் உண்டு - அப்பழங்கள் கல்கண்டாய் இனிக்கும்.

ஒருமுறை இம்மரங்களின் ஊடாகத் தான் மானாய் துள்ளி வளைந்து ஓடியது நினைவிற்கு வந்தது. அப்போது வயது 14 இருக்கும். சில மாதங்களுக்கு முன் வயதுக்கு வந்து விட்டவளை அத்தை, 'இனி ரொம்ப ஓடிச் சாட வேணாம்மா' என்று எச்சரித்திருந்தாலும் மறக்காத பழக்க தோஷம்!

பின்னால் துரத்தியபடி வந்தது மணிமாறன் தான்.

"என்னைப் பிடிக்கவே முடியாதுத்தான்."

'தோ... பிடிச்சுட்டேனே'

எட்டி விட்டானோ என்ற சந்தேகத்தில் முகம் திரும்பியவள் அந்த பேரி மரத்தில் 'நச்' சென மோதி நின்றாள். திரும்பிய முகத்தின் இடது கன்னத்திலும் நெஞ்சிலும் அடி.

பஞ்சு கன்னத்தில் மரப்பட்டை சிராய்த்து கோடிழுத்திருந்தது. அவள் சத்தமே போடவில்லை... கன்னத்தைப் பொத்திக் கொண்டு அதே மரத்தில் சாய்ந்து விட்டாள்.

ஏழெட்டுகள் பின்தங்கியிருந்த மாறன் பதறி நெருங்கினான். "எங்கிட்ட தோத்தால் என்ன? இப்படிப் பேயாய் ஓடி மோதிக்கணுமா? கைய எடு பார்க்கலாம்."

"ஸ்...ஆஆ..."

"ஐயோ... இப்படி சிவந்திடுச்சே..." முணங்கியவன் இயல்பாய் கனிந்து நொந்த கன்னத்தில் முத்தமிட்டு விட்டான்.

"ஐயோ... அத்தான்."

"என்ன... ரொம்ப எரியுதா?"

"இல் ல்ல."

"பின்ன... ஏனிப்படி அலறுற?"

"இனி இப்படி செய்யக் கூடாது நீங்க."

"சரி - துரத்தலை."

"அதில்லை... இப்படிப் பண்றது சரியில்லை."

மேலும் குங்குமமாய் குழம்பிய கன்னத்தைப் புதிராய் பார்த்தான்.

"முத்தமிட்டதைச் சொல்றியா? ஒழுங்காய் பேசேன் - இப்பத்தான் பேசி பழகற கிளி போலத் திக்கித் திணறுற."

"ம்ம்... மீசை குத்துதல்ல."

சிரித்தான் - மீசையின் கருமையின் கீழே வெண்பிரகாசத்தில் வரிசைப் பற்கள்.

"எடுத்திடவா?"

"மீசையை எடுத்திட்டா மட்டும்?" அவள் எதிரே நின்ற மரத்தையே பார்த்தபடி பேசினாள்.

"மட்டும்? குத்தாது..."

"ம்ஹூம்... இனி அவ்வளவுதான்."

"கீழே விழுந்து சிராய்ச்ச முட்டியை. வேலி முள்ளு பாஞ்ச பாதத்தை எத்தனை தடவை முத்தமிட்டிருக்கேன் - உன் அழுகை அந்த நிமிஷமே நின்னிடுமே."

"இனி அதெல்லாம் கூடாது."

ஏன் திடீரென இந்த கறார் கட்டளை என்பது புரியாமல் மாறன் திணறுவதைத் தித்திப்புடன் பார்த்திருந்து, போலிக் காரத்துடன் முறைத்தாள் அந்த முறைப் பெண்!



## 8

'இனி முத்தமிடாதே அத்தான்' என்றவள் கட்டளைக்குப் பின் நாள் முழுக்க சற்றும் முகம் வாடி அலைந்தவன் பின்னர் அவளை வாழ்நாள் முழுக்க வாடச் செய்து விட்டானே..

ஆனால் அவள் ஒன்றும் மலராய் வாடி வதங்க வில்லை. முன்னைவிட பளபளப்பாய், பகட்டாய் வெற்றி கரமாகவே இருக்கிறாள். இதை மாறனுக்குத் தெளிவு படுத்தவே இந்தப் பயணம்.

ஆனால் டாக்ஸி வீட்டு முன்பு நின்றதும் இறங்கக் கால்கள் ஒத்துழைக்கவில்லை. மனதோரம் சின்னதாய் சந்தோஷப் பூ ஒன்று பூக்காமலும் இல்லை. அவளுக்குப் பரிச்சயமான சில வேலையாட்கள் வாசலில் ஆவலாய் நின்றிருக்க ஆரத்தித் தட்டுடன் சின்னத்தை.

"வாம்மா மாயா.. வா." வரவேற்ற குரல் அன்பால் குழைந்திருந்தது.

மெள்ள இறங்கி நடந்தாள்.

சரோ அத்தை இத்தனை அழகா? கல்லூரி படிப்பு முடித்தப் பெண் போலல்லவா இளம் தோற்றம்?

இயல்பும் இனிப்புமான சிரிப்பு - அந்தத் தெற்றுப்பல் கூடுதல் கவர்ச்சி. இவளை மோப்பம் பிடித்து விட்ட நாய்கள் வாலை வீசியபடி முணங்கின.

'என்ன மிட்டி சிட்டி?'

இவள் செல்ல அழைப்பில் கால்கள் உதைத்துத் துள்ளின. ஆரத்தித் தட்டைச் சுழற்றி அருகே நின்றவளிடம் தந்த சரோஜா, மாயாவைக் கட்டிக்கொள்ள கரங்களை நீட்டினாள்.

“வாம்மா - கண்ணெல்லாம் பூக்க விட்டுட்டியே.”

தழுவிக் கொண்ட உடல்கள் சிலிர்த்தன.

அன்பு அமிர்தமாய் இறங்கியது.

“நல்லாயிருக்கியாம்மா?”

“ஆமத்தை - நீங்களும் நல்லாயிருக்கீங்க.”

லேசாக நீர் படர்ந்த கண்களைச் சிமிட்டினாள் மாயா.

“யாரிந்த சின்னப் பொண்ணுன்னு உங்களைப் பார்த்து திகைச்சுட்டேன் ஒரு நிமிஷம்.”

“அதேப் போக்கிரித்தனம் - மாறலை நீ!”

சரோஜா இளமையோடு வெகு எளிமையாகவும் இருந்தாள். பருத்திச் சேலைதான். ஒற்றைப் பின்னலை தளர்வான கொண்டையாய் சுற்றியிருந்தாள். மெல்லிய சங்கிலி, ஒற்றை வளைகள். சிரிப்பு தவிர வேறு அலங்காரமற்ற முகம்.

சரோஜா கிறிஸ்துவப் பெண் என்பதால் பொட்டிட்டுக் கொள்வதில்லை, செண்பகா அத்தை என்றாவது சரோஜாவிற்கு திலகமிட்டு அழகு பார்ப்பாள் என்றாலும் மற்றபடி வெற்று வட்ட முகம்.

அதிகம் பேச்சும் கிடையாது என்றாலும் முகச் சிரிப்பும் மட்டும் ஓய்ந்து பார்க்க முடியாது. எளிய மக்களிடையே தன் படாடோபம் மாயாவிற்குக் கூச்சமாயிருந்தது. இத்தனை இறுக்கமான உடையை, அழுத்தமான ஒப்பனையைத் தவிர்த்திருக்கலாம். மாறன் கண்களைக் கூசச் செய்ய வேண்டும் என்ற நோக்கில் செய்த கோலம் இப்போது அவளையேக் கூசச் செய்தது. ஆண் வேலையாட்கள் கூச்சமாய் குனிந்து கொள்ள, பெண்கள் சற்றே வாய் திறந்து வெறித்தனர். இவளை வரவேற்க வாசலுக்கு வந்திருந்த பள்ளிக் குழந்தைகள் கூட பிரமித்து ஆடாமல் நின்றனர்.

“ப்ரீதி... அக்காவுக்கு மாலை போடு.”

சரோஜா சொல்ல, ஒரு குழந்தை ‘குடுகுடு’வென மாலையுடன் வந்து எம்பியது.



“எதுக்கு மாலையெல்லாம்” - சங்கோஜமாய் குனிந்தாள்.

“இந்த ராஜ்யத்தின் ராஜகுமாரிக்கான வரவேற்பு” - என்ற கனமான ஆண் குரல் அவளைச் சுண்டியது.

‘சட்’டென விழி உயர்த்தினாள்.

சின்ன முறுவலுடன் நின்றிருந்தான் மாறன். முறுக்கி இழுக்கப்பட்ட வீணையின் மெல்லிய தந்தி அறுந்து தெறித்தாற் போல நெஞ்சில் ஒரு வலி..

அதோடு அவன் விழிகளை ஊடுருவினாள் - ஆனால் அவற்றில் எந்த உணர்வுமில்லை. ஏன்... இவளைக் கண்ட மகிழ்வும் கூடக் காட்டாமல் பாறைத் துண்டுகளாய் கிடந்தன.

அந்த முறுவலும் கூட ஒரு முகமூடி போலத் தெரிந்தது.

“வா மாயா, நீ வந்ததிலே எல்லாருக்கும் சந்தோஷம்.”

‘அதாவது உங்களைத் தவிர’ - மனம் கறுவியது.

“உள்ளே போ மாயா - டாக்ஸியை அனுப்பிட்டு வரேன்.”

“ஏற்கனவே அதற்கான பணத்தைத் தந்தாச்சு.” வேலு அவள் பெட்டி படுக்கைகளை மகா சுறுசுறுப்புடன் வீட்டினுள் எடுத்துப் போனான்.

“அலுத்து வந்திருப்பேம்மா - உன் அறையிலே படு. தேநீரும் உனக்குப் பிடிச்ச பார்பியும் முறுக்கும் மேலேயே எடுத்து வரேன்.”

“இல்லை சின்னத்தை. நான் உடை மாற்றிட்டு கீழே வரேன் - சேர்ந்தே சாப்பிடலாம்.”

கூடத்தில் இணையாய் தொங்கிய பெற்றோரின் படங்களை நின்று கண்நிறைய பார்த்தாள். எதிர்புறம் செண்பகாத்தையின் புகைப்படம் - அதே மென்மையான முறுவலுடன்.

மரணம் கொடியது - நாம் நினையாத நேரத்தில் தான் நினைப்பவர்களைக் கொய்து போய் விடுகிறதே...

மாடியிலிருந்த தன் அறைக்குப் போனாள். வெகு சுத்தமாய் இருந்தது அறை. படுக்கையில் புது சாட்டின் விரிப்புகள் - குவளையில் புது மலர்கள். வேண்டிய உடைகளை எடுத்துக்

கொண்டு கோடியிலிருந்த குளியல் அறைக்குப் போனாள். அண்டாவில் சுடுநீர் நிரம்பி இருந்தது. அவள் எப்போதும் பயன்படுத்தும் அதே சோப் தவிர பாசிப்பயறு மாவு. அவள் பெயர் பொறித்த மிருதுவான துவாலை தொங்கியது.

உடைகளைக் களைந்தவள் மேலுக்கு வெந்நீரை விட்டாள்.

பயறு தேய்த்து முகத்தை அலம்பினாள். துடைத்து சேலை, ரவிக்கைக்கு மாறினாள். வெளிர் மஞ்சளில் சிவப்பு வட்டங்களிட்ட மல்மல் சேலை. பிரித்து பின்னலிட்ட முடியில் குவளையிலிருந்த ஒரு சிவப்பு ரோஜாவை உருவி சூடிக்கொண்டாள். நாலு நாளாய் போட்டிருந்த பேய் வேஷம் கலைத்தது போன்ற ஆசுவாசம்!

"அடடே, மாயாம்மா வரும் போது பட்டணத்து பேரழகின்னா இப்ப நம்மூர் தேவதை" மறுபடி தழுவி நெற்றியில் முத்தமிட்டாள் சரோஜா.

"பள்ளியில் நிறைய பிள்ளைங்க போல.?"

"ஆமாம்மா - வகுப்புக்கு 20 பேருக்குக் குறைவில்லை. டீச்சர்களுக்கும் உன்னை சந்திக்க ரொம்ப ஆசை. நாந்தான் குழந்தை வந்தவுடனே எல்லாருமாய் அவ மேல் சேர்ந்து பாய வேணாம்னு தடுத்து வச்சிருக்கேன்."

"அப்போ. எப்ப பாயப் போறாங்க?"

"நாளை தேநீர் வேளையிலே - உனக்குச் சம்மதம்னா..."

"எனக்கென்ன சின்னத்தை... ஆனா இவ ஏன் மூணு வருஷமாய் இந்தப் பக்கமே வரலைன்னு அவங்க யோசிப்பாங்க..."

"அதெல்லாம் சொல்லிட்டேன்."

"என்னன்னு?"

"மும்முரமான படிப்பு, மாடலிங்னு மாயாம்மாவுக்கு மூச்சு விடக் கூட போதிய சமயமில்லை... நாங்கதான் அவளைப் போய் பார்த்துக்கணும்னு"...

"பொய்யா?"



"கொஞ்சம்...! வேற வேலையா வெளியூர் போறப்ப, உன்னையும் பார்த்ததாய் நீ பள்ளியைப் பற்றி ரொம்ப பிரியமாய் விசாரிச்சேன்னும் சொல்லிடுவேன். வேலையாட்கள் இல்லாத நேரம் உன்னிடமிருந்து போன் வந்ததுன்னும்..."

"புளுகு!"

"உன்னைப்பத்தி நாலு பேர் எட்டு விதமாய் பேசக் கூடாதேம்மா."

"செண்பகாத்தையும் இப்படித்தான் யோசிச்சிருப்பாங்க..."

"மாறனும் அப்படியேத்தான்."

'சட்'டென பேச்சை மாற்றினாள் மாயா.

"பெங்களூர் இப்போ 'குளுகுளு'ன்னே இல்லைத்தை. பயங்கர வெயில், வியர்வை, கூட்டம் எல்லாம். நம்ப எஸ்டேட் சொர்க்கம் போலிருக்குது."

பேச்சு மாற்றத்தைப் புரிந்து கொண்ட சரோஜாவின் விழிகள் சற்று மங்கின. ஆனாலும் பேச்சு தொய்யாமல் தொடர்ந்தது.

"நான் ஒரு ஃப்ளாட்டை அனுன்னு ஒரு சிநேகிதியோட பகிர்ந்துக்கறேன்னு..."

"சொன்னேம்மா- போன வருஷம் போல்ல ஒரு முறை பேசினப்போ சொன்னே - அப்பதான் புது விலாசமும் தந்தே."

"ஆமா. அனு மூலமாய் எனக்குத் தெரிஞ்ச ஒருத்தர் இங்கே வரப் போறாரத்தை."

வேண்டுமென்றே தயங்கியும், முகத்தில் வெட்கச் சாயலுடனும் இந்த விபரத்தைச் சொன்னாள் மாயா.

"வரட்டும் - இது உன் வீடு. உனக்குப் பிடிச்சவங்க அத்தனை பேரும் வரட்டும்."

"அத்தனை பேரிலும் இ...இவர் விசேஷம்..."

"ஓ..?" சரோவின் விழிகள் மேலும் இருண்டன. ஆனாலும் சமாளித்துக் கொண்டாள்.

"என்னிக்கு வராங்கம்மா?"

"14ம் தேதி என் அறைக்கு அடுத்த அறையை அவருக்காய் தயார் பண்ணிடுங்கத்தை."

"உங்கம்மா அப்பா அறையையா?"

"அது விசாலமாய் இருக்குமே. அவர்... அரவிந்தன் ஒரு ஓவியர். அற்புதமாய் வரைவார். நீங்க என் அறைக்கு வரும்போது அவர் என்னை வரைஞ்ச படங்களைக் காட்டறேன். இங்கே நிம்மதியாய் வரையட்டுமேன்னுதான் வரச்சொன்னேன்."

"தாராளமாய் வரட்டும்மா."

"மாறனிடமும் இது பற்றிச் சொல்லிடுங்க."

"சரிப்பா."

"நீங்க எதுவுமே சாப்பிடலையே..."

"உன்னைப் பார்த்த சந்தோஷத்தில் பசிக்கலை..."

அந்நேரம் சாப்பாட்டு அறைக்குள் வந்த மாறன் மரியாதைக்கு ஒரு கோப்பை காபியை மட்டும் பருகி விட்டு, 'வேலை இருக்கிறதாய்' ஏதோ முணகிவிட்டுக் கிளம்பினான்.

வெகுவாய் மெலிந்திருந்தான். கன்னம் வற்றி உதடுகள் இறுகியிருந்தன. கண்களில் சோகச் சோர்வு. துள்ளல் துடிப்பெல்லாம் கரைந்து போன கூடாய் தெரிந்தான்.

அதிக வேலைப் பளுவோ? அல்லது வயது முப்பதை நெருங்கியும் கூட பிரம்மச்சாரியாய் இந்தக் காட்டினுள் தன் வாழ்வு போவதால் ஏற்பட்ட விரக்தியா?

'சுரீர்' என்றது - அப்படியானால் அதற்குக் காரணம் தான் தான். அன்று அவள் துக்கத்தில் கத்தியதை மதித்துதான் இன்று வரை திருமணமின்றி இருக்கிறானோ?



மனம் இளகியது. ஆனால் அவனது மனைவியாய் இங்கு ஒருத்தி வளைய வந்தால் அதைத் தன்னால் பொறுக்கக் கூடுமா?

முடியவே முடியாது...

யோசித்தால் கூட நெஞ்சம் நடுங்குகிறதே.

ஆக தான் சொன்னதில் ஏதும் தப்பில்லை. மாறன் இத்தனையையும் உதறி விட்டு எங்காவது போகட்டும். எவளையாவது மணந்து வாழட்டும். ஆனால் இங்கிருக்கும் வரை அவனுக்கு மாப்பிள்ளை ஆகும் யோகமில்லை. அந்த வருத்தம்தான் அவனை உருக்குகிறது என்றால்... உருகட்டும். கூழுக்கும் மீசைக்கும் சேர்த்து ஆசைப்படுவது தப்புத்தானே?

குரூர அலட்சியத்துடன் அன்றிரவு படுக்கப் போனாள் - தூக்கம் சுகமாய் வந்தது. கலையில் கண்விழிக்க, புதுசாய் பிறந்தது போன்ற புத்துணர்வு.

இன்று என்னென்ன வேலை, படிப்பு, சமையல் என்று எந்த அவசர ஆத்திர யோசனைகளும் இல்லாமல் படுக்கையில் புரண்டது அபூர்வ சுகம்தான். ஆனால் இங்கும் ஒரு அசௌகர்யம் உண்டு.

அறைக்குள் குளியல் அறை கிடையாது. இது புதுப்பிக்கப்பட்ட பழங்காலத்து வீடு. ஏதோ விடுதி அறைகள் போல வரிசையாய் ஒருபுறம் அறைகள் இருக்க பொதுவாய் ஒரு நடைபாதையும் உண்டு. வசதிக்காய் அறைகளுக்கு எண்கள் உண்டு.

"மேலத்தான் இருக்கேன்.'

"எங்கே?"

"மூணாம் நம்பர்ல" என்று முன்பு கத்தியதுண்டு. கீழே நான்கும் மேலும் நான்குமாய் தனி அறைகள். முன்பு குளிக்க கீழேதான் வந்தாக வேண்டும்.

மாயா வயதுக்கு வரவுமே அத்தை, மாறன் மூலம் மாமாவிடம் தூது விட்டாள். "குழந்தை குளிச்சிட்டு, சரியாத் துவட்டாம துணியச் சுத்திகிட்டு ஓடறா - மேலேயே அவளுக்குன்னு தனியா குளிக்கற வசதி செய்துட்டால் நல்லது" என்று.

அப்பா அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

"குழந்தை மேலும் கீழுமாய் ஓடித் திரியட்டுமே - இப்பவே சதா புஸ்தகத்தோட அவ அறை கட்டில்ல கிடக்கற, இல்லை தோட்டத்திலே ஆடறா.. குளிக்க அவ கீழே வர நேரத்துலதான் நான் அவளைப் பார்த்துக்கறேன்" - என்று விட்டார்.

கீழே உள்ள குளியல் அறைகளும் வெகு சிறியவை . மின்வெட்டு சமயங்களில் குகை போன்று இருட்டிலிருக்கும்.

ஒரு சமயம் குளிக்க உள்ளே போய் கதவடைத்தவள், மறுகணம் அலறலுடன் வெளியே ஓடி வந்தாள்.

"அத்தான்.... பா... பாம்பு... ஐயோ..."

முதலில் வந்தது மாறன்தான்.

"என்ன பாம்பா... எங்கே?"

"அண்டா பக்கத்திலே... சுருண்டு..."

"அட ஆமா... கோபாலு தடி எடு."

ஐந்தாம் நிமிடம் பாம்பு அடித்து அப்புறப்படுத்தப்பட்டது. ஆனால் அச்சம் அத்தனை விரைவில் அகலுவதில்லையே. அவனும் புரிந்து, ஒவ்வொரு முறை அவள் குளிக்கப் புகும் முன், குளியல் அறையைத் தட்டி கொட்டி, பாம்பு, பழுதெல்லாம் இல்லை என்று ஊர்ஜிதப்படுத்தியே அவளை உள்ளே விடுவான்.

அதன் பிறகு தான் மாடியில் வெளிச்சமும் விசாலமுமாய் நவீன குளியலறை கட்டப்பட்டது.

இப்படி பழைய நினைப்புகளுடனே பல் துலக்கி குளித்தும் விட்டாள். துவட்டிய பிறகுதான் மாற்று உடைகளை எடுத்து வரவில்லை என்பது உறைத்தது. பெங்களூரில் அறைக்குள் அடங்கிய குளியலறை ஆக துணிகளை எடுத்துப் போகும் பழக்கம் விட்டுப் போனது. இப்போது எப்படி அறைக்குத் திரும்புவது? களைந்த இரவு உடையை துவைப்பதற்காக வாளியினுள் போட்டு விட, அது ஈரமாகியிருந்தது.



திண்டில் மேலும் கனமான துவாலைகள் அடுக்கப்பட்டிருந்தன. எடுத்துப் பிரித்தாள். நல்ல நீள அகலம் - சுற்றிக் கொண்டு அறைக்கு ஓடிவிட வேண்டியதுதான். மாடி அறைகளில்தான் வேறு யாருமில்லையே

முடியைத் துவட்டி விரிய விட்டாள். ரோஜா நிறத் துவாலையைச் சுற்றியபடி வெளியேறினாள். பாதித் தொடை வரைதானே துவாலை எட்டுகிறது என்ற யோசனையுடன் நாலு எட்டுக்கள் வைத்தவள் உறைந்து போனாள். முதல் அறை வாசலில் நின்று அவளையே வெறித்து நின்றான்... மாறன். அந்த ஆண் விழிகளின் வேட்கை... அவளைக் குழப்பியது.

## 9

காபியோடு மாடிக்கு வந்த சரோஜா இவள் தலைமுடியைக் கோதி ஆற்றினாள். சாம்பிராணியும் கங்கும் எடுத்து வரச் சொல்லி பிடரிக்குப் புகை காட்டினாள்.

"இடியாப்பம் தேங்காய் பால் தயார் - சாப்பிடலாமா?"

"இப்பத்தானே காபி குடிச்சேன் அத்தை?"

"கோழி குருமாவும் கூட ஆயிட்டிருக்கு."

"ஐயோ இனிப்புக்கு ரெண்டு இடியாப்பம் காரத்துக்கு ரெண்டுன்னு சாப்பிடணும்னா கூட, நா அதற்கு முன்னே ரெண்டு மைல் நடக்கணுமத்தை."

"இதை விட மெலியறதுக்கா? போதும். வயிற்றை வாட்டாமல் திருப்தியாய் சாப்பிடும்மா இனி."

"முதல்ல ஒரு நடை பிறகு ஒரு பிடி?"

"சரிப்பா."

இவள் வெளி வாசலுக்கு வர, இதற்கென்றே, காத்திருந்தது போல நாய்கள் இரண்டும் மாயாவைச் சுற்றி வந்தன. முணகி, வாலாட்டி, உரசி தங்கள் மூன்று வருட ஏக்கத்தைத் தீர்த்துக் கொள்ள முயன்றன.

மிருகங்களுக்குத்தான் எத்தனை நினைவாற்றல்... நன்றி? மனிதனுக்கு அறிவு கூடக் கூட குயுக்தியும் அதிகம். இது போன்ற நல்ல உணர்வுகள் அவனிடம் நிலைக்காததற்கும் அறிவுதான் காரணமோ?

இன்று காலை நனைந்த ரோஜாவாக. வெறுமே துவாலையுடன் நடந்த தன்னை மாறன் பார்த்த பார்வை...? அதில் இருந்தது பாசமா... பாசம் மட்டுமா? இல்லவே இல்லை! அப்படியானால் அன்று அவளிடம் அவன் சொன்ன பொய்! மனுஷபுத்தி மட்டும்தான் பொய்களைப் புனையும் அளவு ஆழமானது - அழுக்கானது.

நாய்களுக்கு அவள் இப்படி வெறுமே நடப்பது பிடிக்கவில்லை போலும். ஒரு குச்சியைக் கவ்வி எடுத்து மாயாவின் கைகளில் திணித்தன. “அடடே... மிட்டி, சுட்டி, நீங்க அந்த விளையாட்டை இன்னும் மறக்கலியா?”

அவைகளிடம் பேசியவள், குச்சியை பலங்கொண்ட மட்டும் வீசினாள். இரண்டும் மின்னலாய் அதன் பின்னே பாய்ந்தன. அந்த உற்சாகப் பாய்ச்சலை ரசித்தவள், பார்வையை சுற்றிலும் விட்டாள் - யப்பா... எத்தனைப் பசுமை... அழகு! மலர், தளிர்களின் பசிய மணம் நாசியைத் துளைத்தது. பரந்த இப்பெரும் தோட்டத்திற்கான வேலி போல நெஞ்சு நிமிர்த்தி நின்றன மலைகள். அவைகளிலும் மரங்களின் பசுமை.

அவள் பார்வை நாய் முகப் பாறையில் பதிந்து நின்றது. இங்கிருந்து தொலைவில் இருப்பது போலத் தோன்றினாலும் 15 நிமிட நடையில் அதன் மீது நிற்கலாம். நாய் மூக்கு போல நீண்ட பாறை அமைப்பு - மரங்கள் பிரிந்து நிற்பது விடைத்த காதுகள் போலத் தோன்றும் அங்கே போகும் பாதை ஒற்றைத் தடம்தான் என்றாலும் சீராய் இருக்கும் எத்தனை முறை மாறனோடு இதில் நடந்திருக்கிறாள்...



சுருங்கிய பாதை என்பதால் நெருங்கி, உரசி நடப்பதில் இருவரும் இன்பம் கண்டதுண்டே.

“ரெண்டும் சாடிக்கு ஏத்த மூடிதான்’ - என்று வேலைக்காரர்கள் ஜாடையாய் கேலி பேசும் போது, இவள் முகம் மட்டுமல்ல மாறனுடையதும் சேர்ந்தேதானே சிவந்தது...?

பிறகேன் அந்தப் பொய்..? இன்று காலை அவன் அவளைப் பார்த்த பார்வை பொய்யில்லை. அது நிஜமான மோகம்.! நிர்வாணமான ஆசை.! ஆனால் இவளது வியப்பு புரிந்ததும் தலை கவிழ்ந்து கொண்டான் பத்தாம் நிமிடம் இவள் உடைமாற்றி அறைக்கதவைத் திறக்க, நடைபாதையில் இவளை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

“மன்னிக்கணும்... மாயா..”

“எதுக்கு?”

“நீ இங்கே யாருமில்லைன்ற சுதந்திரத்தை ரசிக்கிற வேளையில் குறுக்கிட்டதுக்கு..”

அவள் பதில் பேசாமல் ஈரக் கூந்தலை விரல்களால் கோதினாள்.

“யாரோ விருந்தாளி வராங்க - இந்த அதாவது உனக்கு அடுத்த அறையைத் தயார் செய்யணும்னு சொன்னியாம்.”

“ம் - ஆமா.”

“அதான் - பார்த்துப் போக வந்தேன்...”

“பரவாயில்லை... உங்ககிட்ட சொல்லணும்னு நினைச்ச ஒரு விஷயம் - இப்பவே சொல்லிடறேன் - நீங்க எனக்குப் பெரிய நன்மை செய்திருக்கீங்க...”

புரியாமல் நின்றான்.

“நமக்கிடையே கல்யாணம் சாத்தியமில்லைன்னு நீ சொன்னதால்தான் நான் படிப்பதற்காய் பட்டணம் போனேன். இந்த மூணு வருஷத்திலே என் சுய சம்பாத்தியத்திலே தனியாய் வாழ்ந்திட முடியுங்கற தைரியம் வந்திருக்கு - இந்த குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்ட விடாம செய்ததுக்கு என் நன்றி!”

"வெளியே போய் வரணும்னா சொல்லு மாயா."

"தேவையில்லை அத்தான். இப்ப எனக்குக் காரோட்ட ஓரளவு தெரியும் - என் சைக்கிளும் இருக்குதே."

"வரும் விருந்தாளிக்கு கார் அனுப்பணுமில்லையா?"

"இல்லை. அரவிந்தன் வர வாடகைக் காருக்கு ஏற்பாடு செய்தாச்சு. தவிர அவர் ஓவியர் என்கிறதால் தனியாய் இயற்கையை ரசிச்சபடி பயணப்பட விரும்புவார்... நூறு கற்பனை தோணும் ஹாங்., அரவிந்தன்ர பெயர் உங்களுக்குப் பரிச்சயமாய் இருக்கணுமே - புகழ் பெற்ற ஓவியர் அவர் நட்சத்திர ஹோட்டல், நிறுவனங்களில் அவர் படைப்பு ஒன்னாவது நிச்சயமிருக்கும்.."

"தெரியலை மாயா. குண்டுச் சட்டியும் குதிரையுமான ஆள் நான்" என்றவன் நகர்ந்து விட்டான்.

சிறுசுனை ஒன்று 'கிளுகிளு'வென சிரித்தபடி ஓடியது. நாய்கள் அதில் 'சப்சப்' என்று நீர் குடித்தன.

மாயா பாதங்களைத் தண்ணீருள் விட்டாள் - சிலிர்த்தது. இச்சுனை நீர் கற்கண்டு கரைந்தாற் போலிருக்கும். பல சமயங்கள் பலகாரங்களைக் கட்டி இங்கு கொண்டு வைத்து சாப்பிட்டு, இந்த நீரால் தாகம் தணித்ததுண்டு.

ஈரப் பாதங்களில் மீண்டும் செருப்பை மாட்டியவள் நடையைத் தொடர்ந்தாள். நாய் மூக்குப் பாறை நெருங்க நெருங்க நடை சிரமமாய் தெரிந்தது.

"இந்த காட்டில் புலி நடமாட்டம இருக்குது." என்று யாராவது சொன்னால் - அதன்பிறகு விச்ராந்தியாய் திரிய முடியுமா? கவனமாய் காதைத் தீட்டி, கால்களை அளந்துதானே வைக்க நேரும்?

இது போன்ற மனநிலை இப்போது அவளுக்கு. நாய் மூக்குப் பாறைக்குப் போனால், புலி பாய்ச்சலுடன் பல நினைவுகள் அவளைத் தாக்கும் - தாங்க முடியுமா?



சந்தேகம்தான்...

இப்போதே கால்கள் ஈயக் குண்டுகள் கட்டிவிட்ட தினுசில் இழுக்கின்றன. மாறனும் அவளும் இங்கே சந்தித்ததுதான் கடைசி. அதன்பிறகு இருவரும் சுமுகமாய் பேசிக் கொள்ளவில்லை. இந்நாள் வரை இங்கு வரவுமில்லை...

மேலே தொடர மனமில்லாமல்.... திரும்பி விட்டாள்!

"நல்லா நடந்தாச்சா... நல்ல பசியா?"

பரிமாறிய சரோ கேட்டாள். "கொஞ்ச தூரம் நடந்தேன் அத்தை அதற்கேற்ப கொஞ்சமாய் பசி."

"நம்ப பண்ணை ஆட்களெல்லாம் உன்னைப் பார்க்க காத்திருக்காங்க. உன்னை இதுவரைப் பார்க்காத புது வேலையாட்களும் கூட -

'எஜமானியம்மாளைப் பாக்க ஆசையா இருக்கும்மா'ன்னு வந்து நிற்கறதுதான் ஆச்சரியம்."

"இதிலென்ன ஆச்சர்யம்? மாயாதானே நிஜமான முதலாளியம்மா - இது எல்லாருக்கும் தெரியும். ஆக அந்த ஆர்வம் அவங்களுக்கு" என்றான் வந்து நின்ற மாறன்.

"அதுவும் சின்னம்மா எழுந்தாச்சா, சாப்பிட்டாச்சான்னு வந்து நின்னதிலேருந்து என்னைத் துளைக்கிறாங்க..."

"என்ன சின்னத்தை? இத்தனை பேர், ஆசையாக் காத்திருக்காங்கன்னு முதல்லியே சொல்லியிருந்தால் நான் சாப்பிட உக்காராமல் அவங்களைப் பார்த்திருப்பேனே?"

"சாப்பிட்டபின் தெம்பாய் போய் பாரேன் - நீயும் உக்காருப்பா மாறன்."

"ஆரஞ்ச் பழுக்கற பருவம் - பறிச்சு அனுப்பலைன்னா சேதமாயிடும். ஆளுங்க போதாது அதான், கெங்குவார் பட்டியிலிருந்து லாரி வரும்போதே அதிலே நாலு பேரையும் கூலி பேசி கூட்டிவரச் சொல்லணும் அது சம்பந்தமாய் போன் போட்டுட்டு வந்துடறேன்."

அவன் தொலைபேசி கருவியின் அருகே போனதும் அது குஷியானது போல விட்டு விட்டுச் சிரித்தது!

"ஹல்லோ - மாறன் பேசறேன்."

"......."

"ஓ இருக்காங்க" - ஒரு நிமிஷம் மாயாவைப் பார்த்தான். "மாயா இது உனக்கு - பெங்களூரிலேருந்து அரவிந்தன்." மிளகு சற்று தூக்கலாய் விட்டு மணக்க மணக்க ஊற்றப்பட்ட கோழிக் குழம்பை ஆசையாய் பூவான இடியாப்பத்தில் தொட்டு ருசித்துக் கொண்டிருந்த மாயா, அப்படியே கையை உதறிவிட்டு எழுந்தாள். குழந்தையின் உற்சாகத்துடன் 'குடுகுடு'வென ஓடிப் போய் 'பேசி'யை மாறன் கையிலிருந்து ஏறக்குறைய பிடுங்கினாள்.

"ஹாய் அய்விந்த்..." கூவினாள் வாயெல்லாம் பல்லாக.

"......."

"மம்... சாப்பிட்டுட்டு இருந்தேன்."

"......."

"வராம என்னை ஏமாத்தற அளவு உங்களுக்குத் தைரியமிருக்கா என்ன?"

"......."

"மம்- வாயிலிருக்கறதை முழுங்கியாச்சு - பூ மாதிரி இடியாப்பம், காரமும் மணமாய் கோழிக் குழம்பு."

"......."

"ஐயோ பாவம் அரவிந்த் குழந்தை - வந்ததும் விதவிதமாய் ஊட்டி விடறேன் என்ன?"

காதலான கொஞ்சல் பாவனையில் பேசியவள் ஓரக்கண்ணால் மாறனை நோட்டமிடத் தவறவில்லை. அவன் தீ மிதிப்பவனின் அவஸ்தையில் நிற்பது போலத்தான் தோன்றியது. முகம் கூட சற்று சிவப்பேறி தெரிகிறதோ?



ஆஹா.... இதுதானே அவள் வேண்டியது!

இவனுக்கு வேண்டாத கொள்ளு என்றால் மற்ற எந்த குதிரையுமேவா விரும்பாது...? வாய் திறக்காது...? மாறனை வெறுப்பேற்ற தன் குரலில் மேலும் தேன் கலந்தாள்.

"சீக்கிரம் வாப்பா அரவிந்த் - மூணு நாள் பிரிவையேத் தாங்க முடியலை... ம்ம்?" என்று ஒரு மாதிரியான 'சில்க் ஸ்மிதா' குரலில் இவள் உருக, அதற்கும் மேலே தாங்க முடியாது என்பதாய் 'விருட்'டென அறையை விட்டு வெளியேறினான் மாறன்.

நாளை தான் வருவதை அரவிந்தன் அவளுக்கு மறுபடி நினைவு படுத்தினான் - விஷயம் அவ்வளவுதான். அதை மாயா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டாள்.

'பரவாயில்லை - நான் கெட்டிக்காரிதான். நாடகத் திரை விலகுமுன் அமர்க்களமாய் ஒலிக்கும் பூஜை மணி போல ஒரு எதிர்பார்ப்பை இந்த தொலைபேசி உரையாடல் மூலம் ஏற்படுத்தியாச்சு' - என்று தனக்குத் தானே 'ஷொட்டு' கொடுத்துக் கொண்டாள்.

ஆனால் மறுபடி தட்டின் முன் உட்கார்ந்தவளுக்கு உணவு ருசிக்கவில்லை. மாறன் சாப்பிடாமலேயே போய் விட்டானே என்ற நெருடல் வேறு... சரோஜாவிற்காக தனது தட்டில் இருந்ததைக் காலி செய்தாள்.

கைகழுவியபின் தோட்டத்திற்குப் போய் அங்கு அதற்குள் முறுக்கும் காபியும் தந்து உபசரிக்கப்பட்டிருந்த தொழிலாளிகளை சந்தித்தாள்.

அந்த வெள்ளை சிரிப்புகள், சங்கோஜ விசாரிப்புகள், மெய்யான பரிவு, மரியாதை... மனதுக்கு மருந்தாயின.

சில பழகிய முகங்களும் இருந்தன - அவை உரிமையுடன், "என்ன சின்னம்மா... இத்தனக் காலமாவா படிக்கது? அப்பா வளைச்சு போட்ட இத்தன சொத்து, அதக் காபந்து பண்ண மாறன் தம்பி இருக்க, பிறவென்னதுக்குப் படிப்பு? நிம்மதியா எங்கள

ஏவிகிட்டு இருக்க வேண்டியதுதான.?'' முதலாளியம்மாளைக் கடிந்தன.

"இனி அதையே செய்யறேன்"- சிரித்தாள்.

"நீங்க இனி எங்கேயும் போவ மாட்டீங்கல்ல?"

பழுக்க மஞ்சள் பூசிய முகத்தில் ஆவலுடன் கேட்டாள் ஒரு சின்னப் பெண்.

இதற்கென்ன பதில் சொல்ல? ஆக மழுப்பலாய் சிரித்து வைத்தாள்.

"நீங்க எல்லோரும் சௌக்கியந்தானா?"

"கடவுள் புண்ணியத்துல, முதலாளிமார் நல்ல மனசுல... உங்களுக்கு எந்தக் குறையும் இல்லம்மா."

தழுதழுத்தார் ஒரு தாடிப் பெரியவர்.

"சந்தோஷம்."

"அஞ்சு க்ளாஸ் வரைக்கும் பைசா செலவில்லாத எங்க பிள்ளைக படிச்சிருது. சத்துணவு போல மாறன் தம்பி மதியச் சோத்துக்கும் ஏற்பாடு செஞ்சுட்டாங்க. வருச ஆரம்பத்தில ரெண்டு செட் துணி - புஸ்தவம் - பிறவென்ன?"

"சீக்கு வந்தா டவுனுக்குக் கூட்டிட்டு போயி வைத்தியம் பாக்குதாங்க. அப்பாக்கு முன்னையப் போல ஆஸ்த்துமா தொல்லை இல்ல இப்ப - மருந்தை முகர்ந்துக்க, மூச்சிரைப்பு தேவலையாயிடுது - நிம்மதிங்கம்மா.."

"சந்தோஷம்மா."

"அத்தனைப் புண்ணியமும் இந்த வீட்டுக்குத்தாம்மா." இந்த வார்த்தைகளை மனதார சொல்கிறார்கள் என்பது புரிந்தது. எளியவர்கள் வாழ்த்து மிகப் பெரியது.

வாழ வைக்கும் வலிமை உடையது.

"நீ எனக்கு இன்னின்ன நன்மையை, கௌரவத்தைத் தந்தாயா? வா - நானும் உனக்கு அவை தருவேன்; அல்லது அதையும் மிஞ்சி



கூட தரலாம்" என்று மார்தட்டும் செல்வந்தரின் நட்பு வேறு வகை. அது சற்றே பலப் பரீட்சை ரகம்!

"நீ எனக்கு இத்தனை தர, நான் தரக் கூடியது என்ன... என் வாழ்த்தை, பிரார்த்தனையைத் தவிர?" என்று நெக்குருகி மனதார வாழ்த்துவான் எளியவன்.

அந்த வாழ்த்து பலிக்கும் - உயர்த்தும் - காக்கும்.

ஆனால் இந்த வீட்டில் சாபமல்லவா தங்கியிருக்கிறது? இங்கு வாழ்ந்த நல்லவர்கள் மூவர், நரை வயதும், மூப்பும் காணாமலேயே இறந்தாயிற்று.

எஞ்சிய மூவர், ஒண்டியாய் மனதுள் அழுந்திய வேதனை, ஏக்கங்களுடன் வாழும் கொடுமை.

ஏனிது? புரியவில்லை.

ஆனால் மனது... ஒவ்வொன்றாய் அலசித் தேடி... எதையோ காரணமாய் கண்டெடுத்தது.

"இதுவா பார்?:" என்று அவளையேக் கேட்டது. அஸ்வினி சித்தி!

தன் அக்காளின் புருஷன் தன்னை மணக்க மறுத்ததில் ஆங்காரமாய் பொங்கிய அஸ்வினி. 'வேறு எவனும் வேணாம்' என்று வந்த மாப்பிள்ளைகளைத் தூக்கிக் கடாசியவள்.

முப்பது வயது முதிர் கன்னியாய் ஏங்கி தன் விரகத்திலேயே வெந்து கூழானவள்.

அந்தக் பெருமூச்சுகள் தான் இந்த வீட்டைப் பொசுக்குகின்றனவோ?

நெருப்பில் வெந்த போது அவளிட்ட ஓலம்தான் இங்குள்ளவர்களின் சந்தோஷத்திற்கு தடையாகிறதோ?

மாயாவின் உடல் நடுங்கியது.

## 10

அஸ்வினி சித்தியின் நினைவும், அவளது கொடிய மரணமும் நினைவிற்கு வர மாயாவின் உடல் நடுங்கியது.

அப்பா அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை என்பது நிச்சயமாக தெரிந்த பிறகும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல இங்கு அடிக்கடி படையெடுத்தாள் சித்தி.

மாயா மூலம்தான் இப்பெரும் வீட்டிற்கு, விஸ்தீரண பண்ணைக்கு எஜமானியாக முடியும் என்று திட்டமிட்டவள், சிறுமியிடம் பாகாய் குழைந்தாள்.

"ஐய, இதென்ன மாயாகுட்டி ஒத்தை, ரெட்டை சடைன்னு மாறி மாறி.? என்கிட்ட வந்து உட்காரு - விதவிதமாய் அலங்காரம் பண்ணி விடறேன்?"

ஆனால் மாயாவிற்கு என்னவோ சித்தி நீட்டி விட்ட கண்மையும் ஈரப் பென்சிலைக் கொண்டு சுருட்டி விட்ட கேசச்சுருள்களும் பெரும் தொந்தரவாய் தோன்றின.

தவிர மாறனின்,

"ஐயோ - என்ன மாயா உன் முகத்துக்கு ரெண்டு புறமும் பூரானாய் நெளியுது. எங்கிட்ட விளையாடறப்போ தோத்தால், மறந்தும் கண்ணைக் கசக்கிடாதே - மை வழிந்து முகம் தார் ரோடாயிடும்"என்று சீண்டுவான்.

எப்போதும் அஸ்வினியின் கையில் ஏதாவது சினிமா பத்திரிகை அல்லது பாட்டுப் புத்தகம் இருக்கும். கள்ளக் குரலில் ராகம் இழுப்பாள்-



"என்ன பாட்டு சித்தி?"

"பாடிக் காட்டறேன் - வா."

அஸ்வினிக்குக் கீச்சு குரல் - சுருதியும் சுகமாய் சேராது. ஆக கேட்பவர்களுக்குச் சற்று சிரமம்தான்!

மாயாவும் நாராசம் தாங்க முடியாமல் நழுவுவாள்.

"த.. பாத்தியா ... போறியே? உனக்காகத்தான் மாயாகுட்டி சித்தி பாடறேன்...?"

"இல்...ல, சாயங்காலம் ஆறு மணியானால் அத்தை நாய்க்கு சாப்பாடு வைச்சாச்சான்னு பார்க்கச் சொல்லியிருக்காங்க - ஆங்... முதல்ல பூஜைரூமிலே விளக்கேத்தணும்."

"அதுக்கெல்லாம் எத்தனை வேலையாட்கள் இல்லை நம்ப வீட்டிலே?"

"நம்ப வீட்டில, நாம சும்மாயிருக்கக் கூடாது. ஒவ்வொரு சமயம் ஒரோர் வேலைன்னு செய்துட்டே இருக்கணும்னு அத்தை.."

"அவங்க உன்னைப் போல பெரிய இடத்துப் பொண்ணுல்ல ராசாத்தி - ஏழை. வேலை பார்த்தாத்தான் சோறுங்கற நிலைமை."

தோள்களை வெகுவாகக் குலுக்கி கண்களை உருட்டுவாள் அஸ்வினி.

"ஆனா வேலை செய்யலைன்னா வேற என்னதான் செய்ய சித்தி? சும்மாவே உக்கார்ந்தால் சோம்பல் வரும். மனசு சாத்தானுக்கு இடந்தரும்னு..."

"சொன்னாங்களாக்கும்? போம்மா போ - உன்னை நல்லா உருவேத்தியிருக்காங்க! ஒன்னு சொல்றேண்டி... உன்னைப் பார்க்க நான் ஊர் விட்டு ஊர் ஓடி வார்ரது. நீயான்னா அவங்க கூடவே இழையற - எம்மேல ஒட்டுப் பாசம் ஏதுமில்லை..."

பெரிதாய் பெருமூச்சு விட்டுப் பொறுமுவாள். "அப்ப நீங்களும் வாங்களேன் சித்தி - வேலையச் சேர்ந்தே செய்யலாம். புத்தக

அலமாரியைக் கூட இன்னிக்குப் பிரிச்சு அடுக்கறோம் - பழைய பேப்பரையும் எடை போடணும்."

"போடியம்மா. அம்மா வீட்டிலே துவைச்ச மெழுகி ஓய்ஞ்சு, இங்க ஓய்வா நாலு புஸ்தகம் புரட்ட முடியுதேன்னுதான் நான் ஓடி வர்ரது - இங்கேயாவது வேளா வேளைக்கு சாப்பிட்டு, சிங்காரிச்சு புஸ்தகத்தோட உக்கார்ந்துக்கறேன் - ஆளை விடு."

ஆக சித்தி இங்கு வரும் உண்மைக் காரணம் வெளியானதை நமுட்டுச் சிரிப்புடன் ரசித்துவிட்டு ஓடுவாள் மாயா.

ஆனால் தன்னைச் சுற்றிய அச்சின்னஞ்சிறு உலகம் சிக்கலின்றி இயங்குவதும் அஸ்வினிக்குப் பொறுக்காது. எங்காவது, யாரைப் பற்றியாவது கோள் மூட்டியபடி இருப்பாள்.

"ஏன் மாறன். நீயும் அத்தான், மாயாவோட உக்காரணுமா என்ன? உரியவங்க சாப்பிட்ட பிறகு மிஞ்சினதுதான் மத்தவங்களுக்கு" என்று ஊசியேற்றி அவர்களிடையே சுவர் எழுப்ப முயன்றாள். ஆனால் அப்பா "மாறா" என்ற அழைப்புடன்தான் சாப்பிட மேசை முன் அமருவார்.

"செண்பகா எங்க? பரிமாறும்மா" என்று அஸ்வினியின் பேச்சில் குறுகி பதுங்கும் அத்தையை இழுத்து விடுவார் அவர் கண்டுக் கொள்ளாது ஒதுங்குவது அஸ்வினியிடமிருந்து தான். அது அவள் ஆங்காரத் தீயில் நெய்யிட்டிருக்க வேண்டும்.

"இங்க நான் இருந்தால் என்ன... இல்லாமப் போனால் என்ன.. எல்லாம் ஒன்னுதான் - நாங் கிளம்பறேன்" என்று முறுக்கிக் கொண்டு கிளம்புபவளை யாரும் தடுத்துத் தாங்குவதும் கிடையாது. அந்த எரிச்சல் வேறு. ஆனால் அதெல்லாமும் ஒரு மாதம் வரையில்தான் தாங்கும் பிறகு மீண்டும் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்று எஸ்டேட் வந்து விடுவாள். வந்த முதல் இரு நாட்கள் தூக்கம், மூக்கு வரைக்குமான தீனி என்றிருந்து விட்டு மூன்றாம் நாளிலிருந்து பிறர் விவகாரத்தில் மூக்கை நீட்ட ஆரம்பிப்பாள்.



"மாயா"

"வாங்க சின்னத்தை - கதவு தாழிடலை."

"வேலையாய் இருந்தால், பிறகு வரேன் மாயாம்மா."

"இல்லை வாங்க. உங்ககிட்ட என் மாடலிங் போட்டோக்களைக் காட்டணும். அரவிந்தன் வரைந்த என் படங்களைக் கூட காட்டறேன்னேனே...?"

"போன்ல என்ன சொன்னார் அரவிந்தன்?"

"நாளைக்கு இந்நேரம் இங்க இருப்பாராம் - அத்... அத்தான் சாப்பிட்டாச்சா?"

"இல்லைம்மா - அப்போ போனவன்தான்."

"வேளா வேளைக்குச் சாப்பிடறதில்லையா?"

"ஒவ்வொரு சமயம் பேச, சிரிக்கக் கூட மறந்திடறாம்மா... பாவம்."

"ம்ம்... அவ்வளவு வேலையா?"

"ஏதோ கவலை அவனை அரிக்குதுன்னு நினைக்கிறேன்."

அவசரமாய் தன் படங்களை எடுத்து நீட்டினாள் மாயா.

ஆவலாய் வாங்கிய சரோஜா வியந்தாள்.

"அடடே.... இது நீயா... சினிமா நட்சத்திரம் மாதிரி மின்னுற?"

"ம்ம் - பான்கேக் வேண்டியது பூசியிருக்கேன் - தவிர மேடையில் ஒளி அத்தனையும் எம்மேலேதான்... பிறகு மின்ன மாட்டேன்?"

"நான் தோலை மட்டும் சொல்லலை மாயாம்மா - உன் பார்வை, சிரிப்பு - அதுங்கூட மின்னலாய் கண்ணைக் கூச வைக்குது.. ஆனால்"

"சொல்லுங்கத்தை."

"இந்தப் பேரழகை மேடை ஏறிக் காட்டணுமாம்மா? உங்கப்பா, அம்மா, ஏன்.. செண்பகாக்கா இருந்திருந்தாக்கூட இது பற்றிச் சந்தோஷப் பட்டிருப்பாங்களான்னு தெரியலை..."

"உலகம் மாறுது அத்தை. உலகம்ங்கறது அதிலுள்ள மக்கள்... அவங்க எண்ணங்கள் - இப்போ மாடலிங் ஒரு நல்ல தொழில். அழகும், அதைப் பேணி பரிமளிக்கச் செய்ற அறிவும் இருந்தால் புகழும் பணமும் கொண்டு வர்ரத் தொழில் - தவிர நாங்க காட்டறது எங்க அழகை மட்டுமல்ல - நாங்க மாடல் பண்ற உடைகளைத்தான் - பார்க்கறவங்க கண்ணோட்டம் சரியாய் இருந்தால் சரியானதைப் பார்ப்பாங்க..."

"என்னவோ, நான் பல வருஷமாய் இந்தக் காட்டிலே கிடக்கறவ என் புத்தியும் அதனால் கொஞ்சம் காட்டு மிராண்டித் தனமாய் இருக்கலாம்."

"இது கரிசனைன்னு சொல்வேன் நான். நம்ப பொண்ணை இப்படிப் பல நூறு பேர் பார்க்கறாங்களே - எந்தெந்த பார்வை எப்படிப்பட்டதோன்ற ஆதங்கம்..."

"யம்மாடி... எப்படி பேசற? ஆனா உண்மை அதுதாம்மா. நாலு பேர் நம்ப பொண்ணைப் பத்தி தப்பாப் பேசிடக் கூடாதேங்கற பயமும் கூட...."

"நான் தப்புன்னு நினைக்கலை - பிறகென்ன பயம்.?"

"நாளை கல்யாணமாக வேண்டிய குருத்தும்மா நீ..."

அதுவரை பொறுமையும் புன்னகையுமாயிருந்த மாயாவின் முகம் நொடியில் மாறியது. கடுமையான ஒரு முகமூடி 'சர்'ரென இறங்கி மூடியது போல....

"கோச்சுக்காதே மாயாம்மா... இதுவும் ஒரு... என்... ஆதங்கம்தான்."

"புரியுது சின்னத்தை" - அழ மூச்செடுத்துப் புன்னகைத்தாள். "அப்ப... இன்னுமொரு விஷயமும் கேட்டுடரனே?"

சிறுபெண் தன் வாத்தியாரம்மாவிடம் உத்தரவு வேண்டி நிற்பது போல நின்ற சரோஜாவைப் பார்க்க மனசு நெகிழ்ந்தது.



"கேளுங்கத்தை."

"உனக்கும் மாறனுக்கும் நடுவே என்னதான் மனஸ்தாபம்? மூணு வருஷங்களுக்கு முன்னே நீ ஒரு பக்கம் கிளம்பிப் போனே - இவன் இங்கே நத்தையாய் ஒடுங்கி சுருண்டுட்டான்."

'ஒன்றுமில்லை' என்று மழுப்ப முடியாது - ஒன்றுமில்லாமலா தன் பள்ளித் தோழி மூலம் அவசரமாய் கல்லூரியில் இடம் பிடித்து பெங்களூர் ஓடினாள் இவள்?

செண்பகத்தை உயிருடன் இருந்திருந்தால் மதுரையின் கல்லூரி ஒன்றில்தான் சேர்ந்திருப்பாள். சனி, ஞாயிறு வீடு வந்து, நான்கு வித பலகார, பட்சணங்களுடன் வாரா வாரம் கல்லூரிக்குத் திரும்பியிருப்பாள்.

இப்படி வேற்று மாநிலம் போய், "என்னைப் பார்க்க யாரும் வர வேண்டாம். வந்தால் நான் வடக்கே வேறு கல்லூரிக்குப் போக நேரும். எங்கே போகிறேன் என்று சொல்லாமலும் போயிடுவேன்" என்று மிரட்ட முடிந்திருக்காது.

ஆனால் அத்தை இருந்திருந்தால் அப்படி அவளிடம் பேசியிருக்க முடியுமா?

அவன் முறை தவறி பேச, இவளும் முறையின்றி நடந்து கொண்டாள்.

"தாடி வளர்த்திருந்தான் தெரியுமா?"

"ஆங்."

கனவிலிருந்து மீண்டவள் போல விழித்தாள்.

"என்ன அத்தை...?"

"மாறன் தாடி வளர்த்துட்டு திரிஞ்சான். முகத்தில் அருளே இல்லை.."

"தாடிக்குள்ளே மறைஞ்சு இருந்திருக்கும்!" - சிரிக்க முயன்றாள்.

"பாவமாய் இருந்தது மாயாம்மா. அவனும் தாய் தகப்பனில்லாத குழந்தைதான? அப்படித்தான் எனக்குப் பட்டது.

எங்கிட்டேயும் மனம் விட்டு பேச மாட்டான்... பிறகென்ன ஊமையன் கனா கண்டது போல உள்ளுக்குள்ளேயே புழுங்க வேண்டியது... இப்ப நீயாவது காரணத்தை சொல்வேன்னு நம்பறேம்மா... மாயா.."

"நானும் உங்ககிட்ட சொல்லணும் சின்னத்தை - அதுதான் முறை. ஆனா இன்னும் கொஞ்சம் அவகாசம் தாங்களேன்."

"எடுத்துக்கோப்பா - நீ வந்ததே போதும். இந்த வீட்டுக் களை மீண்டிருச்சு. இத்தனை வருஷமாய் எம்மனசை வண்டாய் குடைஞ்ச கேள்வி... அதான் கேட்டுட்டேன்... இன்னும் ஒரு விஷயம்... வந்து... அஸ்வினியம்மா.. அதான் உன் சித்திக்கு இதிலே... உங்களின் இந்தப் பிரிவிலே பங்கிருக்கிறதா?" 'திடுக்'கிட்டு நிமிர்ந்த மாயாவின் விழிகளில் பதில் இருந்தது போலும்...

"என்ன... சரிதானா நான் நினைச்சது?"

'சரிதான்' என்று ஒப்புக் கொள்ளக் கூடுமா? 'இல்லை' என்று முழுக்க மறுக்கவும் முடியாதே.

யாரும் தன் சாதனைகளுக்கோ, தோல்விகளுக்கோ முழுதுமாய் பிறத்தியாரைக் காரணமாய் சுட்டிக் காட்டிவிட முடியாது. அவரவர் பங்கு அதில் அதிகம்.

அப்படியிருக்க தன் காதல் தோல்வி..... இல்லையில்லை தன் வாழ்வே தோல்வி அடைந்ததற்கு அஸ்வினி சித்திதான் பொறுப்பு என்று சொல்லி விடலாமா?

**யோ**சிக்க பழைய நினைவுகள் கிளர்ந்தன.....

"இல்லை மாயா - நமக்குள்ளே அப்படியொரு உறவு வேணாம்... பாசத்தைத் தவிர நான் அப்படியொரு எண்ணத்தோட இல்லை - விட்டிரு..."

பாறையாய் இறுகிய முகத்துடன் மாறன் சொல்ல 18 வயது மாயாவின் பூ மனம் நசுங்கிப் போனது.

"அத்தான்னு கூப்பிட்ட நான்... நான்.. உங்களை அப்படித்தான் நினைச்சேன் பழகினேன்.."



"விவரம் தெரியாத வயசிலே பழகினதைப் பெரிசுபடுத்தாத மாயா. உன் வாழ்க்கை இனிதான் ஆரம்பிக்குது... பழையதை யோசிக்காத.."

இவள் மேலும் பேச வாய் திறக்க, முகம் சுளித்தான்.

சலிப்பும் வெறுப்புமான முகக் குறிப்பு.

குன்றி விட்டாள். கொதி நீர் வாங்கிய வேர் போல விதிர்ப்பு உள்ளோடியது. ஆத்திரத்தில் ஏதேதோ பேசினாலும் ஒன்று மட்டும்தான் நினைப்பில் நின்றது - இனி மாறன் தனக்கில்லை...!

முகம் முழுக்க கண்ணீரின் ஈரத்துடன் வீடு நுழைந்தவளை அன்று வரவேற்றது அஸ்வினி சித்திதான்.

"என்னடி.... ஏய் மாயா... என்னாச்சு?"

தேடிப் போய் அழ தாய்மடி இல்லையே. மாறன் எட்டி மிதித்த வேதனையை யாரிடமும் முழுக்க சொல்ல முடியுமா? ஆனால் அப்போதுதான் ஏற்பட்ட பச்சை ரணம் வாட்டியது. ஆக கிடைத்த ஒரே ஆறுதலை... சித்தியைக் கட்டிக் கொண்டாள்.

"நா ஏமாந்துட்டேன் சித்தி..." குலுங்கினாள் - குழறும் வார்த்தைகளுடன் தன் வேதனையைக் கோடி காட்டினாள்.

சற்று ஆசுவாசப்பட்டு விழி உயர்த்திய போதுதான் சித்தியின் முகம் தெரிந்தது. வீட்டு ஹாலில் இரண்டு நிலைக் கண்ணாடிகள் எதிர் எதிராய் மாட்டப்பட்டிருக்கும். தன்னைக் கட்டிக் கொண்டிருந்த சித்தியின் முகம் அவளுக்குப் பின்னேயிருந்து கண்ணாடியில் பிரதிபலித்து, அதன் மறுபிம்பம் மாயாவின் முன்னிருந்த ஆடியிலும் தெரிந்தது.

மாயா அதிர்ந்தாள் - ஏன் சித்தியின் முகத்தில் இத்தனை சிரிப்பு? இது ஆனந்த அழகில்லை -

குரூரமும், குரோதமும் கலந்த இளிப்பு! கெட்ட எண்ணங்கள் முகத்திற்கும் கரும் கயமையைப் பூசி விடுகின்றன. அழகில்லாத அகத்தின் முகமும் அசிங்கம்தான். மகள் அழுவதைக் கண்டு வருந்தாமல் ஏனிப்படி இளிக்கிறாள் சித்தி?

அவள் கண்கள் ஏனிப்படி கொடூரமாய் ஆனந்திக்கின்றன?

பாம்பைத் தழுவிக் கொண்டிருப்பது போன்ற அருவெறுப்பில், அதிர்ச்சியில் சித்தியை உதறி விலக்கினாள் மாயா.

## 11

**மா**றன் தன் மணாளன் ஆகவே முடியாது என்ற மறுப்பின் அதிர்ச்சி தாளாமல் அழுத மாயாவிற்கு இது அடுத்த அடி!

ஆறுதல் தருவது போல தன்னை அணைத்துத் தோள் தட்டிய சித்திக்கு ஏனிந்த ஆனந்தம்?

தன் முகம் மாயாவிற்குத் தெரியாது என்ற துணிச்சலில் அஸ்வினி தன் முக உணர்வுகளை மறைக்க முயலவில்லை. உள்ளேயிருந்த சைத்தான் சுதந்திரமாய் முகத்தில் வந்து நின்று சிரித்தான்! யப்பா - இன்றும் சித்தியின் குரூர இளிப்பை நினைத்தால் முதுகுதண்டு சொடக்குகிறது.

"என்னப்பா மாயா...? ஏனிப்படி உடம்பு நடுங்குது?"

"இல்லை... சின்னத்தை.. ஏதோ ஞாபகம்."

"ஆனா வாய்விட்டு எதையும் சொல்ல மாட்டாய்... அப்படித்தான?"

"இனி சொல்லி என்ன பிரயோஜனம்."

"சொன்னால்தானே தெரியும்? சாகறதுக்கு முன்னே அஸ்வினியம்மா எங்கிட்ட ஒரு விஷயம் சொன்னாங்க... வெந்து உரிஞ்ச கன்னமும் தீயில உருகின உதடுமாய் அசையறப்போ ரணவேதனை - ஆனால் அதோட அதைச் சொல்லி தன்னை ஆசுவாசப்படுத்திகிட்டாங்க..."



"என்ன?"

மாயாவின் இதயம் ஆவலாய் துடித்த அதே நேரம் கதவு தட்டப்பட்டது.

"யாரது?"

சரோஜா சற்று அலுப்புடன்தான் கேட்டாள். பல ஆண்டுகளாய் மூட்டைக் கட்டப்பட்ட ரகசியம் கட்டவிழும் போது இடையூறு வந்ததால் நேர்ந்த சலிப்பு.

"நாந்தாம்மா - வேணு."

"வாப்பா"

கதவைத் திறந்து முகத்தைக் காட்டினான் அவ்வேலைக்காரன். "பண்ணை ஆளுங்க இன்னும் சிலதுங்க சின்னம்மாவைப் பார்க்க வந்திருக்காங்கம்மா."

"ஆ... யாரு?' எழுந்தாள் மாயா.

"வயசானதுங்கம்மா - உங்களைச் 'சின்ன பாப்பா'ன்னு சொல்லிக் கேக்குதுங்க..."

வேணு கூச்சத்துடன் சிரித்தான்.

"யாரு விக்டர் தாத்தா வகையறாவா? எங்க அவங்களைக் காணுமேன்னு யோசிச்சேன்" முகம் மலர்ந்தாள்.

'அன்பே வா' படத்தில் எம்.ஜி.ஆர். தன் நாயகியை அப்படித்தான் கிண்டலாய் அழைப்பார். சரோஜாதேவியின் முகத்தில் கடுகு வெடிக்க, அவர் விதவிதமாய் 'சின்ன பாப்பா' என்று நீட்டி முழக்க, தொழிலாளர்கள் இவளையும் அப்படி அழைக்க ஆரம்பித்தனர் - படத்தை வீடியோவில் அவர்களுடன் சேர்ந்து பார்த்த மாயா அதை வெட்கத்துடன் ரசித்தாள்.

அதிலும் விக்டர் தாத்தா வெகு ராகத்துடன் பாசமாய் அவளை 'சின்ன பா..ப்பா' என்பார். உரிமையாய் அழைத்து பாசங் காட்டினவர்கள். அவர்களுக்காக வாங்கி வந்திருந்த பரிசுகளை மறக்காமல் எடுத்துக் கொண்டு கீழிறங்கினாள்.

கைவிடப்பட்ட பெண்கள் பின்னி விற்கும் மப்ளர்களை பெங்களூரிலிருந்து இவர்களுக்காக வாங்கி வந்திருந்தாள். மலைக்காற்றுக்கும் குளிருக்கும் ஏற்ற பரிசு அது. காதோடு சேர்த்து முண்டாசாகச் சுற்றிக் கொள்ள பனிக்காற்றிலிருந்து பாதுகாக்கும்.

வந்திருந்தது ஒரு சின்னக் கூட்டம்தான் - அனைவரும் வறுத்த காப்பி கொட்டை நிறத்திலிருந்தனர். விக்டர் தாத்தா முகத்தில் இவளைக் கண்ட வெளிச்சமிருந்தாலும் 'எங்கே எண்ணிவிடு பார்க்கலாம்' என்று சவால் விடுமளவு சுருக்கங்களும் சேர்ந்திருந்தன.

அவரது பரிசான விசாரிப்பைக் கேட்டதும் இவளுக்குள் மேலும் நினைவலைகள் புரண்டன.

அன்று 'நாய்முக'ப் பாறையில் இவரைக் கண்டதும் எப்படி வெட்கம் மிக ஓடி வந்து விட்டாள். அங்கே, தனிமையில் அவள் செய்து கொண்டிருந்த காரியம் அப்படி.

நாய் மூக்கு போல துருத்திக் கொண்டிருக்கும் அப்பாறையும் மலையின் ஒரு பகுதிதான் - தொலைவிலிருந்து பார்க்க நாய் முக வடிவத்திலிருக்கும் அதை நெருங்கினால் அது ஒரு அழகிய வனம். பசுமையோடு சற்று பயங்கரமும் கலந்த ஓரிடம்.

துருத்தி நிற்கும் பாறையின் விளிம்பிலிருந்து கீழே விழுந்தால் முழுசாய் ஒரு எலும்பு கூட தேறாது. ஆக இந்தப் பகுதிக்கு தனியே வர அவளுக்கு அனுமதியில்லை. மாறனோடு வந்ததுண்டு.

பருவ வயதில் அவள் மனதில் ஒரு சினிமாத்தனமான ஆசை - ஒரு மரத்தில் தங்கள் இருவரது பெயர்களையும் அழகாக இணைத்து செதுக்கி வைக்க வேண்டுமென்று...

ஊதா நிற மலர்களை தன் மேலெங்கும் பூக்க விட்டு கர்வமாய் பரந்து நிற்கும் மரம் ஒன்றை அவளுக்கு மிகப் பிடிக்கும். ஆக அதுவே தேர்வானது.

மாறனை விட்டு விட்டு இவள் ரகசியமாய் அவ்வனப் பகுதிக்கு வர ஆரம்பித்தது அப்போதுதான்- ப்ளேடு, பேனாக்கத்தி போன்ற. உபகரணங்களுடன் வந்து வேலையை ஆரம்பித்த பிறகுதான்



தெரிந்தது - அந்த வேலை ஒரு நாளோடு முடியாது என்பது... மரத்தின் ஒரு பகுதிப் பட்டையைத் தேய்த்து சமன்படுத்துவதற்கே அரை நாளாகி விட்டது. ஆனால் அதை இதய வடிவில் அமைத்ததில் அவளுக்கு ஏக திருப்தி. பென்சிலால் தங்கள் இருவரின் பெயர்களை அதில் திருத்தமாய் எழுதினாள் - இனி சிற்பி போல செதுக்கித் தள்ள வேண்டும்... ஆனால் இருட்டுவதற்கு முன் வீடு போயாகவும் வேண்டுமே.

ஆக தினம் ஒவ்வொரு பொய்யுடன் அதே மரத்தடிக்கு வந்து நின்றாள் - சொச்ச வேலை அந்த வாரத்திற்குள் முடிந்தது. முடிந்த நாளன்றுதான் மாறனை அவ்விடத்திற்கு அழைத்துப் போனாள் -

'இதைப் பாருங்கத்தான்' என்று பெருமையாய் மரச்செதுக்கலைக் காட்டிய அன்று அவர்கள் உறவே முடிந்து போனது...!

இவள் வேலை மும்முரமாய் ஆரம்பித்த போதே விஷயத்தைத் துப்பறிந்து விட்ட விக்டர் தாத்தா இவளுக்குக் காவலாய் 'நாய் முக'ப் பகுதிக்கு வந்து விடுவார்.

பழம், குடிக்க பழரசம் என்று எதையேனும் சுமந்து வருவார். சின்ன முதலாளியம்மாவின் 'சிற்ப' வேலையைக் கண்டு கொள்ளாதது போல வேறு பகுதியில் நிற்பார் என்றாலும் இவளைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு குறும்பு சிரிப்பு... வயசாளிகளுக்கே உரிய ஒரு குசும்பு சிரிப்பு சேரிப்பார்.

மாயா முகம் சிவந்து போவாள்.

ஆனால் இப்போது விக்டரின் அக்கலங்கலான முதிய கண்கள் அவளைச் சீண்டவில்லை - பரிவாய் வருடின. அமுக்கி வைத்திருந்த சோகம் சற்று கண்ணோரமாய் கசிந்திருந்தது.

"நான் நல்லாயிருக்கேன் தாத்தா... நீங்க."

"நீ நல்லாயிருந்தா எங்களுக்கென்னப்பா குறை...?"

"ரொம்ப நாளாச்சில்லையா தாத்தா பார்த்து..."

"கண்ணைப் பூக்க விட்டிட்டியே சின்ன பாப்பா - உன்னையப் பாத்ததிலே சாந்தோஷம்பூ .. இனி எங்களுக்கும் ஒரே ஆசைதான் - உன்னைய ஜோடியாப் பாக்கணும் - என்னப்பூ?"

வாஞ்சையுடன் வந்தது கோரிக்கை.

"பாப்பீங்க தாத்தா - சீக்கிரமே..."

எந்தத் துணிவில் அப்படிச் சொன்னாள்...? தெரியவில்லை. ஆனால் முதியவரின் முகம் அப்பதிலில் தெளிந்ததைப் பார்க்க திருப்தியாயிருந்தது.

அன்பும் அன்பளிப்புமாய் அவர்கள் பரஸ்பரம் மகிழ்ந்த பிறகு, பள்ளிக் குழந்தைகள் மாயாவை மொய்த்துக் கொண்டன - அவர்களுக்கு அது 'ப்ரேக்' நேரம்...

"ஒரு நிமிஷம் இருங்க குட்டிகளா" என்று வீட்டிற்குள் ஓடிப்போய் தான் கொண்டு வந்திருந்த சாக்லேட்டுகளை எடுத்து வந்து. பிரித்து பிள்ளைகளுக்கு விநியோகித்தாள்.

"ஹை சாக்லேட் 'ஜில்'லுனு இருக்குது."

"வந்தவுடனே பிரிட்ஜிலே வச்சேன்... அப்போதான் உருகாமல் நல்லா இருக்கும்."

"பெங்களூரும் ஃப்ரிட்ஜ் போலிருக்குமா மிஸ்...?"

விழி விரித்தாள் - "அதென்ன?"

"நீங்களும் 'ஜில்'லுனு இருக்கீங்களே...!"

வாய் விட்டு சிரித்தாள். "வாலும் வாயும் உங்களுக்கு ஜாஸ்தி குட்டிங்களா - பெங்களூரிலே நம்ப பண்ணையை விட வெயில் அதிகம்."

"இங்கதானே நல்லாருக்கு?"

ஒரு வாண்டு இனிப்பை எச்சில் ஒழுக சப்பியபடி கேட்டது.

"ம்ம்... ஆமா."

"அப்ப ஏன் இத்தனை நாளாய் இங்க வரலை, மிஸ்?"



குழந்தைகளின் கேள்விகளுக்குப் பதில் சொல்வது ஒன்றும் எளிதில்லையே... திணறியவள் பேச்சின் திசை மாற்றினாள்.

"அ.. அதென்ன மிஸ்?"

"டீச்சரை மிஸ்னுதான் கூப்பிடுவோம். நீங்களும் எங்களுக்குப் பாடம் எடுப்பீங்கல்லியா - அதான்..."

"என்ன பாடம் எடுக்க?"

"உங்களுக்கு எது நல்லாத் தெரியுமோ அது. மாறன் சார் பூகோளமும் கணக்கும் எடுப்பாங்க."

அவன் அவளுக்கும் கூட சில வருடங்களுக்கு முன் இப்பாடங்களை கற்றுத் தந்தவன் - அதோடு கூட வேறு சில உணர்வுகளையும் கலந்து தந்தவன்...!

"உங்களுக்கு அவரைப் பிடிக்குமா?" கேட்டாள் மாயா.

"யாரை?"

இன்னுமொரு வாண்டு இப்படிக் கேட்ட, தன் சிநேகிதியை இடித்தது - "மாறன் சாரைடீ" என்ற முணுமுணுப்புடன்!

"ஓ... பிடிக்குமே - கோச்சுக்கவே மாட்டாரு."

"மிட்டாயி தருவாங்க சார்..."

அவள் கவனித்ததுண்டு. மாறனுக்கு எப்போதுமே குழந்தைகளிடம் அலாதி பிரியம். அவன் அன்பை உணர்ந்து அவையும் அவனை அண்டிப் பழகும். அவனை மணந்து, இந்த 'ரஞ்சனியகம்' நிரம்பும் வரை நிறைய மழலைகளைப் பெற்று, அவன் பொறுப்பில் விட்டு விட்டு கண்டு நிறையப் பார்த்து பூரிக்க வேண்டுமென ஒரு காலத்தில் கனவு கண்டவள் அல்லவா அவள்.

இந்த வீட்டிற்கு இதன் வாரிசுகள் ஆடிக் களிக்கும் கொடுப்பினை இல்லை போலும்.

இப்படி ஊரார் குழந்தைகளின் பாதங்கள் பதியும் சுகம் மட்டும்தான்... குழந்தைகள் தங்களுக்குள் ஏதோ 'கிசுகிசு'வெனப் பேசின.

"என்ன - எங்கிட்ட சொல்லக் கூடாதா குட்டிகளா?"

"ம்ம் - உங்களை நாங்க முன்னாடியே பாத்திருக்கமே.!" - செல்லமாய் பீற்றின.

"அடடே, எப்போ...? எங்கே?"

"மாறன் சார் அறையிலே..."

"அ... என்னது?"

"நிஜமாயில்ல... போட்டோவில..."

அவளுக்கு ஒரு கணம் மூச்சடைத்தது.

"என் போட்டோ அவர் ரூமிலே இருக்குதா?"

"ம்ம் - அழகா ரெட்டை சடை போட்டுகிட்டு சிரிப்பீங்க."

ஒரு நிமிடம் சிந்தனையற்ற வெறுமை - பின் அலையலையாய் பல யோசனைகள். அப்படியானால் மாறனுக்கு தன் மீது இன்னும் பிரியம் உண்டு. அமுதை நெஞ்சிற்குள் சாரலாய் இறக்கியது இந்த எண்ணம். ஆனால் அந்தப் பிரியம் காதல் அல்ல... பாசம் - அப்படித்தானே சொல்கிறான் மாறன்?

அதை அவளால் முழுதுமாய் ஏற்க முடியவில்லை. அவள் 'அண்ணா' என்று வாயார அவனைக் கூப்பிட்டதில்லையே என்றும்? ஆண்டுகணக்கில் மனதில் ஊறித் தேங்கிய காதலை, கனவுகளை ஒரே புரட்டலில் நிறம் மாற்றி விட முடியுமா? வளர்பிறையாய் வளர்ந்த கனவுகள் ஒரே நொடியில் கருக்கி விடக் கூடுமா?

பள்ளி மணி ஒலிக்க குழந்தைகள் ஓடி விட்டன. தன் அறையை நோக்கி நடந்தாள் - சற்று தனிமை அவசியம். ஆனால் நடந்து போகையில் வீட்டை நோட்டமிடாமல் இருக்க முடியவில்லை. வந்த நாள் அன்று ஆட்களை சந்திப்பதில், முக்கியமாய் மாறனைப் பார்ப்பதில் மூழ்கியிருந்த மனது... பிறவற்றைக் கவனிக்கவில்லை.

இப்போதுதான் வீட்டை நிதானித்தாள் - மிக சுத்தமான பராமரிப்பு - நல்ல செல்வ செழிப்பு. சுவர்கள் சமீபத்தில் வர்ண



மேற்றிக் கொண்டன போலும் - பளபளத்தன. திரைச்சீலைகள் மாறியிருந்தன - விலை உயர்ந்த ரகத் துணி. நல்ல வருமானம் இல்லாவிட்டால் எஸ்டேட் வீடுகள் இப்படியிருக்காது. மாறன் இல்லாமல் இந்த பண்ணையின் வருமானம் நல்லபடி இருக்க வாய்ப்பேயில்லை.

அப்பாவின் உயில் மாறனுக்கு பாதி சொத்தை உரிமையாக்கி யிருந்தது. வீடு மாயாவின் பேரில்தான். ஆனால் அவன் பாரபட்சம் காட்டாமல் அவளது பங்கான தோட்டம், வீடு இரண்டையுமே நன்கு பராமரித்திருந்தான்.

அன்றிரவு படுக்கும் முன் மாயா ஜன்னலருகே நின்று பசுமையான மலைக்காற்றை நெஞ்சு நிறைய இழுத்து நிறைத்தாள். இலக்கின்றி சுற்றிய அவளது பார்வை கூர்மையானது.

அதென்ன ஒரு கரிய நிழல்..?

யாரங்கே.?

அது... அவன்தான்... மாறன்தான்.

என்ன செய்கிறான் இந்நேரம்... இந்தக் குளிரில்? மிட்டி, சுட்டி அவனைச் சுற்றி வாலாட்டியபடி தொடர மெள்ள நடந்து கொண்டிருந்தான். அவன் மனதை இவளது வருகை மேலும் குழப்பி விட்டது போலும்.

ஏனோ... தன்னையும் தாயாக நின்று வளர்த்த செண்பகா அத்தையின் நினைவு வந்தது... பாரமான உணர்வு.

படுக்கை அருகே முழந்தாள் இட்டு பிரார்த்தனை செய்தாள். இது அவளின் நித்திய நியமம்.

பள்ளி, கல்லூரியில் கிறிஸ்தவ தோழிகளிடம் கண்டு கற்றுக் கொண்ட பழக்கம். அன்றைய நாளுக்காக ஆண்டவனிடம் நன்றி சொன்னவள், நல்ல பெலன், சுகம், ஆயுசு எல்லாமும் அவள் வேண்டிக் கொண்டது ஒருவனுக்காகத்தான் - அது மாறனுக்காக...!

## 12

கறுத்த பெண் மஞ்சள் தேய்த்துக் குளித்தது போல ஒரு 'மசமச'ப்புடன் விடிந்தது பொழுது.

முழிப்பு வந்த பிறகும் போர்வையை விலக்க மனதில்லை மாயாவிற்கு மாறி மாறி படுத்து சுகம் கண்டாள். முந்தைய நாள் இரவு மாறன் இருளில் நடந்தது நினைப்பு வந்தது.

வேலையில் குழப்பமா... அல்லது காதல் கலக்கமா - என்ன அவனுக்கு? அவன் மூன்று வருடங்களுக்கு முன்பு சொன்னதின்படி அவனுக்கு தன் மீது காதல் இல்லை... அப்படியானால் வேறு யார் மீதாகிலும் நோக்கமா?

இந்த சந்தேகத்திலேயே நேற்று அவன் மீது பொங்கிய பரிவு அத்தனையும் சட்டென மறைந்தது. கூடாது... நிச்சயம் கூடாது. தனக்கான பொக்கிஷமாய் நினைத்தவனை வேறு யார் கூடும் பங்கு போட அவளால் முடியாது.

இன்றும் அதே ஆங்காரம் உள்ளே பொங்குகிறது. அன்றும் கத்தினாள். "நீங்கள் என்னைத் தாரமாய் நினைக்க முடியாதுன்னா... வேறு யாரும் அந்த ஸ்தானத்துக்கு வரக் கூடாது... முடியாது."

"சரி வரலை" - அமைதியாய் ஒத்துக் கொண்டான். "என் கண்ணெதிரே நீங்க இந்த எஸ்டேட்டிலே வேறு பொண்ணு கூட வாழ்ந்திட முடியாது."

"சரி வேணாம்."

பிரிவிற்கு முன்னர் அவனுக்கு ஆர்ப்பாட்டமாய் உத்தர விட்டது இன்னும் தெளிவாக நினைவிருக்கிறது. தனக்குத் தந்த வாக்கிற்காகத்தான் இன்னும் அவன் திருமணம் செய்து கொள்ள வில்லையோ? அதனால்தான் இப்படி வாடிய பயிராய் திரிகிறானா?



இதயம் குற்ற உணர்வில் குத்தியது. ஆனால் அவனை வேறு பெண்ணுடன் இணைத்துப் பார்க்கும் திராணி தனக்கில்லையே. அந்நினைப்பில் கூட கண்களில் உப்பு நீர் ஊறுகிறதே.

நேற்றிரவு முழுமையான உறக்கமில்லை. இடையிடையே விழிப்பு தட்டி உருண்டிருந்தாள் - இப்போதைய அழுகையும் சேர, விழிகள் சிவந்திருந்தன.

குளிர் நீரால் முகத்தை நன்கு அலம்பிய பின்னும் கண்கள் தெளிவாகவில்லை. கூந்தலை சீவி, வாரிக்கட்டியபின் கீழே இறங்கினாள். டைப்ரைட்டரின் ஒலி குதிரைக் குளம்பொலி போலக் கேட்டது.

சீரான வேகம் - சரோஜா அத்தையாகத்தான் இருக்க வேண்டும். எந்தக் கடிதத்தையும் - ஏன் உறை மீதான முகவரியையும் கூட சின்னத்தை தட்டச்சு மூலம்தான் எழுதுவாள்.

"நொச்சு பிடிச்ச வேலையத்தை - கையால் எழுதிட வேண்டியதுதான?" என்றால் "என் கையெழுத்தைப் படிக்கிற சிரமம் மற்றவங்களுக்கு வேண்டாமேன்ற எண்ணம் - கோழிக் கிறுக்கலாய் எழுதுவேம்மா" என்ற பதில் வரும்.

அரவமில்லமல் சமையலறைக்குப் போய் காபி வாங்கிக் கொண்டாள். நாலு வாய் பருகுவதற்குள் தொலைபேசி அழைத்தது.

தனக்காகத்தானாய் இருக்கும் என்ற உள்ளுணர்வுடன் 'பேசி'யை எடுக்க, எதிர்பார்த்தது போல அரவிந்தன்தான்.

காலை உணவிற்காக மாறனும் அந்நேரம் அறைக்குள் நுழைய, மாயாவின் பேச்சில் துள்ளல் கூடியது. "ஏன் நேத்து போன் பண்ணலை - காத்துட்டேயிருந்தேன்.." குரலைப் பாகாய் உழைத்தாள்.

"-----"

"ம்ம் அதனால சரியாத் தூங்காமல் கண்ணும் கூட சிவந்திருக்குது-" இதைக் குரல் தாழ்த்தி சொன்னாள் என்றாலும் மாறனுக்குக் கேட்கும் அளவில் சொன்னாள்.

இரண்டு நிமிடங்கள் போல அரவிந்தன் பேசியதை, சிரிப்பும் போலி வெட்கமுமாய் கேட்டுக் கொண்டாள். "வரும் போது நான் சொன்னது நினைப்பிருக்கட்டும்" என்றபடி 'பேசி' இணைப்பை துண்டித்தாள்.

மேஜை முன் மாறன் அமைதியாய் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். இவளது சொச்ச காபி ஆறிப் போயிருந்தது.

"வேற காபி கொண்டு வரட்டாம்மா?"

"இல்லை பொன்னி - இட்லியே சாப்பிட்டுடறேன்."

தட்டை எடுத்து வைத்துக் கொண்டாள். "வேலைக்குக் கிளம்பியாச்சா?" - மாறனைக் கேட்டாள். அவனை 'அத்தான்' என்று அழைப்பதைத் தவிர்த்தாள் - மொட்டையான பேச்சுதான்.

"ஆமா மாயா. மேல்மலையிலிருந்து ஸ்ட்ராபரி பறிச்சு வந்திருக்காங்க - எடை போட்டு, அதற்கு அளவாய் சர்க்கரை, எசென்ஸ் தந்திட்டேன்னா, பழ ஜாம் தயாராகிடும்."

"ம்ம்..."

இவர்கள் பண்ணையின் 'ஜாம்'மிற்கு நல்ல பெயர். விற்பனை. இப்பழக் கூழ் செய்முறையும் கூட செண்பகாத்தைக் கற்றுத் தந்ததுதான்.

அத்தை சதா எதையேனும் அரைத்துக் கிளறியபடி இருப்பாள் - விதவிதமான ஊறுகாய் வகைகள், கஷாயம், தைலம் என்று. மருதாணியை கறிவேப்பிலையுடன் சேர்த்து அரைத்து, அடையாகத் தட்டி நிழலில் காய விடுவாள் - அதை எண்ணையோடு காய்ச்சி வைப்பதைத்தான் வீட்டில் எல்லோரும் தலைக்குத் தேய்ப்பது.

சீவியபின் யாருக்கும் சீப்போடு கொத்து முடி போகாது - பித்த நரை, பொடுகு தொல்லையும் கிடையாது.

தலைக்கு ஊற்றும் நாட்களுக்கான எண்ணை வேறு விதம். பொன்னை உருக்கிவிட்டது போல மின்னும் நல்லெண்ணையை காய்ச்சி, அதில் மிளகு, இரண்டு வற்றல் ஒரு வெற்றிலை எனச் சேர்த்து



ஆறியபின் அதைப் பரபரவென உச்சந்தலையில் தேய்த்து விடுவாள்.

ஒவ்வொரு மயிர்காலிலும் படும்படி விரல் நுனிகளால் தேய்த்து நுனி வரை நீவ, அது பரம சுகம்.!

கண்கள் செருக, தலைக் கொடுத்துக் கொண்டிருப்பாள் மாயா. குளித்த பிறகு தலை உலருவதற்குள் ஒரு கஷாயமும் வரும். மல்லியும் சுக்கும் கலந்த சுகந்த பானம்.

ஒரு நாளும் இவ்வீட்டில் யாரும் காய்ச்சல், ஜலதோஷம், தலைவலி என்று அரற்றியதில்லை. - அப்படியாகப்பட்ட கவனிப்பு!

நோவு ஆரம்பமானதுமே அத்தையிடம் போய் நின்று விட வேண்டும். ஒரு குளிகை அல்லது கஷாயம், அது போக பற்று அரைத்துப் போடப்படும். - அத்தோடு தீர்ந்தது வேதனை.

அம்மாவும் கூட செண்பகத்தை இங்கிருந்திருந்தால் தீர்க்க ஆயுளுடன் இருந்திருக்கக் வடும். வயிற்று வலியில் துடித்து அத்தனை இளவயதில் இறக்க நேர்ந்திருக்காதோ...?

மரணங்களை கஷாயங்கள் தடுக்கக் கூடுமா?

"வரேன் மாயா?"

"ஆ... ம்ம்.. சரி..."

இவர்களுக்குப் பரிமாறிவிட்டு மீண்டும் தன் தட்டச்சு வேலைக்குத் திரும்பினாள் சரோஜா-

"யம்மா - வண்ணான் வந்திருக்காப்பல' என்று அவளை அழைக்க நின்றான் வேணு.

"சின்னத்தை பள்ளி சம்பந்தமான வேலையில் இருக்காங்க... நான் வண்ணான் கணக்கு பாக்கறேன் வேணு - நோட்டை எடுத்து வா."

"ஐய... உங்களுக்கு ஏனுங்கம்மா சிரமம்."

"ம்ம்... சும்மா யிருப்பதுதான் சிரமம்."

அவன் காட்டிய இடத்திலிருந்து வண்ணான் குறிப்பு ஏட்டினை எடுத்து, பிரித்து வைக்கப்பட்டிருந்த துணிகளைச் சரி பார்த்தாள். வெகு சொற்ப, எளிய உடைகள்தான்.

மாறன், சரோ இருவருமே எளிமையான நபர்கள்.

துவாலை, படுக்கை விரிப்புகளில் சற்று பகட்டாகத் தெரிந்தவை இவள் பயன்படுத்துவதற்காய் இருக்கலாம்..

"அடடே... இந்த வேலையை நீ முடிச்சிட்டியாப்பா?"

"ஆமா சின்னத்தை - பொழுது நகரலை.."

"ஜாம் போடப் போறாங்க - விருப்பம்னா போய் நில்லேன் - அல்லது ஒரு வகுப்புக்கு நீ பாடம் எடுக்கலாம் இன்னைக்கு..?"

"டிரஸ் -டிஸைனிங்கும் ஃபாஷனும் சொல்லித் தரட்டுமா? - எனக்கு வெறென்னத் தெரியும்?"

"சிறு வகுப்புக்குக் கணக்கும் மொழிகளும் கற்றுத் தர விசேஷமமாய் படிக்கணுமா என்ன?"

"சரி. முதல்ல எந்த வகுப்புக்கு என்ன பாடம்னு ஒரு அட்டவணை போடுங்க. தயார் பண்ணிட்டு நாளையிலேருந்து டீச்சரம்மா... இல்லை இங்கே மிஸ்ஸியம்மாவா - ஆயிடறேன்.!"

"மிஸஸ் சந்திரன் ஒரு வாரமாய் லீவு - வெளியூர் போயிருக்காங்க - அவங்க வகுப்புகளை உனக்குத் தரேன்..."

"ஆங்... அவங்க மேஜருடைய மனைவியில்லையா? - எப்படி இருக்காங்கத்தை?"

"நல்லாயிருக்காங்க - அருமையான தம்பதி - வயசு கூடக் கூட துடிப்பும் கூடுது."

"ம்ஹூம்? அவங்க ஊரிலிருந்து வந்தப் பிறகு பக்கத்து எஸ்டேட் போய் அவங்களையும் பார்க்கணும்."

"பாரும்மா - ரெண்டு பேரும் உன்னை அடிக்கடி ரொம்பப் பிரியமாய் விசாரிப்பாங்க" தனக்கென்று சில வேலைகளை நிர்ணயம் செய்த பின் நாளும் பொழுதும் 'சரசர'வென நகர்ந்தன.



பாடம் எடுக்க, தோட்ட அமைப்பு, வீட்டு நிர்வாகம் என்று மும்முரமாகி விட்டாள் - மாறன் வந்து நின்றால் மட்டும் நெருடும்... தடுமாறுவாள். நெஞ்சத் தவிப்பை யாரால் முழுமையாய் மறைக்கக் கூடும். சிறுக சிறுக வளர்ந்து பூரணமான நிலவை சிதைத்த ஏமாற்றம் அத்தனை எளிதாய் மாறுமா?

அரவிந்தன் வர மேலும் தாமதமாகும் என்று விட்டான். கலைஞன் என்றால் வீட்டுக் கவலைகள் மரியாதையுடன் ஒதுங்கியா நிற்கின்றன? அவைகளையும் சமாளிக்கத்தானே வேண்டியிருக்கிறது...

அன்று தோட்டத்து மலர்களைக் கொய்து குவளைகளில் வெகு கலைநயத்துடன் வைத்துக் கொண்டிருந்தாள் மாயா.

சம்பங்கியும் ரோஜாவும் இணைந்து கண்களுக்கு மட்டுமல்லாமல் நாசிக்கும் வெகு இன்பம் தந்துக் கொண்டிருந்தன. அவற்றிக்குப் பின்னணியால் மெல்லிய பசுமையின் அஸ்பாரகஸ் இலைக் கொத்து.

கரும்பச்சை இலைகள் நடுவே வெள்ளை டெய்சிகளைச் செருக, அறையே 'பளீர்'ரென்றானது.

"மாயா..."

திடீரென வந்த அழைப்பில் விதிர்த்து போனாள் - கை உதறி மலர்களை தரைக்குத் தாவின. இருவருமே ஏகமாய் அவற்றை மீட்கக் குனிந்தனர். மாறனது உடல் வாசனையை முகர முடிந்த நெருக்கம். வினோதமாய் தொண்டையை அடைத்த உணர்வு. மௌனமாய் அவன் நீட்டிய மலர்களை வாங்கிக் கொண்டாள்.

முன்பு குரங்காய் கிளைக்குக் கிளை தாவி புதுப்பூக்களை, பாதி மலர்ந்த மொட்டாகப் பறித்து நீட்டுவான் அல்லது செண்பகாத்தையிடம் அவற்றைத் தந்து செண்டாகக் கட்டி இவள் சடை கொள்ளாமல் செருகி விடுவான்-

"போதும் அத்தான் - இப்படி கால்பந்து அளவிலேயா பூச்சூடுவாங்க?" சிணுங்குவாள் மாயா.

"இன்னும் உன் அழகுக்குக் கால்வாசி கூட வரலியே...ம்" மெய்யான வாஞ்சையுடன் பாராட்டு வரும்.

அவனா இவன்? அந்த நேச விழிகளின் துள்ளலும் சிரிப்பும் எங்கே...? நெஞ்சை அடைத்தது.

சுதாரித்துக் கொண்டு வாய் திறந்தாள் -

"என்னத்தான்?"

"உங்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்னு.."

"சொல்லுங்க."

"நா... நான் இங்கே இருக்கறது உனக்கு தொந்தரவு... சிரமமாய் தோணுச்சுன்னா... நான் போயிடறேன் - அதாவது அவர் ... அரவிந்தன் இங்கே வரும் போதாவது.."

குளிர் நீரை முகத்தில் வாரியடித்தாற் போல தெளிந்தாள். "அரவிந்தன் வருவதற்கும் நீங்க போறதுக்கும் என்ன சம்பந்தம்?" வெடுக்கென்று கேட்டாள்.

"இல்லை நீ என்னைப் பார்க்கும் போதெல்லாம் தடுமாறுறது.. கலங்கறது போல தோணுது... நானில்லைன்னா அவரோட நீ நிம்மதியாய்..."

"நல்ல கற்பனை. இந்த மூணு வருஷமும் நீங்க எம்மனசிலேயே இருக்கறதாய் நினைப்பா?"

தன் நெஞ்சைத் தளிர் விரல்களால் தொட்டுக் காட்டினாள். "இங்கே இப்ப அரவிந்தனைத் தவிர வேறெந்த ஆணுக்கும் இடமில்லை.... தடுமாற்றம் தவிப்பு, அவர் இங்கே என்னோட இல்லையேன்றதால இருக்கலாம் தவிர.. வேறில்லை..."

அலட்சியமாய் குலுங்கின மூங்கில் தோள்கள்.

"அப்ப சரி..." உணர்ச்சியற்ற முகத்துடன் விலகினான் அவன்.

**கா**லையிலேயே இப்படி அலங்காரமாய் உடுத்திக் கொள்வது மாயாவிற்கு விநோதமாய் இருந்தது.



அதுவும் ஒரு வாரமாய் இயற்கையும் எளிமையான இச்சிறு ஊரின் வாழ்விற்கு பழகின பிறகு பகட்டாய் உடுத்த கூச்சமாய் கூட இருந்தது. ஆனால் இது போட வேண்டிய வேஷம்-

இன்று அரவிந்தன் வரப் போகிறான் - அதற்கான அலங்காரம்.

முழங்காலை விட்டு சற்று நீண்ட கறுப்பு நீண்ட டைட்ஸ் அவளது வடிவான கால்களைக் கவ்வியிருந்தன. 'பளீர்' மஞ்சளில் சின்னஞ்சிறு மேலாடை அவளது மேலழகை மூடி முயன்று கொண்டிருந்தது. கூந்தலை 'பளபள'வென வாரி விரிய விட்டு மஞ்சள் ரோஜாவை மட்டும் காதோரம் செருகியிருந்தாள்.

உடைக்குத் தோதான முக ஒப்பனை. சரோஜா முன்னும் வேலைக்காரர்கள் முன்னும் இப்படிப் போய் நிற்பதா? நினைப்பே கூசியது - ஆனால் முன்பே போட்டு வைத்த திட்டம் இது - இப்போது பின்வாங்கக் கூடாது.

'ரெவ்லான்' கமகமப்புடன் கீழே இறங்கினாள். கருவிழிகள் படபடக்க 'காதலனு'க்காய் காத்திருக்கலானாள்!

சரியான நேரத்திற்கு கார் வாசலில் வந்து நின்றது. காரிலிருந்து இறங்கிய அரவிந்தனின் விழிகள் மாயாவைத் தேடி, கண்டுபிடித்து 'நான் நாடகத்துக்குத் தயார்' என்ற விதமாய் சிமிட்டின.

இவளுக்கும் சிரிப்பு வந்தது.

அதோடு பரிச்சயமான ஒரு நல்ல நண்பனைப் பார்த்த மகிழ்வும் சேர. 'தடதட' வென்று தாழ்வாரப் படிகளைத் தாவி கடந்து அவனிடமாய் ஓடினாள். விரித்த கைகளை அவன் தோளில் பதித்து எம்பி குதித்தாள்..

"எத்தனை நல்லாயிருக்குது உங்களைப் பார்க்கறது!"

"நல்ல வேளை அனு இங்கேயில்லை இதைப் பார்க்க" - அவன் குரல் தாழ்த்திச் சொல்ல இருவரும் குதூகலமாய் சிரித்தனர்.

"என் ஆள் இருக்காரே - இது அவருக்காக..."

"அதனாலத்தான் பொறுத்துக்கறேன்."

"போதுமே இடக்கு..."

ஒருவர் தோளில் மற்றவர் கை போட்டபடி வீட்டைத் திரும்பி பார்த்தனர் வாசலில் நின்றிருந்த மாறனைப் பார்த்த அரவிந்தன் 'கிசுகிசு'த்தான் -

"அவரா... ஜோராய் இருக்காரே...?"

"ம்ம்- வாங்க - அறிமுகப்படுத்தி வைக்கிறேன்."

அரவிந்தனது கைபற்றி வீட்டின் படியேறியவள் மாறன் முகத்தை ஊன்றி கவனித்தாள் - அதில் உணர்ச்சிகள் ஏதுமில்லை - மரியாதையான ஒரு புன்னகை மட்டும்தான். தான் சந்தேகப்பட்டது போல மாறனுக்கு தன் மீது அபிமானமிருந்தால் துளி பொறாமை, வருத்தம் தோன்றாதா?

'சரியான கல்லுளிமங்கன்' - பெருமூச்சுடன் சலித்தாள்.

## 13

இத்தனை நாள் கொட்டிலில் அடைபட்டு வெறும் வறட்டு வைக்கோலை மென்று வந்த மாட்டை பசும் புல்வெளியில் மேய விட்டது போலாகியது அரவிந்தனது நிலை!

ஒடுங்கிய நகர அடுக்கு மாடி வீட்டில், தன் தாய், தங்கையைப் பற்றி நூறுவிதக் கவலைகளோடு இத்தனை நாளாய் மல்லாடியவனுக்கு இந்த சூழல் அருமருந்தானது. ஆர்வமாய் சுற்றி வந்தான் - வயிறார சாப்பிட்டு, நிம்மதியாக உறங்கினான்.

மூன்று நாட்கள் காற்றாய் கழிந்தன - நான்காம் அதிகாலையில் அவனை எழுப்பியது மாயாதான். "ஓவியர் ஐயா, இதுவரை நீங்க அரைப்படம் கூட முடிக்கலை - ஆனா இந்த மூணு நாளில் நாலு கிலோ எடை கூடியிருப்பீங்க..."



"ஆங்... இதைச் சொல்ல எழுப்பணுமாக்கும்?"

போர்வைக்குள்ளேயே நீண்டு சோம்பலாய் புரண்டான்.

"பின்னே...?"

"சூடாய் ஒரு காபியும், கூடவே நாலு கொக்கோ பிஸ்கெட்டும் கொண்டு வந்திருந்தால்..."

"ஐயோ... அனு எண்ணி, அளந்து சாப்பிடுவாள் - அவளுக்கு இப்படி ஒரு ஜோடி!"

"ரொம்ப நன்றி மாயா" - எழுந்து கட்டிலில் உட்கார்ந்தவன் சொன்னான்.

"என்ன திடீர்னு..?"

"இயந்திரம் மாதிரி வரைஞ்சு தள்ளிட்டிருந்தேன். வரவர என் ஓவியங்களில் கலை, ஜீவன் வற்றுதோன்னு கூட எனக்கொரு சந்தேகம் - இப்ப கிடைச்சிருக்கிற மாற்றம், ஓய்வு என்னை புது மனுஷனாக்கியிருக்குது. 'ஓவரால்' பண்ணின கார் போல இனி வண்டி மக்கர் செய்யாம சில வருஷங்களுக்கு ஓடும்."

"நன்றி நவிலல் எல்லாம் சரி. ஆனா என் கதை கந்தலாயிடும் போலியே...?"

"புரியலியே..."

"நான் உங்களை அழைச்சது என் காதலனாய் நடிக்கவும் தான். காதலன் இப்படித்தான் நேரா நேரம் மூக்கு முட்ட சாப்பிட்டுட்டு காடு மேடெல்லாம் தனியாச் சுற்றுவாராக்கும்?"

"ஓ... அப்படி வர்ரீங்களா?"

"அது மட்டுமில்லை. சதா மாறனோட அரட்டையும் சிரிப்புமாய் கழிக்கறிங்க..."

"உன் மாறன் என்ன நல்ல மனுஷர் தெரியுமா - அசாத்திய உழைப்பு, புத்தி..."

"போதும். நாடகம் நேர்மாறாய் நடந்திட்டிருக்குது."

"உண்ட வீட்டுக்கு இரண்டகம் பண்ணக் கூடாதம்மா. மாறன் உன்மேல பிரியமும் அக்கறையும் உள்ளவர் - நல்ல மனுஷன்...'

"ஆனால், உங்களை இங்கே அழைச்சது நான்!"

"அட ஆமா...! சரி, என்னப் பண்ணனும் சொல்லு."

"ம்ப்ச்... தெரியாத மாதிரி நடிக்காதீங்க."

"தெரிஞ்ச பிறகும் நடிக்க முடியலை மாயா" - பெருமூச்சுடன் வந்தது பதில்.

கேள்வியாய் புருவங்களை நெரித்தாள்.

"என்ன... புரியற மாதிரி சொல்லுங்க..."

"நீ இந்த திட்டத்தைச் சொன்ன போது, உன் சொத்தை இங்கே இருப்பவங்க அபகரிக்க ஏதும் சதி பண்றாங்களோன்ற சந்தேகம் எனக்கும் அனுவுக்கும். பாதி சொத்தை உங்கப்பா மாறனுக்கு எழுதி வச்சிட்டார் - என்றாய் அதை முழுசாய் கொள்ளை அடிக்கத் திட்டம் போடறாங்களோன்ற ஐயம் - அதைத் தகர்க்கவும் உனக்குப் பக்க பலமாய் நாங்க உண்டுன்றதைக் காட்டவும்தான் நான் வந்தேன்.."

"அனால் இப்போ மாறன் பக்கம் சாய்ந்தாச்சு!"

"இல்லையில்லை - நீங்க எல்லாரும் ஒரே பக்கமாய் இருக்கணும்ங்கறது என் விருப்பம்."

மாயாவின் இளம் உதடுகள் துடித்தன.

"உன்னோடு சேர்ந்து இவங்களை ஒரு வழி பண்ணிடறதுதான் என் திட்டம். வந்த பிறகுதான் புரியுது - சரோஜாவிற்கு உன் மேலே உயிர் - மாறன் மிகக் கண்ணியமானவர்..."

"எனக்கு அவர்தான் கணவர்ரது சிறு வயதிலேயே பேசாமலேயே முடிவாக்கப்பட்ட சம்பந்தம் - திடீருன்னு ஒரு நாள் அது அப்பிடியில்லை... நீயும் நானும் நடக்க வேண்டியது வெவ்வெறு பாதையிலேங்கறதா கண்ணியம்? அதுவும் நான் யாருமில்லாத அனாதைங்கற நிலைமையிலே?



"மாறனுக்கும் உன்னையும் சரோஜாவையும் விட்டா யார் இருக்காங்க... சொல்லு?"

"மனசுக்குள்ளே என்ன இருக்குதோ?"

"அதைத்தான் நானும் சொல்றேன்.."

தலையணையை இழுத்து இடுக்கியபடி மும்முரமாய் பேசினான்.

"என்ன?"

"பாதி சொத்து இப்போ மாறனுடையது. அதுவே அவருக்கு ஒரு சுமையாய் கூட தோணலாம். 'இது நமக்கு உரியதில்லை - நம்ப தகப்பனார் சம்பாத்தியமில்லை'ங்கற உறுத்தல். மீதி சொத்துக்காகத் தான் பயல் இவளைக் கல்யாணம் செய்துக்கறாம்ப்பான்னு ஊர் பேசுமோன்ர குமைச்சல்..."

"எஸ்டேட் தனி உலகம் அரவிந்த்... ஊரை விட்டு ஒதுங்கியிருக்கோம்."

"ஆனால் மனுஷ நாக்கு, புத்தி எங்கேயும் ஒன்னுதான். இப்படி இருக்கலாமோன்னு என்னுடைய யூகம் இது. ஒரு கண்ணியமான ஆணுக்கு இது ஒரு அவஸ்தையான இக்கட்டு - அல்லது ரெண்டு பேரும் இப்படி கிணற்றுத் தவளையாய், தவளைக் கல்யாணம் செய்துக்காம வெளி உலகத்தைப் பார்த்த பிறகு முடிவு செய்யலாங்கற நோக்கமாயும்..."

"இது அடுத்த யூகமாக்கும்.?"

"சரி - இப்ப என்ன வேணும்? எதற்காக தேவியாரின் இந்த அதிகாலை விஜயம்?"

"பேசி பேசியே விடிஞ்சிருச்சு - காலார நடந்துட்டு வரலாம்னு நெனைச்சேன் - இனி வேணாம்."

"தப்பிச்சேன் - இன்று நான் வரைய ஆரம்பிக்கிறதாய் இருக்கேன்."

"அப்ப... நாளை போகலாம்."

"எங்கே?"

"டவுன் வரை... அல்லது இங்கேயே ஒரு பிக்னிக்?"

"உத்தரவு தேவி."

அவள் விருட்டென திரும்பி நடந்தாள் -

"என்ன மாயா... கோபமா?"

"இல்ல - காபி அனுப்பி வைக்கிறேன்."

"கொக்கோ பிஸ்கெட்டை மறந்திடாதே!"

கீழே போனால், சரோஜா எண்ணைக் கிண்ணத்தோடு காத்திருந்தாள்.

"உக்காரு மாயா - எண்ணை தேச்சுக்கோ..."

"ஐயோ... என்ன சின்னத்தை - அப்பப்போ ஹென்னா தடவி, ஊறின பிறகு குளிக்கறதைத் தவிர இதெல்லாம் ஏன்?"

"அதான் முடியெல்லாம் நிறம் மாறுதா? செண்பகக்கா இருக்கும் வரை கரிசிலாங்கண்ணி தைலம் தேச்சு கருநாகமாட்டம் வளர்த்து விட்டது - வந்தலை நாசம் பண்ணிக்காதம்மா..."

"எண்ணை வழிய விட்டு என்னை நாசம் பண்ணிடாதீங்க சின்னத்தை..."

"உடம்புக்கு நல்லதுப்பா உக்காரு..."

"காபி-?"

"இப்போ தண்ணி மட்டும் குடிச்சுக்கோ - "

"அவளுக்கு?"

"வேணுக்கிட்ட கொடுத்து அனுப்பிடறேன்.. உக்காருப்பா..."

அரை மனதுடன் அமர்ந்தாலும் எண்ணை 'குளுகுளு' வென்று மயிர்கால்களுக்குள் இறங்க வெகு இதமாயிருந்தது. தேய்த்து விட விட சுகத்தில் விழிகள் செருகின. கை கால்களின் சருமம் எண்ணையை உறிஞ்சிக் குடித்து விட்டு பளபளத்தன.



"ஊற்ற ஊற்ற உடம்பு அத்தனையையும் குடிக்குதே - அத்தனை வறட்சி." பேசியபடி முழு கிண்ணத்தையும் வழித்து தேய்த்து விட்டாள் சரோ.

ஒரு மணி நேரம் கழித்து குளித்து, தலை உலர்த்தி, சாப்பிட்டானதும் தூக்கம் அழுத்தியது - தூங்கினாள். எழுந்து முகம் கழுவியபோது கண்ணாடியில் தெரிந்தது தான்தானா? நம்ப முடியவில்லை - நாலு வயது குறைந்திருந்தது.

கண்ணாடியாய் திரண்ட கன்னங்களும், பளிங்கு கண்களுமாய் ஒரு இளம் முகம் -

மதிய உணவை ரசித்து இரண்டு பிடி அதிகமாகவே உண்டாள். நம் பாரம்பரிய பழக்க வழக்கங்கள் உடல், மனம் இரண்டுக்குமே ஏற்றவை ஆனால் அவசர யுகத்தில் அவற்றிற்கான நேரத்தைஒதுக்க முடியவில்லை மனிதனால்.

மதியம் இரு வகுப்புகள் எடுத்தாள். தலைமுடி இன்னும் தளர்வாய் முடிச்சிடப்பட்டிருந்தது. மாலை சீப்பும் கையும் சரோஜா மறுபடி வந்து விட்டாள்.

"உட்காரு மாயாம்மா - தலை பின்னி விடறேன்."

"ஐயையோ - மறுபடி எண்ணையா?"

"இல்லைப்பா - சிக்கெடுத்து இரட்டைப் பின்னலாய் இட்டுட்டா வசதியாய் இருக்கும் - எனக்கும் பழைய மாயாவைப் பார்க்க ஆசை..."

"அதையுந்தான் கெடுப்பானேன்?"

புன்னகையுடன் மகிழம்பூ மரத்தடியே உட்கார்ந்தாள். மின்னலாய் வகிடெடுத்து, 'வழவழ' வென்று பின்னலிட்டாள் சரோஜா. கருப்பபட்டாய் ஜோடி சடைகள் இரண்டிற்கும் பாலமாய் முல்லைச் சரம்.

"இப்பதான் பழைய மாயாப் பொண்ணு."

"ஹாய் மாயா - அற்புதமாய் இருக்கறே..."

வியந்தான் - அவனுடன் மணிமாறனும். ஆனால் அவன் முகம் வழக்கம் போல கருங்கல்லாய்... வெற்றுத்தாளாய்.

"மாறா - உனக்குப் பிடிச்ச அலங்காரம் - அக்கா இருக்கும் போது இப்படித்தானே மாயாவிற்கு பின்னி விடச் சொல்லுவே? பிடித்திழுக்க வாகாய் இருக்குதுன்னு காரணமும் சொல்லுவியே..."

"என்ன சித்தி நீங்க - மாயா வருத்தப்படுவா..."

"ஏ... என்ன?"

"அவளுடைய அரவிந்தனைப் பக்கத்திலே வச்சிட்டு நீங்க இப்படிப் பேசலாமா?" மாறன் முகம் அலுங்காமல் சொன்னான்.

மாயாவிற்குக் கோபம் வந்ததுதான் - ஆனால் காரணம்தான் வேறு!

அன்று மாலை மேஜர் சந்திரனும் அவர் மனைவியும் மாயாவைப் பார்க்க வந்து விட்டார்கள்.

அவள் பெங்களூர் போவதற்கு முந்தைய ஆண்டுதான், அடுத்த எஸ்டேட்டை அவர்கள் வாங்கி வந்திருந்தார்கள். இருவரும் பள்ளியில் ஈடுபாடு கொண்டிருந்ததால் பரிச்சயம் பலமாகியிருந்தது.

"இப்பத்தான், நீ வந்தபிறகுதாம்மா இந்த வீட்டிற்கே களை வந்திருக்குது" என்று வரவேற்ற மேஜர் இரண்டு சீட்டு கட்டுகளுடனேயே வந்திருந்தார். ஆர்ப்பாட்டமாய் அத்தனை பேரையும் விளையாட இழுத்து உட்கார வைத்தும் விட்டார்.

'ரம்மி' ஆட்டம் சற்று நேரத்தில் களை கட்டியது. தயக்கங்கள் விலகி, ஆட்டத்தின் வெற்றி ஒன்றே குறியாக, அத்தனை முகங்களிலும் ஒரு குதூகலமான உக்கிரம்.

இரட்டைச் சடையும் முல்லைச் சரமுமாய் மாயா பள்ளிச் சிறுமியாய் தோன்றினாள். சரோஜாவிற்கு பல ஆண்டுகளுக்கு முன்னே போய் விட்ட பிரமை.

மாயா ஜெயித்து, சிரித்த போது தற்செயலாய் அவள் பார்வை மாறனை உரசி, பின் விறைத்தது - ஏனிப்படி வெறிக்கிறான்...?



இவளை விழுங்கி விடுவது போல... தன் மனதில் பதித்து கொள்ள ஆவேசம் கொண்டவன் போல...?

அன்றிரவு அப்பார்வை அவளைத் தூங்க விடவில்லை.

மறுநாள் விடியலுடன் இவளும் தயாராகி விட்டாள் எடுத்து வைத்திருந்த கூடையில் விதவிதமாய் பலகாரம், பழரசங்கள்.

அரவிந்தனுக்காக வாசலில் பதித்திருந்த மாயாவின் விழிகள் சில நொடிகளில் அகன்று விரிந்தன.

சந்தன நிற பைஜாமா, ஜிப்பாவில் கழுத்தைச் சுற்றிய கருப்பு மப்ளரோடு தாழ்வாரப் படியிறங்கி வந்தது மணிமாறன்.

திடீரென குளிர் அதிகமானது போலத் தோன்ற நடுங்கினாள்...

"போகலாமா?"

"ஏ...எங்கே...?"

"பிக்னிக் போறதாய் அரவிந்தன் சொன்னார். இப்போ காலையிலே அரையிருட்டிலே எழுந்து தயாராகறப்போ கால் பிசகிடுச்சாம் - நல்ல வலின்றார் - 'மாயா காத்திருப்பா' - நீங்களாவது கூடப் போய் வாங்கன்னு... என்னைக் கேட்டுக் கொண்டார்..."

பனி தடவிய குளிர் தென்றலையும் மீறி அவளுக்குள் இப்போது கொதித்தது.

'இதென்ன சதி? தங்களை இணைக்க அரவிந்தனின் புது நாடகமா இது?' பல்லைக் கடித்தாள்.

"அப்ப... அவருக்குச் சரியான பிறகே போகலாம்... தவிர இப்போ நான் அவரைப் பார்க்கணும் - டாக்டருக்குச் சொல்லி விட்டாச்சா?"

"பயப்பட எதுவுமில்லை - தவிர அரவிந்தன் மறுபடி தூங்க ஆரம்பிச்சாச்சு... இது பிக்னிக்காய் வேண்டாம் - கொஞ்சம் தூரம் நடந்துட்டு வருவோமே... நான் உன்னோட கொஞ்சம் பேசணும் மாயா..."

பலகாரக் கூடையை எடுத்துக் கொண்டு அவன் நடக்க மாயா வேறு வழியின்றி பின் தொடர்ந்தாள்.

மிக அழகியக் காலைப் பொழுது. சப்தங்கள், தூது, புகை - என்று எதுவும் மாசுபடுத்தாத இயற்கை. ஆனால் மௌனமாய் அவனுடன் நடப்பது இம்சித்தது. வெட்டி விடலாம் என்பது போன்ற ஒரு கனமான திரை அவர்களைப் பிரித்திருப்பது போன்ற பிரமை.

சுனையை நெருங்கும் வரை இருவரும் பேசவில்லை. அவன் எட்டிற்கு ஈடாக நடந்தவளுக்கு மூச்சிரைத்தது.

"உட்காரு மாயா."

புல் சரிவில் அமர்ந்தாள். புல் நுனியின் பனித்துளிகள் அவளைச் சிலிர்க்கச் செய்தன.

பழச்சாறை குவளையில் ஊற்றி நீட்டினான்.

வறண்ட தொண்டைக்கு, பொறுமிய மனதிற்கு இது தேவைதான்.

ஒரே மூச்சில் குடித்து முடித்தாள்.

சுனையில் குவளையை அலசியவளை மாறன் முகம் பார்த்து கேட்டான்-

"நீயும் அரவிந்தனும் கல்யாணம் செய்துக்க முடிவு செய்திட்டீங்கன்ரது புரியுது மாயா... அவர் ஊருக்குப் போகும் முன் ஒரு நிச்சயதார்த்தம் போல வீட்டோட வச்சிடலாமா?"

அவன் கேட்க இவளுக்கு விக்கியது!

## 14

அவள் மாறனுடன் இங்கு தனியே அதிகாலை நேரம் வர நேர்ந்ததே எதிர்பாராதது என்றால், வந்த இடத்தில் அவன் கேட்ட கேள்வி அவளைக் குப்புறத் தள்ளியது-



அவளுக்கும் அரவிந்தனுக்கும் நிச்சயதார்த்தமா? அவர்கள் ஆரம்பித்த நாடகத்தில் மாறன் இப்படி ஒரு திருப்பத்தைக் கொண்டு வருவான் என்று எதிர்பார்க்கவி.லலையே!

"என்ன.... திடீர்னு இப்படி பேசறீங்க?" - மென்று முழுங்கினாள்.

"கல்யாண எண்ணத்தோடதான பழகறீங்க...?" - 'சுள்'ளென்று வந்தது மறுகேள்வி!

இவள் விழித்தாள்-

"சிட்டியிலே கல்யாணமில்லாமல் சேர்ந்து வாழற பழக்கம் வந்திடுச்சே.? நீங்களும்.?"

"இல்லை எனக்கு அந்த முறையிலே நம்பிக்கையில்லை." என்றாள் அழுந்த.

"நல்லது - சமூக நிர்பந்தத்தாலே சேர்ந்து வாழறது தப்புன்ராங்க - ஆனால் எந்த உறவிலேயும் சுகம், துக்கம் ரெண்டும் வரும் - நிர்பந்தம் இல்லாது போனால், கஷ்டமான நேரத்தில சுழண்டுக்கலாம் - ஆனா உறவு அர்த்தமற்று போகும் - ஆழமில்லாம ஓடும்..."

"கல்யாணத்துக்கு இப்ப அவசரமில்லைன்னுதான் சொல்ல வந்தேன்.."

"நல்ல காரியங்களைத் தள்ளிப் போட வேணாமே." சுழித்து ஓடிய சுனை நீரைப் பார்த்தபடி பேசினான்.

முரண்டு பிடித்து விஷயத்தைச் சிக்கலாக்கி விடக் கூடாது - ஆக ஜாக்கிரதையாய் பேசினாள்-

"வந்து... அவர்... அரவிந்தன் வீட்டில் பல பிரச்சனைகள் - அவர் அம்மாவுக்குப் பக்கவாதம்..."

"சொன்னார் - வீட்டைப் பொறுப்பாய் கவனிக்க மருமகள் வந்தா பெரியவங்களுக்கும் வசதிதானே?"

"அவர்... தங்கச்சிக்கு வாய்த்த கணவன் சரியில்லை. 'இன்னும் தா தா'ங்கற ரகம் - அவன் கேட்கிற லட்ச ரூபாய்க்காகத்தான இப்போ இவர் படம் வரையறார்."

"உங்களுக்கிடையே உள்ள அன்பு கெட்டின்னா காசு விவகாரம் ஒரு பொருட்டேயில்லை மாயா. உன் பெயரில் வங்கியில் பல லட்சங்கள் டெபாசிட் ஆகியிருக்குது. சீக்கிரமே உன் சொத்து, பண விவகாரங்களை உனக்குத் தெளிவாக்கிடறேன் - அது தவிர பல லட்சங்களை வேறு வகையிலும் முதலீடு செய்திருக்கேன் - ஆக பணம் பிரச்சனையில்லை. தவிர - என் பணம், சொத்து உனக்குப் பயன்படும்னாலும் எனக்கு சந்தோஷமே - நீ தேவையானதை எடுத்து பயன்படுத்திக்கலாம்."

சூடான எண்ணையில் இடப்பட்ட அப்பளம் சுருண்டு பொரிபடுவது போல, அவன் பேசப் பேச மனம் நெகிழ்ந்து விரிந்தது - இது என்மேல் உள்ள கரிசனையால் அல்லவா - என்ற இளகல்.

ஆனால் மறுபுறம் புத்தி எகிறியது.

'இவன் யார் -உன் கல்யாணம் பற்றி பேச? 'நானே உனக்குத்தான்' என்று நீ உருகி அர்ப்பணித்த போது - 'எனக்கு அந்தத் தகுதி இல்லை' என்று வெகு நாசூக்காய் உன்னை ஒதுக்கியவன்தானே மாறன்? - இப்போதென்ன 'திடீர்' கரிசனை' என்று சட்டம் பேசியது.

கண்களில் நீர் கொப்பளித்து விட்டது.

அதை மறைக்க வேண்டி குரலை கடுமையாக்கினாள். "பணம் மட்டுமே பிரச்சனை இல்லை. வீட்டிலே இத்தனை வியாதியும் வேதனையும் இருக்கறப்போ சந்தோஷ காரியம் பற்றி எப்படி பேச்செடுக்க என்ற நாகரீகம்தான். நினைச்சதை... நினைச்சப்போ பேசிட முடியுமா... எல்லாராலும்?"

கடைசி வார்த்தையைக் குத்தலாய் அழுத்தினாள்.

"மன்னிச்சிடு மாயா - நீ முதன் முறையாய் உன் வாழ்வை அமைக்க நினைச்ச போதும் அது சரிவரலை... இப்போதும் இத்தனைத் தடங்கல்கள்..."

"முதல் கசப்பான அனுபவத்தை அதாவது நீங்க என்னை ஒதுக்கினதை நான் எப்பவோ மறந்தாச்சு.."



தன் வேதனையை மறைக்க அதிகமாகவே உதட்டைச் சுழித்தாள்.

"அப்ப ஏன் மாயா நீ இங்கே... எஸ்டேட்டிற்கு வரலை - அத்தனை பேரையும் ஒதுக்கித் தள்ளினே?"

"சுதந்திரம் கிடைச்ச கிளி ஏன் மறுபடி கூண்டுக்குத் திரும்பறதில்லைன்னு கேக்கறீங்க.?" - கேலியாய் புருவம் உயர்ந்தது.

"இது கூண்டு இல்லை.... உன் கூடு - அன்பான வீடு."

"வெளி உலகத்திற்கு போனால்-- அங்கேயும் அன்பு கிடைக்கும்ங்கறது புரிஞ்சு போறது - அரவிந்தனின் அன்பு எனக்கு அப்படிக் கிடைச்சதுதானே...?

பேசும் போதே மூன்று வருடங்களுக்கு முன்பு இவர்கள் இருவரும் இப்படித் தனிமையில் பேசிய நினைப்பு முள்ளாய் குத்தியது.

தன் அன்பை மாறன் இவளுக்கு அன்று மறுத்தானே? அத்தான் தனக்கில்லை என்பதை உணர்ந்த முதல் அதிர்ச்சி என்று மறக்காது ... இதயம் கிழிந்து பிழிபட்ட ரண உணர்வு - ஆறாது - மறக்காது. இனி யாரையும் தன்னவனாக ஏற்காது - எல்லாம் போக, 'நடந்தவை எல்லாம் நன்மைக்கே' என்பது போல பொய் வேறு சொல்ல வேண்டியிருக்கிறது.

"அப்பா, அம்மா, அத்தை என்று யாருமில்லை. உன்னைத் தேற்ற, உன் மனதை மாற்ற சரோஜா சித்தி இங்கு இருந்திருந்தால் கூட அன்று நீ வீட்டை விட்டுப் போய் விட வேண்டுமென்ற அவசர முடிவை எடுத்திருக்கமாட்டாய்..." நினைவுகள் மேலும் கிளர்ந்தன.

அன்று அஸ்வினி சித்தியைக் கட்டிக் கொண்டு அழுததும், அந்நேரம் சித்தி முகத்தில் விரிந்த அந்த விகார சிரிப்பையும் இப்போதும் மறக்க முடியவில்லை... யம்மா நினைத்தாலே உடம்பு சிலிர்க்கிறதே!

“ம்ம்... சித்தி தீயிலே மேலும் எண்ணை விட்டுட்டாங்க..” முணங்கத்தான் செய்தாள் - ஆனால் உன்னிப்பாய் கவனித்தவனுக்கு அது கேட்டு விட்டது.

“எப்படி என்னாங்க உங்க சித்தி?” பார்வை கூர்மையாய் துளைத்தது.

“நம்ப பிரிவு அவங்களுக்கு சந்தோஷம் தந்ததுன்னு நினைக்கறேன்... வழக்கமாய் உணர்வுகளைக் காட்டாத அவன் குரலிலும் பதட்டம்-

“ஏன்... அப்படிச் சொல்றே?”

“ம்ம்..? சிரிச்சாங்க. சிரிப்புன்ன முடியாது அதை - கொடூரமான இளிப்பு... ஆங்காரமான ஆனந்தம்...”

கனவில் பேசுவது போல முணங்கியவள் சுதாரித்துக் கொண்டாள். “இப்போ அந்தக் கதையெல்லாம் எதுக்கு?”

“உன் அப்பா, அதாவது மாமா என்னை எங்க பொறுப்பிலே விட்டுட்டுப் போனார் மாயா - நீயோ அத்தனையையும் உதறிட்டு வெளி மாகாணம் போய் படிக்க தங்கிட்டே. யாரும் உன்கூட தொடர்பு கொள்ளக் கூடாதுன்னு பெரிய அதிர்ச்சி - அவமானமும் கூட. என் கடமையிலே நான் தவறிட்டேங்கற குற்ற உணர்ச்சி.” என்னைக் கொல்லுது..”

அவனது வருத்தம் மாயாவிற்கு ஆறுதலாய் இருந்ததே ஒழிய, சித்தியைப் போல ஆனந்தமாய் கொக்கரிக்க வேண்டுமெனத் தோன்றவில்லை.

“மூணு வருஷத்திலே நம் வாழ்க்கைகளிலே எத்தனை மாற்றங்கள்... சித்தி உயிரோடவே இல்லை...”

“அவங்க... நீ அழுகையிலே சிரிச்சாங்க என்றா சொன்னே?”

“ஆமாத்தான் - வெளிப்படையாய், என் முகத்துக்கு எதிலே இல்லை. ஹாலில் எதிர் எதிராய் இரண்டு நிலைக் கண்ணாடிகள் தொங்குமே - இரட்டைப் பிரதிபலிப்பிலே என் முதுகுப்புறம் இருந்த



அவங்க முகம் எனக்கு கண்ணாடியிலே தெரிஞ்சிடுச்சு. அவங்களால அந்தக் களிப்பை மறைக்க முடியலை...”

“ஒரே வீட்டிலே உடன்பிறந்தவங்க போல வளர்ந்தவங்க நாம... நாம் தம்பதிகளாய் மாறுவதிலே அவங்களுக்கு உடன்பாடு இருந்திருக்காது.”

“இல்லை- இது வேற ஒரு உணர்வு... எரிச்சலா?... ஒரு தப்பான வெற்றியின் களிப்பா? இப்பவும் எனக்குச் சரியாய் புரியலை - ஆனால் பயங்கரமாய் இருந்துச்சு. தவிர நாம அண்ணன் தங்கையாய் பழகலையே? அப்பா ஆரம்பம் முதலே உங்களை அத்தான்னு அழைக்கத்தான் சொன்னார் - நீங்க இந்த வீட்டுக்கு வரும் போதே 16 வயசைத் தாண்டியாச்சு - அப்படியொன்னும் நாம தவழ்ந்து, சேர்ந்து வளரலை... ஆகன என்ன முறைக்கேடு?”

அவள் சற்று சூடாகவே கேட்டாள்.

“நான் உனக்குத் தகுதியில்லை மாயா - அப்பவும் இப்பவும் அதையேத்தான் சொல்றேன். அரவிந்தன் உனக்கு ஏற்ற துணை - நீயே தேர்ந்தெடுத்த நல்லவர்.... எல்லாத்தையும் விட நீ இப்போ மறுபடி வீடு வந்து சேர்ந்தது எங்களுக்கு சந்தோஷம்.”

நீள பெருமூச்சு விடத்தான் முடிந்தது அவளால்.

பலகாரங்கள் எதையும் சாப்பிடவில்லை - திரும்ப எடுத்துப் போன பிக்னிக் பை கனமாகவேத்தான் இருந்தது அவர்களின் இதயங்களைப் போல.

மௌனமாய் நடந்து திம்பிய இவர்களைக் கண்ட நாய்கள் சாமரமாய் வாலாட்டின.

‘எங்களை விட்டுட்டாப் போவது?’ என்ற பாவனையில் கோபமாய் குரைத்தன.

“சரிடா... அடுத்த முறை உங்களையும் பிக்னிக்கிலே சேர்த்துக்கறோம்” - பேசித் தடவி சமாதானப்படுத்தினான்-

இவர்கள் இணையாய் வீடு புகுவதைப் பார்த்த சரோஜாவின் முகம் ஏகமாய் மலர்ந்தது. தட்டெழுத்து இயந்திரத்தில் எதையோ எழுதிக் கொண்டிருந்தவள் அதைத் தள்ளிவிட்டு எழுந்தாள்.

"சாப்பிடறீங்களா - இல்லைக் காபி கலக்கவா?"

"எங்களுக்கு எதுக்கு சித்தி இத்தனை உபசரணை? குளிச்சிட்டு வந்துடறேனே?"

"அதுக்கு முன்னே பள்ளித் தோட்டத்துப் பக்கம் ஒரு நிமிஷம் போய் பார்த்து வாங்களேன்."

"என்ன அங்கே?"

"பார்த்துட்டு வாங்களேன்."

சரோஜா முகத்தில் இத்தனை அகன்ற சிரிப்பை அடிக்கடி பார்க்க முடியாது என்பதால் இருவரும் உடனே தோட்டத்து பக்கம் நடந்தனர். குழந்தைகளின் ஆரவாரம் சற்று அதிகமாகவே கேட்டது.

காலை எட்டுக்கெல்லாம் பிள்ளைகள் பள்ளி வந்து விடுவது வாடிக்கைதான். பேச்சும் சிரிப்பும் கூட புதிதில்லை - ஆனால் இன்று அங்கு கண்ட காட்சி புதியது.

அதுவரை தங்களிடையே எழுந்த கசப்பை மறந்து இவர்கள் இருவரையும் புன்னகைக்கச் செய்தது. பாதிக் குழந்தைகள் ஓவியக் கலையைக் 'கரைத்துப்' புரிந்து கொண்டிருக்க மீதி வாண்டு கோஷ்டி தண்ணீரும் தரையுடனும் ஐக்கியப்பட்டிருந்தனர். அவர்களை மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த அரவிந்தன் இவர்களைப் கண்டதும் அகலச் சிரித்தான்.

"தூரிகை தொட்டெழுதாச்

சித்திரம் என நின்றிருக்கும்

காரிகை -

மோகன மணிமேனகை...

மாயா தேவி வருக" என்று பவ்யமாய் வணங்கினான்.

"எல்லாமே புதுசாய் இருக்குது - கவிதை உள்பட!"

"நேத்து 'விகடன்'ல வாலி கவிதை வாசிச்சேன் - அதிலேருந்து..."



"திருட்டாக்கும்? சிரிப்புடன் குழந்தைகளை நெருங்கினாள் - "அடடே என்ன குட்டீங்களா? வந்தவுடனேயே இப்படி சாயமும் சகதியுமாய்?"

"சரோ மிஸ் சரின்னுட்டாங்களே."

"என்னத்துக்கு சரி?"

"தோட்டம் போடத்தான் - இதோ, இதெல்லாம் கீரை விதை - அப்புறம் இது பூச்செடி - நாங்களே கொத்தினோம்..."

"இப்போ பாத்தி கட்டறோம்."

"தினம் தண்ணி விடணும் - களை பிடுங்கணும்னார் சார்..."

"என்ன அரவிந்த் இது?"

"தோட்டம் போடறது அருமையான கலை மாயா - ஒன்றை உருவாக்கும் திருப்தியைத் தரும் விஷயம் - சின்ன தளிருக்காய் ஆசையாய் காத்திருக்கிறதும் ; அதைப் பாதுகாக்கறதும் குஷியான சமாச்சாரங்கள்."

"அது சரி - இதென்ன?"

"ஓவியம் மிஸ்."

"பிள்ளைங்க கிட்ட விலையுயர்ந்த கான்வாஸ், தூரிகை எல்லாம் தரலாமா அரவிந்த் - பாழாயிடாது?"

"பார்த்து பார்த்து போடற சிலதே பாழாயிடுது - இதுக எத்தனை உற்சாகமாய் அள்ளி அப்புது பாரு! என்னா கற்பனைத் திறம்... கலக்கலான வர்ணசேர்க்கை...!

"பிள்ளைங்க முகத்திலே கூட நிறைய வர்ணம் சேர்ந்திருக்கு?"

"கழுவினால் போயிரும்."

அதன் பிறகு அரவிந்தன் இவர்களைக் கண்டு கொள்ளவில்லை - குழந்தைகளோடு முழு மூச்சாய் 'ஆக்க' வேலையில் ஆழ்ந்து போனான்.

தன் அறைக்குப் போன மாயாவிற்கு அழுவதா சிரிப்பதா என்றே புரியவில்லை. தன் காதலனாய் நடிக்க சம்மதித்து வந்த

அரவிந்தன் அதைத் தவிர மற்ற அனைத்தையும் கிரமமாய் செய்கிறான்! சின்னத்தை மாறனிடம் நல்ல பெயர் வாங்கியாயிற்று. பள்ளிப் பிள்ளைகளுக்குப் புது பாடம் போக அவன் ஓவிய வேலையும் நன்றாகவே நடக்கிறது.

பிறர் முன் ஒரு 15 நிமிடங்களுடன் தன் 'காதலி'யுடன் அன்பாய் பேசத்தான் பொழுதில்லை...! இதில் மாறன் வேறு நிச்சயதார்த்தம் பற்றி பேசுகிறான்..

குளித்து முடித்தாள் - இப்படி கண்டதையும் யோசித்தபடி நாளைக் கழிக்க முடியாது - இன்று அவளுமே ஒரு வகுப்பிற்கு பாடம் எடுக்க வேண்டும். பிற ஆசிரியர்களுடன் சேர்ந்து பழகுவதும் நல்ல மாற்றம்தான் - தேவையான புத்தகங்களோடு அவள் படியிறங்கும்போது வழியிலேயே அரவிந்தன் - மறித்தாற்போல நின்றான்!

"வாங்க... ஸர் வாங்க."

இடுப்பில் கை வைத்து அதட்டியவளைப் பார்த்து அசடாய் சிரித்தான்.

"ஹி ஹி - எப்படியிருந்தது உங்க பிக்னிக்..?"

"எப்படியிருக்குது உங்கக் காலு..."

"ஸ்ஸ்... ஆ.. கொஞ்சம் தேவலை..."

"அதாவது இத்தனை நேரம் பிள்ளைகளுடன் ஆட்டம் போட்டபிறகு கொஞ்சம் பரவாயில்லை அப்படித்தானே?"

"அ..அ. அப்படியேத்தான்."

"இப்படி புளுகாதீங்க அரவிந்த்" - சிடுசிடுத்தாள்.

"புளுகுதான் நீயும் மாறன் பேசணுங்கறதுக்காய் ஒரு சின்ன பொய் சமர்த்துப் பொய்!"

"அதனால் ஆனது ஏதுமில்லை."

"பாரு மாயா - மாறன் சராசரி ஆளில்லை. பக்குவப்பட்ட. பண்பான மனுஷன். உன்னைக் கல்யாணம் செய்துக்க மறுத்ததுக்கு



தக்க காரணம் இருக்கணும் - நீ அதைப் பேசி புரிஞ்சிக்கணும்... தெளியணும்னுதான் நான் என் காலின் மேல் பழி போட்டு ஒதுங்கினேன்..."

"மாயாம்மா சாப்பிட வர்ரியா?" - சின்னத்தையின் குரலில் இவள் ஒரு வழியாய் அரவிந்தனை விட்டாள்.

சாப்பிடும்போதும் ஏதேதோ நினைப்பு...

மாறன் அவளும் பேசினார்கள்தான் - ஆனால் ஏதும் புரிந்ததா... தெளிந்ததா? அஸ்வினி சித்தியின் சிரிப்பு பற்றி பேசியபோது மாறன் பதட்டமானான்.. சின்னத்தை கூட அன்று சித்தி பற்றி ஏதோ சொன்னார்களே? ஏதோ மன்னிப்புக் கேட்டதாக...? மறுபடி மறக்கும் முன் அது பற்றி சரோத்தையிடம் கேட்டு விட வேண்டும்.

தோசையைப் பிய்த்து நெய் மணத்த சாம்பாரில் தோய்த்து வாயிலிட்டவள் கேட்டாள் -

"சாகும் முன்னர் அஸ்வினி சித்தி உங்க கிட்ட ஏதோ சொன்னதாய் சொன்னீங்களே... என்னத்தை அது?"

## 15

நெய் தடவிய தோசை வெகு சுலபமாய் உள்ளிறங்கியது.

"சாகும் முன்னே அஸ்வினி சித்தி உங்ககிட்ட ஏதோ சொன்னாங்களீங்க... என்னத்தை அது?" - கேட்டு விட்டு பதிலுக்காய் காதைத் தீட்டியபடி காத்திருந்தாள் மாயா.

சரோஜா மெள்ள புன்னகைத்தாள்.

"உனக்கு எள்ளுப் பொடி பிடிக்குமேன்னு அரைச்சது - எடுத்துக்கோ.."

"முதல்ல விஷயத்தைச் சொல்லுங்க."

"சொல்றேன் - ஆனால் அது நீ எதிர்பார்க்கறது போல ஏதுமில்லை - தோசை எடுத்துக்கோம்மா."

"ஐயோ... சொல்லுங்க..."

"மேலே முக்கு ரூம் இருக்குதே...?"

"அதாவது பரண் வச்ச சின்ன அறை?"

"ம்ம்... அந்தப் பரணிலே பழைய டிரங்க் பெட்டி ஒன்னு இருக்கும் அதைச் சுத்தம் செய்திடுன்னாங்க."

இருவரும் ஒரு விநாடி மற்றவரைப் பார்த்திருந்துவிட்டு 'பக்'கென சிரித்தனர்.

"ஆக சித்தி கடைசி வரை மாறலை - வழக்கம்போல உங்களை வேலை ஏவியிருக்காங்க!"

அஸ்வினி துரும்பை நகர்த்தாத ரகம். அலங்காரம் முடித்து, ஒயிலாய் ஓரிடத்தில் உட்கார்ந்தாள் உட்கார்ந்ததுதான். எழ யோசிப்பாள். கையில் பேருக்கு ஒரு பூவேலைத் துணி. ஆனால் அதை முழுசாய் முடித்து யாரும் பார்த்ததில்லை. சினிமா பாட்டுப் புத்தகங்களும் படப் பத்திரிகைகளும் தான் நைந்து போகுமளவு முழுமையாய் உபயோகப்பட்டிருக்கும்.

"ராணி ஒரு கப் காபி கொண்டா."

"வேணி, பந்தல் பூ அத்தனையும் பறிச்சு, கூடவே தொடுக்கத் தோதாய் நாரும் கிழிச்சு தந்திடு - தொடுத்தடறேன்."

"நேத்துக் குழம்பு வாயில வைக்க விளங்கலை - ராணியைக் கொஞ்சம் ருசியாவே சமைக்கச் சொல்லு, சரோஜா." "யாரு இன்னைக்கு டவுனுக்குப் போறது? எனக்கு வேண்டிய சாமானுங்க பட்டியலை, அதோ அந்த முக்காலியிலே வச்சிருக்கேன்-ஒன்னு விடாம வாங்கியந்திடணும்."

இப்படிப் பிறரை ஏவியே தன்னை சௌகர்யமாக்கும் குணம். அதற்குத் தோதாய் வீடும் அமைந்து விட - ராஜ வாழ்க்கைதான்.



ஆனால் அப்பாதான் அவள் இஷ்டத்திற்கு வளையவில்லை. ஆக கடைசியிலும் ஏதோ உத்தரவிட்டுப் போய் விட்டாள் மகராசி!

"டிரங்கைத் திறந்தீங்களா அத்தை - ஏதும் இருந்துச்சா?"

"சில சின்ன, பழைய வெள்ளிப் பாத்திரங்க - அத்தனையும் மெருகேற்றி ஒரு கற்பூர வில்லையோடு பூட்டி வச்சேன்.."

"எதுக்கு கற்பூரம்?"

"வெள்ளிக் கருக்காது - கூடவே ஏதோ காகிதக் கட்டும் இருந்தது - பழைய புகைப்படம் ஒன்னும்..."

"யாரோடது?"

"செண்பகாக்காவுடைய கல்யாணப் படம் - அதையும் ஒரு துணியிலே சுத்தி பத்திரமா உள்ளேயே வச்சிருக்கேன்."

"போய் பார்க்கலாமா அத்தை?"

கை கழுவிக் கொண்டாள்.

இருவரும் ஒடுங்கிய மாடிப்படிகளில் ஏறிய போது ஒரு இனம் புரியாத திகிலை உணர்ந்தனர். அதைக் கலைக்க பேச்செடுத்தாள் -

"செண்பகாத்தை கல்யாண படத்தை நாம யாரும் பார்த்ததே இல்லை ... இல்லையா?"

"அக்கா யாருக்கும் காட்டினதில்லை. தன் கல்யாண வாழ்க்கையைப் பற்றிப் பேசினதில்லை. மாறன்கிட்ட கூட 'உங்கப்பா இப்படி, அவருக்கு இது பிடிக்கும்'னு பேச மாட்டாங்க."

"ம்ம்...? அதுக்கு ரெண்டு காரணம் இருக்கலாம். ஒன்னு புருஷனை ரொம்ப போற்றி நேசிச்சிருக்கணும் - அவர் பேச்செடுத்தாலும் அழுதுடுவோமோன்ர ஆற்றாமை. இல்லை... கடந்த காலத்தை நினைக்கவே அஞ்சற அளவு வெறுப்பு..."

சாவி செருகி கதவைத் திறந்தாள் சரோஜா. அவ்வப்போது தூசு தட்டி, பெருக்கியிருந்தாலும் காற்றோட்டமின்றி அடைந்து கிடந்த அறையில் புழுக்க நெடி. சன்னல்களில் இறக்கைகளைப் பிரித்து விட, காற்று பாய்ந்து நுழைந்தது - கூடவே பளட'ளவென்று சூரிய ஒளியும்.

பழைய இரும்பு கட்டிகளும், பெரிய மர அலமாரியும் அடைந்திருந்தன. மறுபுறப் பரணில் அண்டா குண்டாக்கள்.

அலமாரி மீது இரு டிரங்க் பெட்டிகள்.

"ரெண்டு இருக்குதே சின்னத்தை?"

"ஆ... மேலாய் இருக்கற நீலப் பெட்டி."

"நீலப் பெட்டின்னாங்களா?"

"ஆமாப்பா - அடுத்ததிலே வெறும் உடைஞ்ச சாமான்களும். பிசுக்கேறிய கண்ணாடி வளையல்களுந்தான் - அதை எல்லாம் ஒழிச்சுட்டேன்."

பெட்டியைத் திறந்ததும் 'கம்' மென்ற கற்பூர வாசனை கமழ்ந்தது. மஸ்லின் துணியில் சுற்றப்பட்டிருந்த புகைப்படத்தை முதலில் பிரித்தாள் மாயா. அது முப்பது ஆண்டுகளுக்கு முந்திய கல்யாண படம். அட்டையின் ஓரங்களைப் பூச்சி கருமியிருந்தது. மங்கிய படத்தை அரை நிமிடம் ஊன்றி பார்த்தவள் புன்னகைத்தாள்.

ஒடித்து விடலாம் போன்ற இடுப்பும் அச்சப் பார்வையுமாய்... செண்பகா அத்தை! அத்தைக்குப் பூஞ்சை தேகம்தான் என்றாலும் இது அநியாய ஒல்லி! ஆனால் பதினைந்து வயதில் பல பெண் குழந்தைகள் இப்படித்தான் இருப்பார்கள். மாயாவின் பார்வை அத்தை அருகே விறைப்பாய் நின்ற இளைஞனைத் தொட்டு பின் வியந்தது...

"ஐயோ, அப்படியே மாறன் போலில்லை?"

"மகனைப் போல அப்பா இருக்கறதில் என்ன பெண்ணே அதிசயம்?" "ஆனாலும் இப்படியா அச்செடுத்து வார்த்தாப்போல? கண்ணும் பாவனையும்தான் வேற. மாறனத்தானுக்கு இப்படி விறைப்பாய் இல்லாம அத்தை மாதிரி கனிவான பார்வை.."

"ம்ம்... அக்கா புருஷன் கொஞ்சம் அல்டாப்பு பேர்வழியாய் இருந்திருக்கணும் - அதான் அவங்க அவரைப் பற்றி பேச்செடுக்கறதில்லை."



"இருக்கலாம் - அஸ்வினி சித்தி வேறென்ன சொன்னாங்க?"

"வேற... வேற சிலதும் சொன்னாங்க.. ஆனா அதுக்குள்ளே என் வாழ்வு திசை மாறிப் போச்சே..."

"புரியலியே சின்னத்தை."

"கீழே போய் பேசலாம் - வா."

"இதையெல்லாம் எடுத்துக்கறேனே - இது ஏதோ மெடிக்கல் ரிப்போர்ட்... அம்மா... அம்மாவின் பேர் எழுதியிருக்கே - அவங்க வயிற்று வலி பற்றிய மருத்துவ குறிப்புகள்-"

"எடுத்துக்கோப்பா."

"இந்த போட்டோ கூட..." பரபரப்பாய் அத்தனையையும் அள்ளி அணைத்த மாயாவை ஆழ்ந்து பார்த்து.

"உன்னிஷ்டம்" என்று பெருமூச்சு விட்டாள் சரோஜா. கற்பூரம் மணக்கும் துணியோடு அவைகளை அள்ளிய மாயாவிற்கு அவை தன் வாழ்வை முழுதுமாய் மாற்றக் கூடியவை என்பது அப்போது தெரியவில்லை!

அத்தனையையும் பூட்டி விட்டு கீழிறங்கினர். கீழே மதியச் சமையலின் வாசம் இவர்களை எட்டிப் பிடித்தது. தூரத்து அலையோசை போல வெளியே பள்ளிப் பிள்ளைகளின் ஆரவாரம்.

குளிர் சாதனப் பெட்டியிலிருந்து மாதுளம் பழரசத்தை இருவருக்குமாய் கண்ணாடி குவளைகளில் வார்த்து எடுத்து வந்தாள் சரோ.

"ஹா..! நம்ம ஊர் மாதுளம் சாறுக்குத்தான் இப்படி சிவப்பு நிறம் - மாணிக்கம் போல..."

'சட்'டென உடம்பு உதற தடுமாறினாள் சரோஜா.

"என்ன... சின்னத்தை..?"

"இல்லை... அதை உங்கிட்ட சொல்றதா வேண்டாமான்னு நா யோசிச்சேன் இப்ப சொல்லலாம்னு ஒரு சூசக உத்தரவு கிடைச்சாற் போல தோணுது."

"முழுசாச் சொன்னா புரியும்."

"ம்ம் - உனக்கும் மாறனுக்கும் இடையே பிரிவு நேர. அஸ்வினிம்மா காரணமான்னு முன்னே கேட்டேன்..."

"ஆமாம்..."

"நீ பதில் சொல்றதுக்குள்ளே ஏதோ இடையூறு நேர்ந்தது இப்ப பதில் சொல்லேன்."

"நீங்க ஏதோ சொல்றதாய் சொல்லிட்டு, இப்ப என்னை வாயைக் கிண்டறீங்களே" சுணங்கினாள் மாயா.

"எனக்கு அஸ்வினிம்மா செய்ததையேத்தான் உனக்கும் செய்திருப்பாங்கன்னு நினைக்கிறேன் மாயா - அந்த ஆற்றாமை... சரி முதல்ல நானே சொல்றேன்.."

விரல்களைக் கோர்த்துப் பிரித்தவள், செருமிக் கொண்டாள்.

"அவர்... அவர் பேர் மாணிக்கம்."

'யார் பேர்? ஓ அதான் நான் மாதுளம் பழச்சாறு மாணிக்கம் போலிருக்குதுன்னுதும் அதிர்ந்தீங்களா?' - என்றெல்லாம் கேட்கத் துடித்த நாவை அடக்கினாள் மாயா - இடையேப் புகுந்து கதை ஓட்டத்தைக் கெடுக்கக் கூடாது!

"எப்படி உங்கப்பா என்னைப் படிச்சு ஆளாக்கினாங்களோ, அதே போலத்தான் மாணிக்கத்தை டாக்டருக்கு படிக்க வச்சாங்க. அவர் அப்பா நம்ப எஸ்டேட் மேற்பார்வையாளராய் இருந்தவரு. மாணிக்கம் ஸ்கூல் முடிச்சதுமே ஐயா முன்னாடி கொண்டு வந்து நிறுத்திட்டாராம் அவங்கப்பா-

"ஐயா, இவன் எம்பையனுங்க - பேரு மாணிக்கம் படிப்பில புலி கணக்குல பிசகவே மாட்டான். ஐயாவுக்கு காலத்துக்கும் நல்ல கணக்குபுள்ள கிடைச்சாச்சுன்னு" ஒப்படைச்சாராம்.

"ம்ம்... இதெல்லாம் எப்போ நடந்தது?"

"இருவது வருஷத்துக்கு முந்தின கதைம்மா. பையன் மார்க் பட்டியலைப் பார்த்த ஐயா அசந்துட்டாங்களாம். மாவட்டத்திலேயே



நாலாவது ரேங்க்குனு தெரிஞ்சதும் 'ஒப்படைச்சுட்டேயில்லை - இனி மாணிக்கம் எம் பொறுப்பு. நான் பார்த்துக்கறேன்'னவர் பையன் நோக்கம் புரிஞ்சு மருத்துவக் கல்லூரியிலே சேர்த்து விட்டுட்டாங்க."

"அடடே!"

"நம்ப எஸ்டேட்டுக்கு ஒரு மருத்துவமனை இல்லேங்கற குறை ஐயாவுக்கு இங்கேயுள்ள பையன் படித்து வந்தால் நல்லதுன்ர அபிப்ராயம்."

"அந்த ஆசை இன்று வரை நிறைவேறலையே சின்னத்தை...?"

"மனுஷ நினைப்பு மட்டும் போதுமாப்பா, சகலத்தும் கடவுள் அனுக்கிரகம் வேணும். காலமும் ஒத்து வரணும். மாணிக்கம் சென்னையிலே படித்து முடிச்சார். அப்போ நானும் இங்கே தையல் ஒத்தாசைன்னு வந்த சமயம். ... ஆக ஐயா எங்க ரெண்டு பேருக்கும் முடிச்சு போட்டுட்டார்..."

"கல்யாண முடிச்சா?"

சரோஜாவால் தன் கன்னங்களின் செம்மையை மறைக்க முடியவில்லை! "ம்ம்- என்னைப் பெத்தவங்ககிட்டேயும் இதுபத்தி பேச, உங்கம்மாவுக்குத் தலைகால் புரியாத சந்தோஷம் - 'அடியே எங்கண்ணு, டாக்டரு பெண்டாட்டி ஆவப் போறியா நீ?' ன்னு ஏக ஆர்ப்பாட்டம். ஆக விஷயம் வெளியே கசிஞ்சு பரவிடுச்சு."

"ஆக. நீங்க ரெண்டு பேரும் சந்திக்கறதுக்கு முன்னமே உங்களுக்கு இடையே சின்ன ஈர்ப்பு உருவாகிடுச்சு.."

"ஆமாம்.. முதன் முறையா நான் அவரைச் சந்திச்ச போது..." சரோஜாவின் விரல்கள் நடுங்கின.

"அப்படியே உருகிட்டீங்க.?"

"சரியான வார்த்தை மாயாம்மா - உருகிக் கரைஞ்சிட்டேன். அவரும் அப்படித்தான்னு தோணுச்சு. நாங்க தனியே சந்திச்சுக்கலை.. அடிக்கடி பேசிக்கலை. அவ்வப்போது ஆசையா அவரை ஒளிஞ்சிருந்து பார்த்து மனசில தேக்கி வச்சிட்டதோட சரி.

ஆனா உள்ளே பிரியம் தீயாய் எரிந்தது. இவருக்கு நான்தான் - எனக்கு அவர்தாங்கற அழுத்தம்.''

இது மாயாவிற்குப் புரிந்தது. அவள் மாறன் மீது கொண்ட நேசமும் இது போலத்தானே..? இந்த நேசத் தீயை அணைக்க முயலுகிறானே...முடியமா? வளர்ந்து கனிந்த நிலவை அழிக்க ஆகுமா?

“மாணிக்கத்தின் படிப்பு முடிஞ்சதும் இங்கே நம்ப ஐயா மருத்துவ மனை கட்ட ஆயத்தமாயிட்டார். அதே சமயம் வெளிநாடு போய் மேலே படிக்க அவருக்கு... மாணிக்கத்துக்கு அழைப்பும் வந்துச்சு -ஸ்காலர்ஷிப் . ஐயா அனுமதிக்காக அவர் இங்கே ஓடி வந்தாரு.

“இது உன் புத்திக்கு, உழைப்புக்குக் கிடைச்ச அங்கீகாரம் தம்பி - பயன்படுத்திக்கோ. கூட ரெண்டு வருஷங் காத்திருக்கணும் நம்ப எஸ்டேட் ஜனங்க - பரவாயில்லைன்னுட்டார் ஐயா. ரெண்டு வருஷப் படிப்பு நாலு வருஷமாய் நீண்டுச்சு. வேற பல்கலைக்கழக அழைப்பு, ரிசர்ச்னு அவர்கிட்டேருந்து ஒழுங்கா விவரம் சொல்லி கடிதாசி வரும்.''

“உங்களுக்கா?''

“இல்லம்மா - உங்கப்பாவுக்குத்தான். அவர் படிசுட்டு கடிதாசியை என்கிட்ட தந்திடுவார் - அதுதான் என் பற்றுக்கோல். காத்துட்டே இருந்தேன் - பிறகு அதுவும் வரலை...''

“ஹா! அதாவது டாக்டர் ஐயாவுக்கு வெளிநாட்டின் பணம், சுகம், புகழ் எதையும் விட்டுட்டு வர மனசில்லை... அதானே?''

“இல்லை மாயாம்மா - காரணம் அதுவல்ல... அது அஸ்வினி!''



## 16

டாக்டர் மாணிக்கம் மேற்படிப்பு முடிந்த பிறகும் இந்தியா திரும்பாததற்குக் காரணம் அஸ்வினி என்று சரோஜா சொல்ல மாயா திகைத்தாள்.

“அவங்க ரெண்டு பேருக்கும் பரிச்சயம் உண்டா அத்தை?''
“இவர் யாருன்னும் எங்களைப் பற்றிய விவரமும் அஸ்வினிக்கு தெரியவந்திருக்கும். தவிர மாணிக்கம் யார் கூடவும் பேசிப் பழகாதவர்.''

“அப்படீன்னா?''

“அஸ்வினிம்மா தானே இதைச் சொல்லலைன்னா எனக்கு இது தெரிய வந்திருக்காது மாயாம்மா.''

“என்ன சொன்னாங்க?''

‘நான் என் கடிதங்களை எப்போதும் ‘டைப்’தான் செய்வேன் - என் கையெழுத்து அழகாய், தெளிவாய் இல்லைங்கற குறை எனக்கு எப்பவும் உண்டு. பள்ளி இறுதியில் தட்டெழுத்து படிக்க நேர்ந்தது - ஆக எதையும் இயந்திரம் மூலம்தான் எழுதுவது.''

“தெரியுமே அத்தை.''

“ஐயாவின் கடிதங்களை நான் தட்டெழுத்தில் தயாரித்து அவர் கையெழுத்துக்காய் கொண்டு வருவேன். அப்போது ஒருமுறை மாணிக்கம் அங்கே வர, ஐயா நான் மளிகைப் பட்டியலைக் கூட தட்டித்தான் தயாரிப்பேன்னு ஹாஸ்யமாய் சொன்னார்...''

“சரி.''

“இது தெரிஞ்ச அஸ்வினிம்மா, நான் எழுதினது போலவே ஒரு கடிதத்தை ‘டைப்’ செய்துட்டாங்க.''

“யாருக்கு?” புருவம் சுருக்கினாள் மாயா.

“மாணிக்கத்திற்கு நான் எழுதுவது போல.. அதாவது பக்கத்து எஸ்டேட் முதலாளி ஒருவர் என்னை மணக்க ஆசைப்படுவதாயும், நான் அவரை மணந்தால் முதலாளி அம்மாவாய் வாழலாம் - மாணிக்கத்தைக் கல்யாணம் செய்தால் என்னைக்கும் இங்கே நானும் ஒரு தொழிலாளி. கைநீட்டி வாங்கிய சம்பளத்தில் பிழைக்கும் ஒரு சராசரி மனுஷி. ஆக மாணிக்கம் என் வாழ்விலிருந்து விலகி விட்டால் இடையூறு இல்லாமல் நான் அந்த முதலாளிக்கு மாலையிட்டு நல்ல அந்தஸ்து பெறலாம்- என்பதாக.”

“சித்தியே எழுதிட்டாங்களா?'

“எழுதி, முடிவிலே என் கிறுக்கல் கையெழுத்தையும் போட்டுட்டாங்க.”

“ஐயோ - அது ஃபோர்ஜரி - கடுமையான தண்டனை உண்டே...”

“வாழ்க்கை மன்றத்தில ஆண்டவனின் தீர்ப்புகள் அதை விடக் கடுமையானவை மாயாம்மா. கேடு நினைச்சா கெடுதிதானே வரும் - அஸ்வினிம்மாவின் மரணம் கொடுமையானது. அந்திப் பொழுது கரெண்ட் இல்லாததால மண்ணெண்ணை ஊற்றி விளக்கேற்றியிருக்காங்க... விபத்தாயிடுச்சு.”

“அத்தனையையும் சித்தியே உங்ககிட்ட சொன்னாங்களா?”

“எழுதின கடிதாசியோட கார்பன் பிரதியை எங்கிட்ட தரச்சொன்னதா அவங்கம்மா, அதாவது உன் பாட்டி, தந்தாங்க. எழுதப் படிக்கத் தெரியாத அவங்களுக்குத் தன் மகளோட ‘தில்லுமுல்லு’ ஏதும் புரியலை - பாவம்...”

“இளைய மகளும் சின்ன வயசிலே இறந்தது பாட்டிக்குப் பெரிய அதிர்ச்சி - சில மாசத்திலேயே அவங்களும் போயாச்சே...’

“அவங்கதான் இங்கே போன் செய்து அஸ்வினிம்மாவின் தீ விபத்துபற்றி தகவல் சொன்னாங்க - கூடனே என்னை உடனே வரச் சொன்னதால் ஓடினேன்.”



பெருமூச்செறிந்தாள் மாயா.

“சித்தி வெறுமே வெட்டியாய் பொழுதைக் கழிப்பாங்கன்ற குறை மட்டும்தான் எனக்கு இருந்துச்சு - உறவுகளை வெட்டிக் கழிச்சிருக்காங்கன்றது பெரிய குறை..”

“எங்கிட்ட மன்னிப்பு கேக்கறாப்பல ஒரு பார்வை பிறகு உம்பெயரைச் சொல்லி நீல டிரங்க் பெட்டியைப் பார்க்கச் சொல்லுன்னாங்க... அதுக்கு மேல விவரமாப் பேச முடியாத நோவு.”

“தனக்கு அமையாத மணவாழ்க்கை யாருக்குமே அமையக் கூடாதுங்கர எண்ணம் போல. அப்பாவைக் கல்யாணம் செய்துட்டு இங்கேயே ராணியாய் இருந்திடலாம்னு கற்பனை செய்தாங்க - நடக்கலை. வந்த வரனும் அவங்க கற்பனை ராஜகுமாரனுக்குப் பொருந்தலை.. அந்த வெறுப்பு, ஏக்கத்துல வெதும்பிட்டாங்க...”

மெள்ள யோசனையாய் பேசினாள்.

“அது பிறர் மீதும் வெறுப்பாய் திரும்பிடுச்சு - அதனாலத்தான் உனக்கும் மாறனுக்கும் இடையே பிரிவு வர அஸ்வினிம்மா காரணமான்னு கேட்டேன் மாயா...’

“இதை மாறன்கிட்ட கேட்டீங்களா சின்னத்தை?”

“நான் அவனைத் தாயாய் பார்த்துக்கிட்டாலும் அவன் என்னை விட சில வருஷங்களதான் இளையவன் - ஆக இப்படி மனசு திறந்து பேச முடியறதில்லை. அவனும் கூசி ஒதுங்கிடுவான். தவிர நீ போன பிறகு அவன் பேசின வார்த்தைகளை எண்ணிடலாம் அவ்வளவு சொற்பம் - நத்தையாய் ஒடுங்கிட்டான்..”

பேச்சை லாவகமாய் மாற்றினாள் மாயா.

“டாக்டர் மாணிக்கம் திரும்பவே இல்லைன்னதும் மனசொடிஞ்சு போயிருப்பீங்க இல்லையாத்தை.?”

“ஆமாம் நூறு கற்பனைங்க தோணும் சும்மாவே அவர் கூட எத்தனைப் பொண்ணுங்க படிச்சிருக்கும் - அவரைப் போல அறிவாய், நம்மை விட அழகாய்ன்னு குமைவேன். வெளிநாடு

போன பிறகு கேட்கவே வேணாம். தேவதை மாதிரி வெள்ளைத் தோலு பொண்ணுங்க சுத்தி வர, அவருக்கு இந்தக் கறுப்பி நினைப்பு வருமான்னு அஞ்சுவேன்."

"நீங்களா கறுப்பு - அழகான மாநிறம்."

"ஆனால் அந்தக் கற்பனை எல்லாம் கருமேகம் போலத்தான் - சட்டுனு விலகிரும். அவர் எப்பேர்பட்ட மனுஷர் - இப்படி அபவாதமெல்லாம் யோசிக்கக்கூடாதுன்னு எம்புத்திக்கு லகான் போட்டிருவேன்."

"இப்ப... டாக்டர் எங்கேயிருக்கார்?"

"தெரியலைம்மா - எங்கே இருந்தாலும் சௌக்கியமா சந்தோஷமாய் இருக்கணும்."

"இந்த நல்ல மனசுக்கு நீங்க ஒண்டியாக் கஷ்டப்படக்கூடாது சின்னத்தை."

"நீ கூட இருந்தால் எனக்கு நூறு உறவு இருக்கற தெம்பு மாயாம்மா." தன் கன்னங்களைப் பாசமாய் வருடிய சரோஜாவின் கைகளைப் பற்றிக் கொண்டாள் மாயா.

"சித்தி யோசிச்சிருப்பாங்களா? தான் உடல் வெந்து, உரிந்து ரெண்டு நாள் ரணப்பட்டு சாகப் போறோம்னு.? உடம்பு அவஸ்தையை விட, தன் பாவத்தின் நெருடல் மரண நேரத்தில் அதிகமாயிருந்திருக்கும் - அதுக்காகவே உயிரைக் கரிஞ்ச கூட்டிலே இருத்தி வச்சு, உங்களை அழைச்சு விவரம் சொல்லியிருக்காங்க."

"அவங்களை உரிந்த சதைப்பிண்டமாய் வாழையிலையிலேப் பார்த்தப் பிறகு எனக்குப் பல நாள் ராத்திரி தூக்கமே பிடிக்கலை. நிமிஷமாய் அழியக் கூடிய உயிர் எத்தனை ஆட்டம் போடுது, திட்டம் தீட்டுதுன்னு எனக்குள்ளே தத்துவம் பேசிட்டு கிடப்பேன்."

"கஷ்ட நேரத்தில்தான் வாழ்வின் உண்மைகள் தெளிவாய் புரியும்" ஆமோதித்தாள் மாயா.



அன்று சரோஜாவிற்கு வகுப்புகள் இருந்ததால் 'ஸ்ட்ராபரி ஜாம்'மிற்கான வேலைகளை மாயா எடுத்துக் கொண்டாள்.

கையுறைகளை மாட்டிக் கொண்டு அளந்து, கலந்து மேற்பார்வை செய்ததில் பகல் பொழுது நிமிஷமாய் கழிந்தது.

வீட்டிற்கு ஓய்ந்து திரும்பியவளுக்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது. "என்ன அரவிந்த்? பெட்டி, படுக்கையோடு நிக்கறீங்க?"

"உன்னை எங்கேல்லாம் தேடறது மாயா?"

அவன் முகத்தில் ஏகப் பதட்டம்.

"முதல்ல விஷயத்தைச் சொல்லுங்க."

"பெங்களூரிலிருந்து போன் வந்தது."

"அம்மாக்கு?"

"அம்மாக்கு ரத்த கொதிப்பு அதிகமாகி அவங்க படுக்கையில விழுந்ததுக்குக் காரணமே அவங்க மாப்பிள்ளைதானே - அவனால்தான் இப்பவும் கேடு."

"என்னவாம்?"

"ஏன் கேட்ட சீர் இன்னும் வரலை? என் வியாபாரத்துக்கு ஒரு லட்சம் இப்பவே வேணும்னு குதிக்கறானாம் - அதுவும் அவன் வீட்டிலே அப்படிக் குதிச்சாப் பாதகமில்லை. உங்க வீட்டில் செய்த ஆர்ப்பட்டத்திலே அம்மாவின் உடம்பு மேலும் மோசமாயிடுச்சாம்."

"அனு போன் செய்தாளா?"

"ஆமா - நிலைமை என்னை மீறிடுச்சுண்ணா வந்திடுங்கன்ரா."

"மன்னிக்கணும் அரவிந்த் - எனக்காக உங்களை இங்கே இழுத்து..."

"தப்பு மாயா. இங்க வரணும்னு துடிச்சது நாந்தான். **ஆனால்** வந்த பிறகு தான் என் தப்பு எனக்குப் புரிஞ்சுது."

கேள்வி பாவனையுடன் முகம் நிமிர்த்தினாள்.

"அமைதி, அழுகு, சுகமான தூக்கம், சாப்பாடு எல்லாம் ஒருத்தனை வேலை பார்க்கத் தூண்டாது. காசு... காசு... அது வேணுங்கற வெறிதான் அவனை நெம்பணும்."

"உடம்பு இயந்திரந்தானே அரவிந்த். உங்களுக்கு இந்த ஓய்வும் மாற்றமும் தேவைதான் - சரி கிளம்புங்க. அம்மா, உங்க தங்கை, அனு எல்லாரையும் அன்பா விசாரிச்சேன்னு சொல்லுங்க."

"நன்றி மாயா - வேண்டிய அத்தனை படங்களுக்கு கோட்டோவியங்கள் தயார்."

"ம்ம் - பார்த்தேன் - நீங்க வர்ணம் பூசினா அத்தனையும் உயிருக்கு வந்திடும்."

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு உள்ள வாழ்க்கையை அவன் ஓவியங்கள் வெகு சுந்தரமாய் பதிவு செய்திருந்தன. ரதங்கள், பல்லக்குகள், விளையாட்டு, வில் வித்தை, சபை. போர்க்களம் இவற்றிலிருந்து அந்தப்புரம், அதில் அலங்கரித்து மகிழும் மகளிர், அவர்களுது பூப்பந்தாட்டம், நீராடும் அறை, காதல் என்ற சகலமும் சதுர கான்வாஸ்களில் சிறைப்படுத்தியிருந்தான்.

"வரட்டா? சரோஜாத்தைகிட்ட சொல்லிட்டேன்."

"மாறன்..? இழுத்தாள்.

"சொல்லி உத்தரவு வாங்கிட்டேன்" - அவன் கண்கள் கலங்கின.

"பயப்படாதீங்க அரவிந்த் - கிளம்புங்க - பின்னாடியே நான் ஒரு லட்சத்துக்கான 'செக்' அனுப்பி வைக்கிறேன்.. இல்ல நானே வர்றேன்." பாக்கெட்டினுள் கைவிட்டு அவன் அந்தக் காசோலையை எடுத்து நீட்டினான்.

"மாறன் தந்தாச்சு."

"என்னது... எதுக்கு?"

"விபரம் தெரிஞ்ச மறுகணமே எழுதி நீட்டிட்டார் - தேவைன்னா ரெண்டு நாளிலே நானும் வர்றேன்னார்..."



"ஓ.."

"எனக்குத் தாங்கலை மாயா... எல்லாத்தையும் சொல்லிட்டேன்."

அடிவாங்கியவளாய் தடுமாறினாள்.

"அப்.... அப்படீன்னா?"

"நாம நடத்தின நாடகத்தைச் சொல்றேன்." அவளுக்குக் கண்கள் இருண்டன. இதென்ன இப்படி காலை வாரி விட்டுவிட்டு அலுங்காமல் நிற்கிறான் இந்த அரவிந்தன்!

"விளையாடாதீங்க.."

"வாழ்க்கையில் நீ விளையாடக் கூடாது மாயா. அதைச் சொல்லிட்டுப் போகத்தான் நிக்கறேன். இந்தப் பக்கம் யாருக்காகவோ வந்த டாக்ஸியை மாறன் எனக்காய் நிற்க வச்சிருக்கார் - உன்னிடம் சொல்லாமல் கிளம்ப மனசில்லை... நீயும் மாறனும் மனசு விட்டுப் பேசணும்."

"அவர் மனசில நானில்லைங்கறதை அன்னைக்கே எங்கிட்ட சொல்லிட்டாரே."

"ஆனா அவர் சொல்லாததும் ஏதோ இருக்குது. தட்டில பிரியாணியைப் பரிமாறினா 'பொல பொல'ன்னு சாதமும் கறியுந்தான் கண்ணுக்குத் தெரியுது. வதக்கிய வெங்காயம், தக்காளி, மல்லி, புதினா, இஞ்சி, மசாலை எல்லாம் தனித்தனியா தெரியுமா?"

என்ன சொல்ல இப்படி சுத்தி வளைக்கிறாய் என்பது போல வெறித்தாள். "மொத்தமாய் மாறன் உங்கிட்ட சொன்னது ஒன்னுன்னா, அதன் பின்னாடி எத்தனையோ நடந்திருக்கு - அதை மறைக்கிறார் - அதுக்காக உன்மேல அவருக்குள்ள பிரியத்தையும் மறைக்கிறார். பேச மாயா - அத்தனை உணர்வுகளையும் கொட்டிக் கழுவி சோதிச்சுப் பாரு--- புரியும்."

"ஆக நீங்க என் காதலன் இல்லைங்கறது இப்போது மாறனுக்குத் தெரிஞ்சாச்சு?"

"அனுவைப் பற்றியும் சொன்னேன் - வாழ்த்தினார்.." - என்றான் ஒரு அசட்டுச் சிரிப்புடன்.

இப்படியா 'சட்டி சுட்டதடா

கை விட்டதடா' ரீதியில் இவளை 'அம்போ' என்று விடுவான்? பல்லை இறுக்கினாள்.

"கோவப்படாத மாயா. முகத்தை இப்படி இறுக்கினா முகம் சீக்கிரம் முத்திடும் - மாடலிங்க்கு லாயக்குப் படாது."

"வேடிக்கைப் பேசற நேரமில்லை, விஷயமுமில்லை இது."

"புரியுது ஆனால் நான் ஏன் இதைச் செய்தேங்கறது உனக்குப் புரியணும். ரெண்டு நாளிலே போன் பண்றேன் மாயா - எனக்கு நல்ல பதில் சொல்லணும் நீ..."

"நல்லதாய் என்ன?"

"நீயும் மாறனும் ராசியாயிட்டீங்கன்னு - இல்லை... அதுக்கான முயற்சி நடக்குதுன்னா கூடப் போதும்."

ஏற்கெனவே இருந்த சிக்கல் போதாதென்று கூட .இரண்டு முடிச்சைப் போட்டு விட்டுப் போகும் அரவிந்தனைக் காட்டமாய் முறைத்தபடி நின்றாள் மாயா.

## 17

இத்தனை நாட்கள் தான் போட்டது காதல் நாடகம் என்பது மாறனுக்கு வெளிச்சமாகி விட்டது. இனி அவன் முகத்தில் எப்படி விழிப்பது.. குன்றித் திரிந்தாள்.

'கெட்டிக்காரியின் பொய்யும் புரட்டும்

தக்குமுக்குத் திக்கித் தாளம்



எட்டு நாளிலே தெரிந்து போகும்

தக்குமுக்குத் திக்கித் தாளம்.'

சிறு வயதில் இவளது சின்ன சின்ன ஏமாற்றுகளுக்கு இந்தப் பாட்டை மாறன் அடிக்குரலில் முணுமுணுப்பான்.

'பாருங்கத்தை அத்தானை' என்று இவள் சிணுங்க சிணுங்க 'தக்கு முக்கு தக்கு முக்கு' என்று பலக்கத் தாளமடிப்பான். அதே கணக்கில் இப்போதும் எட்டாம் நாள் தன் திருட்டுத்தனம் அம்பலமானதில் மாயாவிற்கு ஏகக் கடுப்பு.

மனம் தனிமையை நாடியது.

ஆகக் கால் போன போக்கில் நடந்தாள்.

கால்கள் மனப் போக்கைத் தானே தொடருகின்றன? முக்கால் மணி நேரத்தில் நாய் முகப் பாறையில் போய் நின்றாள்.

போன முறை சுனை வரை மட்டுமே வந்திருந்தாள் - மலை விளிம்பு வரை நடக்கவில்லை. இப்போது ஊதாப் பூ மரத்தையும் அதன் உடம்பில் செதுக்கியிருந்த தங்கள் பெயரையும் தடவிப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

அடிபட்ட குழந்தை தாயின் முந்தானையைத் தேடுவது போல ஒரு பரிதவிப்பு. அம்மரச் செதுக்கலில் தன் கன்னத்தைப் பறித்து, பின் இதழ் பதித்து அழுது தீர்க்க வேண்டும் போலொருக் குமுறல்...

முன்பை விட மரங்கள் அடர்ந்திருந்தன. அவற்றுள் தன் மரத்தைத் தேடி விழியோட்டியவளுக்கு குழப்பம். அதை எங்கே...?

ஊதாச் செண்டை வானத்திற்கு நீட்டுவது போல உயர்ந்து படர்ந்திருக்கும் அந்த மரம் எங்கே? வருடத்தின் பாதி நாட்கள் தயங்காமல் பூத்துச் சொரியுமே... ஏன் காணவில்லை? உன்னிப்பாய் தேடியவளுக்கு 'சுரீர்' என்றது.

இது தன் மரமா?

தங்கள் பெயரை இணையாய் செதுக்கி, அதன் மூலம் தன் காதலை மாறனுக்கு வலியுறுத்திய மரமா?

மரம் கருகிக் கூடாய் நின்றது.

இளம் பழுப்பான அதன் பளபளத்த மேனி இப்போது முழுக்கரியாய் - இனி பிழைக்காது என்பது உணர்ந்து மரத்தை வெட்டி சாய்த்திருந்தனர். நெருங்கி கரிந்த தண்டை வருடினாள்.. குருடனது விரல்களைப் போல வெந்த மரத்தை தடவித் தேடின... எந்தப் பக்கம்... காதலர்களது பெயர் செதுக்கப்பட்ட பகுதி எது?

அவளையும் மீறி கண்ணீர் வழிந்தது.

இந்தக் காதலுக்கு இனி நினைவுகளும் கூட கூடாது என்று நினைத்து விட்டானோ? பசும் மரத்தை கொளுத்தி அழிக்குமளவு என்ன ஆவேசம்? பொங்கி அழுதாள்.

இறந்த தந்தையை நினைத்து... முகம் மறந்த தாயையும் நினைத்து. அன்னை இருந்திருந்தால் எப்பாடுபட்டாவது மகள் மனம் போல வாழ்வு அமைத்துத் தந்திருப்பாளே.

மாறன் மீது வெறுப்பு மிகுந்தது.

என்ன மனுஷன்... மரத்தை எரித்து அழிக்குமளவு கொடூரன்!

அவள் வீடு திரும்பும் போது இருட்டியிருந்தது.

"எங்கேம்மா சொல்லிக்காம போயிட்ட?"

"சுனை வரைக்கும்தான் சின்னத்தை."

பொய் சொன்னாள்.

"அடுத்த தடவை துணைக்கு மிட்டி சுட்டியையாவது கூட்டிப்போம்மா - எனக்கு நிம்மதியாயிருக்கும்."

"சரித்தை... வந்து... அந்த நீலப் பூ பூக்கற மரம் என்னாச்சு அங்கேக் காணலையே."

"நாய் முகப் பாறை வரைக்குமா போனாய்? ஜாக்கிரதைம்மா. மரங்கள் அடர்ந்து போச்சு - 'சட்டுனு' விளிம்பு வந்திரும் - நமக்குத் தெரியாது - ரெண்டு அடி எட்டி வச்சா பாதாளந்தான்."



"இல்லை சுனையிலிருந்து பார்க்கவே மரம் தெரியலை - அதான்.. கேட்டேன்." "விக்டர் தாத்தா சொன்னார் - இடி விழுந்து மரம் கருகிட்டதாய்."

மனம் சற்று ஆசுவாசப்பட்டது. ஆக மாறன் மரத்தை வேண்டுமென்றே எரிக்கவில்லை. ஆனால் அத்தனை மரங்கள் மிகுந்த இடத்தில் இடி இந்தப் பசும் மரத்தை ஏன் தேர்ந்தெடுத்து பாழாக்க வேண்டும்?

அதுவே ஒரு அபசகுனம் அல்லவா?

மனம் கலங்கியது.

"ஏம் முகம் வாடியிருக்குது மாயாம்மா..? கண் கூட சிவந்திருக்கோ?"

"எல்லாம் உங்களாலத்தான்" - சுதாரித்துக் கொண்டாள்.

"எ... என்ன?"

"பின்னே, உங்களுக்குன்னு அலைஞ்சு நான் வாங்கி வந்த பெங்களூர் பட்டை நீங்க இன்னும் உடுத்திக்கவே இல்லியே."

சரோஜா சிரித்தாள் - "இவ்வளவுதானா - பயந்துட்டேன்."

சிரித்தவளின் கன்னக் குழைவும் பச்சரிசி பல்வரிசையும் மோகனமாயிருந்தன.

"சரி - அப்ப இப்போது எடுத்து உடுத்திக்கோங்க."

"வாயல் புடவைகளைத்தான் தினப்படிக்கு கட்டறேன். சில்க் உடுத்தற விசேஷம் இங்கே என்ன வருது? பள்ளியிலே வரும் மாசம் விளையாட்டு விழா அப்போ கட்டிக்கிறேன்."

"விசேஷங்களை நாமதான் உருவாக்கிக்கணும். திண்டுக்கல்ல கைத்தறிப் பொருட்காட்சி நடக்குதாமே?"

"வீட்டுக்கு சில போர்வை, துண்டுங்க தேவைதான். வர்ரமாசம் புதுசாய் பதினைஞ்சு பிள்ளைங்க நம்பப் பள்ளியிலே சேருங்க. அதுங்களுக்கு சீருடைத் துணியும் வாங்கணும்.."

"அப்பக் கிளம்புங்க."

"உனக்கு இங்க பொழுது நகரலை... இல்லியா மாயாம்மா?"

"அப்படி வச்சுக்கறதானாலும் சரி - கிளம்புங்க."

பேச்சை மாற்றுவதற்காக வளர்த்த பேச்சு என்றாலும் மாற்றம் எல்லோருக்குமே நல்லது என்று பட்டது.

திண்டுக்கல் முன்பு போலில்லை. வர்ண விளக்குகளும், ஓயாத வாகன ஓட்டமுமாய் பாதி பட்டணமாயிருந்தது. அங்குள்ள 'தலைப்பா கட்டி' பிரியாணியும் கூட மாயாவிற்கு இஷ்டம். பொருட்காட்சியை ஒரு சுற்று வந்து. கடைகளில் ஏறி இறங்கி, சாப்பிட்டு விட்டும் வரலாம். அப்பா திண்டுக்கல் போய் திரும்பும் போதெல்லம் கண்டிப்பாய் கையில் பிரியாணி பொட்டலங்கள் மணக்கும். சாப்பிட்டு கை அலம்பும் போது விரலில் ஒரு சொட்டு நெய் பிசுக்கு இராது. அதுதான் இந்த ஊர் பிரியாணியின் விசேஷம்.

புது பிஸ்தா பச்சை பட்டில் சரோஜா தளிர் போலிருந்தாள்

"உங்களுக்குன்னே நெய்த சேலையத்தை இது."

"திறமையாய் தேர்ந்தெடுத்திருக்கே மாயாம்மா."

திண்டுக்கல் போனதுமே மல்லிகைச் சரம் வாங்கி தலை நிறைய சூடிக் கொண்டனர் - மனம் போல ஊரைச் சுற்றி வந்து பைகளை நிரப்பினார்கள்.

நினைத்தது போலவே இந்த மாற்றம் ரம்யமாய் இருந்தது. சரோஜாவிற்கு தைப்பது இன்னும் பிடித்த பொழுதுபோக்கு. அவள் வெட்டிப் போட்டால் தைத்து உதவ ஆட்கள் உண்டு. ஆக சளைக்காமல் துணிகளை வாங்கினர். மரத்திரளை விட்டு ஜனத்திரளைப் பார்ப்பது புத்துணர்வு தந்தது. சாப்பிட்ட பிரியாணியின் சுவையிலும் மாற்றமில்லை. அத்தனைக்கும் மேல் மாயாவிற்குப் பிடித்தது - மாறன் அவர்களுடன் வந்திருந்ததுதான். அவன் காரோட்டி வந்திருந்தான்.

பெண்கள் வாங்கிக் குவித்ததை, காரில் வைத்து பாதுகாப்பது அவன் பொறுப்பு. அவன் முகத்தைப் பார்க்க மாயாவிற்கு வெகு



சங்கோஜம்தான் என்றாலும் அவன் முகம் எவ்வித உணர்ச்சியுமற்று சகஜமாய் இருந்ததில் இவளும் சுதாரித்துக் கொண்டாள்.

அத்தனையும் முடித்து மசாலா பால் வாங்கிய நேரம். சரோஜா தன் பள்ளித் தோழி ஒருத்தியை எதிர்பாராமல் சந்தித்து பேசுவதற்காக சற்று ஒதுங்க, காரினுள் சூடான பாலுடன் அவர்கள் இருவர் மட்டும் விடப்பட்டனர்.

"பெங்களூரில் சில வருஷங்கள் இருந்த பிறகு உனக்கு எஸ்டேட் சலிக்கும் தான்...'

"அப்.. அப்படியில்லை- ஒரு மாற்றம் வேண்டியிருந்தது."

"ம்ம்... பரீட்சையிலே கண்டிப்பாய் பாஸ் பண்ணிடுவே - மேலே என்ன செய்ய உத்தேசம் - மேற்படிப்பா... இல்ல...?"

'கல்யாணமா?' என்பதைச் சொல்லாமல் மென்று முழுங்கினான்.

"ஏதும் முடிவு செய்யலை. மாடலிங்கைத் தொடரலாம். மறுமாசம் மலேஷியாவுக்கு ஒரு குழு போறாங்க... எனக்கும் அழைப்பிருக்குது... ஆனால் ஏதும் தீர்மானிக்கலை."

"நீ எது தீர்மானிச்சாலும்... நா.. நான் அதுக்க உதவுவேன் மாயா."

"அதாவது என்னைக் கல்யாணம் செய்துக் கொள்வதைத் தவிர..." மனதுள் கறுவினாள்.

சரோஜா வரவும், பேச்சு அத்தோடு போனது.

தான் அரவிந்தனோடு தயாரித்த நாடகம் பற்றி மாறன் கிளறாததில் நிம்மதியானாள். அவன் பேச்சு தன் எதிர்காலம் பற்றிய அக்கறையைக் காட்டியது. ஆனால் மாறன் இல்லாத எதிர்காலம்.... வெற்று சூன்யமாகவல்லவா மிரட்டுகிறது?

நிலவு ஏன் பிறையும் கூட இல்லாத வெற்று வானம் போல...

நாட்கள் நகர்ந்தன - இடை இடையே அரவிந்தன். அனுவின் தொ(ல்)லை பேசி அழைப்புகள் வேறு!

"என்ன மாயா பேசியாச்சா?"

"என்ன சொல்றார் மாறன்? நாங்க வரவா?"

"மாறனுக்கு நன்றியை மறுபடி சொல்லணும். எங்க வீட்டு மாப்பிள்ளை இப்போதைக்கு அவரு வீசின எலும்புத் துண்டுலதான் சமாதானமாயிருக்கார்" - என்று ஏதேதோ பேசினார்கள்.

புரியாதவர்கள் இவள் மனம் வைத்து பேசிய மறுநாளே மாறனோடு இவள் திருமணம் நடந்துவிடுவது போல அவர்கள் பேசியது இவளுக்கு பொறுக்கவில்லை. புரியாமல் வெந்த புண்ணில் வேலிட்டு கிளறுகிறார்களே.

மாறன் மேலுமாய் இவளை விட்டு விலகி நிற்கிறான். அன்று திண்டுக்கல் போனபோது தனிமையில் பேசிய சில வார்த்தைகள் தான்... அதுவும் பொதுவான பேச்சு. பிறகு கண்ணில் தட்டுப்படவே யில்லையே... தவிர்க்கிறான்- இவளைத் தத்தளிக்க விடுகிறான்.

நிலைமை புரியாமல் இவர்கள் வேறு...

முகத்துக்கு நேரே நின்று பேசித் தீர்த்தால் நல்லதுதான் - காரணம் அறிந்தால் மனம் நாளடைவில் அடங்கக்கூடும். ஆனால் மாறன் மழுப்புகிறானே-

'நானும் நீயும் மணப்பது சரியில்லை -எனக்கு அந்தத் தகுதியில்லை. நல்ல மாப்பிள்ளை, பெரும் இடமாய் பார்த்து எனக்கு கல்யாணம் முடிக்கிறேனே்' - என்று தன் பெண் இதயத்தில் சூட்டுக் கோல் இல்லவா இழுக்கிறான்?

ஒரு வாரம் மாறனைப் பார்க்காததில் கிறுக்கானது போல உணர்ந்தாள். வேறு யாருக்கும் தன்னில் இடமில்லை என்பது இப்போது மேலும் தெளிவாகி விட்டது.

அவன் மனதிலும் யாரும் இருப்பது போலில்லையே? பின் ஏனிப்படி பம்மித் திரிகிறான்? இனி இருவர் இடையேயும் விரிசல் அதிகமாகிக் கொண்டே போகுமோ?

விரக்தி அப்பியது. காலார நடந்தால் தேவலை. தனிமை மேலும் சோர்வு தரும். ஆனால் யாரைக் கூட்டிக் கொண்டு நடப்பது.



நாய்களின் நினைப்பு வந்தது. அவை மனிதனுக்குச் சிறந்த துணை. வாயைக் கிண்டாமல், சீண்டாமல் மௌனமாய் துணை வரும் நல்ல நண்பன்.

"மிட்டி, சுட்டி."

"அடைச்சு கிடக்குதும்மா - திறந்து வுடவா?"

"ஆமா வேணு - கொஞ்சம் காலார நடந்துட்டு வரேன்."

"சரிங்கம்மா."

காது மடக்கி, வாலைக் குழைத்து வந்த ஜோடிகளைப் பார்த்த அவளது மனம் சற்று ஆறுதலானது.

"என்ன மிட்டி, சுட்டி 'வாக்' போகலாமா?"

'சரி சரி' என்பதாய் எம்பிக் குதித்தன - அவளது பாதங்களை நக்கின இம்முறையும் அவள் நடந்தது நாய் முக முகட்டை நோக்கித் தான். ஏதோ ஒரு காந்தம் அங்கிருந்து தன்னை ஈர்க்கின்றதோ? ஏனிப்படி கால்கள் தானாய் அங்கேயே போகின்றன?

மிட்டி ஒரு அணிலைக் கண்ட உற்சாகத்தில் பாய்ந்து துரத்தியது.

"ஏய் மிட்டி... அந்தப் பக்கம் போகாதே... வேணாம்... நில்லு..." - இவளும் பாய சுட்டி எச்சரிப்பாய் உரக்கக் குலைத்தது.

ஓடிய இவளது பாதத்தை ஒரு சிறு பாறை இடறியது போலும்... வெட்டிய மரமாய் குப்புற சரிந்தாள்..!

மிட்டியும் இப்போது 'என்ன ஆச்சு?' என்பது போல இவளை நெருங்கி வந்தது - முகர்ந்து முணங்கியது..

"ஒன்னு... ஒன்னுமில்லைடா..." சமாதானப்படுத்தியவளின் நாக்குக் குழறியது. மெள்ளப் புரண்டாள்...

மல்லாந்து கிடந்து மேலே நீலமாய் கவிந்த வானைப் பார்ப்பது விநோதமாய் இருந்தது- ஆனால் திடுமென... கண்கள் இருண்டு நீல வானம் கறுத்து போனது...!

## 18

தங்களின் பின்னே ஓடி வந்து, விழுந்து கிடந்தவளை நாய்கள் இரண்டும் கவலையுடன் முகர்ந்து பார்த்தன. வால் குழைத்து, சுற்றி வந்து வந்து முணங்கின. அவற்றின் ஈர மூக்கு தன் முகத்தில் பட்ட பின்பும் கூட மாயா கண் விழிக்கவில்லை.

அவளின் புலன்களுக்கு 'புறம்' மறைந்ததும் 'அகம் விழிப்பு கொண்டது. 'மறந்து போனதே என்று அவள் அடிக்கடி மருகி அங்கலாய்த்த தாயின் கருணை முகம் தெளிவாய் நெஞ்சில் நின்றது!

'மாயா கண்ணு, எஞ் செல்லமே' என்று கரிசனையோடு தன்னை அழைப்பது யார்... அப்பாவின் குரலல்லவா அது? கேட்டு எத்தனை நாட்கள் ... ம்ஹூம் ஆண்டுகளாயிற்று...!

பிரமையில் எழுச்சி கொண்ட அவளது உடல் அசைந்தது. நாய்கள் தீவிரமாய் முணங்கின... காரணம் அவள் மலை முகட்டின் அபாய விளிம்பருகே கிடந்ததுதான்...! மிருகங்களுக்கே உரிய எச்சரிக்கைக் குணம் அவற்றிற்கு நிலைமையின் அபாயத்தை உணர்த்தியிருந்தது.

மிட்டி குரைத்து அவளை எழுப்ப முயற்சிக்க, சுட்டி வந்த வழியே திரும்பி ஓடியது.

அன்னாசி பழங்களுக்கு மதுரைப் பக்கத்தில் நல்ல விலையில்லை என்பதால் அவற்றை சென்னைக்கு அனுப்பும் ஏற்பாட்டில் இருந்தான் மாறன்.

எஸ்டேட்டில் ரகம் ரகமாய் பயிர் செய்வது மட்டும் போதாது, கவனமாய் பூச்சித் தாக்குதலிலிருந்து காத்து, உரமிட்டு வளர்த்தலும் போதாது தகுந்த காலத்தில் பறித்து, உயர்விலை வரும் இடமாய் விசாரித்து சேர்த்து விடுவதில் இருக்கிறது விஷயம்.



இல்லையெனில் எஸ்டேட்டின் இத்தனை குடும்பங்களுக்கு இப்போது போல தாராளமாய் படியளக்க முடியாது. இப்போது போல உயர்ரக விதைகளை விதைத்து விட்டு,

'மெள்ள வரட்டும் - என்ன அவசரம்' என்று காத்திருக்க இயலாது. இலவச ஆரம்பக் கல்வி, மதிய உணவு, சிகிச்சை என்று தொழிலாளர்களுக்கு மனமார செய்ய பணமிராது.

ஆக மாறன் விற்பனையிலும் ஜரூராய் நிற்பவன், விலை பேசும் போதும், சரக்கை ஏற்றி விடும் வரையிலும் தானே நின்றால் தான் அவனுக்கு திருப்தி. ஆனால் இந்த அலைச்சலும் அவனுக்கு இந்நேரம் உகந்ததாகவே தோன்றியது. ஏனென்றால் மாயாவைத் தவிர்க்க இது சரியான சந்தர்ப்பம் சாக்கு!

அவனுக்கு இன்னும் அவள் அப்படி அரவிந்தனுடன் ஒரு காதல் நாடகம் நடத்தியிருப்பாள் என்பதை நம்ப முடியவில்லை, ஆனால் அரவிந்த் நல்லவன் - கலைஞர்களுக்கே உள்ள மிருதுவான சுபாவம். அவன் பொய் சொல்லக் கூடியவனில்லை - ஆக நிஜம்தான்.

அரவிந்தை அழைத்து இக்காதல் நாடகம் அரங்கேற்றக் காரணம்? தன்னை அவள் மறந்து போனதாக ஊர், உலகை முக்கியமாக தன்னையே நம்பச் செய்வதற்கா?

நம்பச் செய்வதற்கு என்றால் அது நிஜமில்லை என்றும் ஆகிறது. அப்படியானால்... அவள் மனதில் இன்னுமிருப்பது தான்தானா? சிறுவயதில் பயிர் செய்த காதல் இனி யாராலும் மாற்றக் கூடாதபடி அப்பெண் மனதில் ஆழ வேர் விட்டு விட்டதோ?

இன்னும் வளர்பிறையாய் வளர்ந்தே வருகிறதோ?

கடவுளே... இதென்ன சோதனை...

வெளியே யாரிடமும் வாய்விட்டுப் பகிரக் கூடாத வேதனை.

சொல்லி மாயாவிடம் விளக்க முடியாத விஷ விஷய மில்லையா அது...?

"எசமான்... மாயாம்மாவுக்கு ஆபத்து."

வேணுவின் கத்தல் மாறனை உலுக்கியது.

"என்ன?" பதட்டமாய் ஜீப்பிலிருந்து இறங்கினான்.

"மிட்டி, சுட்டியோட சின்னம்மா நடந்து போனாக. இப்ப ஒத்த நாயி மட்டும் வந்து ஒரு தினுசாக் குலைக்குதுங்க.."

வேணுவிற்கு சற்று பருத்த சரீரம். ஆனால் ஓட ஆரம்பித்திருந்தான். ஒரு வார அலைச்சல்., சோர்வு எல்லாம் மறந்து போக, பந்தயத்திற்கு ஓடும் ஆவேசத்துடன் தானும் ஓடலானான் மாறன்.

சுனையருகே மாயா இல்லை என்பதை ஊர்ஜிதப்படுத்திய பின் ஓட்டத்தைத் தொடர்ந்தான். சுட்டி இளைத்தபடி முன்னே பாய்ந்தது இவனுக்கும் மூச்சிரைத்தது. கால்களின் வேகத்தை விட கற்பனையின் வேகம் அதிகம்தானே - கண்டதையும் கற்பனை செய்தது புத்தி.

தற்கொலை செய்து கொள்ள நினைத்தாளா? வெளி ஆட்கள் யாரும் இங்கே நுழைந்து அவளிடம் முறை தவளி நடக்க முற்பட்டார்களா? அப்பகுதியில் மரங்கள் அதிகம் - வனவிலங்கு அல்லது பாம்பு தீண்டி நீலம் பாரித்து கிடக்கிறாளோ?

விழுந்து எலும்பு முறிந்து அல்லது பிசகி விட்டதோ?

கடவுளே... இதுவும் கூட ஒரு நாடகமாய் போகட்டும். இப்போது மிட்டியின் குரைப்பும் கேட்டது. தொடைகள் கடுத்தன. தொண்டை முழுசாய் வரண்டிருந்தது. விலாவும் நொந்தன. ஆனாலும் அவன் வேகத்தைக் குறைக்கவில்லை.

அதோ நாய்கள் - ஏன் இத்தனை தூரம் வந்தாள்?

அது ஏறக்குறைய மலை முகட்டின் விளிம்பாயிருந்தது.

"மாயா... மாயாம்மா..." அழைத்த தன் குரல் அவனுக்கே விநோதமாயிருந்தது.



மேலும் நெருங்க... அவள் தெரிந்தாள்.

"ஐயோ... என்னாச்சு... மாயா...".

பாதி நிம்மதியும் மீதி பதட்டமுமாய் அழைத்தான் வேறு லோகத்தில் சஞ்சரித்தவளை அக்குரல் மீட்டது.

"அ... அ... அத்தான்" முழு உணர்வற்று முணங்கியவள் புரண்டாள். அவளது மெல்லிய உடல் மேலும் பாதாளத்தை நோக்கி ஓரடி முன்னேறியது.

"நே... அசையாதே மாயாக்கண்ணு... அப்படியேயிரு... தோ.. அத்தான் வந்துட்டேன்."

பேய் பாய்ச்சலாய் முன்னேறியவன் அவள் கால்களைப் பற்றி உடலைப் பின்னுக்கு இழுத்தான். பூவுடல் பாறையில் உராய்ந்ததில் அவள் இளமுகம் சுணங்கியது. இரக்கம் பாராமல் மேலும் இழுத்தான். வேதனையில் அவள் மயக்கம் சற்று கலைந்தது. ஆபத்தான இடத்திலிருந்து விலகியும் விட்டாள்.

"ஸ்ஸ்... வலி... வலிக்குது."

"பரவாயில்ல... சரியாயிடும் செல்லம்மா.... ஆனா உயிர் போயிருந்தா சரி செய்ய முடியுமா.? உன் உயிர் போனால் இங்க எங்களுக்குன்னு எதுவும் இல்லையே...."

அவளை அள்ளிப் பூமாலையாய் தன் மீது சாய்த்தபடி பதட்டமும் அவளை நிலைகுலைத்திருந்தன. தான் பேசுவது என்ன என்பதை மாறன் உணரவில்லை... அவனது அந்தராத்மா அரற்றியது... அடக்க முடியாத அரற்றல்.

"நாய்... ஓடுச்சு... அப்பா சத்தம்...?"

"ஷ்... பேச வேண்டாம்மா.. படுத்துக்கோ... நாயோ யாரோ போனால் என்ன? நீ போனால் என்னால தாங்க முடியாது செல்லம்.. நீ ஊரில இல்லாதப்ப உலகமே சூன்யமாத் தெரியுது - உலகத்தை விட்டுப் போக முடியுமா...? கூடாது... நீ என் உயிர் குட்டிம்மா... நீயில்லாம நானுமில்லை... என் உயிர் நீ... உயிர்...!"

அரற்றலுடன் அவளை இறுக்கி அணைத்து உச்சியில் முத்தமிட்டான்.

அவனது வலிய கைகளை தன்னைத் தழுவி இறுக்கிய போது சிராய்ந்த உடல் நொந்தது... ஆனால் அது துன்பமாயில்லை - வெகு சுகமாயிருந்தது. பிரக்ஞை முழுசாய் மீளாத நிலையிலும் கூட அவன் வார்த்தைகள் புரிந்தன. அமிர்தமாய் இதம் தந்தன - ரணப்பட்ட உள்ளத்தை உயிர்ப்பித்தன.

“ஐயா...” - வேணுவின் குரல் குறுக்கிட்டது.

“மாயா பத்திரமாயிருக்கா... மெள்ளவே வா வேணு.” என்றவன் அவளை மீண்டும் தழுவி உச்சி முகர்ந்தான்.

‘இது போதும்.... இன்னும் பல காலத்தை இந்தச் சுகம் நினைத்தே ஓட்டி விடலாம்...’ உடலைத் தளர விட்டாள் மாயா...

“சின்னக் குழந்தைகளிடம் சொல்லியிருக்கோம்... அங்கெல்லாம் போகக் கூடாதுன்னு. உங்கிட்ட கூடவா சொல்லணும்? தவிர அன்னைக்கும் கூட சொன்னேனே... பாறை முகம் ஆபத்தானதுன்னு...”

“ம்ம்... சின்னத்தை... அந்த ஜாக்ரண்டா மரத்தைப் பார்க்கலாம்னு போனேன்...”

“அது இடி விழுந்து கருகிடுச்சுன்னு சொன்னேனே... அதுக்குப் பின்னே உனக்கு என்ன வேலை அங்கே...?”

‘சுள்’ளென விளாறியது சரோஜாவின் குரல்.

“இனி போகலை...”

“மரமும் புதருமாய் இருக்கிற மலையிலே முகப்புக்குப் போன பிறகுதான் நுனிக்கு வந்திட்டோம்கிறதேத் தெரியும் - பிறகு அந்தப் பயம் பதட்டத்துல தலை சுத்தி கீழே போக வேண்டியதுதான்...”

சுடுநீரில் டெட்டால் கலந்து சிராய்ப்புகளை ஒற்றிக் கழுவிக் கொண்டிருந்த சரோஜாவின் திட்டைப் போலவே சிகிச்சையும் ‘சுரீர்’ எனக் காந்தியது.



“ஸ்ஸ்... ஆ..”

“எல்லாரும் அரண்டுட்டோம்... என்னை முழுசா பார்க்கும் வரை... எனக்கு உடம்பே தொய்ஞ்சிடுச்சு.... மாயாம்மா.. அரை உயிர் நிலைதான்...”

‘என் உயிர் நீதான்’ - என் மாறன் தன்னைக் கட்டி கொஞ்சியது மாயாவின் நினைவிற்கு வர மெள்ள புன்னகைத்தாள்.

“எங்க சங்கடம் உனக்கு சந்தோஷமாய்ப்படுதா?”

“இல்லைத்தை... இப்படி நாயைத் துரத்தி போய் விழுவேனா... முட்டாள்தனம்..”

சரோஜா குரலைத் தணித்தாள்.

“இப்படி நீ சொல்ற - நாங்க நம்பறோம்... மற்றவங்க என்னென்னப் பேச போறாங்களோ? அந்தப் பொண்ணுக்கு என்ன கஷ்டம், கவலையோ... இப்படிப் பண்ணப் பாத்திருக்கேன்னு வாங்க... கூசாமல்.”

“நாலு நாளு அவங்களுக்கு இது செய்தி - வேற புதுசா கிடைச்சதும் நம்மைப் பற்றி பேச மறந்திடுவாங்க...”

“பொண்ணுங்க செய்தி ஆகக்கூடாதே மாயம்மா - அது நல்லதில்லை ஊர் மறந்தாப்போல தோணினாலும் அப்பப்போ நினைச்சப்போ தெல்லாம் அவலை மறுபடி மெல்லும்.”

மூத்தவளின் குரலில் மெய்யான கவலையிருந்தது. ஆனால் மாயா வேறு லோகத்தில் சஞ்சரித்தாள். இன்னும் தன் மீது மாறனது வாசனை வீசுவதாய் தோன்றியது. அவன் வலிய கரங்கள் தன்னை மலைப் பாம்பாய் சுற்றி இறுக்கிய சுகம் இன்னும் மிச்சமிருந்தது. முக்கியமாய் அவனது வார்த்தைகள் -

‘மாயா நீ என் உயிர்... என் செல்லமே’ என்ற அவனது அன்பு அரற்றல்.

செண்பகா அத்தை மாயாவை விதவிதமாய் விளிப்பாள். அலங்கரித்து, கண்நிறையப் பார்த்து வாய்கொள்ளாமல் பாராட்டுவாள்.

'அடடே, எப்படியிருக்குது என் குட்டி ரதம்?'

'நீ ரோசாப் பூவேதான் - எம் முத்து, பவளம், வைர வைடூர்யம், தங்கக்கிளி, செல்லப் பளிங்கு...'

'என்னம்மா இது - இப்ப நாங் கொஞ்சறேம் பாருங்க..' மார் தட்டியபடி குறுக்கிடுவான் மாறன்-

"மாயா நீ என் உயிர்... அவ்வளவு போதாது?"

மூகம் முழுக்க மலர, தலை நிமிர்த்தி கேட்பான்!

"என்னடா சொல்றே?"

"முத்து, பவளம், வைர, தங்கம், பளிங்கு, ரோசாப்பூ இல்லாம இருக்கலாம்மா உயிர் இல்லாம இருக்கக்கூடுமா? சின்னதாய், சத்தியமாய் பேசணும்மா..."

மகனை விழி கலங்க பார்க்கும் அத்தை - "எப்படிப் பேசறடா மாறா..." என்று வியந்து நின்றது. நேற்று போல பசுமையாய் நினைவிலுண்டு.

## 19

செண்பகா அத்தை அதிகம் பேசும் ரகமில்லை. ஆனால் அவள் விழிகள் பேசும் - மனதுள் அவள் அடக்க முயலுபவற்றையும் அவள் பார்வை அம்பலமாக்கிப் போடும். அன்று அவ்விழிகளில் வியப்புடன் சற்று கலக்கமும் கலந்திருந்தது.

'தங்கம், பவளம், பளிங்கு, ரோசாப் பூ இல்லாத நாம இருக்கலாம் உயிர் இல்லாம இருக்கக் கூடுமா? - ஆக என் உயிர் மாயாதான்' என்று மகன் சொன்னதில் சற்று கலங்கிப் போனாள். இத்தனை ஈடுபாடு நல்லதற்கல்ல என்பதை அவள் தாய் மனம் அன்றே உணர்ந்தது போலும்...



இவர்கள் பேச்சை மணிக்கணக்காய் சலிக்காது கேட்கும் அத்தை தான் அதிகமாய் கதையடிப்பதில்லை. சில முறை மாறனது தந்தையைப் பற்றி ஏதோ பேச்சு எழும்ப, செண்பகாவின் முகம் இருண்டது... ஒரு முறை கண்கலங்க விசும்பி விட்டாள். அத்தை அதிகம் பேசுவதோ, கொஞ்சுவதோ இவளிடம்தான் - மாறன் இவளைப் போற்றுவது ஒரே வார்த்தையில்தான்

'என் உயிர்...ர்ரு' என்று அழுந்தச் சொல்வதோடு சரி.

இன்று பல ஆண்டுகள் கழித்து அதே வார்த்தை - முன்பை விட அதிக அழுத்தமாய்... ஆங்காரமாய்!

அம்மா முகம், அப்பாவின் குரல் இரண்டும் மிக அண்மையில், தெளிவாய் உணர்ந்தாளே... அதே போல மாறனின் கொஞ்சலும் தன் பிரமைதானோ? முடவன் கொம்புத் தேனை கனவில் தொட்டு ருசிப்பது போலத்தானோ?

உடல் சிராய்த்தும் இது வரை உல்லாசமாய் துள்ளிய அவளது உள்ளம் இப்போதைய குழப்பத்தில் சுருதி இறங்கி விட்டது. தூக்கம் வேறு கண்ணைச் சுழற்றியது. மருத்துவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட சரோஜா இவளுக்கு ஏதோ மாத்திரைத் தந்திருந்தாள் - உறக்கத்திற்காய் இருக்கும்... தலையணைக்குள் முகம் புதைத்தாள்.

பல மணி நேரங்கள் கழித்து உறக்கம் கலைந்த போது மறுபடி உடம்பின் வேதனை முழுதுமாய உறைத்தது.

"ஹம்மா...!" முணங்கலுடன் புரண்டாள். சத்தம் கேட்டு கதவுக்கு வெளியே நின்ற பொன்னி ஆமையாய் தலை நீட்டினாள்-

"தேவலையாம்மா..."

"ம்ம்... பரவாயில்ல..."

"காபி எடுத்தரவா? அத்தையம்மாவையும் வரச் சொல்லுதேன்."

"ம்ம்..."

படுக்கையை விட்டு எழ சிரமமாயிருந்தது - சிராய்ப்புகள் எரிந்தன. வாளியில் டெட்டால் மணத்துடன் வெந்நீர் தயாராய் இருக்க, பல் துலக்கியவள் உடம்பையும் கழுவி ஒற்றினாள்.

"பரவாயில்லையா மாயாம்மா? ராத்திரி அசங்காமல் அசந்து தூங்கினே..."

"ஓ... நீங்க இங்க தான்படுத்தீங்களா சின்னத்தை?'

"அம்மா பாயை விரிச்சு இங்கனதான படுத்திருந்தாங்க..." என்றாள்

காபி தட்டை ஏந்தி வந்த பொன்னி.

"இப்போ எதுக்கு வெண்ணை தடவிய டோஸ்ட்டும் வருது?"

"நேத்து ராத்திரி சாப்பிடலையேம்மா நீ - வெறும் பால் மட்டும்தான் - ரொம்பப் பசிக்குமே...'

வயிறு பசித்தது போலில்லை - ஆனால் இந்தப் பாசம் பிடித்திருந்தது... வேண்டியிருந்தது.

"ஸாரி, சின்னத்தை... இனி நா அந்தப் பக்கமெல்லாம் போகலை..."

"இதெல்லாம் உன் இடம் மாயாம்மா - எங்க போனாலும் ஜாக்கிரதையாய் போய் வாங்கறேன்... நேத்து பதட்டதுல உன்னைக் கடிஞ்சுட்டேனோ?"

மாயாவின் தலையைக் கோதியபடி பாவமாய் கேட்டாள் சரோஜா.

"உங்களுக்கு அந்த உரிமை உண்டு - அதனால கேட்டீங்க."

"என் ராசாத்தீ.. அடுத்ததாய் நீ இன்னைக்கு முழுக்க கீழே வர வேணாம் பேசாம படு - முழு ஓய்வுதான்-"

"ம்ம்... சரி."

"அடுத்த அறையிலிருக்கற டிவி.யை இங்க கொண்டு வைக்கச் சொல்லட்டா?"



"வேணாமத்தை - பத்திரிகை எதையும் முழுசாய் படிக்கலை - நாலைஞ்சு அனுப்பி விடுங்க - போதும்."

சற்று நேரத்தில் பெரிய அடுக்காய் நாளிதழ்களும் வார இதழ்களும் வந்து சேர்ந்தன. தலையணைகளை வாகாய் முதுகுப்புறம் அடுக்கியவள், ஒரு பத்திரிகையுடன் சாய்ந்து அமர்ந்தாள். அரை மணிக்கொரு தரம் இட்லி-சட்னி, பழரசம், ஹார்லிக்ஸ் என்று விதவிதமாய் வந்து கொண்டிருந்தன - கூடவே 'இப்ப தேவலையா?' என்ற விசாரிப்பும்தான்!

வயிறு நிரம்பியதாலும், நேற்றைய அதிர்ச்சியின் மிச்சத்தினாலும் அவள் நடுப்பகலில் மறுபடி தூங்கிப் போனாள்.

ஒரு மணி நேரத்தில் எழுந்தவளுக்கு தன் உடல்நிலை தேறியிருப்பதை உணர முடிந்தது.

கீழே புதுக் குரல் கேட்க, கூர்ந்து கவனித்தவளுக்குச் சிரிப்பு வந்தது. அது டாக்டர் யுகேந்திரனின் குரல் - பல ஆண்டுகளாய் இவர்கள் குடும்ப மருத்துவர் - அவரும் அவளைச் 'சின்ன பாப்பா' என்றதான் நீட்டி முழக்கி அழைப்பார்.

தோற்றத்தை சற்று சீர் செய்தவள், கீழிறங்கினாள்.

"அடடே... நோயாளியே தரிசனம் தந்தாச்சு - என்னா அற்புத அழகும் ஆரோக்கியமுமாத் தெரியறா சின்னபாப்பா? பிறகேன் நீங்க ரெண்டு பேருமாய் மாறி மாறிப் புலம்பனீங்க? வாம்மா... வந்து உட்காரு. நாய்களோட சடுகுடு ஆடி உடம்பைச் சிராய்ச்சு கிட்டியாமே... இப்ப எப்படி இருக்கே?

"நல்லாயிடுச்சு அங்கிள்."

"அப்ப வந்து உக்காரு... சேர்ந்தே சாப்பிடுவோம்." மாறன் தன்னை வைத்த விழி அகற்றாமல் பார்த்தபடி இருப்பது புரிந்தது கூச்சமாயும் கர்வமாயும் உணர்ந்தாலும் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. ஆக அவனது பிரியம் குறையவில்லை. ஆனால் தன்னை மணக்க சம்மதிப்பவனாயும் தெரியவில்லையே?

பேச்சும் சிரிப்புமாய் சாப்பாட்டு வேளை கழிந்தது. வந்ததிற்கு மாயாவைப் பரிசோதித்து விட்டுப் போனார் மருத்துவர். மீண்டும்

அறைக்குத் திரும்பியவளுக்கு எதையும் செய்யலாம் என்றளவிற்கு தெம்பு ஊறியிருந்தது.

பத்திரிகைகளை நடந்தபடி புரட்டினாள்.

'ராணி'யில் 'மாணிக்கத்திற்கு விருது' என்ற தலைப்பில் பிரசுரமாயிருந்த கட்டுரையில் சற்று கருத்து பதிந்தது.

'திண்டுக்கல் சிறுமலைப் பகுதியிலுள்ள எஸ்டேட் தொழிலாளி குடும்பத்தில் பிறந்த டாக்டர் மாணிக்கம் இன்று அகில இந்திய அளவில் விருது பெறுகிறார்- சென்ற வாரம் ரோட்டரி சங்க விருதினைப் போலியோ ஒழிப்பிற்காகப் பெற்றவரும் இவர்தான்.

இளம் பிள்ளை வாதம் வந்து கால்கள் பாலமிழந்து முடங்கிப் போன குழந்தைகளை அறுவை சிகிச்சை மூலம் பெரும்வாரியாய் குணப்படுத்தி வருவதற்காய் அவருக்கு இந்த விருது வழங்கப் பட்டது. எளிய பிள்ளைகளுக்கு எந்த லாப நோக்கமும் இல்லாமல் உலகம் முழுதும் சுற்றித் திரிந்து, திரட்டிய பணத்தையே கொண்டு சிகிச்சை அளிப்பவர் இவர்'- என்று டாக்டரின் சிறப்புகளைப் பாட்டியலிட்டது கட்டுரை.

வெளியாகியிருந்த புகைப்படத்தைக் கூர்ந்து பார்த்தாள். சின்னத்தை குறிப்பிட்ட டாக்டர். மாணிக்கத்தை சந்தித்ததில்லை - ஆனால் இவரின் வயது நாற்பதுக்குள்தான் இருக்க வேண்டும் - புகைப்படம் ஒத்துப் போனது. தவிர சிறுமலைப் பகுதி என்பது இதுதான்... வேறு யாராய் இருக்கக் கூடும்?

கட்டுரையின் முடிவில் முழுத் தெளிவு கிடைத்தது.

'திருமண பந்தத்தில் இதுவரை சிக்கிக் கொள்ளாத இம்மருத்துவ மாணிக்கம், தன் வெற்றிக்கு முழு காரணம், ஒரே காரணமாய் குறிப்பிடுவது திரு. கங்காதரன் அவர்களைத்தான். தன்னிடம் கணக்குப் பிள்ளையாய் சேர்த்து விடப்பட்ட பையனின் திறமை, ஆர்வம் புரிந்து அவனை மேலும் படிக்க உதவிய எஸ்டேட் முதலாளி அவர். ஆதலால் தான் பெறும், பெயரும் புண்ணியமும் அப்பெரியவரையே சேர வேண்டும் என்கிறார்' - என்ற முத்தாய்ப்புடன் முடிந்திருந்தது பேட்டி.



ஆக இது சரோஜாத்தையின் மாணிக்கமேதான்! சில நிமிடங்கள் ஆனது சந்தோஷம் முழுதுமாய் புரிய... உள்ளிறங்க. டாக்டர் தன் தந்தையைப் போற்றியதை விடவும் இன்னொரு விஷயம் இவளுக்குத் தித்தித்தது. அது அவருக்குத் திருமணம் ஆகவில்லை என்ற தகவல்தான்!

பரபரத்தாள் - ஒருவேளை சின்னத்தை இதை வாசித்திருப் பார்களோ? பத்திரிகை இந்த வாரத்திற்குரியது-

இன்று செவ்வாய்க்கிழமை - யாரும் புரட்டிப் பார்த்த சுவடு இல்லாமல் பளபளத்தாள் 'ராணி.'

மீண்டும் நிதானமாய் கட்டுரையை வாசித்து, தலையணைக்குள் 'ராணி'யை ஒளித்து வைத்தாள்.

ஐந்தாம் நிமிடம் 'ராணி'யின் சென்னை அலுவலகத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு டாக்டர் மாணிக்கத்தின் விலாசத்தைப் பெற்றுக் கொண்டாள்.

அதீத உற்சாகத்தில் தலை கிறுகிறுத்தது!

அவருக்கும் எப்படி எழுதுவது... என்னவென்று ஆரம்பிப்பது? பதில் எழுதுவாரா... அல்லது நேரிலேயே வந்து நிற்பாரா? இத்தகு யோசனைகளில், மகிழ்வில் அவளுக்குத் தன் சொந்த குழப்பங்கள், வேதனைகள் எல்லாம் மறந்தே ஒதுங்கின.

"சின்னத்தை, இன்னைக்கு மொட்டை மாடியில நிலாச் சோறு சாப்பிடலாமா?"

ஆச்சரியமாய் இவளைப் பார்த்த சரோஜாவின் முகம் மலர்ந்தது.

"ஓ...! கலந்த சாதம், வடகம் எல்லாம் தயார் பண்ணச் சொல்லிடறேன். மாடியைக் கூட்டி, தண்ணி தெளிச்சு வைக்கவும் சொல்றேன்."

அன்று பாதி நிலா வானில் மிதந்தது - கவனமாய் அரியப்பட்ட பாலாடைக் கட்டி போல கிடக்க, சுற்றிலும் சோம்பலாய்

கண்சிமிட்டிய நட்சத்திரக் கூட்டம். மலைப்பிரதேசத்துக்கே உரிய குளிர்காற்று.

"ஹ்ஹா... அற்புதமாயிருக்கு... இல்லத்தை?"

"ஆமா. முன்னே வாரந்தவறாம இங்க வருவோம். டிவி. டிஷ் எல்லாம் வந்த பிறகு பறிபோன சுகங்களில் நிலாச்சாப்பாடும் ஒன்னு."

பொதுப்படையாய் சுற்றிய பேச்சை தனக்கு வேண்டியது போல மாற்றினாள் மாயா.

"எங்கம்மாவை உங்களுக்குப் பழக்கமில்லை இல்லியாத்தை?"

"இல்லம்மா - எஜமானியம்மாவாப் பார்த்ததுண்டே தவிர பழகினதில்லை..."

"அவங்களுக்கு அடிக்கடி வயிற்று வலி வரும்னு...?"

"அது தெரியும் - அது குணமாகலைங்கறதால வெளியே புற்று நோய்னு சொல்லிக்கிட்டாங்களேத் தவிர அது புற்றில்லை...."

"பின்னே?... நாங்கூட அப்படித்தான் நினைச்சேன்.."

"மருத்துவக் குறிப்புகளை நீதானம்மா எடுத்திட்டுப் போனே? வாசிச்சால் தெரியும்..."

"அம்மாவின் மரணத்தைப் பற்றி விளக்கற பக்கங்கள்... அதனால எனக்கு அதை வாசிக்கற துணிவில்லை போல..."

"அப்ப.. வேணாம்."

"அப்புறம் அத்தை, யோசிச்சேன் - அஸ்வினி சித்தி 'டைப்' செய்து கடிதம் போட்டாங்க டாக்டர் சாருக்கு - சரி. ஆனா அவர் ஏன் அதை நம்பணும்?"

"அது ஏழைகளுக்கே உரிய புத்திம்மா-

'உன்னைவிட பணக்காரன் எனக்குக் கிடைச்சசாச்சுன்னா' போதும் - அவமானத்தில் சுருண்டுருவாங்க - ஒரு விதமான தாழ்வு மனப்பான்மை அது. தனக்குப் பணமில்லை - அதனால வர்ரவளுக்கு தான் உசத்தி இல்லைங்கற காம்ப்ளெக்ஸ் - தவிர,



டாக்டர் தடாலடியாய் பேசிப் பழகிறவர் இல்லை. தனக்குள்ளேயே குமையற ரகம்."

"ம்ம்- உண்மை - இல்லைன்னால் உங்களிடம் பேசி, பழகி கடிதத் தொடர்பேனும் ஏற்படுத்தியிருப்பாரே."

"அஸ்வினிம்மா மனுஷ போக்கு புரிஞ்சவங்க. அந்த விதத்திலே புத்திசாலி. மாணிக்கத்தை ஓரளவு எடை போட்டுத்தான் இந்த முயற்சியிலே இறங்கியிருக்கணும் - கடிதம் கிடைச்சதும் அவர் என்னைத் தேடி வந்து, 'என்னடீ - என்ன எழுதியிருக்கே? திமிரா?'ன்னு அதட்டமாட்டார், குறைந்தபட்சம் விளக்கம் கேட்டு கடிதங்கூட எழுதமாட்டார்ன்ர நிச்சயம் - அவங்க குறியும் தப்பலை."

"ஆனால் இன்னாருக்கு இன்னார்னு கடவுள் நிச்சயம் ஒரு குறி வச்சிருப்பார்னு நினைக்கறேன் அத்தை... அதை மனுஷங்க குறுக்கிட்டு மாத்த முடியாது. உங்களுக்கு டாக்டர் தான் - அவருக்கு நீங்கதான்னா..."

"நா அப்படியெல்லாம் யோசிக்கறதேயில்லை மாயாம்மா. அவர் இந்நேரம் எங்கேயிருந்தாலும் மனைவி, குழந்தைகள்னு நிறைஞ்சு வாழ்ந்திட்டிருப்பார்."

கண்களை இடுக்கி சரோஜாவை ஆராய்ந்தாள் இளையவள்.

"அதெப்படி சொல்றீங்க - அவர் உங்களையே நினைச்சுட்டு தனியே கூட இருக்கலாமில்லையா - அதாவது பிரம்மச்சாரியாய்?"

"தெரியலைம்மா - ஆனா ஒன்னு மட்டும் நிச்சயமாத் தெரியும். நாங்க இப்படியே இருக்கணும்ங்கறது தேவ சித்தம்னா இப்படித்தான் கடைசி வரை... சந்திக்கணும்னு இருந்தா பார்த்துக்குவோம்-"

"அப்ப சந்திக்கணுங்கற ஆசை இருக்கு இல்லியா?"

"ஒரே காரணத்துக்காய் - நான் அவரை மறுதலித்து கடிதம் எழுதலைங்கறதை வேணும்னா அவரிடம் விளக்கிச் சொல்லலாம் - அவர் மனசு சற்று ஆறுதல் படும்."

சலனமேயின்றி சொன்னாள் சரோஜா. பிறருக்காய் உழைக்கும், உருகும் அகத்தின் அழகு அவள் முகத்திற்கு மெருகிட்டிருந்தது.

இறைவன் தனக்கு விதித்திருக்கும் வழி நடக்கத் தயங்காத குணம். ஆக அலட்டிக் கொள்ளவே நேராத நிறைந்த அமைதி. சரோஜாவிற்கு உட்காருவதை விட ஓடியாடி வேலை செய்வது பிடிக்கும். தைக்கும் நேரம் போக சதா தேனீ போல அலையும் சுறுசுறுப்பு. ஆக உடம்பு வடிவாயிருந்தது.

"இப்ப என் நினைப்பு, ஜெபம் எல்லாம் உனக்காகத்தான் மாயாம்மா. நீ நல்லபடி நிறைஞ்சு வாழறதைப் பார்த்து நாங்க நிறையணும்."

வேலைக்காரர்கள் சாப்பிட்ட பாத்திரங்களை எல்லாம் ஒழித்து கீழிறங்கிய பிறகும், மாயா மொட்டை மாடியிலேயே சற்று நேரம் உலாவினாள். டாக்டர் மாணிக்கத்திற்கு எழுத நினைத்த கடிதத்தை மனதுக்குள் வடிவமைத்து விட்டாள். இன்றிரவே எழுதி மறுநாள் பதிவுத் தபாலில் அனுப்பி விட்டால் - நாளை மறுநாள் தற்சமயம் சென்னையிலிருக்கும் அவரது கைக்குப் போய் சேர்ந்து விடும்.

அவர் வெளியூர், நாடு என்று போகாதிருக்க வேண்டுமே- என்று ஒரு குழந்தையின் பதைப்பு, எதிர்பார்ப்புடன் தன் அறைக்குப் போனாள் மாயா.

## 20

மறுநாள் காலை கண்விழித்தவளிடம் நினைத்ததை செவ்வனே செய்து முடித்த உற்சாகம் இருந்தது. தன்னிடம் இத்தனை பெரிய - பல ஆண்டுகளாய் பூட்டிக் கிடந்த - ரகசியம் ஒன்று இருப்பது யாருக்கும் தெரியாதே என்ற செல்ல பீற்றல் கூட- குளித்து. நேர்த்தியாய் எடுத்து இறங்கினாள். மனசு பொங்கித் ததும்பும் போது அது உடையிலும் தோற்றத்திலும் வெளிப்படுகிறதுதானே-



"அடடே மாயாம்மா, இன்னுங் கொஞ்சம் நேரங் கழிச்சு எழுந்திருக்கலாமே நீ?"

"ஆறரைக்கு மேலே படுக்கையிலே புரண்டால் சோம்பேறின்னுவீங்களே அத்தை..."

"அது வெட்டிப் பயலுங்களுக்கு - உனக்கில்லை."

சரோஜாவின் பார்வை இவளைக் கேள்வியும் அளந்தது.

'எங்கேயும் வெளியேப் போகிறாயா?' - என்பது போல

"திண்டுக்கல் போகணுமத்தை - தபால் ஆபீஸிலே கொஞ்சம் வேலையிருக்குது."

"அதுக்கு ஏம்மா அவ்வளவு தூரம்? அங்கேயே ஸப்- போஸ்ட் ஆபீஸ் உண்டு - வேணு பதினொரு மணி போல போவான் - நீ சொல்ற வேலையை கச்சிதமாச் செய்துட்டு வருவான்."

பத்து மணிக்குக் கிளம்பிய ஜீப்பில் மாயாவும் பிடிவாதமாய் ஏறிக் கொண்டாள். கடிதத்தைப் பதிவு செய்து பெட்டியுள் சேர்த்த பிறகுதான் நிம்மதியாயிற்று.

கடிதம் இன்னும் உரியவர் கைக்குக் கிடைத்திராது என்பது தெரிந்தாலும் மறுநாளில் இருந்தே அவளுக்குள் ஒரு விதப் பதட்டம்-

"இங்கே தபால்காரர் எத்தனை மணிக்கு வருவான் பொன்னி?"

"ஆங்... நம்ம வீட்டில கவுச்சி குழம்பு வாடை அடிச்சா மதியம் போல வருவாரு..." சிரித்தாள் வேலைக்காரப் பெண்.

"சொல்லேன்."

"தபாலைப் பொறுத்தும்மா - நடுப்பகலு ஆயிரும்."

திடீரென தொலைபேசி மணியடிக்கவும் அவளுக்குள் மின்னலாய் அடுத்த எண்ணம். தன் விலாசத்தோடு வீட்டு 'பேசி' எண்ணும்தானே குறிப்பிட்டிருந்தாள்?

ஆக மாணிக்கம் அப்படியும் கூட தொடர்பு கொள்ளக் கூடுமே! ஆக சதா பூனைக் குட்டி தினுசில் வீட்டுக்குள்ளேயே சுற்றி வந்தாள்.

இளையவள் முகத்தில் ஒரு வித எதிர்பார்ப்போடு உல்லாசமும் தெரிய சரோஜாவிற்கு நிம்மதிதான் - என்ன விஷயம், ஏது என்பது அவளுக்குப் புரியவில்லை என்றாலும் ஏதோ சந்தோஷ சமாச்சாரம் தான் என்ற ஆசுவாசம்!

“அத்தை, நான் இன்னும் ரெண்டு நாளுக்கு வகுப்பு எடுக்கலை...”

“சரி - மாயாம்மா - நாங்க பார்த்துக்கறோம்.”

“அடுத்த வாரம் இப்ப எடுத்த விடுமுறைக்கு ஈடு கட்டிடரேன் - என்ன?”

“உன் இஷ்டம்மா.”

மறுநாள் காலையில் புடவை கொசுவிக் கொண்டிருந்தவளை பொன்னி அழைத்தாள்-

“யம்மா - உங்களுக்கு வெளியூரு போனு...”

சேலையைச் சுருட்டி செருகியபடி படிகளில் தாவி இறங்கினாள்.

“ஹலோ...?”

“நாந்தான் அரவிந்த்.”

“ஹா... நீங்கதானா?” - ஏமாற்றத்துடன் சலித்தாள்.

“என்னம்மா காதலன் வேஷம் போட்டாத்தான் சிரிச்சு பேசுவீங்களா- இல்லைன்னா இந்த அலட்சியந்தானா?”

“இல்லையில்லை... எப்படி இருக்கீங்க? அம்மா, அனு எல்லாரும்...”

“முந்தா நாள் போன் செய்தேனே...?”

“அப்படியா?”

“மாறன் சொல்லலை?”



அன்றுதானே இவள் மரணத்தின் விளிம்பு வரை சென்று மீண்டது.

“மறந்துட்டாங்க போல... என்ன விஷயம்?”

“எல்லாரும் உன் புண்ணியத்திலே நல்லாயிருக்கோம் - நன்றின்னு சொல்லத்தான் மாயா.”

“கடவுளுக்கு நன்றி சொல்லுவோம் அரவிந்த்.”

“உன்னைச் சந்திச்சதே அவர் கருணையாலத்தான் - மாறன் எத்தனை பெரிய உதவியை நிமிஷமாய் செய்துட்டார். இல்லைன்னா அம்மா ‘கோமா’விற்குள் போயிருக்கக் கூடும் - இப்ப நல்லாப் பேசறாங்க - சாப்பிடறாங்க.”

“சந்தோஷம் - உங்க தங்கை?”

“ஒரு லட்சத்தைக் கண்டதும் அவ புருஷனுக்கு நல்ல புத்தி வந்திடுச்சு.”

“ஒன்னு கேட்கட்டுமா அரவிந்த்?”

“தாராளமா.”

“இந்தக் காலத்தில ஒரு லட்சம் பெரும் தொகைன்னு இல்லை, அனு அதை உங்களுக்கு சாதாரணமாக் கொடுத்திருக்க முடியும்.”

“கட்டப் போற மனைவிட்டேருந்து பணத்தை எதிர்பார்க்க வேண்டாங்கற எண்ணம். இப்போ மாறன்ட்டேயிருந்து கிடைச்ச கடனை மறுவாரமே அடைச்சிட்டேன்., டிடி. எடுத்து அனுப்பினேன் - பத்திரமாய் வந்து சேர்ந்ததான்னு கேட்கதான் முந்தா நாள் போன் போட்டது.”

“என்ன இத்தனை அவசரமாய்?”

“பூர்த்தியான நாலு ஓவியங்களை மித்த கோட்டோவியங் களையும் பார்த்த நிறுவனம் மொத்தமாய் எனக்குப் பணம் தந்துட்டாங்க. என் தேவையும் அவங்களுக்குத் தெரியும் - அதான் மாறன்ட்ட திருப்பிட்டேன். இதையே அனுகிட்ட வாங்கித் திருப்பித் தந்தால் வாங்க மாட்டேனுவா. பிரிச்சு பார்க்காதீங்கன்னுவா - தவிர பணமே தகராறு பிடிச்ச சமாச்சாரந்தானே-”

"மறுபடி உங்க மாப்பிள்ளை பணங்கேட்டு தகராறு பண்ணாம இருந்தா சரி.. ஸாரி, அரவிந்த் - நான் நல்ல எண்ணத்தில சொல்றேன்."

"புரியுது மாயா - அதிலேயும் ஒரு அதிசயம் பாரேன்- கிடைச்ச லட்சத்தில முக்கால்வாசியை மாப்பிள்ளையோட அம்மா தன் மகளுக்காய் செலவு பண்ணனும்னு திட்டம் போட, பயலுக்கு... அதான் எங்க மாப்பயலுக்கு உறைச்சிருச்சு!"

"ஆக மாமி, நாத்தனாருக்குத்தானா அந்த லட்சம்?"

"ஏறக்குறைய, 'என் தொழிலை விருத்தியாக்கன்னு நா பெண்டாட்டி வீட்டைப் பிழிஞ்சு கறந்த பணம் உங்க புடவை, நகைன்னு ஆசையில் அழிய வேணாம்'னு பயல் சுதாரிச்சுட்டான். இப்ப இங்க வந்து ஒட்டிகிட்டான் - இனி புத்தி வந்திடும்."

பேசி முடித்த மாயாவின் மனம் இலகுவாகி இருந்தது. அனு, அரவிந்தனது வாழ்க்கையில் விழுந்த சில வேண்டாத முடிச்சுகள் விலகி சீராகி விட்டது என்ற நிம்மதி.

சமயம் புரிந்து இரண்டாம் நபருக்குத் தெரியாமல் அரவிந்தனுக்கு உதவிய மாறன் மீது மதிப்பு கூடியது.

'என் உயிரே' என்று முன்தினம் தன்னை மடியிலிட்டு உன்மத்தனமாய் அவன் உருகியது நினைப்பு வர கன்னங்கள் கனிந்தன. ஆனால் அது உண்மையெனில் ஏனிப்படி மீண்டும் அதே கருங்கல் முக பாவனையுடன் இருக்கிறான்? தன்னைப் பார்த்து ஒரு புன்னகை. அன்பான சின்ன விசாரிப்பு - ஹூம் எங்கே - ஆளையேக் கண்ணில் காணவில்லையே.

அன்று முழுக்க நிலை கொள்ளாமல் நடந்தாள் - அத்தனை விலாவாரியாய் டாக்டருக்கு கடிதம் எழுதியிருக்க வேண்டாமோ? - அதுவும் முகம் தெரியாத மனிதருக்கு.?

அஸ்வினியின் சகுனி வேலையைப் பற்றி கடிதத்தில் வாசிப்பவர்.

'என்ன, இந்தப் பெண் தன் சித்தியைப் பற்றி இப்படி எழுதி விட்டது!' - என்று முகம் சுளிப்பாரோ?



சின்னத்தையின் தவிப்பு, தனிமை தீர வேண்டும் - அதற்காக எதுவும் செய்யலாம் தப்பில்லை.

டாக்டர் ஒரு வேளை இந்த வயதிற்கு மேல் எனக்கு திருமண பந்தத்தில் நாட்டமில்லை என்று விட்டால்?

என்ன வயசு...? வால் போல பெயருக்குப் பின்னே பல பட்டங்களைச் சேர்த்த பின், வேலையிலும் ஓர் நிலைக்கு வந்து இக்காலத்தில் பலர் கல்யாண பந்தம் ஏற்படுத்திக் கொள்வது முப்பதுகளில்தானே ... இதை அவரிடம் சொல்லி விட வேணும்.

படிப்பு, வேலை, பெற்றோருக்கான கடமைகள் என்று மின்னலாய் காலம் கடந்து போக, ஆற அமர்ந்து சுற்றிலும் சுழலும் வாழ்வை அனுபவிப்பது நடுவயதில்தான்.

அந்நேரம் பருவத்தை பகிர்ந்து மகிழ ஒரு துணை அவசியம்.

தன்னதென்று ஒரு வீடு வேண்டும். நாளைத் தன்னைத் தாங்க என்றில்லாவிட்டாலும் தான் இவ்வுலகில் வாழ்ந்ததின் சாட்சியாய் விட்டுச் செல்ல தன் பிம்பமாய் ஓரிரண்டு நல்ல பிள்ளைகள் அவர்கள் நின்று நிமிர்ந்து வாழ்வதைப் பார்க்கும் திருப்தி.

நூற்றுக்கிழவியாய் தான் சிந்திப்பது அவளுக்கே சிரிப்பூட்டியது. அதுவும் வேறு இருவரைப் பற்றிய கரிசனையில் இத்தனை கற்பனைக் கோட்டைகள்...

ஆனால் அவள் ஒன்றும் நீங்கள் இருவரும் கல்யாணம் செய்தால் தான் ஆயிற்று என வற்புறுத்தப் போவதில்லையே - நாகரீகமாய் தானே கடிதத்தில் கோடி காட்டியிருந்தாள் -

'சின்னத்தைக்கு இதுவரை ஏனோ கல்யாண எண்ணமே இல்லை.

டாக்டரைப் பற்றி சரோஜாத்தை மிக உணர்வாக சொன்னதால் தான் இவ்விரிவான கடிதம்' - என்று?

மாணிக்கத்தின் பெற்றோரும் பல வருடங்களுக்கு முன்பே எஸ்டேட்டை விட்டு போய்விட, அவர் இங்கு வரும் சந்தர்ப்பம்

வாய்க்கவில்லை - இருவரிடையே இப்போது ஆவலாய் ஒரு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதில் தப்பென்ன?

அன்றிரவு உணவை அபூர்வமாய் சேர்ந்தே அமர்ந்து உண்டனர். சரோஜா, மாறன், மாயா இடையே பேச்சு இயல்பாக உருண்டது. மாறன் அப்பளத்திற்காக கை நீட்டியபோது இவளே எடுத்துப் போட்டு அவனது தட்டில் ரசமும் ஊற்றினாள்.

இதைக் கவனித்த சரோஜாவின் முகத்தில் அலாதி திருப்தி. அவளது வாழ்க்கையே இவர்களைச் சுற்றிதான் என்றாகி விட்டதே. அத்தையின் திருப்தியைக் கவனித்த மாயாவிற்கு மீண்டும் ஒரு பெரிய சந்தேகம் முளைத்தது.

சரோஜா டாக்டரை மணக்க மறுத்து விட்டால்?

சின்னத்தை, 'மாறனுக்கும் உனக்கும் என்னம்மா தகராறு - ஏன் பெங்களூர் ஓடிப் போனாய் என்று பலமுறை நயந்து கேட்டும் வாயே திறக்காத தான். 'நீ இப்படி செய் அவரைப் பார்' - என்று சொல்லக் கூடுமா? இருவருக்கும் வெவ்வேறு நியாயங்களா?

குற்ற உணர்வு குத்தியது.

ஆனால் தானா மாறனை மணக்க மாட்டேன் என்பது? அவன்தானே முழுசாய் இன்ன காரணம் என்று சொல்லாமல் சுற்றி வளைத்து 'நான் உனக்கில்லை' என்று நழுவுகிறான் - பிடி கொடுக்காத விலங்காய் சுற்றி அலைகிறான்!

இது இந்த வீட்டின் சாபமோ...? மூவருமே ஒண்டிக் கொக்குகளாய் இப்படி வெற்று தவத்திலேயே காலம் கழிக்க வேண்டியதுதான?

இல்லை... தலையை உலுக்கிக் கொண்டாள்- அப்படி நேரக்கூடாது. அதற்காய் எடுக்கும் முயற்சிதான் டாக்டருக்கு எழுதிய கடிதம்... அதற்கு பலன் இருக்க வேண்டும். பாதி எண்ணமும் மீதி வேண்டுதலாயும் யோசித்தாள்...

'பேசி'மணி ஒலித்தது.

மணி ரீங்காரத்தில் மனம் துள்ளியது - கூடவே உடலும்!



ஓடிப் போய் எடுத்தாள்.

பேசியது ஒரு புது ஆண் குரல்.

தன் நெஞ்சம் எகிறித் துடித்தது மாயாவிற்குக் கேட்டது. அவளது முகபாவனையை சற்று கரிசனையும் கலக்கமுமாயும் பார்த்திருந்தனர் சாப்பாட்டு மேசையில் இருந்த மற்ற இருவரும். அதில் மாறனது கழுகுப் பார்வை.

ஆக முகத்தைச் சற்றே சுவர் பக்கமாய் திருப்பியபடி நின்றாள்.

"ஆமா, ஆமா.. நான்தான் பேசறேன்."

"--------"

"வணக்கம்.... டாக்டர்... சரி."

"--------"

"ரொம்ப சந்தோஷம்... ம்ம். மலை அடிவாரத்துக்கு வந்து காத்திருக்கேன் - சேர்ந்தே வீடு வரலாம்..."

"---------"

"ஆமாம் நாம் தனியாய் பேச அது ஒரு சந்தர்ப்பம்."

பத்து முறைகளேனும் 'சரிசரி' என்றபிறகு தொலைபேசியை வைத்த அவள் முகம் பிரகாசித்தது.

"யாரோ ரொம்ப முக்கிய பேர்வழி போல?"

"ம்ம்- அ.மு.க.வைச் சேர்ந்தவர்."

"அரசியல் ஆட்களோடெல்லாம் உனக்குத்...?" மேலும் கலவரமானாள் சரோஜா.

"ம்ஹூம் - இவர் 'அதிமுக்கிய கனவான்! அதைத்தான் அ.மு.க.ன்னேன்." - கண்சிமிட்டினாள்.

"டாக்டர்னு சொன்னே... யார் - பெயரென்ன?"

ஒருகணம் விழித்தாள் மாயா.

மாணிக்கம் என்றால் குட்டு வெளிப்படக் கூடும். ஆக சுற்றி வளைத்தாள் - ரொம்ப பிரபலமான டாக்டர் இவர் சின்னத்தை. அகில

இந்திய அளவில் சமீபத்தில ஒரு விருது கூட கிடைச்சிருக்குது அடிக்கடி வெளிநாடுகளுக்குப் பறந்து. அங்கே ஆராய்ச்சி கட்டுரைகளை வாசிக்கறதும், நவீன அறுவை சிகிச்சை முறைகளைக் கத்துக்கறதும்னு பெரிய மனுஷர்..." கண்களை உருட்டி உதடுகளைப் பிதுக்கினாள்.

"சித்தி அவர் பெயரென்னன்னு கேட்டாங்க." - வெகு அமர்த்தலாய் சொன்னான் மாறன்.

"அ... அதான் சொல்ல வரேன்... அவரு பேர் டாக்டர்... செஞ்சுடர்!"

"விநோதமான பெயராய் இருக்குதே."

"ஆமாமில்லையா? அவரைப் பெற்றவங்க தமிழ்வாணன் வாசகர்களாம் - அதான் அப்படி ஒரு பெயர்!"

சிரிப்பு முட்டினாலும் சிரிக்காமல் சொன்னாள்.

மாணிக்கம் என்பது செஞ்சுடர் வீசும் கல்தானே?

## 21

"அத்தான், நாம் நாளை காலை ஏழுக்கெல்லாம் சிறுமலை அடிவாரத்துக்குப் போயிடணும்." படுக்கப் போன மாறனைத் தனியே மறித்து. தணிந்த குரலில் சொன்னாள் மாயா.

"டாக்டர் செஞ்சுடரைக் கூட்டி வரவா?"

"ஆமாம் நீங்க ஃப்ரீதானே - தவிர போற வழியிலே உங்களிடம் அவரைப் பத்தி பேசணும்."

"இப்பவே பேசலாமே?"

அவனது ஆர்வம் புரிய புன்னகைத்தாள்.



"வேறு யாருக்கும் தெரிய வேணாம் - தவிர நீங்களும் அவரைச் சந்திக்கணும்."

அவனது விழிகள் சற்றே சுருங்கி அவளை ஆராய்ந்தன.

இவள் புன்னகை மேலும் விரிந்தது.

"இல்லை... இது அரவிந்தனை இங்கே அழைச்சு வந்ததைப் போல, நான் அரங்கேற்றுற அடுத்த நாடகமில்லை."

"பெயர்... கொஞ்சம் விசித்திரமாய்.. நாடகத்தனமாய் இருந்துச்சு.." தன்னை அவள் தன் அந்தரங்கத்துள் சேர்த்துக் கொண்ட திருப்தியில் அவனும் புன்னகைத்தான்.,

'புன்னகைதான் மனித முகத்திற்கு எத்தனை பெரிய அலங்காரம்' - என்ற நினைப்பில் அவனை ஆசையாய் பார்த்தவள் -

"அவரது நிஜப் பெயர் மாணிக்கம் - டாக்டர். மாணிக்கம்."

"ஓ..? போலியோ ஒழிப்புக்காகவும் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் சேவைக்காகவும் விருது பெற்றவரா..?"

ஆச்சரியமும் மதிப்புமாய் மாறனை ஏறிட்டாள்.

"அவரேத்தான் - சின்ன அத்தையிடம் இப்ப எதுவும் சொல்ல வேணாம்.."

அவன் வெறுமே தலையசைத்தான் - இவனுக்கும் ஓரளவு விஷயம் தெரிந்திருக்கும் போல...

மறுநாள், முழுதும் புலராத இளங்காலை நேரப் பயணம் ரம்மியமாய் இருந்தது. சிகப்பு சால்வையை தலையைச் சுற்றி போர்த்தியிருந்தாள் மாயா - அதையும் மீறி குளிர் ஆட்டியது. சிகப்பு விளிம்பிட்ட பூரண சந்திரனாய் பொலிந்தது அவளின் முகம்.

முடிந்தவரை அவளைப் பார்க்காமல் சாலையில் கண்பதித்த மாறன் அவள் சொன்னதை மட்டும் கவனமாய் கேட்டுக் கொண்டான்.

சரோஜா தன்னிடம் டாக்டர். மாணிக்கத்தைப் பற்றி சொல்ல நேர்ந்ததையும், அதைக் கேட்ட சில நாட்களிலேயே அவரைப் பற்றி

பத்திரிகையில் செய்தி வர, தான் அதை வாசிக்க நேர்ந்தது இவரேத்தான் அவர் என்பது புரிந்து கொண்டதைச் சொல்ல. அவனும் மகிழ்வது புரிநதது... ஆனால் விழியோரத்தில் குழப்பத்தின் சாயலும் தெரிந்தது.

"உன்" முயற்சியைப் பாராட்டறேன் மாயா. அஸ்வினிம்மா அப்படி செய்ததாய் ஒத்துக்கிட்டாங்களா... என்ன?"

"தான் சாகற நேரம் அவங்க சரோஜாத்தையை வரவழைச்சு, தான் செய்த குற்றத்தை... பாவத்தை ஒத்துக்கிட்டாங்களாம்..."

"இப்படி... இப்படியுமா செய்வாங்க?" திகைத்து அப்பாவியாய் தெரிந்த அந்த ஆண்முகத்தை அந்நேரம் பார்க்க வெகு பாவமாய் இருந்தது.

பெண்களில் பல சூழ்ச்சிகள் ஆண்களுக்குப் பரிவதும் கூட இல்லை.

'அவளுக்குகென்ன தெரியும் - படிச்சவளா இல்ல உத்தியோகத்துக்குப் போய் வெளியுலகத்தைப் பார்த்தவளா?' என்று ஆண் அலட்சியப்படுத்தும் பெண் வீட்டின் சுவர்களிடையே பல பாடங்களைக் கற்று விடுகிறாள் - தன் திறமைகளை, சாமர்த்தியங்களைக் கூர்தீட்டி வைக்கிறாள் - சொற்ப காலத்திலேயே தன் சுட்டுவிரலில் ஆணைக் கட்டிப் போட்டு விட, அதைக் கூட முழுமையாய் அவள் ஆட்சிக்குக் கீழ் வந்த பிறகே அவன் உணருகிறான்!

"சினிமாப் பாட்டு புத்தகமும், பத்திரிகையுமா இருந்த அவங்களா இப்படி ஒரு கடிதத்தை டைப் செய்து பொய் கையெழுத்து போட்டு...?"

மாறனது நெற்றி சுருங்கியது.

"நீங்க நம்பலைன்னா அதன் கார்பன் பிரதியுங் கூட சின்னத்தைட்ட இருக்கிறதாய் குறிப்பிட்டாங்க... வாங்கிப் பார்த்துக்கோங்க."

"நீ பிரதியைப் பார்த்தியா?"



"அவசியமில்லைன்னு நினைக்கிறேன். சின்னத்தை மேல எனக்கு முழு நம்பிக்கை இருக்குது."

அவன் சிந்தனையில் மூழ்கியிருந்தான்.

"பொய் கையெழுத்திடறது... ஜெயிலுக்குப் போகுமளவு பெரிய குற்றம்."

"தீயில் வெந்த வேதனையிலும் கூட பாவமன்னிப்பாய் இதைச் சொல்லத் தவிச்சிருக்காங்க... அதுவே கொடும் தண்டனைதானே?"

"கடவுளின் தீர்ப்புகள் வலுவானவை.." - முணங்கியவன் முகத்தில் மேலும் குழப்பம்.

"காரை... நிறுத்துங்கத்தான்."

"அ... ஏன்.. என்னாச்சு?" நிகழ் உலகத்திற்குத் தடுமாறி இறங்கினான் மாறன்.

"நம்மைக் கடந்து போனது ஒரு டாக்ஸிதானே? ஒருவேளை அதிலே டாக்டர் இருப்பாரோன்ர சந்தேகம்."

"அடிவாரத்தில சந்திக்கறதாய்தானே ஏற்பாடு?"

"அவர் அவசரம் அவருக்கு!"

அதற்குள் அவர்களைக் கடந்து போன வாடகை வாகனமும் வேகம் குறைந்து நின்றது. அவர்களைத் தெரிந்து கொண்ட ஓட்டுனர் இறங்கி,

"மாறன் சார், இந்த ஐயாவை உங்க எஸ்டேட்டுக்குத்தான் கூட்டிட்டுப் போறேன்" - என்று சல்யூட் அடித்தார்.

மாறன் காரைத் திருப்பி நிறுத்துவதற்குள் மாயா இறங்கி ஓடினாள். வாடகைக் காரிலிருந்து இறங்கி நின்ற மனிதரை வெகு ஆவலாய் பார்த்தாள்-

"நீங்க... டாக்டர்?"

"மாணிக்கம் - வணக்கம் மாயாம்மா."

அவசரமாய் தானும் கைகூப்பியவன்.,

"சந்தோஷம்... வாங்க... தாமதமாக்கிட்டோமோ? மன்னிக்கணும்?" மகிழ்வில் கோர்வையற்று பேசினாள். பார்த்ததுமே அவரைப் படித்துப் போனது - எதிர்பார்த்ததை விட அம்சமாய், இளமையாகவேத் தெரிந்தார் டாக்டர்- கண்ணியமான சிரிப்பும், கனிவான பார்வையும் யாரையும் ஈர்த்து விடும். பல ஆண்டுகளின் தன்னலமற்ற சேவையும், அறிவுத் தேடலும் அவர் முகத்தில் பதிந்து அதைக் கனிவாக்கியிருந்தன.

"நான்தான் அவசரப்பட்டுட்டேம்மா. இத்தனை வருஷங் கழித்து, பிறந்து வளர்ந்த ஊரைப் பார்க்கற ஆர்வம்... அதான்."

'அ.. அ.. பிறந்த ஊரைப் பார்ப்பதற்கா அல்லது உங்களுக்காய் பிறந்தவளைப் பார்ப்பதற்கா?' - என்று மனதுக்குள்ளே 'டயலாக்' ஓடியது. ஆனால் புது மனிதரிடம் உடனே கொட்டிக் கவிழ்க்க முடியாமல்-

"வாங்களேன், நம்ப காரிலேயே போயிடலாம்.. இவர்தான் மணிமாறன்." அறிமுகப்படுத்தினாள். பரஸ்பரம் வணங்கினர்.

இருநிமிடங்களிலேயே வாடகை ஓட்டுநரிடம் பணம் தந்து விட்டு, டாக்டரின் பெட்டியைத் தங்கள் வாகனத்திற்கு மாற்றி விட்டான் மாறன்.

மரியாதை நிமித்தம் மாயா டாக்டருடன் பின் இருக்கையில் அமர்ந்தாள் - அவரது உயரம், உடைகள் எல்லாமே அவளுக்குத் திருப்திதான்.

"சரோஜாவும் வருவாங்கன்னு நினைச்சேன்.." - என்றார் டாக்டர் மெள்ள. அவளுக்கு அது எல்லாவற்றையும் விட பிடித்திருந்தது. அவரது நோக்கம் தெளிவாகிறதே!

"சரோஜாத்தைக்கு ஏதும் தெரியாது. நீங்க வாசல்ல வந்து இறங்கறதைப் பார்த்ததும் அவங்க மயங்கி விழறதை நாங்க பார்க்கணும்!"

"பாவம்... சொல்லாம கொள்ளாமல் நாம் போய் நின்னா... ஏம் மாயாம்மா இப்படி...?" தயங்கினார்.



"எனக்கு 'அம்மா' பட்டமெல்லாம் வேணாம் டாக்டர் - ஒருமையிலே 'நீ - வா' ன்னே பேசலாம்.."

"அ... அதெப்படிம்மா? நீங்க என் முதலாளியின் மகள். என்னை இந்த நிலைக்கு உயர்த்திய பெரியவரோட வாரிசு - கண்டிப்பாய் மரியாதை தரணும்."

"அதெல்லாம் அவசியமில்லை..."

"அதுக்குமுன்னே உங்ககிட்ட மன்னிப்பு கேட்கணும் நான். இத்தனை நாளாய் எந்நெஞ்சில குத்தின முள்ளை எடுத்துப் போடற அவசரத்திலதான் இப்படி விழுந்தடிச்சு ஓடி வந்தேன்."

என்ன சொல்ல வருகிறார்?

கேள்விக் குறியுடன் டாக்டரை ஏறிட்டாள் மாயா.

'ரஞ்சனி அகம்' எதற்கென்று முழுதும் புரியாமலேயே விழாக் கோலம் பூண்டிருந்தது. வாசலில் வட்டமும் வண்ணமுமாய் பெரிய ரங்கோலிப் பூ.

வீட்டு வரவேற்பறை படு சுத்தமாகி மூலைக்கொரு மலர்சாடிகளில் மணக்கும் மலர்கொத்துக்களுடன் இருந்தது. சமையலறையில் நான்கு தினுசு பலகாரங்கள் தயாராகிக் கொண்டிருந்தன.

சரோஜா முகத்திலிருந்த துளிக் கலக்கம் கூர்ந்து கவனிப் பவர்களுக்கு மட்டுமே தெரிந்திருக்கும்.

'முன்பின் அறியாதவரை வரவேற்க இந்த ஆர்ப்பாட்டம் செய்கிறதே இந்தப் பெண்.' கேட்டால், 'இவர்தான் மைசூர் மஹாராஜாவின் ஆஸ்தான வைத்தியர் இவரது முகராசி, கைராசி எல்லாம் சொல்ல வார்த்தையில்லை' என்று நீட்டி முழக்குகிறது.

"காலையில் வடை, பொங்கலோடு பூரிக் கிழங்குமா போட? வயசாளிக்குச் செரிக்குமா?' என்றால் 'என்ன அவரா வயசாளி? நாற்பதைக் கூட தொடலையாக்கும். பார்த்தால் இருபத்தெட்டு என்றுதான் மதிக்கலாம். என்னா உடம்பு, எப்பேற்பட்ட முகம்!

அவரைப் பார்த்துட்டே இருக்கலாம் சின்னத்தை. உலகம் முழுசும் சுற்றி வந்தக் களை அவர் முகத்திலிருக்கும். அவர் இந்தச் சின்ன எஸ்டேட்டிற்கு வர நாம கொடுத்து வச்சிருக்கணும்'' - என வானத்திற்கும் புமிக்குமாய் குதிக்கிறாள்!

இத்தனை காலம் இல்லாமல் சுயம்பு போல எங்கிருந்து முளைத்தார் இந்த செஞ்சுடர்? மறக்கக் கூட்டிய பெயர் இல்லியே இது. இதை இதுவரை கேட்டதே இல்லை என்பது நிச்சயம். இதையெல்லாம் விட மாறனும் மாயாவுடன் சேர்ந்து கொண்டு மர்மப் புன்னகைப் பூத்ததுதான் சரோஜாவை மேலும் கலவரப்படுத்தியது.

'அவரை வரவேற்க அழகான பூச்செண்டு தயார் பண்ணிடுங்க அத்தை... அதை நீங்கதான் அவருக்குத் தரணும்' என்ற உத்தரவு வேறு!

உத்தாவுகளைப் போடும் போது இளையவளின் முகத்தில் தனி மிடுக்கு... உற்சாகம். டாக்டரின் மீது அவளுக்கு ஏக பிரமிப்பு... மரியாதை என்பது தெளிவு. ஆனால் அதுவே அளவிற்கு மிஞ்சினால் ப்ரேமை ஆகி விடாதோ? இந்தப் புது கோணத்தில் கவலைப்படலானாள் சரோஜா!

'ஹைய்யோ.. இவ்வளவுதானா.. ஒரு நிமிஷம் என்னை நடுங்க செய்திட்டீங்க டாக்டர்.'' - பெருமூச்செறிந்தாள் மாயா.

"கைக்கு வந்த ஒரு கடிதத்தை வச்சுகிட்டு ஓடி ஒளிஞ்ச என் செயலை இப்போ நினைச்சாலும் அவமானந்தாம்மா - எரிச்சலாய் கூட இருக்குது. உங்கப்பா சரோஜாவைக் கல்யாணம் செய்துக்கறதுக் காகவே என்னைப் படிக்க வச்சார் இந்த எஸ்டேட்டிற்கும் சுற்றியுள்ள கிராம மக்களுக்கும் மருத்துவ வசதி தேவை... என் பணத்தால, மாணிக்கத்தின் படிப்பால பல பேர் பயன் பெறணுங்கற உயர்ந்த நோக்கம். அத்தனை கல்வி தந்தும் நான் முட்டாளாய்-

'என்னைக் கல்யாணம் செய்ய ஒருத்தி மறுத்துட்டா'ன்னு மருகி, தாய்நாட்டுக்கு, மண்ணுக்கு வராம பதுங்கித் திரிஞ்ச கோழை...''

அவர் விழிகள் கசிந்தன.



"புரியுது டாக்டர்.. உங்க வருத்தம் நியாயமானது. ஆனால் அது அந்நேர இளமைக்குப் புரிஞ்சிருக்காதே...''

பரிவாய் பார்த்தாள்-

"அழகா நியாயப்படுத்தறேம்மா - நன்றி. பெரியவர் வம்சம் இல்லியா- பெருந்தன்மையாப் பேசறே - ஆனாலும் உங்கப்பாவின் சார்பிலே நீங்க என்னை மன்னிக்கணும்.''

சிரம் தாழ்த்தி கரம் குவித்தார்.

"ப்ளீஸ் டாக்டர் - ரொம்ப சந்தோஷமான நேரமிது. கெட்டகாலம் கழிஞ்சு நம்ம எல்லோருக்கும் நல்ல காலம் பிறந்திருக்குன்னு நினைத்து நல்லதாகவே பேசுவமே.''

"பழையன கழிதல் நல்லதுதாம்மா. ஆனால் முறையாய் கழிக்கணும். என் நடத்தையிலே மனசொடிஞ்ச எங்கப்பா அம்மாவும் கூட பெரியவர் முகத்தில விழிக்கக் கூசி, சாத்தூர் பக்கமிருந்த உறவுக்காரங்க கிட்டே போயிட்டாங்க. அவங்களோட சொச்ச காலம் அங்கேதான். நான் சில முறை போய் பார்த்திருக்கேன்... கடைசிவரை அப்பா முகந் தந்து எங்கூட பேசலை. அம்மாவிற்கும் திருப்தியில்லை. எங்கப்பா, பெரியவர் இறந்த சமயம் எல்லாம் நான் வெளிநாட்டிலே இருந்தேன்..''

"இப்ப எங்க எல்லாருக்கும் முழு திருப்தி.''

"அது உங்க கல்யாணத்தின் போதுதான் மாயாம்மா. இத்தனை சொத்தோடு கூட உங்களையும் கண்ணாய், பொறுப்பாய் பார்த்துக்கற மாப்பிள்ளை வர்ர போதுதான் எல்லாருக்கும் முழு திருப்தி.''

மாயா முந்தியடித்து பேச்சை மாற்றினாள்-

"இத்தனை வருஷங்கள் நீங்கள் கல்யாணம் செய்யாததற்கு உங்க காதல்தானே காரணம்?''

"ஏதோ டிவி. பேட்டி போலக் கேக்கறீங்க மாயாம்மா - இதைக் காதல்னு முடியுமா--- தெரியலை. பெரியவர் எனக்குப் பொருத்தமாய் இருப்பான்னு அபிப்ராயப்பட்ட பொண்ணு சரோஜா.

அவர் நோக்கம் தெரிஞ்ச பிறகு எங்களுக்கிடையே சில வார்த்தை, பார்வை பரிமாற்றங்கள் நேர்ந்தது - அவ்வளவுதான். ஆனால் அதிலேயே சரோஜா எந்நெஞ்சில் பதிஞ்சு போனா... வேறு யார் மீதும் பிறகு அப்படிப்பட்ட நேசம், நோக்கம் தோணலை அவ்வளவு தான்..."

"அதுதான் இயற்கை... உத்தமமான மனசு 'சட்'டுன்னு மாறிப் போகாது" - அபிப்ராயம் சொல்லியபடி மாயா மாறனை உறுத்துப் பார்த்தாள்.

## 22

எஸ்டேட் எல்லைக்குள் நுழையவும் காரில் இருந்தவர்களின் படபடப்பு இனிமையாய் கூடியது.

காஃபி செடிகளோடு, பூத்திருந்த பழ மரங்களும் அசந்து வரவேற்றன. அவற்றின் பிரத்தியேக மணம் குளிர்காற்றில் கலந்திருந்தது. இளங்காலை கதிரவன் நோகாது மிருதுவாய் உலகத்தைப் போர்த்தி விட்டிருந்தான்.

இது சுகமான வேளை - டாக்டர், சரோஜா சந்திப்பு இதேபோல சுகமாய் நடக்குமா?

இத்தனை ஆண்டுகளாய் எட்டியும் பார்க்காதவர் மீது சிறிதும் ஆத்திரம் இல்லாமலா போகும் சின்னத்தைக்கு? 'என்னைத் தான் பார்க்க வரவேண்டாம் - ஐயா இறந்த சமயம், மாயாவை வந்து பார்த்து போவதற்கென்ன?' - என்று முறுக்கிக் கொண்டால்?

ஆனால் குருவி எத்தனைப் பனங்காய்களைத்தான். தன் தலையில் போட்டு சுமக்கக் கூடும்?

இருவரையும் முகத்துக்கு எதிர் எதிரே கொண்டு நிறுத்துவதோடு தன் வேலை முடிந்தது. அதற்குமேல் அவர்கள் பொறுப்பு அல்லது



விருப்பு. இருவரும் விவரங்கள் விளங்காத இளம்பிள்ளைகள் அல்லவே.

ஆக கார் வீட்டின் முன்பு நிற்க, இவள் அலுங்காமல் தான் இறங்கினாள்.

சரோஜா தன் ஒத்தாசைக்கு இரண்டு பள்ளிப் பிள்ளைகளைக் கூட்டி வந்து நிறுத்தியிருந்தாள் - அவை தயாராய் கட்டி வைத்திருந்த பூங்கொத்தைப் பிடித்தபடி வாயெல்லாம் பல்லும் பேச்சுமாய் நின்றன.

"வாங்க... டாக்டர்."

சம்பிரதாய வார்த்தைகளுடன் இறங்கியவரைச் சற்று தயக்கத்துடன் பார்த்த சரோஜாவின் விழிகளில் தீக்குச்சி உரசினாற் போல ஒரு ஒளி.

மென்று விழுங்கியவள் கண்சிமிட்டியபடி மேலும் ஊன்றிப் பார்த்தாள் - விழிகள் மெள்ள விரிந்தது முகத்தில் பரபரப்பு படருவதை ரசித்தாள் மாயா.

இந்த முகபாவனையை அப்படியே ஒரு புகைப்படத்திற்குள் உறைய செய்திருக்க வேணும் - எத்தனைக் கால தவிப்பு... சற்றும் எதிர்பார்க்காத ஆச்சரியம்!

மௌனமாய் கரம் குவித்தார் டாக்டர்.

"நீங்க...?"

"நான் மாணிக்கம். பெரியவர் தயவிலே படிச்சு நன்றி மறந்த மாணிக்கம்.."

சரோஜாவின் கண்களில் நீர் திரையிட்டன.

"யாரோ டாக்டர் செஞ்சுடர் வர்ரதாய் சொன்னாளே."

"எம்பேரை ரொம்பவும் தமிழ் படுத்திட்டாங்க போல மாயாம்மா." சிரித்தார்.

திகைப்பிலிருந்த சரோஜாவிற்கு அதன் பொருள் புரிய சில நொடிகள் ஆயின.

"ஓ... வாங்க."

"பூச்செண்டை மறந்திட்டீங்களே சின்னத்தை..."

"இதோ." குழந்தைகளை மெள்ள முன்னால் நகர்த்தினாள்

"நன்றிம்மா" என்றவர் - மலர்ச்சியாய் நீட்டின பிள்ளைகளை குனிந்து முத்தமிட்டு வாங்கிக் கொண்டார்.

அனைவரும் உள்ளே நடக்க, சரோஜாவை நெருங்கிய மாயா முணுமுணுத்தாள்.

"இதுக்குத்தான் பூச்செண்டை நீங்க கொடுங்கன்னேன்."

"எதுக்கு?"

"அந்த முத்தம் உங்களுக்குக் கிடைச்சிருக்குமில்ல?"

"ச்சோ... மாயா..."

"சரி - எனக்கு நன்றி சொல்றது போல ஒரு முத்தம் தர்ரது?"

"எனக்கு இன்னுமே இதெல்லாம் கனவு போல இருக்குது - முழுசாய் புரியலை மாயாம்மா."

"வேணு டாக்டரய்யா பெட்டியை கெஸ்ட் ரூம்லே வை. அவர் முகம் கழுவிட்டு வரட்டும். பொன்னி பலகாரமெல்லாம் தயாரா?"

"தயாருங்கம்மா" கூவினாள்.

மாணிக்கம் தன் அறைக்குப் போய் வந்த ஐந்து நிமிடங்களுக்குள் தன் திட்டத்தையும் அதை செயல்படுத்திய முறையையும் ஓரளவும் சரோஜாவிற்கு விளக்கினாள் மாயா.

"மாறன் நீயாச்சும் ஏதேனும் கோடி காட்டியிருக்கக் கூடாது?"

குறைப்பட்டுக் கொண்டாள் சரோஜா.

"எதிர்பாராமல் டாக்டரை நீங்க பார்த்த அந்த முதல் சில நொடிகள்.. யப்பா. அந்த முகபாவனை அற்புதம் சின்னத்தை - அதுவே கோடி பெறும்!"

"அதுனாலத்தான் கோடி காட்டலை!" மனமும் வாயும் மலர சிரித்தனர்.



பெரியவர் கங்காதரனின் மாலையிட்ட படத்தின் முன்பு சில நிமிடங்கள் நின்று கைகுவித்து வணங்கிய பின் டாக்டர், இவர்கள் பக்கமாய் வர, மாயா நழுவினாள்.

"ஒரு நிமிஷம்... இதோ வந்துடறேன்" என்றபடி.

"சாப்பிட்டுட்டு போலாமே, மாயாம்மா."

"முகம், கை கழுவிட்டு வந்திடறோமே - இல்லை மாறன்?"

"ம்ம்.. ஆமா."

இருவரும் ஒதுங்கிக் கொள்ள, தனிமையில் விடப்பட்ட சரோஜாவும் டாக்டரும் கூச்சமான அவஸ்தையில் தடுமாறினார்கள்.

"முதல்ல என்னை மன்னிக்கணும், சரோஜா..." ஆரம்பித்தார் அவர். ஆனால் பேச்சு வளர வளர தயக்கங்கள் விலகின.

அரைமணி நேரங் கழித்து மெள்ள ஆமைகளாய் மாறனும், மாயாவும் ஹாலுக்குள் தலை நீட்டிய போது இன்னும் பேச்சு மும்முரமாயிருந்தது.

"சூடு ஆறுவதற்குள்ளே சாப்பிடலாம் சின்னத்தை - பிறகு ஆற அமரப் பேசுங்க."

"மாயாம்மா, நான் இங்கேயும் மன்னிப்பு கேட்டாச்சு. சரோஜாவின் பக்கம் காட்டி சிறுபையன் போல குதூகலமாய் அறிவித்தார் டாக்டர்.

"என்ன பேச்சு... இது..? சந்தர்ப்பம், சூழ்நிலை அப்படி அமைஞ்சு போச்சு." சமாதானப்படுத்தினாள் சரோஜா.

"ஆக சின்னம்மா மன்னிச்சாச்சு."

"நாம என்ன தம்பி மன்னிக்கறது - பல விஷயங்கள் நம்மையும் மீறினவை இல்லியா? மனுஷன் போடற திட்டம் எல்லாத்தையும் ஆண்டவன் அங்கீகரிக்கறதில்லையே - சில நடக்கும் - பல நிராசையாய் போகும்."

"உண்மைதான். ஆனால் கடவுள் மேல முழு நம்பிக்கை வைக்கிறவனுக்கு நடப்பவை எல்லாம் நல்லதிற்குத்தான். அதாவது

சோதனை போல தோன்றுவது கூட அவர்களைப் பக்குவப்படுத்தி சிறக்கச் செய்யத்தான்." டாக்டர் சொன்னதை ஊன்றி கவனித்தான் மாறன்.

"இதை மனதிலே வைத்தால் சோர்வே நெருங்காது."

"மனச் சோர்வுதான் மனுஷனுக்கு பெரும் எதிரி. அவனை அடிச்சுக் கவிழ்த்திடும். பட்டவன் சொல்றேன் - அஸ்வினிம்மா எழுதின கடிதத்தை வாசித்ததும் முழுசாய் சுருண்டுட்டேன்- சக்கையாகி விட்ட உணர்வு. மூளையும் கூடவே மரத்துப் போச்சு. யோசிக்கலை - இப்படி எழுதியிருக்காளே - ஒரு முறை நேரே போய் பேசுவோம்... அங்கே என்னதான் நடந்ததுங்கறதைப் புரிஞ்சிப் போம்ன்னு... இல்லாமல் ஓடி ஒளிஞ்சேன். என் கடமையைச் செய்ய துணிஞ்சு எஸ்டேட் வந்திருந்தால் விவரம் புரிஞ்சிருக்கும் - யாரோ செய்த சதி எங்க வாழ்வை நிலைகுலைத்திருக்காது..."

மாறன் முகம் உன்னிப்பாய் இருந்தது - அவன் முகத்தில் சிந்தனை ரேகைகள்... புதிதாய் ஒரு உறுதி.

அன்று மதியமே மாணிக்கம் தன் திட்டத்தை மாயாவிடம் சொல்லி விட்டார். மூச்சிமுத்தவள் அதை வெளியிட மறந்தாள் போல உறைந்து உட்கார்ந்திருந்தாள்.

"நிஜமாத்தான் சொல்றீங்களா டாக்டர்?"

"இங்கேயே கிடறா கிழட்டுப் பயலேன்னு நீங்க உத்தரவு போடுவீங்கன்னு நினைச்சேன் மாயாம்மா - உங்க பெருந்தன்மை அப்படி பேச விடலை அதான் நானே சொல்றேன்."

"இத்தனைப் படிப்பும் புகழுமாய் இருக்கிற நீங்க இங்கேயேத் தங்கி, வேலை பார்க்கறதுன்னால்?"

"என் படிப்பே அதுக்காகத்தானம்மா? ஆக இதுதான் முறை.."

"சந்தோஷம் - அப்போது கூடவே இன்னொரு உத்தரவையும் போட்டுடறேன்."

"நிச்சயம் நிறைவேத்துறேம்மா."



"நல்லது. இனி என்னை 'அம்மா, நீங்க, இப்படிங்க'ன்றது இதுதான் கடைசி."

டாக்டர் விழித்தார் - பின் ஒரு அசட்டுச் சிரிப்புடன். "அடடே.., வேற ஏதோ செல்லப் போறீங்கன்ர துடிப்பில வாக்கு தந்தேன்..." போலி வருத்தத்துடன் சொன்னார்.

"அதென்ன?"

"எங்க சின்னத்தையைக் கல்யாணம் செய்துக்கோங்கன்னு ஒரு இனிய உத்தரவு வரும்னு எதிர்பார்த்தேன் . "

"அதை நாங்க சொல்லணுமாக்கும்? இத்தனை நாள் நீங்கள் ஒண்டியாய் காத்திருந்ததே இதுக்குத்தானே?"

மாயா சீண்ட வெட்கமாய் சிரித்தார் டாக்டர்.

"உங்க கடிதம்.."

"கவனம்... பேச்சிலே கவனம்." எச்சரித்தாள் செல்லமாய்.

"அ... மன்னிக்கணும். உன் கடிதம் கிடைச்சதும் உடனே கிளம்பிட்டேன். நாளை மறுநாள் சில குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சைத் தரணும். மறுவாரம் நான் டெல்லியிலே இருக்கணும். இதெல்லாம் முன்பே நான் வாக்கு தந்துவிட்ட விஷயங்கள் - எல்லாம் முடிச்சிட்டு கூடிய சீக்கிரமே இங்க வந்துடறேன் - பிறகு இங்கேயே சின்ன ஒரு மருத்துவமனை ஆரம்பிக்கற வேலைதான் - முதல்ல சின்ன 'ஷெட்' போதும்."

"அதுக்கு முன்னே நாளை காலை நம்ம வீட்டோட ஒரு விசேஷம் நிச்சயதார்த்தம் உங்க இருவருக்கும்.."

"ஷ்... என்ன மாயாம்மா - இந்த வயசிலே நிச்சயம்னு..."

"அது என் கடமை" பதிலளித்தாள் பெரிய மனுஷ தோரணையில்

"நாம இன்னும் நாற்பதைக் கூட எட்டலையே சரோஜா - அது இளமையோடு சேர்த்திதான்"- மாணிக்கம் சொல்ல, அப்பொழுதே அங்கு கல்யாண களை கட்டி விட்டது.!

வீடு முழுக்க பூரிப்பில் மகிழ மாயா மட்டும் சுருண்டு குன்றினாள்- மாறன் பேசியதை நம்ப முடியாமல் விக்கித்து நின்றாள்.

நல்லவர்களுக்கு நல்லதே நடக்கும் என்ற தன் நம்பிக்கை பொய்யோ? ஏனிப்படி தன் வாழ்க்கை ஏறுக்கு மாறாய் பிறழ்கிறது? யாருக்கும் மனதாலும் தீங்கு நினைத்ததில்லையே - மனம் முழுக்க நிறைந்திருக்கும் மாறனை அடைய முடியாமல் போவதுதான் அவளுக்கு வாழ்க்கை விதித்ததா?

தன்னிடம் தனியே பேச வேண்டும் என்று மாறன் சொன்னபோது வெகு ஆர்வமாய் தான் அவனைப் பின் தொடர்ந்தாள் - ஆனால் அவன் சொன்னது -

"நீ இல்லாத இத்தனை வருஷங்களில் நான் எஸ்டேட்டை விட்டு நகரலை மாயா. இப்போ எஸ்டேட் ஒரு நிலைக்கு வந்திடுச்சு. நான் சில வாரங்கள், என் ஓரிரண்டு மாசங்கள் இங்கே இல்லைன்னாலும் வேலை சரளமாய் நடக்கும். ஒரு சில கையெழுத்துகள் அப்பப்போ தேவைப்படும். அதை நீயே போட்டிடலாம்.. ஆக.."

"எங்கே போறீங்க?"

கேட்க குரலே எழும்பாமல் தொண்டை அடைத்தது.

"வட இந்தியா பக்கமாய் போகலாங்கற எண்ணம் - அது எனக்கு ஒரு முழு மாற்றமாய் இருக்கும் - புது இடம், மொழி, மனிதர்கள்..."

'என்னைத் தவிர்க்க நினைக்கிறானா?' - அவன் முகத்தை ஆராய்ந்தாள் அவள் நேசித்த மாறனின் முகம் வேறு. மென்மையும் உண்மையுமான முகம் அது. இப்போது முகத்தில் கல்லின் இறுக்கம். பார்வை இவள் விழிகளை நேரே தொடாமல் தழைந்து ஒளிகின்றது.

எதையோ மறைக்கும் முயற்சி - தனக்குள் ஏதோவொரு ரகசியத்தை பொதிந்து வைத்து உருகுகிறான்.

"அத்தான், டாக்டர் சொன்னது நமக்குந்தான்..." என்றாள் மெள்ள.



"ம்ம்... என்ன சொன்னார்?"

"மனசில் மறைத்து மறுகாமல் பேசித் தெளியறது நல்லதுன்னு..."

"உண்மைதான் - நான் வெளியூர் போய் வந்தபிறகு பேசுவேன் மாயா. ஏன்னா இப்ப எனக்கே எதுவும் தெளிவாயில்லை.."

"எதைப் பற்றி குழம்பறீங்கன்றதையாவது சொல்லலாம்ல?"

அடிவயிற்றில் குத்து வாங்கினது போல சுணங்கியது அவன் முகம்.

"அதைச் சொல்ல முடியாமல்தான் என்னை ஒதுக்கறீங்க - இல்லையா?"

"உன்னை நெருங்க ஒரு தகுதி வேணும் மாயா."

"அன்புதான் தகுதி."

"அன்பும் கூட முறையானதாய் இருக்கணும்." பேசிய அவன் உதடுகள் ஏனிப்படி துடிக்கின்றன? விழிகளில் ஏன் இத்தனை சிகப்பு?

எது முறையில்லை என்று மறுகுகிறான்? அத்தனை நல்ல தாயினால் வளர்க்கப்பட்டவனிடம் எது முறையில்லை, மாறனின் தகப்பனைப் பற்றி விவரங்கள் இல்லையே - அது பற்றி ஏதோ தெரிந்து தான் இப்படிப் புழுவாய் தவிக்கிறானா?

அத்தை தன் கணவரைப் பற்றி பேசியதேயில்லை - ஏன், இதுவரை இக்கேள்வி மனதை நெருடியதில்லை. ஏனெனில் அத்தை 'சளசள'வென்று பேசும் ரகமில்லை. மனிதர்களை விமர்சிப்பவள் இல்லை - சம்பவங்களை விலாவாரியாய் விவரிக்கும் ரகம் கிடையாது.

ஆக தன் கணவரைப் பற்றி பேச்செடுக்காதது அதிசயமில்லை. ஆனால் மாறன் மருகுவது தன் தகப்பனைக் குறித்தா? அவன் பிறப்பில் ஏதேனும் ரகசியம் உண்டா? தன்னிடம் கூட சொல்லாமல் மருகுமளவு. என்னவாயிருக்கும்?

மா நிறப் பேர்வழிகளுக்கு சந்தன மஞ்சம் நிறம் தனி சோபைதான். சரோஜாவை அந்நிறப் புடவை சுற்றிப் பார்த்த மாயாவிற்கு கண்களை மீட்கவே முடியவில்லை.

வழக்கமாய் இறுக முடிந்திருக்கும் கொண்டை, இன்று தளர்ந்த பின்னலாய் தொங்கியது. அதில் நிலாவாய் முல்லைப் பூப்பந்து. சந்தன பட்டிற்குப் பொருத்தமாய் மேனியில் சில பொன் நகைகளும் ஏறியிருந்தன.

இன்னும் இரு வாரங்களில் வரும் சரோஜாவின் பிறந்த நாளை நினைத்து இப்புடவையை பெங்களூரிலிருந்தே வாங்கி வந்திருந்தாள் மாயா. இங்கு நினைத்த மாத்திரத்தில் நல்ல ரக துணிமணிகள் வாங்க முடியாதே என்ற முன்யோசனையில் வாங்கப்பட்டது.

“எனக்கெதற்கு இத்தனைப் பட்டுப் புடவைங்க மாயாம்மா? இதை நீ கட்டிக்கோயேன்.”

“இதையும் உங்க பிறந்த நாளுக்குன்னு வாங்கினேனத்தை.”

“இப்படி விதவிதமாய் வாங்கி இங்கே எப்ப கட்டிக்கிறது?”

சரோஜாவின் ஆதங்கம் உண்மைதான். இந்த சிற்றூரில் பகட்டு காட்ட சந்தர்ப்பங்கள் கிடையாது. ஆக மாயா தனக்காய் எடுத்து வந்திருந்த சில சரிகைத் தெளித்த பட்டுகள் கூட பெட்டிக்குள் பிரிக்கப்படாமலேயே கிடக்கின்றன.

“இன்னைக்கு உங்க நிச்சயதார்த்தம் - புதுசு கட்ட யோசிக்கலாமா கல்யாணப் பொண்ணு?”

பூரித்து சிவக்க வேண்டிய சரோஜாவின் முகத்தில் அதற்கு நேர்மாறான உணர்ச்சி.

“என்ன கண் கலங்கறீங்க அத்தை, இப்ப உங்க பிறந்த வீட்டை விட்டுப் பிரியவும் தேவையில்லையே? எனக்கு அது எவ்வளவு பெரிய நிம்மதி தெரியுமா? - நீங்க இல்லாம நம்ம வீடு, ஸ்கூல் எதுவும் சரிவராது. இப்ப வீட்டோட மாப்பிள்ளை கிடைச்சாச்சு!”



“கல்யாண கனவுகள் எனக்குண்டு மாயாம்மா.”

“அப்படி ஒத்துக்குங்க உண்மையை..!”

“ஆனால் அது உன் கல்யாணத்தைப் பற்றி - உன்னைப் பூவும், பட்டும். பொன்னுமாய் சிங்காரிச்சுப் பார்க்க ஆசை. இப்... இப்படி ஒரு திருப்பம் நேருமின்னு கனவும் கூட கண்டதில்லை...”

தான் மணப்பெண்ணாக... அப்படி ஒரு நாள் வருமா? இன்று மாறன் பேசியதைக் கேட்ட பின் அந்நம்பிக்கை சுத்தமாய் அவளுக்கு இல்லை.!

## 23

வா ழையும் கமுகுமாய் பந்தலும், தோரணமும் இல்லாவிட்டாலும் ‘ரஞ்சனியகம் விழாக்கோலம் கொண்டிருந்தது.

சாப்பாட்டு அறையில் கல்யாண பந்தியின் பரபரப்பு, மணம். மாறன் ஒரு கூடை நிறைய பூ வரவழைத்து விட்டான். ஆக குழந்தைகள் பெரியவர்கள் அத்தனை பேரின் கூந்தலிலும் பூமணம். வாழையிலை சுற்றிய மாலைகள் இரண்டு கனமாய் ஆணியில் தொங்கின. கூடவே சந்தன, பன்னீர் வாசனை.

நாதஸ்வர இசை டேப்பில் சன்னமாய் கசிந்து சூழலை மங்களமாக்கியது. ஆங்காங்கே சின்னச் சின்ன மாக்கோலங்கள் அத்தனையையும் விடக் கூடியிருந்த முகங்களின் புன்னகை அலாதிகளை சேர்த்தது. மேஜர் சந்திரன் தன் மனைவி கௌரியுடன் வந்திறங்கியதிலிருந்து அடிக்கடி வெடிச்சிரிப்பும் வேறு.

மேஜரின் தோளில் ஒரு பழங்கால ‘யாஷிகா’ தொங்கியது.

“ஏங்க, காமிராவைத் தூசு தட்டி எடுத்து வந்தீங்களா?” காலை வாரினாள் அவரது மனைவி.

மாநிறப் பேர்வழிகளுக்கு சந்தன மஞ்சம் நிறம் தனி சோபைதான். சரோஜாவை அந்நிறப் புடவை சுற்றிப் பார்த்த மாயாவிற்கு கண்களை மீட்கவே முடியவில்லை.

வழக்கமாய் இறுக முடிந்திருக்கும் கொண்டை, இன்று தளர்ந்த பின்னலாய் தொங்கியது. அதில் நிலாவாய் முல்லைப் பூப்பந்து. சந்தன பட்டிற்குப் பொருத்தமாய் மேனியில் சில பொன் நகைகளும் ஏறியிருந்தன.

இன்னும் இரு வாரங்களில் வரும் சரோஜாவின் பிறந்த நாளை நினைத்து இப்புடவையை பெங்களூரிலிருந்தே வாங்கி வந்திருந்தாள் மாயா. இங்கு நினைத்த மாத்திரத்தில் நல்ல ரக துணிமணிகள் வாங்க முடியாதே என்ற முன்யோசனையில் வாங்கப்பட்டது.

"எனக்கெதற்கு இத்தனைப் பட்டுப் புடவைங்க மாயாம்மா? இதை நீ கட்டிக்கோயேன்."

"இதையும் உங்க பிறந்த நாளுக்குன்னு வாங்கினேனத்தை."

"இப்படி விதவிதமாய் வாங்கி இங்கே எப்ப கட்டிக்கிறது?"

சரோஜாவின் ஆதங்கம் உண்மைதான். இந்த சிற்றூரில் பகட்டு காட்ட சந்தர்ப்பங்கள் கிடையாது. ஆக மாயா தனக்காய் எடுத்து வந்திருந்த சில சரிகைத் தெளித்த பட்டுகள் கூட பெட்டிக்குள் பிரிக்கப்படாமலேயே கிடக்கின்றன.

"இன்னைக்கு உங்க நிச்சயதார்த்தம் - புதுசு கட்ட யோசிக்கலாமா கல்யாணப் பொண்ணு?"

பூரித்து சிவக்க வேண்டிய சரோஜாவின் முகத்தில் அதற்கு நேர்மாறான உணர்ச்சி.

"என்ன கண் கலங்கறீங்க அத்தை, இப்ப உங்க பிறந்த வீட்டை விட்டுப் பிரியவும் தேவையில்லையே? எனக்கு அது எவ்வளவு பெரிய நிம்மதி தெரியுமா? - நீங்க இல்லாம நம்ம வீடு, ஸ்கூல் எதுவும் சரிவராது. இப்ப வீட்டோட மாப்பிள்ளை கிடைச்சாச்சு!"



"கல்யாண கனவுகள் எனக்குண்டு மாயாம்மா."

"அப்படி ஒத்துக்குங்க உண்மையை..!"

"ஆனால் அது உன் கல்யாணத்தைப் பற்றி - உன்னைப் பூவும், பட்டும், பொன்னுமாய் சிங்காரிச்சுப் பார்க்க ஆசை. இப்... இப்படி ஒரு திருப்பம் நேரும்னு கனவும் கூட கண்டதில்லை..."

தான் மணப்பெண்ணாக... அப்படி ஒரு நாள் வருமா? இன்று மாறன் பேசியதைக் கேட்ட பின் அந்நம்பிக்கை சுத்தமாய் அவளுக்கு இல்லை.!

## 23

வாழையும் கமுகுமாய் பந்தலும், தோரணமும் இல்லாவிட்டாலும் 'ரஞ்சனியகம் விழாக்கோலம் கொண்டிருந்தது.

சாப்பாட்டு அறையில் கல்யாண பந்தியின் பரபரப்பு. மணம். மாறன் ஒரு கூடை நிறைய பூ வரவழைத்து விட்டான். ஆக குழந்தைகள் பெரியவர்கள் அத்தனை பேரின் கூந்தலிலும் பூமணம். வாழையிலை சுற்றிய மாலைகள் இரண்டு கனமாய் ஆணியில் தொங்கின. கூடவே சந்தன, பன்னீர் வாசனை.

நாதஸ்வர இசை டேப்பில் சன்னமாய் கசிந்து சூழலை மங்களமாக்கியது. ஆங்காங்கே சின்னச் சின்ன மாக்கோலங்கள் அத்தனையையும் விடக் கூடியிருந்த முகங்களின் புன்னகை அலாதிகளை சேர்த்தது. மேஜர் சந்திரன் தன் மனைவி கௌரியுடன் வந்திறங்கியதிலிருந்து அடிக்கடி வெடிச்சிரிப்பும் வேறு.

மேஜரின் தோளில் ஒரு பழங்கால 'யாஷிகா' தொங்கியது.

"ஏங்க, காமிராவைத் தூசு தட்டி எடுத்து வந்தீங்களா?" காலை வாரினாள் அவரது மனைவி.

“நீயும் நானும்தான் நம்ப எஸ்டேட்டில. உன் மூஞ்சியை எடுக்கறதுக்கு உள்ளேயே கிடக்கறேன்னுச்சு இது. இப்ப பெங்களூர் மாடலும் கல்யாணப் பெண்ணும் தீனியாய் கிடைக்கறாங்கன்னதும் ஜரூராய் கண்ணடிக்க வந்திருக்குது.”

அவர் ஆர்ப்பாட்டமாய் ‘க்ளிக்’கித் தள்ளினார்.

“ஃபிலிம் உள்ளே இருக்கோ இல்லியோ அந்த டப்பாக்குள்ளே - போஸ் தர ரொம்ப சிரமப்படாதீங்கோ’ - பிறரை எச்சரித்தபடி கணவரைப் பின் தொடர்ந்தாள் கௌரி.

உலகம் முழுவதும் சுற்றியிருந்த டாக்டர் இப்போது மகா வெட்கத்துடன் நெளிந்தார். சரோஜாவின் முகமேத் தெரியவில்லை - கவிழ்ந்திருந்ததில் தலையின் வகிடு மட்டும்தான் மின்னலாய் ஓடியது.

“நிமிரம்மா - என்ன வெக்கம்? இத்தனை அழகாய் முகத்தை, ஒரு சிரிப்பை வச்சுகிட்டு இப்படி? குனிவானேன் -- என்னைப் பார்த்து சிரி.” ஊக்கினார் மேஜர்.

“ஆங்? நிமிர்ந்து உங்களைப் பார்த்தால் பாவம் சரோவிற்கு எப்படி சிரிப்பு வரும்?” சலித்தாள் கௌரி. இவர்கள் கலக்கலில் சுழல் உற்சாகமாய் குலுங்கியது. எஸ்டேட் ஊழியர்கள், ஆசிரியர்கள் என வீடு நிரம்பி விட்டது.

வைபவத்தை ஆரம்பிக்க, நடத்த மேஜர் கை கொடுத்தார் - ‘இன்னாருக்கு இன்னார் என்று நிச்சயம் செய்கிறோம்’ என நாடகப் பாணியில் அமர்க்களமாய் அறிவித்தவர் தம்பதிகளை ஒருவருக்கொருவர் மாலையிடச் செய்து மோதிரங்களையும் போடச் சொன்னார்.

தம்பதிகளைக் கண்நிறையப் பார்த்தாள் மாயா. உசத்தியான அழகிகளைப் பார்த்தவள் தான் - ஆனால் இது வித்தியாசமான பொலிவு. கண்களை மட்டுமல்லாது உள்ளத்தையும் குளிர்விக்கும் பொலிவு. அதன்பின் நிறைவால் வந்த அழகு.

அன்று மாயாவுமே கண்களை நிறைத்தாள் - மெஜந்தா வர்ணப் பட்டில் ஓவியம் போலிருந்தவள் மேனியில் முத்து நகைகள் -



அன்னபட்சி பதக்கம் கோர்த்த முத்துச் சரமும் முத்து குடை ஜிமிக்கிகளும் அவளை ரதியாக்கின. அந்தப் பதக்கம் மாயாவின் தாயினுடையது. அதைப் போடவா வேண்டாமா என்று தயங்கியவளை சரோஜா வற்புறுத்தினாள்-

“கண்டிப்பாய் போட்டுக்கோம்மா - அதில உங்கம்மா அன்பும் பொதிஞ்சிருக்கும்’ - என்று.

சரோஜாவின் கைகளைப் பற்றி மாயா வாழ்த்திய போது இருவரது விழிகளும் தளும்பின.

“வயசிருந்தா உனக்குத்தான் மாயாம்மா முதல் நமஸ்காரம்” - சரோஜா சொன்னதை ஆமோதித்தார் டாக்டர்.

“அதைவிட பெரிய சந்தோஷத்தை, கௌரவத்தை தந்திருக்கீங்களே.”

“என்ன?”

“இதுவரை சம்பாதிச்ச பேர் புகழை எல்லாம் துச்சம்னு விட்டுட்டு இங்கே வரப் போறதைச் சொல்றேன்.”

“இத்தனைக் காலம் இங்க நான் இல்லாததுதாம்மா தப்பு. அந்தத் துரோகத்துக்குமாய் சேர்த்து வச்சு உழைக்கணும் இனி.”

“அப்பா மருத்துவமனைக்கு என்று கட்ட ஆரம்பிச்சது அஸ்திவாரத்தோட நின்னிருக்குது.”

“அந்த வேலையையும் நானே பாத்துக்கறேன் மாயாம்மா - என்னை உள்ளே விட்டதற்கு நன்றி.”

சரோஜாவை அர்த்தமுடன் பார்த்தார் -

“கட்டிட வேலை எம் பொறுப்பு டாக்டர், என்ஜினியருக்குத் தகவல் அனுப்பிட்டேன். நீங்க வர்ரதுக்குள்ளே ஒரு ‘ஷெட்’ தயாராய் இருக்கும்.”

“நன்றி மாறன்-”

“வீட்டின் இடது புறத்தைத் தனிக் குடித்தனத்திற்குத் தோதாய் மாற்றிக் கட்டப் போறோம் டாக்டர்...”

"மருத்துவ மனையை ஒட்டி ஒரு அறை போதும்மா எங்களுக்கு."

"உங்க ரெண்டு பேருக்குன்னா போதும் - பிள்ளைங்க பிறந்த பிறகு?"

சரோஜா மேலும் குனிந்தாள் - வெட்கப் புன்னகையை அவளது கன்னக் குழைவின் மூலம் யூகிக்க முடிந்தது.

"பெரிய மனசு மாயாம்மா உனக்கு."

அழுத்தமாய தலையாட்டி மறுத்தாள் - "இது சுயநலம்தான். எனக்குச் சின்னத்தையை விட்டுட மனசில்லை... பிறகு வீட்டு பொறுப்பு எந்தலையிலே விழுந்திடுமோன்ர பயம்."

"தேவையில்லாத பயம். ஒரு விஷயம்... சரோஜா ஒரு நிபந்தனையோடத்தான் இன்னைக்கு மாலையிட சம்மதிச்சது."

புதிராய் புன்னகைத்தார்.

"சொல்லுங்க."

"உனக்குக் கல்யாணமாகி நீ உன் புருஷனோடு நிறைஞ்சு வாழறதைப் பார்க்கும் வரை இந்த வீட்டு வாசல்படி விட்டு இறங்க மாட்டேனுட்டாள்."

மாயாவிற்குத் தொண்டை அடைத்தது.

'சுருக்'கென்று விழிகளை ஊடுருவித் திரண்டு நின்றதுஒரு துளி கண்ணீர். பாசமும் நன்றியுமாய் கலந்து சரோஜாவை ஏறிட்டாள்.

'பளிச்'சென்ற மின்னல் வெளிச்சம் அவளைத் தடவி மறைந்தது. விழிவிரிய மாயா புன்னகைத்ததைத் தன் கேமராவில் அடக்கிக் கொண்டது மாறன்தான்.

மரபீரோவிலிருந்து எடுக்கப்பட்ட வெள்ளி, வெளிநாட்டுப் பீங்கான் பாத்திரங்களை கணக்கு பார்த்து மீண்டும் உள்ளே வைத்துப் பூட்டிய மாயாவிற்குத் தூக்கம் செருகியது. டாக்டர் கிளம்பும் வரை ஒன்று மாற்றி ஒன்று என வேலைகள் மொய்த்து விட்டன. இனி உறங்கி எழுந்தால்தான் முடியும் என்று தோன்ற தன் அறைக்குப் போனாள்.



விழிப்பு வந்த போது கீழே வீடு சிரிப்பும் பேச்சுமாய் அமளிப் பட்டுக் கொண்டிருந்தது. அவளையறியாமல் புன்னகைத்தாள். விசேஷங்களின் முன்பும் சரி பின்னாலும் சரி குதூகலம் உண்டு. இந்தக் கும்மாளம் எதனால்...? ஆர்வத்துடன் முகம் கழுவியவள் கீழிறங்கினாள். நல்லதூக்கம் கண்ட முகம் பளபளத்தது. வீட்டிற்கு உடுத்தும் எளிய மல்மல்தான். ஆனால் அக்கரும்பச்சை நிறம் இவள் உடலைச் சந்தனக் கொடி போலக் காட்டியது.

"என்ன... என்ன சிரிப்பு?"

சரோஜாவைச் சுற்றி நின்ற வீட்டுப் பணியாளர்களும். பள்ளி ஆசிரியயைகளும் கையில் ஆளுக்கொரு படமும் வாயெல்லாம் சிரிப்புமாயிருந்தனர்.

நிச்சயதார்த்த புகைப்படங்கள் அதற்குள் வந்தாயிற்று போலும்!

"மாயாம்மா சும்மாவே அழகு. அலங்காரமும் சேர்ந்தால் தேவதைதான்."

"நேத்து ராவே. சுத்திப் போடணும்னு நினைச்சேன்."

"இந்தப் படம் எங்களுக்கு ஆளுக்கொன்னு தரணும்மா..."

"என்னபடம்?" - ஆவலுடன் வாங்கிப் பார்த்தவள் விழிகள் விரிந்தன.

"இது அவள்... தான்தானா?"

மாயலோகி மோகினி போல அன்று காலையில் மாறன் எடுத்திருக்க வேணும்.

'நீ கல்யாணம் செய்து சந்தோஷமாய் வாழ்வதைப் பார்த்த பிறகுதான் சரோஜா இவ்விடம் விட்டு நகருவாள் என்பதாய் டாக்டர் சொல்ல, மாயாவின் முகத்தில் முகிழ்த்த பாவனை படத்தில் சிறைபட்டிருந்தது. இளம் ஆச்சரியத்தோடு நன்றியும் பிரியமும். நிரம்பிய விழியோரங்களில் வைரமாய் ஜொலிக்கும் ஒரு கண்ணீர்த் துளியுடன்... அவள் பனி ஊறிய ரோஜா மலராய் தெரிந்தாள். கழுத்தின் அன்னப்பதக்கும் கூட தெளிவாய் பதிவாகியிருந்தது.

"ஆயா, இப்பக்கூட என்ன? மாயாம்மாவுக்கு சுற்றிப் போட்டுருங்க - இப்ப அவங்க கண்ணே பட்டிருச்சுல்ல?" - சிரித்தாள் ஒரு டீச்சர்.

மாயாவின் பார்வை அறையின் வாசலில் சாய்ந்து நின்றிருந்த மாறனைத் தேடிப் பிடித்தது. கைகளை மார்போடு கட்டியிருந்ததில் அவன் மார்பு மேலும் விசாலமாய் தெரிந்தது. இவளை விழுங்குவது போன்ற பார்வை.

அவனைத் தொட்ட தன் விழிகளைப் பிரிக்க முடியாது தவித்தாள்.

கோர்த்து. விலக முடியாத சிக்கலில் சிக்கிக் கிடந்தனர். இருவரும்.

"ஐயா..."

"ஆ... ஆ... என்ன?"

"நம்ப பழைய ஜீப்பை விக்கணும்னு சொன்னீங்களாமே. விலை விசாரிச்சு தேவதானப் பட்டியிலேருந்து ரெண்டு ஆளுக வந்திருக்காங்க."

"தோ வந்துட்டேன். மாயா, படங்களை இந்தப் பையிலே போட்டிரு" என்றபடி கிளம்பினான்.

இப்படி உரிமையாய் தன்னிடம் மாறன் பேசி எத்தனைக் காலமாயிற்று! எப்போதும் அவன் கையிலிருக்கும் தோல் பை மேஜையின் மீதிருந்தது. அனைவரும் வேண்டிய மட்டும் படங்களைப் பார்த்த பிறகு 'ஜிப்'பை விரித்து பையினுள் படங்களை பத்திரப்படுத்தியவளுக்கு அப்பையைக் குடைந்தாலென்ன என்ற ஒரு ஆசை!

"சின்னத்தை, பையை அத்தான் அறையிலேயே வச்சிரட்டுமா?'

"ஆகட்டும்மா."

அவனது அறை பூட்டப்பட்டிருக்கவில்லை.

உள்ளே நுழைந்தவள் ஆழ மூச்சிழுத்தாள். அங்கிருந்த ஆண் வாசனை... அவனது வாசம் அவளை மயக்கியது.



ஒருசில துணிமணிகள் தொங்கியதைத் தவிர அறை சுத்தமாய் தானிருந்தது. கட்டிலில் அமர்ந்தவள் தோல் பையைத் திறந்து சற்றேக் கிளறினாள். மேலும் ஒரு பெரிய வெள்ளைக் கவர் புகைப்பட நிலையத்தின் பெயரோடு இருந்தது - பிரித்துப் பார்த்தாள் -கண்கள் இமைக்க மறந்தன.

அதுவும் அவளேதான். பெரிய ரோஜாவைப் போல அவள் தனித்திருந்த அதே படம். மேலும் பெரிதுபடுத்தப்பட்ட அளவில்! கன்னத்தின் செழுமையும், உதட்டு வளைவுகளும் தங்களைத் தொடச் செய்ய வைக்கும் அளவில்!

அவளுக்குள் 'குப்'பென்று ஒரு பூ மலர்ந்தது - அதன் மணம் சுற்றிச் சுழன்று பரவசமூட்டியது.

இதை யாரிடமும் காட்டாமல் தனக்கென்று பத்திரப் படுத்தியிருக்கிறான்... ஏன்... எதற்காக?- உதடுகள் சிரித்தன. அவனுக்கும் தன் மீது ஆழ்ந்த நேசம்தான்... அப்படியானால் தங்களைப் பிரிப்பது எது? ஏதோ ஒரு குற்ற உணர்ச்சியில் கலங்குகிறான் - அது என்னவென்று தன்னிடமேனும் சென்னால் என்ன?

படத்தை மீண்டும் பையினுள் வைத்தாள்.

அன்று பள்ளிக் குழந்தைகள் சொல்லவில்லையா? 'மாறன் அங்கிளின் அறையில் உங்கள் படத்தைப் பார்த்தோம் மிஸ்' என்று? அப்படியானால் தன்னுடைய மற்றும் ஒரு புகைப்படம் இந்த அறையில் இருக்க வேணும். பீரோவை, மேஜை இழுப்பறைகளைத் திறந்து மேலாக நோட்டமிட்டாள். கட்டிலை ஒட்டியிருந்த சின்ன இழுப்பறையில் சிக்கியது அது!

அவளது புகைப்படம் - அது வர்ணப் படமில்லை. கருப்பு வெள்ளைதான். என்றாலும் அதிலும் அவளது அழகு மங்கலாயில்லை.

முத்துப் பற்களும் விழிச் சுடர்களும் மின்னலாய் வெட்டின. கருநாகமாய் அத்தை பின்னி விட்ட இரட்டைச் சடையுடன் மிக இளம் தோற்றம் இதை எடுத்துப் பார்ப்பானோ? நிழலைக் கொஞ்சி

முத்தமிடுவானோ? அதற்கு வசதியாய்தான் படம் கட்டிலருகே, கைக்கு வாகாய் வைக்கப்பட்டிருக்கிறது.

மறுபடி படத்தை எடுத்த இடத்தில் வைத்தவளுக்கு அதன் கீழே கிழிந்து கிடந்த காகிதத் துண்டுகள் தெரிய, என்னவென்று எடுத்துப் பார்த்தாள்.

அதுவும் ஒரு புகைப்படத்தின் பகுதிதான். யாருடைய படம் இப்படிக் கிழிக்கப்பட்டிருக்கிறது?

அத்தனைத் துண்டுகளையும் பொறுக்கி கட்டிலில் சேர்த்து வைக்க முயற்சித்தவளுக்கு மூச்சடைத்தது... யார்... இது செண்பகா அத்தைப் படமில்லையா? மகன் எதற்காக அன்னையில் படத்தை அழிக்க வேணும்? கிழித்ததைத் தூக்கி எறிய மனமின்றி அதைப் பத்திரப்படுத்த வேணும்?

கடவுளே... குழப்பம் அவளது நெஞ்சைத் திருகி எடுத்தது. ஏதோ மர்மக் குகைக்குள் சிக்கிக் கொண்ட அவஸ்தை - அச்சம். குகையின் கரி இருட்டைக் கீறிக் கொண்டு சிறு வெளிச்சக் கீற்று வராதா என்ற பரிதவிப்பு...

இந்த இழுப்பறையினும் வேறு ஏதேனும் சிக்குமா? துழாவினாள். இவளுக்குத் தேவையற்ற சில காகிதங்களுடன் ஒரு கவர் இருக்க, பிரித்தாள் அதற்குள் இருந்ததும் ஒரு புகைப்படம் தான். ஆனால் மஞ்சள் பூசிக் குளித்தாற் போலிருந்த பழம்படம்.

சன்னல் அருகே போய் நின்று வெளிச்சத்தில் பார்த்தாள். அது கல்யாணப்படம் போலிருந்தது - மணமகள் செண்பகா அத்தை! முருங்கைக் காயினுக்கு சீலை சுற்றி நிறுத்தினாற்போல ஒடுங்கி நின்றாள் - சுற்றியிருந்தது அந்தக் கால கொரநாட்டு பட்டு - புசுபுசு வென்று சரிகையுடன் மின்னியது. சின்னஞ்சிறு இடையை மேலும் ஒடுக்கிய ஒட்டியாணம்,

வழித்த முன்னுச்சி முடி- அப்பாவி முகம், சாந்த விழிகள்... ஆனால் அன்று அவற்றில் சோகத்தின் சாயலே இல்லை - குழந்தைத்தனத்துடன் குழைந்த பார்வை.



மாப்பிள்ளைக்காக பார்வையை நகர்த்தியவளுக்கு ஆச்சரியத் தோடு சிரிப்பும் வந்தது! அது அவளது அப்பா - கங்காதரன்!

இருபது கூட நிரம்பாத இளைஞனாய் அவள் தந்தை. வெடவெடவென்ற வேட்டி, ஜிப்பாவில் பாகவதர் கிராப்பும் அசட்டுச் சிரிப்புமாய் நின்றார்.

அத்தையின் கழுத்தில் மலர் மாலை- அப்பா கழுத்தில் மாலை போல தோன்றியது பட்டு அங்கவஸ்திரம்.

ஆக இது கல்யாணப் படமில்லை.

மஞ்சள் நீராட்டு வைபவமாயிருக்கும் - இப்போது சிறைப்பட்ட ஒரு கணம் இது.

அண்ணன் முறைச் சீர் செய்துவிட்டுதான் இப்படி கெத்தாக நிற்கிறார் அப்பா. மறுபடி அத்தனையையும் வைத்து இழுப்பறையை மூடினாள்

ஆனால் மனசு அடங்காமல் திமிறியது.

## 24

**மா**றனது அறைக்குப் போனது தப்பு என்று தோன்றியது. ஏற்கெனவே திரளும் குழப்பம் போதாது என்றா இப்படி மேலும் குடைந்திருக்கிறாள்?

தலையை வலித்தது.

கண்டிப்பாய் மாறனுடன் பேச வேணும், ஆனால் என்னவென்று கேட்பது? உன் தாயின் படத்தை ஏன் கிழித்தாய் என்றா? யாரோ பள்ளிக் குழந்தைகள் கூட அதைக் கிழித்திருக்கக் கூடும். எறிய மனமின்றி அவன் பத்திரப்படுத்தியிருந்தால்...? என் புகைப்படத்தை ஏன் வைத்திருக்கிறாய் என்று அதட்டலாமா? நாம் ஒன்றாக வளர்ந்த பாசம் - என்று விட்டால்?

இன்னும் சில நாட்களில் மாறன் வடநாட்டிற்குப் பயணப்பட்டு விடுவான். வர ஓரிரு மாதங்கள் ஆகக்கூடும். அதுவரை தான் வண்டாய் குடையும் இக்கேள்விகளோடு மல்லாட முடியாது. அன்று மாறன் வீடு திரும்ப வெகு நேரமாகி விட்டது. ஜீப் பழையது என்றாலும் பேரம் ‘சட்’டென்று படியவில்லை.

எட்டு வருடப் பழைய வாகனம் என்றார்கள் வாங்குபவர்கள். மிக நல்ல முறையில் பராமரிக்கப்பட்டது என்றான் மாறன்.

ஒருவழியாய் விலை இருவருக்கும் திருப்தியாய் நிர்ணயிக்கப் பட நேரமாகிப் போனது. தான் வெளியூர் போக வேண்டிய நாட்களுக்கான வேலைகளையும் யோசித்து, இடையே இழுத்துப் போட்டு முடித்ததில் நடுநிசியாகி விட்டது.

வெளிவாசலில் நின்ற வேணு-

‘வீடு இன்னும் பூட்டலைய்யா. கதவு வெறுமே சாத்தியிருக்குது’ என்ற போது மாறனுக்கு ஆச்சரியந்தான். வீட்டினுள்ளே இவனுக்காய் காத்திருப்பது போல நின்றிருந்தவளைக் கண்டதும் மேலும் வியப்பு.

“என்ன மாயா... படுக்கலையா இன்னும்...?”

“நீங்க சாப்பிட்டாச்சா?”

“ம்ம்- பழமும் பாலும் இருந்திச்சு அங்கே... பசியில்லை.”

சொன்னானேத் தவிர பசித்தது. உடல் உழைப்பைப் போல மூளை உழைப்பிற்கும் தகுந்த தீனி வேண்டும். இரு பொடி மலைவாழைப் பழங்களும் அரைக் கோப்பைப் பாலும் போதுமானதாய் இருக்கவில்லை.

“சப்பாத்தி, குருமா இருக்குது - சாப்பிடுங்க.”

குறிப்பறிந்து சொன்னவள் அவன் பதிலை எதிர்பார்க்காமல் சாப்பாட்டு அறைக்கு நடந்தாள் - பரிமாறவும் ஆரம்பித்து விட இவள் மௌனமாய் கை கழுவிக் கொண்டு அமர்ந்தான்.

சப்பாத்தி மிருதுவாய், இளம் சூடாயிருந்தது. ‘கேஸரோலில்’ இருந்த குருமாவும் சூடும் சுவையுமாய் இருக்க ஆர்வமாய் சாப்பிட்டாள். அனேகமாய் உண்டு முடித்ததும் பேசினாள்-



“பசியோடு படுக்கறது நல்லதில்லை...”

“பழகிப் போச்சு.”

“நல்ல விஷயங்களைத்தான் பழகிக்கணும் அத்தான்.”

“ம்ம்...”பார்வை இன்னும் தட்டிலேயே இருந்தது.

“அந்த போட்டோக்களை உங்க அறையிலே வச்சிட்டேன்.”

“சரி.. சரி மாயா.”

“தப்புதான் மன்னிச்சிருங்க - ஆனால் உங்க மேஜை ‘ட்ரா’விலே இருந்த படங்களையும் பார்க்க நேர்ந்தது.”

கடைசி வாய் உணவை மென்று கொண்டிருந்த அவனுடைய தாடை இறுகியது.

“அத்தையின் படம் கிழிஞ்சிருந்ததே... அதைச் சொல்றேன்.”

“ம்ம்.”

“குழந்தைங்க யாரேனும் தவறுதலாய் கிழிச்சுட்டாங்களா?”

“இல்லை..”

“அப்புறம்?”

“நாந்தான்... நான் தான் கிழிச்சேன்.”

தண்ணீரை எடுத்து ஒரே மூச்சாய் பருகியவன், தட்டை எடுத்து உள்ளே போட்டுவிட்டுக் கை கழுவினான்.

இவள் உடம்பெல்லாம் ஒரு மெல்லிய நடுக்கம் ஓடியது.

“ஏன்.. என்று சொல்லுங்க.”

“ஏதோ ஒரு ஆத்திரம்.”

“என்ன ஆத்திரம் அது என் வரணும்? - ப்ளீஸ் அத்தான்?” கெஞ்சிய மலரிதழ்கள் நடுங்கியதைப் பார்த்தவனின் விழிகள் இளகின.

“அவங்க தப்பு பண்ணிட்டாங்களேன்ர கோபம்.”

“செண்பகா அத்தையா தப்பு செய்வாங்க? நீங்கதான் அவங்களை. அதாவது உங்கம்மாவைத் தப்பாய் புரிஞ்சிட்டிருக்கீங்க..”

"இருக்கலாம். அப்படி இருக்கட்டுமேன்னு கடவுளை வேண்டிக்கறேன்- அதுதான் என் குழப்பம் மாயா."

"இனியும் புதிராய்த்தான் பேசணுமா? மனசிலிருக்கறதைச் சொல்லுங்க."

வீடு அமைதியாய் இருந்தது. வழக்கமான சமையலறை உருட்டல்களோ, அருகிலுள்ள பள்ளியின் இரைச்சலோ நடமாட்டங்களோ அற்ற இரவின் அமைதி. வீட்டின் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டாமென்று மாயா ஒரு சில மங்கலான விளக்குகளையே எரிய விட்டிருந்தாள். அவற்றின் மங்கிய ஒளி ரகசியம் பேச ஏதுவாயிருந்தது.

"சொல்ல... இல்லை நினைக்கவே கூட கூசுது மாயா."

"ஆனாலும் அது வெளியே வரவேண்டியது அவசியம்" அவள் குரலும் மிகத் தணிந்திருந்தது.

"உங்க... உங்கம்மா கொலை செய்யப்பட்டதாய்..."

நிறுத்தி அவளை ஏறிட்டான்.

இப்படியொரு திருப்பம் அவள் எதிர்பாராதது - முகம் உறைந்து போனது.

"ஆ..ஆ.. ?" நாவும் உறைந்து பேச முடியாமல் தவித்தது.

"அதிலே உங்கம்மாவின் பங்கும் இருந்ததாய் அஸ்வினிம்மா சொன்னாங்க."

சற்று கண்களை மூடித் திறந்தாள்.

"ஒரு கணம் நடுங்கிட்டேன் அத்தான். ஆனால் சொன்னது யாருன்னு தெரிஞ்சதும் தெளிஞ்சிட்டேன்."

"அதாவது அஸ்வினிம்மா சொன்ன... எதையும் நாம் நம்ப அவசியமில்லைங்கறே?"

"ஆமாம். குளம் தெளியத் தெளிய கல்லெறியற குணம் அவங்களுக்கு. நம்பக் குடும்பம் அமைதியாய் போறது அவங்களுக்குப் பிடிக்கலை."

"ஆனால் அதுக்காக இத்தனை அபவாதமாய் பேச முடியுமா?"



"உங்கம்மாவிற்கு அடிக்கடி வயிற்று வலி வருமாம்.."

"ஆமா... அவங்க துடித்து படுத்துக் கிடந்தது லேசாய் நினைவிலிருக்குது."

"பலவகைக் கஷாயம், பச்சிலைகளைப் பற்றி அறிந்த உங்கம்மாதான் அது - அதாவது அந்த வலி வரக் காரணம்னு..."

"பொறுங்க... எங்கம்மா உயிரோடு இருந்தபோது செண்பகா அத்தை இந்த ஊரிலே... ஏன் பக்கத்தூரிலே கூட இல்லியே.."

"ஆமாம் - அப்ப நாங்க வடக்கே இருந்தோம்."

"பிறகெப்படி?"

"ஆள் மூலமோ அல்லது தபாலிலோ விஷயங்கள் பகிரப்படுகிறது போல விஷமும் அனுப்பப் பட்டிருக்கலாம்னு அஸ்வினிம்மா சொன்னாங்க."

"கீழ்த்தரமான ஒரு பொய்."

"அப்படியும் இருக்குமோன்ர சந்தேகம் இப்போ லேசாய் ஏற்படுது மாயா-- பொய்க் கடிதம், கையெழுத்து உட்பட போட்டு, முழுசாய் சரோஜா, டாக்டர் வாழ்க்கையைக் குலைச்சவங்கன்ரதை அறியறப்போது..."

"நாம ஒரு தும்மல் போட்டாக்கூட கஷாயமும் போட்டுத் தந்து குணமாக்கற அத்தை ஒருத்தருக்கு விஷம் கலந்து கொடுத்து, துடித்து சாகப் பண்ணியிருப்பாங்க என்பது... நிச்சயம் நம்பறதாயில்லை."

அவள் புருவங்கள் சற்றே முடிச்சிட்டன.

"சரி. அதை நம்பக் கூடிய காரணம் ஏதும் சொன்னாங்களா? கொலைக்கான காரணம் என்னவாம்? ஒன்னுவிட்ட அண்ணன் மனைவியை, பல மைல்களுக்கு அப்பால இருப்பளைக் கொ... கொல்லத் தேவை என்ன?"

மாறன் முகத்தை மறுபுறம் திருப்பினான். நிழலில் அவன் முகம் மேலும் கருமையாய் தோன்ற அதில் பாவனை அவளுக்குத் தெரியவில்லை.

"இந்.. இந்த சொத்து மேலுள்ள வெறியாய் இருக்கலாம். இல்லை... யாருமற்ற தனக்கு இங்கே ஒரு நிரந்தர அடைக்கலம் கிடைக்கும்ங்கற ஆசை?... அதற்கு உங்கம்மா இடைஞ்சலாய் நிற்பாங்களோன்ற சந்தேகம்?"

மறுப்பாய் தலையசைத்த மாயா புன்னகைத்தாள்.

"சினிமா கதைக்கு இந்த 'லாஜிக்' போதும். ஆனா செண்பகாத்தையைத் தெரிஞ்சவங்க இதைச் சிறிதேனும் நம்ப முடியுமாத்தான்? சொத்து மேல ஆர்வம் உள்ளவங்க போல என்றைக்கேனும் நடந்ததுண்டா அவங்க? நூல் புடவைதான், காதுல பொட்டுத் தங்கம், கழுத்திலே பவளமாலை - இதைத் தவிர அவங்க அலங்காரம் பண்ணிப் பார்த்ததுண்டா? உங்களையும் கூட எளிமையாத்தானே வளர்த்தாங்க.. அவங்களுக்கு எதுக்கு காசும், நிலமும்?

'சட்'டென்று திரும்பி இவளைப் பார்த்தவனின் கண்கள் ததும்பிக் கிடந்தன. இவள் கைகளை இறுகப் பற்றினான்-

"நீ சொல்றதை நம்பத்தான் ஆசை, மாயா.."

"நான் பொய் சொல்லலை..."

"அது உண்மைன்னு நிச்சயம் செய்றதுக்குத்தான் நான் வடக்கே போறேன்." அவன் கைகளின் இறுக்கம், வெப்பம் அவளுக்குப் பிடித்திருந்தது. கண்மூடி ரசித்தாள்.

மிக அருகேயிருந்த அவன் அகலத் தோளில் சாய்ந்து கொண்டால் வெகு சுகமாயிருக்கும் - ஆனால் இந்தளவு ஏற்பட்ட நெருக்கத்தையும் கூட அது கெடுத்து விடக் கூடும்... ஆக புன்னகையுடன்,

"ஆகட்டும் அத்தான் - வாழ்த்துக்கள்-" என்றாள்.

மறுநாள் எழுந்த போது நன்கு விடிந்திருந்தது. மனதுக்குள்ளும் ஏராள வெளிச்சம். ஆக அஸ்வினி செய்த குழப்பந்தான் இருவரிடையே சுவர் எழுப்பியிருக்கிறது - வேறேதும் இல்லை என்ற நிம்மதி.



காப்பி கோப்பை தன் அறைக்கு எடுத்துப் போய் ஜன்னல் வழியே பார்வையோட்டியபடி ரசித்துப் பருகினாள்.

'கீச்கீச்' சென்று சுறுசுறுப்பாய் மரத்திற்கு மரம் பறந்து திரிந்தன சிட்டுக்கள் - அவற்றுக்கு தான் எத்தனை உல்லாசம், உற்சாகம்!

இந்த ஜீவன்களுக்கு நோவு, வியாதி எல்லாம் உண்டா? வாழ்வின் முடிவாய் சாவும் கூட வெகு இயல்பாய், இயற்கையாய் வந்து விடுகிறது-

அம்மாவின் நோவை நேற்று மாறன் நினைவு படுத்தியதால் ஏற்பட்ட சிந்தனை இது. இந்த ரீதியில் சிந்திக்க மனதுக்குள் 'திடும்' மென ஒரு தெளிவு தோன்றியது. மாறன் கேள்விக்கான விடையும் கிடைத்தது!

அஸ்வினி சித்தி மரண வாக்குமூலமாய் சொன்னது-

'பரணிலுள்ள ட்ரங்க் பெட்டியைச் சுத்தம் செய்ங்க.'

ஆக சித்தி செய்த தவறுக்கு மாற்று அதுதான்! அம்மாவின் மெடிக்கல் ரிப்போர்ட் அதிலிருந்ததே - இப்போது அது தன் பீரோவில்தானே உண்டு! அவசரமாய் திறந்து உள்ளிருந்த பழுப்பு காகிதங்களைப் புரட்டினாள் மாயா.

ம்ம்.. சின்னத்தை சொன்னது போல மரணத்திற்கு காரணம் புற்று நோயல்ல.

'ஓவேரியன் சிஸ்ட்' என்றது ரிப்போர்ட்.

'பீடிகல் ட்விஸ்ட்', 'அப்ஸ்ட்ரக்ஷன்', காங்ரெனியஸ்' என்ற வார்த்தைகளுக்கு மருத்துவ அகராதியில் அர்த்தம் தேடிப் பிடித்தாள். சினைப்பையில் கட்டி வந்திருக்கிறது - முடிச்சாய் திருகி ரத்த ஓட்டத்தைத் தடைபடுத்தியதால்தான் அம்மாவிற்கு அத்தனை வலி வேதனை - ரத்த ஓட்டம் அற்றதால் அதைச் சுற்றிலும் பழுது நேர்ந்து உயிருக்கே ஆபத்தாய் முடிந்து போனது. இந்நிலையைக் கஷாயத்தால் உருவாக்க முடியுமா? அபத்தம்.

உடனே மாறனிடம் ஓடிப்போய் உலுக்கி விஷயத்தைச் சொல்ல வேண்டும் போன்ற பரபரப்பு. அவனை மாடிப் பரணிற்கும் அழைத்துச் சென்று காட்டி விவரமெல்லாம் சொல்லலாம்.

அந்நேரம் நீலப் பெட்டியிலிருந்த பழம் புகைப்படத்தைப் பற்றிய நினைவு அவளுக்கு எழவில்லை. அதீத வேதனையிலோ, மகிழ்ச்சியிலோ புத்தி சற்று மந்தமாகிப் போகிறது. துக்கத்தில் அல்லது துள்ளலிலேயே லயித்து மற்றதை மறந்து போகிறது.

மாறனைத் தேடி ஓடினாள். அவள் அப்படி மானாய் படிகளைத் துள்ளிக் கடந்து எத்தனைக் காலமாயிற்று.

அருவியாய் இறங்கியவளை ஆனந்தமாய் பார்த்தாள் சரோஜா.

'திடும்'மென வீட்டின் பழைய களை முழுசாய் மீண்டது போல உணர்ந்தாள்.

"சின்னத்தை, கையில என்ன கடுதாசி?"

"அவர்தான்... மாயாம்மா."

"என்ன டாக்டர் போய் ரெண்டே நாள்தான் ஆச்சு- அதுக்குள்ளே கடிதாசியா? அதான் இந்தப் பரவசப் புன்னகையா?"

"அது... உன்னைப் பார்த்தாலே..."

"அதான் தினமும் பார்க்கறீங்களே?"

"இப்படி சிரிப்பும், காலிலே சக்கரமுமாய் பார்த்து நாளாச்சேம்மா."

"ம்ம்... அத்தான்கிட்ட.... வந்து.. கடிதாசியில என்ன சொல்றார் டாக்டர் முதல்ல அதைச் சொல்லுங்க."

"சௌக்யமாப் போய் சேர்ந்தாராம் - எட்டுக் குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சை நல்லபடி நடந்துதாம். பால்ய வயசிலேயே முடங்கி, சுருண்ட தசை, நரம்புகளை ஓரளவாவது சீராக்கி நேராக்குவது லேசில்லையே... இந்த அறுவைச் சிகிச்சையோட பிள்ளைகளின் வேதனை முடிஞ்சிடாதாம். ரணம் கொஞ்சம் ஆறினதுமே 'பிஸியோதெரபி' ஆரம்பமாம். அந்தப் பயிற்சிகளில் வலி அதிகந்தானாம். ஆனால் சுணங்காமல் செய்ய செய்யத்தான் குணம் தெரியும்..."

"ஹைய்யோ!" போலியாய் மயங்கி நாற்காலியில் சரிந்தாள் மாயா.



"உங்களுக்கு வயசாயிடுச்சுதான் போல சின்னத்தை.

"யாரு இல்லைன்னா?" உதட்டை அழுத்தி குறும்பாய் சிரித்தாள் சரோஜா நான் இல்லேன்னா நினைச்சேன்.. தப்பு. தப்பு... இல்லைன்னா இத்தனை வருஷங்கழிச்சு சந்திச்சு, மாலை மாத்திக் கிட்டவங்க இப்படியா எழுதிப்பாங்க - ஆபரேஷன், பிஸியோ தெரபின்னு..?"

கேலி பேசியவள் மறுநிமிடம் கனிந்தாள்-

"ஆனா ஒன்னு சின்னத்தை, நீங்க ஒருத்தருக்கொருத்தர் ஏத்த ஜோடி. தன்னலமில்லாத சேவையும் அன்புமாய்... உங்க சேவையிலே இந்த எஸ்டேட் ஒரு குட்டி சொர்க்கமாய் மாறணும்... நினைக்கவே பெருமையாய் இருக்குது."

மூத்தவளை இழுத்து, நெற்றியில் முத்தமிட்டாள் மாயா.

"உங்கதைக்கு வருவோம் மாயாம்மா - அத்தான்னு ஏதோ ஆரம்பிச்ச நீ பிறகு மரியாதைக்காக கடிதாசியைப் பற்றி பேசினே.."

"ஹி ஹி.."

"மாறன் எங்கேன்னுதான?"

"ஆம்... மா."

"பசு கன்னு ஈனுடுச்சின்னா பொன்னி. வெட்டினரி டாக்டரை போனில வரவழைச்சவன் உடனே அங்கே போயிட்டான். டாக்டர் வந்ததும் மறுபடி வந்து அழைச்சுட்டு போனான் - மற்ற மாடு, கன்றுகளையும் அவர் ஒரு பார்வை பார்த்தாச்சுன்னா நல்லதுதானே."

"ஓ... சரி."

கொட்டில்கள் பின்புறமாய் பத்து நிமிட நடை தூரத்தில் இருந்தன. தவிர மாறன் இப்போது வேலையாய் இருக்க, கூட பிறகும் இருக்கிறார்கள்.

மறுபடி மாடிக்கேத் திரும்பினாள்.

ஏதோ பத்திரிகையைப் புரட்டினாள் - மனம் அதில் பதியவில்லை. சுழன்று சுழன்று நினைவேடுகளைப் புரட்டியது....

அப்போதுதான் திடீரென அந்த சந்தேகம் அவளைப் பாம்பாய் சுற்றி இறுக்கியது.

அம்மாவைக் கொல்ல செண்பகா அத்தை வடநாட்டிலிருந்து முயன்றாள் என்றால் அது இங்கு முக்கியமான நபர் ஒருவரின் ஒத்தாசை இல்லாமல் முடிகிற காரியமல்ல.

'என் அம்மாவும் ஒரு காரணம்' - என்றான் மாறன்.

அப்படியென்றால் முதற்காரணம் யார்...? யாருடைய திட்டம் அது? முடிச்சு முழுதுமாய் அவிழவில்லை!

அச்சமயம் சரோஜாத்தை வீட்டில் இல்லை- வேறு பொறுப்பான வேலையாட்கள் யாருமில்லை... அப்பாதான் இங்கு எல்லாமும் - தவிர செண்பகத்தின் உறவு இங்கு அவர் மட்டும் தான்.... அப்பா.

கொலைக்கு மற்றொரு காரணம் தன் அப்பாவையா குறிப்பிட்டான் மாறன்?

அவளுக்குத் தலை சுற்றியது.!

## 25

தன் மனதை அதட்டினாள் - அடக்க முயன்றாள்.

'ந்தா - அஸ்வினி சித்தி சொன்னது முழுப் பொய் என்று நினைத்த நீயே... இப்போது அம்மாவின் மரணத்திற்கு இன்னுமொரு காரணம் யார் என்று ஏன் ஆராய்கிறாய்? அஸ்வினி ஒளித்து மறைத்த மருத்துவ ஆதாரங்களை மாறனுக்குக் காட்டினால் சதி ஒன்றுமில்லை என்றாகிறதே?

ஒன்றே இல்லை எனில் இரண்டு, மூன்று என வளர்ப்பானேன்? ஆனால் மொத்தத்தில் ஒன்று புரிந்தது. அஸ்வினி சித்தி மாறனிடம்



மேலும் ஏதோ சொல்லியிருக்கிறாள். மாறன் தன்னை மறுக்க அன்று அந்த துக்கத்தைச் சித்தியிடம் பகிர்ந்தவளை கட்டிய அஸ்வினி சித்தி கோரமாய் சிரித்தது மனக்கண்ணில் தெரிந்தது அச்சமூட்டியது. அது எதற்கும் துணிந்த ஒரு பேய் மனதின் வெளிப்பாடு. பிறரைத் துன்புறுத்தி அதில் மகிழும் வக்கிரம் - சித்தி வேறென்ன கட்டுக் கதை சொல்லியிருக்கக் கூடும்?

ஏனோ நினைக்கவும் நெஞ்சு அஞ்சி கூசியது. வதந்தி முழுக்க கற்பனையாகவே இருந்தாலும், 'அதிலே துளி உண்மைக் கூடவா இருக்காது?' என்று சந்தேகிப்பது மனித இயல்பு - அதனால்தானே 'கிசுகிசு'க்கள் உற்சாகமாய் உற்பத்தி ஆகின்றன!

அப்பா, செண்பகா அத்தையுடன் சேர்ந்து தன் தாயின் சாவிற்கு காரணம் ஆகிவிட்டார் என்பது நம்பவே கூடாததுதான் என்றாலும் அது சிந்தனைகளை வக்கிரமாய் கிளறி விட்டது நிஜம்.

ஆக மாறனிடம் நேரேப் போய் மருத்துவ சான்றிதழ்களைக் காட்டும் உற்சாகம் குறைந்து விட்டது. மருத்துவ 'ரிப்போர்ட்'டை மாறனின் அறையில் கொண்டு வைத்தாள்.

தனியே இதை வாசித்து அவன் தெளியட்டும். அவன் தெளிவைப் பார்த்து தான் தனக்கும் தெம்பு மீள வேண்டும்!

பரணில் முன்பு பார்த்த சில பழைய ஆல்பங்களையும் எடுத்து வந்தாள் - கவலையற்ற நாட்களின் நினைப்பில் இப்போதைய சஞ்சலம் கரைந்து போகாதா என்ற ஆதங்கம்.

"மாயாம்மா, உனக்கு போன்-"

"யாருத்தை?"

"மேஜர் அங்க்கிள்."

இப்போது படிகளில் இறங்கிய போது கால்கள் இரும்பாய் கனத்தன. தொலைபேசி கருவியில் மேஜரின் உற்சாகக் குரல் கரகரத்தது.

"எப்படியிருக்கேனா? பிரமாதமாய் இருக்கேன்... அதாவது கௌரிக் கிழவி எம்பக்கத்திலே இருந்தும் கூட!" வழக்கமாய் அவர்

மனைவி பக்கம் பரிந்து பேசும் இவள் இன்று மௌனமாய் புன்னகைத்தாள்.

"விஷயத்தைச் செல்லிடறேன் மாயா - இப்போ எங்க வீட்டுக்கு நீ வந்தியானால், ரொம்ப விசேஷமான ஒரு பல்லு போன இளைஞனை உனக்கு அறிமுகப்படுத்துவேன்.."

"ஆங்... யாரது?"

"என் நண்பன் மேஜர். வாரியார். பல்லு போச்சுன்னாலும் பலக்க 'ஜொள்'விடுவான். திரிச்சூரிலேருந்து வந்திருக்கான் தன் மனைவியோட. ரெண்டே நாளிலே நாலு பாட்டில் விஸ்கி காலி பண்ணிட்டோம். சுமாராய் 'ப்ரிட்ஜ்' விளையாடினோம் - பழைய போட்டோஸ் பார்த்து ஆனந்தப்பட்டோம்."

"உம்" கொட்டியவளுக்கு இந்த ஒற்றுமை விநோதமாய் தெரிந்தது. அவளும் பழம் புகைப்படங்களில் தானே ஆறுதல் தேட நினைத்தாள்?

மனதுக்குள் ஏதோ ஒரு அசௌகர்யம்.

"அதிலே அவன் கொண்டு வந்த ஒரு படம் ரொம்ப விசேஷம்- அதில நம்ப மாறனை உரிச்செடுத்தாப்பல ஒரு இளைஞன் நிக்கறது போலிருக்குது!"

"ஓ... உலகத்திலே ஏழு பேர் ஒரே சாயல்ல.."

"அந்தப் பாட்டிக் கதையெல்லாம் பேசுவியா நீயும்? இது வேறு விஷயம் அவர் பக்கத்துல உன் செண்பகாத்தை இருக்காங்களே- அதாவது அவர் மாறனோட அப்பா."

இவளுள் படபடப்பு கூடியது.

"நீங்க செண்பகாத்தையை சந்திச்சதில்லையே அங்கிள்?"

"உங்க வீட்டுக்கு வரும்போதெல்லாம் போட்டோல அவங்களைப் பார்க்கிறேனே... என்னம்மா நீ?"

"நா.. நான் மாமாவைப் பார்த்ததில்லை அங்கிள் - மாறனுக்குக் கூட அவரைப் பத்தி ஏதும் தெரியாதுன்னு நினைக்கறேன்."



"உன் மாறனைப் பொடிப்பயலாய் பார்க்கணுமா?"

"அ... ஆங்?"

"திணறாதேம்மா. எல்லாம் எனக்கும் தெரியும் - அடுத்தது உங்க நிச்சயதார்த்தம் சீக்கிரமே நடக்கணுங்கறது எங்க ஆசை. பிரார்த்தனை எல்லாம்."

"அத்தானின் சிறுவயசுப் படம் எதையும் நான் பார்த்ததில்லை."

"அப்ப ஆசையாயிருக்கும் இல்லை - வா, ஓடி வா."

மேஜருக்கு இங்கு நடக்கும் குழப்பங்களை ஓரளவு அறிந்தவர் - ஆக வாஞ்சையாய் அழைத்தார்-

"மாறனும் நீயுமாய் வாங்கம்மா. பழங்கதைகளைக் கேட்டபடி படங்களைப் பாருங்க. அப்புறம் இந்தக் கிழங்களோட உட்கார்ந்து ரெண்டு சுற்று சீட்டு விளையாடி, ஒரு வாய் சாப்பிட்டுப் போலாம்."

"ஆசைதான் - ஆனால் அத்தான் வேலையாய் இருக்காங்க - வெட்டினரி டாக்டர் வந்திருக்கார் - அதான்."

"எப்ப வசதியோ, அப்ப வாங்கம்மா-"

மேஜரின் குரலில் சற்ற ஏமாற்றமிருந்தது. இவளுள் ஏதோ பேசியது. அந்தப் படங்கள், பழங்கதைகள், யாரும் அறியாத விடுகதைக்கு விடை தரலாம் என்ற உள்ளுணர்வு. யாரும் பார்த்தறியாத மாறனின் தகப்பனைப் பற்றிய விபரங்கள் கிடைக்கும். முதலில் தான் அவற்றை தெரிந்து கொள்ள வேணும் என்ற உந்துதல்.

விஷயம் எப்படிப்பட்டதோ? மாறன் நாலு பேர் நடுவே அவமானப் பட நேர்ந்தால்... தனக்குத் தாங்காது. விபரம் தெரிந்து, தானே அத்தானிடம் நாசுக்காய் தெரிவிப்பது நல்லது.

இளநீல ஷிபான் சல்வாருக்குள் புகுந்து, தலை சீவினாள். "சின்னத்தை, இன்னைக்கு நான் மூணாம் வகுப்புக்கு ஆங்கிலம் எடுக்க வேண்டியது..." - இழுத்தாள்.

"நாம் பார்த்துக்கறேம்மா - நீ மாறனைத் தேடினியே?"

"இல்ல... இல்லத்தை. சும்மாதான். இப்போ நான் மேஜர் அங்கிள் எஸ்டேட்டுக்குப் போறேன்."

"டிரைவர் யாரும் இல்லையேம்மா. ஜீப் டிரைவரும் உரம் வாங்க திண்டுக்கல் போயாச்சு - மாறன் வரட்டுமே.."

"அவரைத் தொந்தரவு செய்ய வேணாமத்தை. என் சைக்கிளை வேணு துடைச்சு, கச்சிதமாய் வச்சிருக்கிறதைப் பார்த்தேன் - அதிலேயே போயிடறேன்."

"ஆமாம் எண்ணை விட்டு, காத்தடைச்சுதான் இருக்குது - ஆனாலும்"

"சைக்கிள் உடம்புக்கு நல்லதத்தை" - கையாட்டி விட்டுப் பறந்தாள் மாயா.

சைக்கிள் மிதிக்கத் தொடங்கிய மூன்றாம் நிமிடமே வியர்க்க ஆரம்பித்தது. சில வாரங்கள் உடல் உழைப்பற்ற வாழ்க்கைப் பழகிய உடல் மேடு பள்ளங்களில் சுணங்கியது.

ஒரு வழியாய் போய் சேர்ந்த போது 'யப்பாடி' என்றிருந்தது. வாசலிலேயே மேஜர் தம்பதிகள் எதிர்பார்த்து நின்றார்கள்.

"யாருக்காக காத்து நிற்கறீங்க?"

"உனக்கே உனக்காகத்தான்! சரோஜா மூணு போன் செய்துட்டா - 'மாயாம்மா வந்து சேர்ந்தாச்சா? ஏன் வரலைன்னு'!"

"குறைஞ்சது மூணு மைல் இருக்குமே அங்க்கிள் - கௌரி தந்த குளிர்ந்த பழரசத்தைப் பருகியபடி சொன்னாள்.

"அதை ரொம்ப சீக்கிரமாத்தான் கடந்து வந்திருக்கே - காதல் சிறகுகளுக்கு வேகம் அதிகந்தான்!"

தனக்குள் பேசியபடி தலையை உருட்டினார் மேஜர் - கழுகு மூக்கும் குறும்பு விழிகளும் அவருக்கு.

"உங்க நண்பரை எங்கே காணும்?"

"அவன் என்னளவு அழகனில்லை... இப்போதே சொல்லிடறேன்." - கண்சிமிட்டினார்.

"அவ ஒன்னும் உங்களையும், வாரியாரையும் பார்க்க வரலை... குட்டி மாறனைப் பார்க்கற ஆசையில வந்திருக்கா." - நொடித்தாள் கௌரி.



இவர்களது கேலி பேச்சை ரசிக்கும் மனநிலையில் மாயா இல்லை. அப்புகைப் படத்தைப் பார்க்க ஆவல் அதிகமாயிருந்தது.

அந்தப் படம் மேஜரின் நண்பரிடம் எப்படி வந்திருக்கும்? எதற்காய் அவர் அதை இத்தனை தூரம் கொண்டு வரவேணும்? தான் இதுகாறும் குமைந்த வேதனைக்கும், ஏக்கத்திற்கும் பரிதாபப்பட்டு விதி விட்ட வழியா இது?

இவள் பிரார்த்தனைக்கு கடவுள் காட்டும் அநுக்கிரகமா?

கடவுளுக்கு மனராத நன்றி சொன்னாள். நிச்சயமாய் ஏதும் இன்னும் தெரியவில்லைதான் - ஆனாலும் நடுக்கடலில் தத்தளித்தவனுக்கு படகு கண்ணில் பட்டது போன்ற பரவசம்... ஆசுவாசம்.

"இரு, வாரியாரை எழுப்பறேன் - பயல் ராத்திரிப் பறவை, பகல்ல ரெக்கைக்குள்ளே முகத்தைப் புதைச்சுக்குவான்."

"தூங்கட்டும் - அந்தப் படத்தை மட்டும் எடுத்துட்டு வாங்க, அங்க்கிள்."

"எங்க வச்சிருக்கானோ?"

ஆனால் உள்ளே போன ஐந்தாம் நிமிடமே மேஜர், தன் நண்பருடனும் அவரது மனைவியுடனும் வெளியே வந்தார் -

"அம்மா தூங்கலை" - விவரம் சொன்னதும் "பயலை எழுப்பிடட்டா." என்றவர் பரஸ்பரம் அறிமுகம் செய்தார். கரம் குவித்த மாயாவின் கன்னத்தைத் தட்டி,

"சுந்தரி" என்றார் வாரியார்.

"பேர் - மாயான்னேன்."

"நல்ல அழகின்னதாக்கும் அர்த்தம்."

"ஓஹோ.... அந்த சுந்தரியா?"

"சொப்பன சுந்தரி."

"நீங்களும் தமாஷாகத்தான் பேசறீங்க."

"ஆர்மி வாழ்க்கை வேற மாதிரியானது சுந்தரி. உயிரையே நாட்டுக்காகத் தரத் துணிஞ்சிடறோம் - மற்றதெல்லாம் துச்சந்தன்னே? ஆக எப்போதும் தமாஷும் சிரிப்பும் சாத்தியம்."

"அடிக்கடி பார்ட்டி நடக்கும். அதிகாலமே ஆம்பிள்ளைங்க வேலைக்குக் கிளம்பிட, நாங்க விதவிதமாத் தையல், பின்னல் வேலைன்னு பொழுதை நகர்த்துவோம். எல்லோரும் ஒரே காலனியில் சேர்ந்து இருக்கறதால் தனிமைங்கற கஷ்டமில்லை." என்றாள் கௌரி.

வாரியார் இன்னும் உடம்பைக் கட்டுக்கோப்பாய் வைத்திருக்க, அவரது மனைவி உருண்டையாய் இருந்தாள். சிவந்த நிறமும், சிரித்த முகமும் அதன் அகலக் குங்குமமும், தழைந்த கருகமணி மாலையும் அவளைக் களையாக்கின.

"செம்பாவ ஞாங்கள் அறியும் - அவ ஈ பக்கம் வந்ததும் தெரியும் அதுதன்னே ஈ படத்தை ஞாபகங்கள் எடுத்து வந்தது - யாருக்கேனும் அவளை அறியாமோனுட்டு.. செம்பா மரிச்சுப் போயதைக் கேட்டு கஷ்டமாயிட்டு" -

மெல்லிய குரலில் பேசிய வாரியாரின் மனைவி ஒரு புகைப்படத்தை நீட்டினாள்.

சற்று பெரிய படம்தான். கருப்பு வெள்ளையில் தெளிவாயிருந்தது. அதில் அழகும் அடக்கமுமாய் நின்றிருந்தாள் செண்பகா அத்தை. அவள் கையில் 'பொசுக்' கென்ற இரண்டு வயதுக் குழந்தை.

இவள் விழிகளில் ஊசியாய் குத்தி வெளிவந்தது கண்ணீர் துளி. மாறனுக்குக் குழந்தை பருவத்திலும் கூட இதே அடர்ந்த புருவங்கள், வடிவான மேலுதடுகள். அவனை விழி நிறையப் பார்த்த பிறகே அருகே நின்ற ஆடவனை - அதாவது மாறனின் அப்பாவை நோக்கினாள் - தன்னிச்சையாய் புன்னகை பிறந்தது!

மாறன் அச்சு அசல் தகப்பனைக் கொண்டிருக்கிறான். கண்களின் பாவனை மட்டும் வேறுபட்டிருந்தது - சற்றே முரட்டு முழி!



"செம்பா நல்ல பொண்ணு - எத்ர விதமாய் உழைக்கும்? தையலு சமையல், கைவேல அத்தரையிலும் கெட்டி!"

"சின்ன வகுப்புப் பிள்ளைகளுக்கும் ட்யூஷன் எடுப்பா."

"ம்ம்... மாமா... செண்பாத்தை புருஷன் என்னவாயிருந்தாங்க?"

மேஜர் வாரியாரும் அவர் மனைவியும் உடனே இதற்குப் பதில் சொல்லாமல் ஒருவரையொருவர் அசட்டுத் தவிப்புடன் பார்த்துக் கொண்டனர்.

சில நொடிகளுக்கு இம்மௌனம் கனமாய் பிசுபிசுத்தது.

வீட்டினுள் நுழைந்த மாறன் முழுக்க வியர்ந்திருந்தான். மிருக வைத்தியரை வழியனுப்பியவன் குளியல் போடும் அவசரத்தில் இருந்தான்.

"மாடுங்க எல்லாம் சௌக்கியந்தானப்பா?" புன்னகையுடன் விசாரித்தாள் சரோஜா.

"ஈனுன மாட்டோட மற்றதையும் ஒரு பார்வை பார்த்துட்டா நல்லது தானே சித்தி."

"இந்த மோரைக் குடிச்சிடு."

ஒரே மூச்சில் குடித்தான்.

"மாயாம்மா உன்னைத் தேடுனாப்பா."

"என்னவாம்?"

"தெரியலை. மேஜர் ஐயாட்டேருந்து போன் வந்துச்சு - பேசின கையோடு சைக்கிள் ஏறி கிளம்பிட்டா!"

"அவங்க எஸ்டேட்டுக்கா?"

அடர்ந்த அவன் புருவங்கள் முடிச்சிட்டன.

"தனியாப் போக என்ன அவசரம் எடுத்துச் சொல்லக் கூடாது நீங்க?" "கேட்கலியே போன் போட்டுக் கேட்டேன் அவ பத்திரமாய் வந்து சேர்ந்துட்டதாய் சொன்னார் மேஜர்."

"நல்லது."

நல்ல உடல் உழைப்பிற்குப் பின்னான குளியலின் சுகம் அலாதி. இன்று அவனால் அதை ரசிக்க முடியவில்லை என்றாலும் சுத்தமான உடம்பு பளபளத்தது. ஈரத் தலையைச் சிலுப்பி கோதியவனைக் கட்டில் மீது கிடந்த பழைய கோப்பு கவர்ந்தது.

அவன் இதுவரைப் பார்த்திராத இது எப்படி இங்கு வந்தது? மாயா இதற்காகத்தான் தன்னைத் தேடியிருப்பாள்.

ஓரங்கள் நைந்த அதை எடுத்துப் பிரித்தவனது உடல் சிலிர்த்தது. முதலில் அவசரமாய் விவரத்தை உள்வாங்கியவன், மீண்டும் மெள்ள வாசித்தான்-

அவன் உடம்பெங்கும் விநோதமாய் வெப்பமாகியது.. விரல்களும் நடுங்கின.

## 26

செண்பகாவைப் பற்றி ஆவலும் பிரியமுமாய் பேசிய தம்பதிகள் மாமாவைப் பற்றிய கேள்வியில் மௌனமாகி விட்டது மாயாவை உறுத்தியது. அதுவரை ஆவலாய் தத்தளித்த இதயம் இப்போது அச்சத்துடன் துடித்தது.

மேஜர் சந்திரன் இடை புகுந்தார்.

"சும்மா சொல்லு வாரியார். பொண்ணு, உன் சுந்தரி, விவரமெல்லாம் தெரிஞ்சுக்கத்தான் இப்படி ஓடிவந்திருக்குது. செம்பகாம்மாவின் மகனை மாயா விரும்பறா -- அதென்ன ப்ரேமிக்குந்நு - ஆனாலும் ஏனோ கல்யாணம் கூடி வரலை."

"பெரியவங்களுக்கு அதில இஷ்டமில்லையோ?"

"அதுமாதிரி கஷ்டங்கொடுக்கற பெரியவங்க இப்ப யாருமில்ல. இருந்தாலும் எதிர்ப்பிருக்காது - முறைப் பிள்ளைங்க தானே.."



ஓ! பெருசுங்க ரொம்ப சம்மதம் காட்டினா, இளசுங்க ஆட்டம் அதிகமாகுமல்லோ?" வாரியர் கண்சிமிட்டினார்.

"எல்லாம் நம் அளவில யோசிக்காதப்பா - இதுங்க தங்கமான பிள்ளைங்க. பள்ளிக்கூடத்தில அத்தனை சிறுவயசு டீச்சருங்க இருந்தும் பயல் ஏறெடுக்க மாட்டான்."

"மாய சுந்தரியக் கண்டவனுக்கு மித்தது ருசிக்காதல்லோ!"

"இல்லை அங்க்கிள், வெட்கம் விட்டு நானே அவரை விரும்பறதாயும் சொன்னேன் - ஆனால் அவரு அதை ரசிக்கலை, ஒத்துக்கலை - எங்களுக்கிடையே கல்யாணம் சாத்திய மில்லைனுட்டார்."

"ஏனாம்?"

"தகுதியில்லை, முறையில்லைன்னு மென்னு முழுங்கறார் - அவர்... என்னை அந்த... மாதிரி விரும்பலைங்கறது தெளிவாயிடுச்சு."

தலை கவிழ்ந்தாள் - அருகே வந்த கௌரி ஆதரவாய் இளையவளின் கை பற்றிக் கொண்டாள்.

"உம்மேல மாறனுக்கு ஏக பிரியந்தான் - ஆனால் உணர்ச்சிகளை வெளிக்காட்டாத சுபாவம். பேச்சும் கூட அளந்துதான வரும்? ஆனா கண்ணை... அதில வழியற பிரியத்தை யாராலும் மறைக்க முடியாது - சரோ நிச்சயதார்த்தப்ப கூட நான் பார்த்தேனே உன்னை ஏக ஆசையாய் பார்த்திருந்தான்.."

"ஆக மறுப்புக்குச் சரியான காரணம் சொல்லலை?'

"ம்ஹூம்... இங்கே ஏதும் விளக்கம் கிடைக்குங்கற ஆவலில் வந்தேன் - ஏன்னா செண்பகாத்தை அவங்க புருஷனைப் பற்றி பேசுனதேயில்லை. ஆக தன் தகப்பனைப் பற்றி மாறனுக்கும் அதிகமாய் தெரிஞ்சிருக்காது - சமீபமாய் ஏதோ தெரிய வந்து அதனாலத்தான் மறுக்கறாரோ என்ற சந்தேகம் எனக்கு."

"இருக்கலாம்மா - ஏன்னா ரத்னவேல் அப்பேர்பட்ட பேர்வழியாக்கும்." தலையாட்டினார் வாரியார்.

"அது யாரு?'

"அவர்தானே செம்பா புருஷன்."

"மாமா பார்வையே கொஞ்சம் முரட்டுத்தனமாய் தெரிஞ்சுது."

"முரட்டு முட்டாள். இல்லைங்கில் செம்பாவின் அருமைத் தெரியாமப் போகுமோ?"

"எங்க... எங்க போயிட்டார்?"

"மேலேயாக்கும்" - விரலை கூரையை நோக்கி சுட்டினார்.

"மாமா சீக்கிரமே இறந்துட்டார் இல்லையா?"

"வல்லிய கம்பீரமான அழகன் நின்ட மாமா - ஆனா செய்ததெல்லாம் அத்தர கம்பீரமல்லா. உத்தியோகம் புருஷ லட்சணம். ஒரு உத்தியோகத்திலும் நிலைச்சு நிக்கானில்லா."

"அதனாலத்தன்னே செம்பா ஓடி ஓடி உழைச்சது. விரலு ஒடிய கம்பளி குல்லா பின்னி விக்கும் - எத்ர விதமான ஊறுகாய்கள்.

ஞிங்கள் தமிழ்நாட்டுப் பலகாரம்.. எந்தா அது...?" திருமதி வாரியார் யோசிக்க கணவர் தொடர்ந்தார் -

"முறுக்கு சீடா, விசேஷமான ருஜி. அதும் அந்த 'மொறுமொறு' சீடா விஸ்கிக்கு படா தோது."

"மாமாவைப் பற்றி.."

"ஆங்... அவருக்கு சீட்டாட்டம் கைவந்த கலையானு. அதுல தொலைச்ச காசை பெண்டாட்டி மூலம் தன்னே ஆ ஆளு தேடும் - பாவம் செம்பா.. முகங் சுளிக்காத குட்டி."

"ஆனால் புருஷன் அடிச்சு உதைச்சதில் முதல் கர்ப்பம் கலைஞ்சு போயி . செம்பா மனசு நொறுங்கிப் போயி. அப்பதன்னே ஈ எஸ்டேட் பற்றி உங்கிட்ட சொல்லி. சிறுமலையிலுள்ள எங்கண்ணா என்னைக் கூப்பிடுது - அவருக்கு நாம் படும் பாட்டை காண வையா. ஆனா கட்டினவரை விட்டுட்டுப் போகான் எனிக்கும் மனசாகலியேன்னு கரைஞ்சு புலம்பி... ஆனாலும் பொறுமையான பொண்ணு."



"அதான் அத்தனை சோதனை. அங்கே போய் செண்பகாவை அழைச்சது உங்கப்பாவாத்தான் இருக்கணும் மாயா - இவஞ்சொல்றதெல்லாம் ஏறக்குறைய முப்பது வருஷத்துக்கான கதையம்மா."

"மறு வருஷம் செம்பாக்கு ஆண் குழந்த பிறந்து - அப்பனை உறிச்செடுத்தாலே.. போல.. ஆனால் குணம் அவங்கம்மைக் கொண்டு!"

"மாறனை உங்களுக்கு நினைப்பிருக்காம்மா?"

"சில... நாளு அக்குழந்தைய எங்கிட்ட விட்டுட்டு பொயிருக்கு செம்பா - ரெண்டு வயசிலேயே சிந்தாம சிதறாம அழகா உண்ணுவான். விளையாடி கழிச்சா பின்னே அந்தந்த பொருளு அதுக்குண்டான இடத்துக்குப் போயிடும் - சமர்த்தது."

"வளரவும், தாய் கஷ்டம் புரிஞ்சு இன்னும் அனுசரனையா நடந்துகிட்டான்." "அதுதண்னே செம்பாக்கு ஆறதல். அவளுக்கு புருஷங்கிட்ட இம்சைதான்... ஆனால் அத்ரையிலும் அவனை விட்டு போனானில்லா. ஒரு தடவ செம்பா 'பணமில்லை'ங்கவும் ரத்னவேல் பக்கத்து வீட்டிலே நுழைஞ்சு.." பேச்சு தடைப்பட்டது.

"ஏ.. எதுக்கு?"

"திருடத்தான். அங்கேருந்தது ஒரு கிழவர் மட்டுந்தன்னே. ரெண்டு மகனுங்களும் ஐ.ஐ.டியில என்ஜினியரிங் படிச்சு வழக்கம் போல் வெளிநாட்டுக்கு வேலைக்குப் போயி. பெரியவர் நம்மூர் பொண்ணுகளைத் தேடி கல்யாணஞ் செய்து தந்தும். பையனுங்க இந்தியா வந்த பாடில்லா - அமெரிக்க மோகம் லேசில தீந்தபாடில்ல - பொண்ணுங்களும் அங்க ஓட்டியாச்சு - பிள்ளைங்க வர்ரதில்லை - ஆனா கொள்ளை பணம் அனுப்பும்."

மூச்சை இழுத்துப் பிடித்தபடி கவனித்தாள் மாயா.

"பெரியவர் பாங்க் போறதையும், பணப்புழக்கம் ஜாஸ்திகறதும் கண்ட ரத்னவேல் திட்டம் போட்டாச்சு - சுலபமாய் ஏமாத்தி பணம் அடிக்கலாங்கற திட்டம்... ஆனா அப்படியாகலை. இவன் மிரட்டவும் கிழவர் தடியைத் தூக்கி அடிக்க வந்தாச்சு..."

"ஐயோ...!"

"ரத்னவேலுக்கும் ஆத்திரம் - சீட்டாடற கையோட அரிப்பு லேசுபட்டதோ? ஆக ஆத்திரமாகித் தள்ள பெரியவர் தடுமாறி விழுந்து - இசகு பிசகாய் ஊனிய கிழட்டு கை ஒடிஞ்ச போயி... மூத்த பையன் ஈத் தகவல் கேட்டதுமே ஃப்ளைட் ஏறிட்டான்."

"வந்து அப்பாவைத் தன்னோட அமெரிக்கா கூட்டிப் போயிட்டாரா?" "ஆ... அதில்லா- வந்து கேஸ் போட்டான்! ரத்னவேல் ஜெயிலுக்குப் போயாச்சு."

"மாமா... ஜெயிலிலா?"

"ஜெயிலுக்குப் போன புருஷனைப் பார்க்காம போகங்கில் தன்னே செம்பா உங்கிட்ட பையனை விட்டுப் போகும்."

"மகன் கம்பி பின்னாடி நிக்கும் தகப்பனைப் பார்க்க வேண்டாங்கற அச்சம். தப்பு, குற்றத்தின் சாயலு கூட எங்குழந்தை மேல பட வேண்டா - இவனெங்கிலும் நல்ல நெறியாய் வளரட்டும்பா."

"நியாயமான ஆதங்கம்தான் -" ஆமோதித்தாள் கௌரி.

"இதெல்லாம்... எந்த ஊரிலே நடந்ததுன்னு... நீங்க சொல்லலியே?"

"பூனாவிலேம்மா."

"ஓ...!" விழிகளை விரித்தாள் - "மாறன் ஒரு மாசம் போல விடுமுறைன்னு வட இந்தியா போறதாய் சொன்னார்.. வேணுதான் அவர்கூட ஏற்பாடுகளுக்காய் அலைஞ்சான் - மெள்ள அவன் வாயைக் கிளற, அத்தான் போறது பூனாவிற்கு என்று தெரிஞ்சுது."

"ஆக பையனின் நெருடல் அதில்தாம்மா. தன் தகப்பனைப் பற்றி உறுத்தலான கேள்விகள் உள்ளே குத்துது. இரண்டு வயசுக் குழந்தைக்குப் பழைய நினைப்பு இருக்குமா குருடனைப் போல எல்லாம் இருட்டாத்தானே தெரியும்? மறுபடி பூனா போய் துழாவி விவரம் அறிய ஆசைப்படறான்."

"ஆனால் இதெல்லாம் தெரிஞ்சா?"



"கண்ணுக்குத் தெரியாத பூதத்தை விட கண்ணுக்குப் புலனாகும் புலிமேலம்மா. திருடி ஜெயிலுக்கு போனவர் தன் தகப்பங்கறது துக்கம்தான் ஆனால் நிலைமை இதைவிட மோசமில்லையேன்னு போக போக ஜீரணமாயிடும். மனசு பதமாகிடும்... பழகிடும்."

"ஆனா ஒன்னு மாயா. இதையெல்லாம் நீயே மாறன்ட நேரே சொல்லிடறது நல்லது. இதினால உல்லாம் உன் அன்பு மாறலைங்கறது அவனுக்கு ரொம்ப ஆறுதல், தெம்பு தரும்."

கௌரி சொன்னது சரி என்றே பட்டது.

மாறனின் தகப்பன் திருடன், சூதாடி மட்டுமல்ல கொலைகாரனாய் இருப்பினும் தனக்கு அது பொருட்டல்ல. அஸ்வினி சித்தி எத்தனை விதமாய் கதை கட்டி கோள் மூட்டினாளோ? தெரிந்தால் முடிச்சவிழ்ப்பது சுலபம் - ஆனால் விபரங்களை முழுக்க சொல்ல மறுக்கிறானே!

விபரம் என்னவாயிருந்தால் என்ன...?

தன் காதல் முழுமையானது - இதைத் தெரிவித்தால் போதும். "இந்த போட்டோவை எடுத்துட்டுப் போய்... நீங்க ஊருக்குக் கிளம்பறதுக்கு முன்னே திருப்பித் தந்துடட்டுமா அங்கிள்?"

"வேணும்னா நீயே வச்சுக்கோ குழந்தே. இத்ர காலம் அதப் பத்திரம் பண்ணதுக்கு இப்படி ஒரு பியோஜனம் உண்டெங்கில் - அது எனிக்கு திருப்தின்னே..."

அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டாள்.

"சைக்கிளை என் ஜீப்பில் ஏத்து மாயா கொண்டு போய் இறக்கி விடறேன்."

"இல்லை அங்கிள்... நானே போய்க்கிறேன் - யோசிக்க எனக்கு அவகாசம் கிடைக்கும்ல..?" என்று விட்டாள்.

மிக்ஸியில் போட்ட பழத்தைப் போல கூழாய் போன உணர்வு... ஆசுவாசப்பட சற்று நேரமாகும். ஆக மெள்ளவே சைக்கிளைச் செலுத்தினாள்.

சிறகு விரித்த வேகத்தில் பறந்து வந்ததென்ன - இப்போது ஊர்ந்து திரும்புவதென்ன? ஆனால் அரை மணி நேரத்தில் மனம் சற்று சமன்பட்டிருந்தது. நுனி நூல் சிக்கிவிட்டது - இனி சிரமம் குறையும்.

பேசி, பகிர்ந்து முழுக்க பிரித்து விடலாம்.

திடீரெனக் கெட்ட பலத்த ஹார்ன் ஒலி அவளை உலுக்கியது. சைக்கிள் தடுமாற, ஓரமாய் ஒடித்து, காலை ஊன்றி சமாளித்தாள்-

ஜீப்பை நிறுத்தி விட்டு இறங்கியது மாறன்!

"இப்படித் தனியாய் வரலாமா மாயா?"

அந்த அதட்டல் இனித்தது.

அதட்டட்டும், அடித்தாலும் பாதகமில்லை - அவனுடைய அலட்சியம் தானே பொறுக்க முடியாதது.

ஆக புன்னகைத்தாள் - "பழகிய பாதைதான அத்தான்?"

"ஆனா பத்திரமானதுன்னு சொல்ல முடியாது."

அவள் சம்மதத்திற்குக் காத்திராமல் அவளது பிடியிலிருந்த சைக்கிளை லாவகமாய் வாங்கி ஜீப்பின் பின்புறம் ஏற்றினான்.

"சாப்பிட்டாச்சா?'

"ம்ம்... உங்களையும் மேஜர் அழைச்சார் - ஆனா வேலையாய் இருந்தீங்க."

"என்ன திடீர்னு கிளம்பிட்டே?"

"மேஜரின் நண்பர் வடக்கேயிருந்து வந்திருக்கார் - பூனாவிலேருந்து."

ஓரக்கண்ணால் 'சட்'டென நிறம் தப்பிய அவன் முகத்தை ஆராய்ந்தாள்.

"செண்பகா அத்தையை அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். சொல்லப் போனா பக்கத்து வீடாம். நீங்க பள்ளி போற வயசு வந்ததும் ஸ்கூல் வசதிக்காக அத்தை வேறு வீடு போயிட்டாங்களாம்."



"ஓ.." மேலே பேசக் கூடாமல் இருந்தான்.

"அந்தம்மா, மிஸஸ் வாரியாரிடம் அத்தை உங்களை விட்டுட்டுப் போவாங்களாம்... அதாவது வெ.. வெளியே போக நேரும்போது."

அவன் பாறையாய் இறுகி நின்றான்.

உற்சாகத்தை வரவழைத்தபடி தொடர்ந்தாள் -

"ரெண்டு வயசிலேயே சிந்தாமல் சாப்பிடுவீங்களாம் - வயசுக்கு மீறிய சமர்த்துன்னாங்க..."

இன்னும் அவன் மசியவில்லை!

"உங்க அப்பாவையும் அவங்களுக்குத் தெரியுமாம்... அது ... அதைத்தான எப்படி உங்ககிட்ட சொல்றது... ஆரம்பிக்கன்னு... தெரியலை."

அவள் குரல் தணிந்து போனது - பட்டு இதழ்கள் நடுங்கின. செலுத்திய வாகனத்தை ஆவேசமாய் குலுக்கி நிறுத்தினான்.

'விருட்'டென இவளை நோக்கித் திரும்பினான்.

"கடவுளே... எது உனக்குத் தெரியக் கூடாதுன்னு நினைச்சேனோ அது உனக்குத் தெரிஞ்சிடுச்சா...? நம்ப பெத்தவங்களைப் பத்தின ரகசியமெல்லாம் தெரிஞ்சு போச்சா...?"

கலவரமாய் முணங்கினான்.

"அப்படீன்னா உங்கப்பா செய்த தப்பெல்லாம் ஏற்கெனவே உங்களுக்குத் தெரியுமா?"

"அந்தப் பாழாப் போன ரகசியத்தை நெஞ்சுக் குழியிலேயே புதைச்சுட இருந்தேன்... உனக்கும் தெரிய வரும்னு நினைக்கலை... "மாயா"

ஸ்டியரிங் வளைவில் முகம் கவிழ்த்தவனை திகைப்பாய் பாத்திருந்தாள் மாயா.

## 27

அத்தானின் அகன்ற தோள்கள் குறுகிக் கவிழ்ந்திருப்பதைப் பார்க்க பொறுக்கவில்லை.

தோளை ஆதரவாய் நீவினாள்.

"ஷ்... அத்தான் - சீட்டாட்ட வெறியில உங்கப்பா செய்த தப்பு அது. ரொம்ப ஒழுக்கமாய் வளர்ந்த அத்தைக்குப் புருஷன் ஜெயிலுக்குப் போனதை ஜீரணிக்க முடியலை - சரி நீங்களும் இப்படி நொறுங்கிப் போறதா? இது ஊர் உலகில் கேள்விப் படாததா?"

அவன் உடம்பு ஏனிப்படி விறைக்கிறது?

மெள்ள தலை தூக்கினான் - கனலாயிருந்தன கண்கள்.

"என்ன சொல்ற மாயா?"

"குணத்தில நீங்க அத்தைன்னாலும் பார்க்க அச்சாய் உங்கப்பாதான் - தெரியுமா? இந்தக் கண்ணு மட்டும் தான் வேறு... அத்தைக்கு, உங்கப்பா திருடி ஜெயிலுக்குப் போனது தீராத அவமானமாயிருக்கலாம்... எனக்கு.. அது பொருட்டேயில்லை அத்தான் - மாமா எப்பேர்ப்பட்டவரானாலும் பரவாயில்லை. எனக்கு நீங்க உங்க அன்பு வேணும்."

குரல் குழைத்து கொஞ்சினாள்.

"நீ சொல்றதே பு... புரியலை மாயா."

"எல்லாம் தெரியும்னு சொன்னீங்க?"

"ஆனால் நீ சொல்றதெல்லாம் புதுசாய் இருக்குது. எங்க... எங்கப்பா படத்தை எங்கே பார்த்தே?



"மேஜர் வாரியார் காட்டினார் - கேட்டு, வாங்கிட்டு வந்தேன்... இதோ.."

தன் கைப்பையைத் துழாவினாள்.

இடி ஊடுருவியது போல மாறன் நடுங்கினான்.

"அப்பா பேரு?"

"ரத்னவேலாம்."

படத்தை அவனிடம் நீட்டினாள்.

பசித்தவன் நெய்சோற்றை பார்ப்பது போல வெறித்தான். தன் நெற்றியை, கன்னத்தை அழுந்தத் தடவினான் - உதடுகள் கடிபட்டன.

"உங்களுக்கு ஒரு அக்கா இருந்திருக்க வேண்டியது - குறை பிரசவமாம் - மாமாவுக்குச் சீட்டாட்ட வெறி... எந்த உத்யோகத்திலேயும் நிலைக்காத ஷோக்குப் பேர்வழி.."

மாறன் கண்கள் முழுக்க நீர் ததும்பி நின்றது..

"ஐயோ அத்தான் ... நான் முட்டாள். இதுவரை உங்கப்பா படத்தை நீங்க பார்த்ததேயில்லையா?..."

தலையசைத்தான்.

"நம்ப வீட்டில உள்ளதையேனும் காட்டியிருக்கணும்..."

"எங்கே... எங்கேயிருந்தது."

"அஸ்வினி சித்தி, நீல ட்ரங்க் பெட்டி" எனக் கோர்வையாய் சொன்னாள்.

"மேஜர் வேறென்ன சொன்னார்?" - ஏனோ மூச்சிரைத்தது அவனுக்கு.

"சூது ஓட்டைப் படகு போல... எத்தனை காசு வந்தாலும் நிரம்பலை - அத்தை பலகாரம் செய்து, கம்பளி பின்னி எப்படி யெல்லாமோ சம்பாதிச்சும் போதலை. மேஜர் குடும்பம் ஒத்தாசையாய் இருப்பாங்களாம்... அத்தனை கஷ்டத்திலும் அத்தை மாமாவை விட்டுக் கொடுக்கலைன்னாங்க - தாய் வீடு என்ற பேச்சே வராதாம்.."

"இதெல்லாம் நிஜமா மாயா?"

"வாரியார் அங்க்கிள் சொன்னதைச் சொல்றேன். துக்கமான செய்தி என்னென்னா ஒன்னரை வருஷம் ஜெயில்ல இருந்த மாமா அங்கேயே நிமோனியா கண்டு குணமாகாமல் இறந்துட்டாங்க. அது பிறகும் உங்களைப் படிக்க வைத்த அத்தை தமிழ்நாடு வரலியாம் - பிறருக்கு பாரமாய் இருக்க வேண்டாங்கற எண்ணம். எங்கப்பா முன்னே போய் கூப்பட்டதாயும் அப்பவும் அத்தை போக மறுத்துட்டதாயும் சொல்றாங்க.."

மறுபடி கையிலிருந்த படத்தை ஊன்றி பார்த்தவன் அதைத் தன் மார்போடு அணைத்தான் -

தலையைப் பின்னாக சரித்து சிரிக்கலானான்.

அலை அலையாய் சுருண்ட சிரிப்பு மிக பலத்தது.

"அத்தான்... ப்ளீஸ்... என்னாச்சு?"

உலுக்கிய பின்பும் சிரிப்பு அடங்கவில்லை...

"போதும்... எ.. எனக்கு பயம்மாயிருக்குது." கத்தினாள் அவள்.

சற்று நேரம் வாசலுக்கும் உள்ளுமாய் உலவிய சரோஜாவிற்குப் பொறுக்கவில்லை. ஆக மேஜர் வீட்டிற்கு மறுபடி போன் போட்டாள்.

"மாயாம்மா கிளம்பிட்டாளீங்க... இன்னும் காணலியே?"

அவளது பதட்டம் அவரையும் தொற்றிக் கொண்டது.

"இதோ கிளம்பிட்டேன். நான் இறக்கி விட்றேன்னு சொன்னதைக் கேக்காமல் கிளம்பிச்சு.."

"நானும் நாலு பேரைக் கூட்டிட்டு நடக்க ஆரம்பிக்கறேன்."

"மாறனை அனுப்புங்க முதல்ல - இன்னுமா மாட்டு டாக்டர் தன் வேலையை முடிக்கலை...?"

"வேலை முடிஞ்சு... அவன் மாயாவைத் தேடிப் போயாச்சே - அதுமாச்சு அரை மணிநேரம்!"

"அப்ப கவலையை விடுங்க - ரெண்டு பேரும் வழியில சந்திச்சிருப்பாங்க."



"அப்ப வீடு வந்திருக்கணுமே?"

"விவரமெல்லாம் சொன்னால் தான் உங்களுக்குப் புரியும்"- என்றவர் அன்று அங்கு நடந்ததை எல்லாம் சொல்ல ஆரம்பிக்கக் கலவையான உணர்வுகளுடன் உறைந்து நின்றாள் சரோஜா.

சிரிப்பதை ஒரு வழியாய் நிறுத்திய மாறன் கேட்டான்-

"அப்போ உங்க அஸ்வினிசித்தி சொன்னது முழுப் பொய்யா?"

"அவங்க என்ன சொன்னாங்கறது எனக்குத் தெரியாதே - ஏதோ எங்கிட்ட எல்லாம் விளக்கமாச் சொன்ன மாதிரியில்ல கேட்கறீங்க?"

"இனியும் கூசி மறைக்கப் போறதில்லை மாயா- சொல்லிடறேன்... ஆனா சொல்ல... நினைக்கவே கூசுது..."

"பீடிகை போதுந்தான். சொல்லுங்க..."

"அதாவது... நீயும் நானும் பிறப்பால்... அண்ணன் தங்கைங்கற பொருள் பட பேசினாங்க..!"

விதிர்த்து விட்டாள்.

கடவுளே... இப்படியுமா ஒரு பாதகப் பொய்! "அம்மா... உங்கப்பா.. அதாவது கங்காதரன் மாமாவோடு மாலை போட்டு ஜோடியாய் நிற்கும் கல்யாணப் படத்தைக் கூட காட்டினாங்க... குடும்பத்தார் செய்து வைத்தக் கல்யாணம் அதுன்னு சொன்னாங்க..."

"ஐயோ என்னத்தான் நீங்க... அது சடங்கு போட்டோ அத்தை வயசுக்கு வந்ததும் அப்பா அண்ணன் சீர் செய்து எடுத்துக்கிட்ட படம்."

கண்களை ஆயாசமாய் மூடினான்.

நீண்ட பெருமூச்சு பிரிந்தது.

நினைக்கக் கூட கூசும் பொய்யை அஞ்சாமல் சொன்ன சித்தி, அதை நேர்த்தியாய் ஜோடித்து, ஆதாரங்களை மறைத்து... நல்லவேளை ஆதாரங்களை அழிக்கவில்லை... அழித்திருந்தால் கூட இப்படி மேஜர் வாரியார் மூலம் உண்மை வெளியாகியிருக்கும்.... மூளைக்குள் மின்னல் தெறித்தன.

"நீ எனக்குத் தங்கையா தாரமான்னு புரியாத ஒரு மாயத் தோற்றம்... மாயாங்கற உன் பெயரும் கூட அதை ஊர்ஜிதம் செய்யறாப் போலிருக்க..."

"மாயாங்கறது புத்தருடைய தாயாரின் பெயர். அஜந்தா குகையில் அவளது வரலாற்றைப் பார்த்த அப்பா, அம்மா அந்தப் பெயரை எனக்கு வச்சாங்களாம்."

"நா... நான் பெரிய முட்டாள் மாயா!"

"அது எனக்கும் தெரியுமே!"

உற்சாகமாய் தலையாட்டியவளை இழுத்து அணைத்தான். தாபமான அணைப்பு... தவிப்பு அடங்கிய நிம்மதியான நெருக்கம்.

அவள் அவன் கைகளுள் ஒடுங்கினாள் - மனம் மயங்கியது. முகத்தை நிமிர்த்தி தன் பூங்கன்னங்களை அவனது முரட்டு கன்னத்தோடு இழைய விட்டாள்.

"இது தானே வேணாங்கறது."

"வேணுங்கறதே..." - சிணுங்கினாள்.

அவனுக்கும் அதற்கு மேல் தாளவில்லை போலும். நெற்றியிலும், பஞ்சு கன்னங்களிலும் அழுந்த முத்தமிட்டான். ஆனால் அவளது இதழ்களை முத்தமிட்டவனால் எளிதில் மீளமுடியவில்லை... கிறங்கிக் கிடந்தான்.

அவள்தான் மிருதுவாய் விலகினாள்.

"மாயா?"

"ம்ம்... முதல்ல பேசி முடிச்சிடுவோம்" - என்றாள்

"எத்தனை நிம்மதி இது! எத்தனை வருஷமாய் முள்மேல் கிடந்த அவஸ்தை... என்னைப் பார்க்க என்னுள்ளே காதல் கிளரும்... ஏன் சில பொழுது காமமும் கூட - நடுங்கிட்டேன்... இதென்ன ஆபாசம், அச்சான்யம்னு."

"நம்ப, பிறப்பு, அப்படீன்னா அப்பா, என்னை உங்களை 'அத்தான்'னு கூப்பிட சொல்லுவாரா?"



"ஆனால் எங்க அம்மா அது மாதிரி நம்மை இணைத்து பேசினதில்லையே?"

"சிறு வயசிலேயே இதுமாதிரி எண்ணங்களை எதுக்கு வளர்க்கணுங்கற புத்திசாலித்தனம் - அஸ்வினி சித்தி பற்றி உங்கம்மா உங்ககிட்ட ஏதும் சொல்லவே இல்லியாத்தான்?"

"யார் சொன்னா? மாமா விவேகமாய் தன் கொழுந்தியாளை விலக்கி வச்சிட்டாங்க. அதுக்குக் காரணம் இருக்கக் கூடும்னு கூட எனக்குத் தெரியாது.. என் அறையில் நீ வச்சிட்டுப் போன மருத்துவ சான்றிதழ்களைப் பார்த்தேன் மாயா - நெஞ்சின் உள்ளே செருகியிருந்தக் கத்தியை உருவி எடுத்துப் பச்சிலை வச்சாற்போல அப்பவே ஒரு ஆசுவாசம் - உங்கம்மாவின் சாவு இயற்கையானது - எந்த சதியோ, கொலை முயற்சியோ இல்லைங்கறது தெளிவாயிடுச்சே!"

"சித்தி சொன்ன ட்ரங்க் பெட்டியில இருந்தது அது - கூடவே உங்க அப்பா, அம்மாவின் படம் கூட இருந்தது... உடனே உங்ககிட்ட காட்டியிருக்கணும்... முட்டாள் நான்."

"தெரியுமே..!" அவன் கைகள் அவளைத் தடவியபடி இருந்தன. 'நான் இந்த சடங்கு, சம்பிரதாயங்களைப் பார்த்ததில்லை - அதான் ரெண்டு பேரும் மாலை போட்டு ஜோடியாய் எடுத்த படம் பார்த்து திகைச்சுட்டேன்."

"நீங்களுந்தான் மக்கு... அப்பா கழுத்தில் கடந்தது அங்கவஸ்திரம்! அத்தை அதில மரப்பாச்சி பொம்மைப் போல நின்னாங்களே?"

"அதை என் அறையிலேருந்து எடுத்துப் பார்த்தியா நீ? அஸ்வினியம்மா அதைக் காட்டி திரித்த கதை வேறு.. உறவுக்குள்ளே நடந்த கட்டாய கல்யாணம் அது - ஒரு பிள்ளை.. அதாவது நீ மாறன் பிறந்துதுமே மாமாவுக்கு சலிச்சு... வேறு பக்கம் சுத்த ஆரம்பிச்சுட்டார். அந்நேரம் ரஞ்சினியம்மாவைப் பார்த்து பிரியப்பட்டார் - எளிய குடும்பமானதால எதிர்ப்பு இல்லாமல் கல்யாணம் நடந்தது - 'காரும், பங்களாவும் போதுங்கற புத்தி எங்க

வீட்டில - மூத்தாள், அதான் உங்கம்மா வாழ்வை மிதிச்சுட்டா - தவிர ஆண் வாரிசும் இல்லை பிள்ளைக்காக மறுபடி செண்பாவையே தேடினாரு மாமா - இளையவளை ஒழிக்க, மூத்தவ துணையைக் கேட்டு 'உம்பிள்ளையைச் சொத்து சுகமுமாய் வாழ வைக்கிறேன்' என்று சொல்ல - செண்பாவும் ஏதோ கஷாயம். குளிகைன்னு வடக்கே இருந்தபடி அனுப்பித் தந்த எங்க அக்கா, ரஞ்சினியைக் கொன்னுட்டா' - இப்படித்தான் சொன்னாங்க.

"சரி - அப்படி பெண்பித்து பிடிச்ச அப்பா ஏன் மறு கல்யாணம் செய்துக்கலை? செண்பா அத்தையோட கூட அப்பா சிரித்து பேசினதைக் கூட நாம் பார்த்ததில்லையோ?'

"ஆனால் அம்மா. உங்கப்பாவை 'அண்ணா'ன்னும் வாயார கூப்பிட மாட்டாங்க.

'மாறா உங்க மாமா வராங்க பார் - மாமாவுக்குத் தண்ணி கொண்டு கொடு' ன்னு பொதுப்படையாய் பேசுவாங்களா... அதையெல்லாம் அஸ்வினியம்மா எடுத்து திரித்து சொல்ல குழம்பிட்டேன். ஊரார் பார்வை, பேச்சுக்கு அஞ்சி பதமாய் நடந்தாலும் இரண்டு பேரும் தம்பதிகளாய்த்தான் வாழ்ந்தாங்கன்னு..."

"ச்சே... அத்தையைப் பற்றி அபாண்டம் பேசின நாக்கு... அதான் அப்படி தீய்ந்து, எரிஞ்சுட்டாங்க போல..." சீறினாள்.

"அவங்க சொன்னதெல்லாம் பயங்கரம்னாலும் அப்ப சரியாயும் தோணுச்சு.

'செண்பகாவும், மாமாவும் இப்படி 'சட்'டுன்னு செத்து போவோம்னு நினைக்கலை - பிள்ளைங்க வளர்ந்ததும் அவங்க அவங்களுக்குப் பொருத்தமான வேறு வரன்களைத் தேடி கல்யாணம் செய்துடலாம்னு நினைச்சிருக்கணும். ஆக நீங்க உடன் பிறப்புங்கறதைச் சொல்லலை - விதியின் விளையாட்டு வேற மாதிரியாயிடுச்சு... ஆனால் விஷயம் தெரிஞ்ச நானாவது உண்மையை உங்ககிட்ட சொல்லணுமே - இல்லைன்னா அண்ணன். தங்கை தம்பதியாயிடற பெரும்பாவமில்லையா நேரும்?



மாயா அறியாப் பொண்ணு. அவகிட்ட இந்த அசிங்கத்தை எல்லாம் சொல்லி குழப்பாதே மாயா - கடுமையாப் பேசி-- ஒதுங்கிப் போ - நீ விலகிட்டா அந்த கொடி வேற இடம் பார்த்து எறிக்கும்ன்னாங்க."

"பெண்களுக்கு சாமர்த்தியம் அதிகம் அத்தான். பிறர் மனசில ஓடறதை சிரமமேயில்லாம படிச்சிடுவாங்க - எதினால முகம் வாடியிருக்குதுன்றதை பெரும்பாலும் சரியாய் யூகிச்சிடுவாங்க..."

"அம்மாகூட என் முகக் குறிப்பை வச்சு உடனே விசாரிப்பாங்க..."

"பெண்களுக்கான அந்த உள்ளுணர்வை சித்தி தப்பாய் பயன்படுத்திக்கிட்டாங்க... எந்தெந்த சம்பவங்களை எப்படிக் கோர்த்தால் நம்பக் கூடிய மாலையாக்கலாங்கறதைப் புரிஞ்சு கிட்டாங்க. அப்பாவும் அத்தையும் உயிரோட இல்லை - சாட்சியங்களை மறைச்சாச்சு. நம்ம ரெண்டு பேருக்கும் கல்யாணமாகக் கூடாது - அதுதான் அவங்க குறி! தனக்கு அமையாத தாம்பத்தியம் இந்த வீட்டில பிறருக்கும் அவசியமில்லைங்கற ஆங்காரம் எல்லாரும் தவிக்கட்டுங்கற குரூரம்..."

"நினைக்கவே நடுங்குது... ஆனா மாயா, நீயுந்தான் என்னை நடுங்க வச்சிட்டே..."

"எப்பவாம்?"

"அரவிந்தன் வரவும் அவன் மேல தாவிப் பாய்ஞ்சியே... அப்போ மாயா இனி வேறொருவனுக்குன்ர நினைப்பே எனக்குத் தாங்கலை நடுங்கிட்டேன்.."

"முகத்தில அப்படி ஒன்னும் தெரியலியே?"

"ஆம்பிளை சிங்கம் அழ முடியாதே?"

"ஐயோ... எஞ் சிங்கமே..." என்றவள் அவன் முடியைப் பற்றி இழுத்து கன்னத்தில் முத்தமிட்டாள்.

## 28

“இப்ப நிம்மதியாச்சா - சரோஜா? மாயா, மாறனைக் காணும் - சின்னப் பாப்பாக்கள் தொலைஞ்சு தவிப்பாங்கன்னு - மருகனீங்களே... ரெண்டு பாப்பாக்களும் முத்தமிட்டதைப் பார்த்த மனசு இப்ப சாந்தியாச்சா?”

மேஜரின் இடி குரலும் வெடிசிரிப்பும் இவர்களை ஜீப்பிலிருந்து இறக்கின.

ஒரு புறம் மேஜரையும், மறுபுறம் சரோஜாவோடு சில வேலையாட்களையும் பார்த்த மாயா மாறனுக்கு ஒரே வெட்கம்.,

இறுதலைக் கொள்ளி எறும்பின் தவிப்பு.

“வீட்டுக்குப் போய் மிச்சத்தைக் கவனியுங்கே...” கையாட்டி விடை பெற்றார் மேஜர்.

“ஏறுங்க சித்தி... வேணு நீங்க எல்லாரும்தான்..”

“நாங்க நடந்தே வந்திடறோமுங்கய்யா - அம்மா ‘ஜீப்’பில வரட்டும்.” என்றவர்களை மாறனும் அதற்கு மேல் வற்புறுத்த வில்லை. முன்பென்றால் அவனது ஒரே அதட்டில் அனைவரும் பம்பரமாய் சுழலுவர்- இப்போது முகத்தில் வழியும் இத்தனை அசடோடு யாரை அதட்ட?

‘ஜீப்’பில் எறிய சரோவும் கூட சங்கோஜமாய் உணர்ந்தாள். ஆனால் சந்தோஷம் விரைவில் சூழலை மாற்றிவிட்டது. வேக வேகமாய் பேசினார்கள்-

‘அப்படியா?’ என்று ஆச்சரியப்பட்டார்கள்.

‘இப்படியுமா?’ என்று மருகினார்கள்.



‘இப்பவாவது எல்லாம் தெளிஞ்சுதே’ - என்று கடவுளை வணங்கினார்கள்.

வீடு சேர்ந்தவர்களது முகங்கள் பூவாய் மலர்ந்திருந்தன. மசால் வடையோடு, தேநீரை வரவேற்பறைக்கு சரோஜா எடுத்து வர மேலும் பேசினார்கள்.

“மாயாவுக்குத்தான் நன்றி சொல்லணும் சித்தி - அவள் உங்களை டாக்டரோடு மும்முரமாய்... சேர்த்து வைக்கவும் தானே அஸ்வினிம்மாவின் சதி திட்டங்களைப் பற்றியெல்லாம் நமக்குத் தெரிய வந்தது? அதுதான் முதல் உலுக்கல் அப்படின்னால் நம்ப சமாச்சாரம் இப்படித்தான் இருக்கமோன்ர நெருடல்..”

“அப்போதாவது என்னிடமும் மனசு விட்டு பேசியிருக்கலாம்ல அத்தான்?”

“முடியலையே இத்தனை ஆபாசமான ஒரு விஷயத்தை எப்படி பேச? எனக்கே ஒரு குற்ற உணர்ச்சி- இதில அம்மாதான் உங்கம்மாவை கொன்னாங்கன்ர கிளைக்கதையிலே ரொம்பவே பாதிக்கப்பட்டுட்டேன்..”

“இதென்ன காதல் கதையில... கொலைங்கன்றீங்க?”

விசாரித்தாள் சரோஜா.

“எல்லாம் அஸ்வினி சித்தி வாசிச்ச திகில் கதைகள், மர்ம சினிமாக்களின் புண்ணியந்தான் - சரளமாய் சித்தி பின்னிய கதை அது..” - விளக்கினார்கள்.

“இத்தனை கற்பனை வளத்தை எழுதி வளர்த்திருந்தால் அஸ்வினிம்மா முன்னணி எழுத்தாளராகி யிருக்கலாம் - ஆக்கமாய் இல்லாம அழிவுக்காச்சு எல்லாம்.”

இரவு சாப்பாடு அன்று விருந்து போலிருந்தது.

உணவில் விசேஷமில்லை - சாப்பிட்டவர்களில் உணர்வில் கலந்த குதூகலமே காரணம்.

மேசையை ஒழித்த கையோடு சரோஜா தட்டெச்சு இயந்திரத்தின் முன் ‘டைப்’ செய்ய உட்கார,

"என்ன சின்னத்தை இந்நேரத்தில வேலை? படுங்க" அதட்டினாள் மாயா."

"இல்ல... அவருக்கு ஒரு கடிதாசி எழுதத்தான். இந்த விவரமெல்லாம் தெரிஞ்சால் ரொம்ப சந்தோஷப்படுவார்--- ஒரு நடை வருவார் கூட..."

"ஆக டாக்டரை வரவழைக்க நாங்கதான் அகப்பட்டோமா?"

மாயாவின் கிண்டலில் மூவரும் சிரித்தனர்.

அன்றிரவு அந்த வீட்டில் அமைதியோடு கூட ஆனந்தமும் இருந்தது.

இனிய கனவுகளும், நினைவுகளை அசைபோடுதலுமாய் இரவு கழிந்திருந்தாலும் அதிகாலமே மாறனும் மாயாவும் எழுந்து விட்டனர்.

சரோஜா மட்டும் இல்லையென்றால் இருவரும் நேற்றிரவு வெவ்வேறு அறைகளில் படுத்திருக்க மாட்டார்கள்-

'இனி நமக்கிடையே பிரிவில்லை' என்ற உவகையில் கட்டியும் ஒட்டிக் கொண்டும் தூங்கியிருப்பார்கள்.

காம சிந்தனைகள் காரணமில்லை... 'இனி எனக்கு அவர்தான் - அவள்தான்' என்ற நிம்மதியே பெரும் சுகமாயிருந்தது - வேண்டிய இன்பம் அளித்தது.

கடவுளுக்கு மனதார நன்றி சொன்னாள். இத்தனை நாட்கள் செய்த பிரார்த்தனைதான் தங்களைச் சேர்த்தது என்று நம்பினாள் அதுதான் தடைகளைத் தகர்த்து போட்டது என்று பூரிப்பு.

பவித்ரமான நேசத்திற்கு ஆண்டவன் துணை எப்போதும் உண்டு என்ற நிச்சயம்.

இரவு உடைக்கு மேலாக சால்வையைப் போர்த்தியபடி கீழறங்கியவளுக்கு ஆச்சரியம். மாறன் இரு கோப்பை ஆவி பறக்கும் காப்பியோடு வந்து கொண்டிருந்தான். காபியின் மணம் புத்துணர்ச்சி தந்தது.

"அத்தான் - எப்ப எழுந்தீங்க?"



"தூங்கினாத்தானே எழும்ப? உன் பாத்ருமிலே தண்ணி சத்தம் கேட்டது - அம்மணி எழுந்துட்டீங்கன்னு காபி கலந்தேன்..."

"தாங்க்ஸ் - அத்தான், அப்படியே நடந்துட்டு வரலாமா?'

"நினைச்சேன் - சொல்லிட்டே..."

காபி குடித்த பின் கிளம்பினர். வெளியே இன்னும் பனி கலந்த இருள் மிச்சமிருந்தது. பவளமல்லியின் கனத்த வாசனை சூழ்ந்தது.

"ஷ்...ஸ்.." என்றாள் குளிர்தாளாமல்.

அவள் தோளைச் சுற்றி கை போட்டு இழுத்துக் கொண்டான்.

இதமான வெப்பம் படர, நடந்தவர்கள் 'திடும்' மென நின்றார்கள்.

"யார்... யாரது?"

இருபதடித் தொலைவில் புகை போல ஒரு உருவம் மெள்ள இவர்களை நோக்கி வந்தது..

இவளுக்கு வியர்த்தது.

"யாரது?" மாறன் குரலை உயர்த்தினான்.

"விக்டருங்கய்யா."

உடம்பு தளர, மீண்டும் நடந்தனர்.

"எங்க இங்கே? அதுவும் இன்னும் முழுசாய் விடியாத வேளையில..?"

"வேணு விவரஞ் சொன்னாங்கய்யா. நம்ப வீட்டுக்கு விடிஞ்சிருச்சுன்னு புரிஞ்சுது. மனசு நிரஞ்சா கண்ணு மூட மாட்டேங்குது.. அதாங் கிளம்பிட்டேன். மருமவ பாத்தாவுட மாட்டா... மூட்டு வலியோட நமக்கு ஆகாதும்பா.. ஆனா எனக்கு பாக்காம பொறுக்காது உங்கள சோடியா பாக்கணும்னு..."

"வேணு சொல்லியாச்சா.... அதாவது..."

"முத்தங் கொடுத்துக்கிட்டீங்களாம் - ராசி ஆயிட்டதாத்தானே அர்த்தம்?"

"ச்சோ.." வெட்க முனகலுடன் தலைக் கவிழ்ந்தாள் மாயா. கிழக்கே சிவந்த பளபளத்த வானத்தைப் போட்டிக்கு அழைத்தன அவள் கன்னங்கள்.

"நாங்கள் சண்டை போட்டுக்கலியே தாத்தா."

"அப்ப ஏன் அப்படி ஒரு பிரிவு நேரணும்? எத்தன பாச நேசமாய்ப் பழகின பிள்ளைங்க - சின்னபாப்பா மரத்தில உங்க பேருகளைச் சோடியாச் செதுக்கினப்ப கண்டுங் காணாதவம்போல காவல் இருந்தவனுல்ல நானு? அப்பவே என்னை முட்டுவாதம் சிரமப்படுத்தும் - ஆனாலும் சின்ன பாப்பாவைத் தனியா விடக் கூடாதுன்னு கூடப் போவேன் - நாளைய எசமானு, எசமானியம்மா பேச நிலைச்சு நிக்க அதொரு சடங்கு... சகுனங்கற நினைப்பு..."

"அது இடிவாங்கி கருகிட்டதாய் நீங்கதான சரோத்தையிடம் சொன்னீங்களாம்? அது... எனக்கு அபசகுனமாய் பட்டு... பயந்தேன்."

"உண்மை அதில்லை சின்னபாப்பா மரத்தை மண்ணெண்ணை ஊத்தியில்ல எரிச்சாங்க" அந்த அரையிருளில் அவரது தணிந்த பேச்சு அச்சமூட்டியது.

"யாரு... யாரு?"

"அஸ்வினியம்மா - பசுமையாத் தழைஞ்சு நின்ன மரத்தை சீமெண்ணை ஊத்தி எரிச்ச புண்ணியவதி தானும் அதேப் போல கருகிப் போனாங்களாமே?"

"அ... ஆமா..."

"சாமி தீர்ப்பு தவறாதும்மா மூணு வருஷமாச்சு சின்னபாப்பா, நீங்க வேத்தூர் போயி. ஊரே மயங்கற அழகும் அறிவுமா இருந்தும் தம்பியத் தானே தேடி மறுபடி இங்க வந்தீக? தம்பியும் வேத்து முவம் ஏறெடுத்துக் காங்கலியே உங்களுக்குள்ளே மனசு அலைபாயாத அளவு ஆழமான பிரியம்..! கடலுல கரை பக்கந்தான் அலையும் ஆர்ப்பாட்டமும் - நம் சினிமாவுல காமிக்கறாப்பல நடுக்கடலு அமைதி... பயங்கரமுல்ல?"

"சித்தி மரத்தை எரிச்சதைப் பார்த்தீங்களா தாத்தா?"

"மறுபக்கமாய் மரக் கன்றுகளை நட்டுட்டு இருந்தேன் சின்ன பாப்பா. அதுகதான் இப்ப 'திமுதிமு'ன்னு வளர்ந்து அடைசலா நிக்கும்."

"ஏன் பச்சை மரத்தை எரிக்கறீங்கன்னு கேக்கலியா?"



"கேக்குறதா? பதறி ஓடினேப்பா - 'என்ன காரியம் செய்யுதீங்க'ன்னு துடிச்சேன் - அதுக்கும் அந்தம்மா பொருத்தமா பதில் சென்னதே-

'சோசியர் இந்த மரம் வூட்டுக்கு ஆவாதுன்னு சொல்லிட்டாங்க பெரியவங்க அதைப் பெருசாய் எடுத்துக்கலை - எனக்குத்தான் பயமாயிருச்சு அதான் ஏதும் கேடு வர்ரதுக்கு முன்ன நாமே இதை அழிச்சிருவோம்னு கிளம்பினேனுச்சு.."

சித்திக்கு அபார கற்பனை வளம்தான்.

"இப்ப நாயி மூக்கு போய் பாரு சின்னபாப்பா - எம்மவனை வச்சு காஞ்ச மரத்தை தோண்டி எடுத்துப் போட்டு புதுக்கன்னு ஊனியாச்சு. துளுத்து வருது.." - அம்முதிய முகம் புன்னகையில் விரிந்தது.

அம்முதியவரின் முற்றிய கரங்களை நன்றியுடன் பற்றினாள்.

"தாங்க்ஸ் தாத்தா... இதையெல்லாம் நீங்க முதலிலேயே என்னிடம் சொல்லியிருக்கணும்..." ஏதோ மாறன்தான் அம்மரத்தை எரித்து விட்டதாய் எண்ணி துடித்த நினைப்பு வர கூறினாள்.

"பயம்மா - பெரிய வீட்டு விஷயத்துல நாம மூக்கை நுழைக்கப் படாதுங்கற ப்யம்! ஆனா அன்பான ஸோடி நீங்க விலகி நின்னப்ப வருத்தப்பட்டேன்.. முட்டி போட்டு உங்களுக்காக கர்த்தரிடம் அழுது வேண்டியருக்கேம்ப்பூ..."

"அது வீணாகலை விக்டர்... அதான் நாங்க இணைஞ்சிட்டோம்."

"போய் புதுசாய் நட்டின கட்டி மரத்தைப் பார்த்துட்டு வாங்க... அது இனி செழித்து ஓங்கும்..."

ஆசி கூறியவரின் நடுங்கிய கைகளில் கனிவாய் முத்தமிட்டாள்.

வெகு நேரம் மௌனமாகவே நடந்தார்கள் - உடம்புகள் உரசியபடி தளர்ந்த நடை.

"இங்கேதானே அத்தான்... என்னை... என்னை ஒதுக்கினீங்க?"

"ஷ்ஷ்... இனி அதையெல்லாம் நினைக்கவும் வேண்டாம் மாயா..."

'மறந்துவிடு செல்லமே' என்ற தாபத்தோடு, வேண்டுதலோடு அவளை இறுகத் தழுவினான்-

அதில் கீழ்வானம் மேலும் சிவந்தது.

"இதே இடத்தில்தான் நான் முதன்முதலாய் வானவில்லைப் பார்த்தேன் அதை எனக்குக் காட்டி பிரமிக்க வைத்தது நீங்கதான்..."

"அறிஞர் அண்ணா காதலை ஒரு வானவில்ங்கறார்...- 'ஆணையும் பெண்ணையும் சேர்த்து வைத்து விடுவதுதான் வானவில்லான காதலின் வேலை... அதோடு அதன் வேலை முடிந்து. பிறகு அது இயல்பாகவே மறைந்து விடுகிறது!'"

"அடே... இத்தனை வாசிப்பீங்களா?"

"நீ வாசித்து அடிகோடு இட்டிருந்தே - ஆக என் மனசில் பதிஞ்சிடுச்சு.."

"நம் வாழ்விலும் இடையே கொஞ்ச காலம் அந்த வானவில் மறைஞ்ச போச்சு... ஆனா இனி அது மறையவே கூடாது... நிரந்தரமாய் நிலைச்சிக்கனும்."

"நிச்சயமாய்" என்றவன் அவளது முகத்தை கையில் தாமரை போல ஏந்திப் பார்த்தான்... ஜோடி வானவில்களாய் தோன்றிய அவள் விழிகளில் நேசத்தின் அத்தனை நிறங்களும் ஒளி விட்டன...

"நம் கனவுகள் அத்தனையும் நனவாயிட்டது இல்லையா செல்லம்?"

"நினைவு தெரிஞ்ச நாளாய் வளர்த்த கனவுகள்... இப்ப அது முழுமதியாகி விட்டது போல மனசு பூரிச்சிருக்குது..."

பெருமூச்சுடன் அவன் மார்பில் சாய்ந்தாள்..

"அதோடு நிற்காது மாயாம்மா... மேலும் வளரும்.."

மேலும் அவளைத் தன்னோடு இறுக்கியவன் உலகம் மறந்து நின்றான்... அவர்களுக்குள் கனவுகள் வளர்ந்தபடியே இருந்தன.